வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ் : 01 சோபகிருது வருடம், ஆனி மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(02.07.2023) ஹிஜ்ரி-1444, துல்ஹஜ் - 13, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8
விலை ரூ.130




## யாழ்ப்பாணத்தில் சிறுவர் மீதான வன்முறை இவ்வாண்டு அதிகரிப்பு

யாழ். நிருபர்

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், இவ்வருடம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



யாழ்ப்பாணத்துக்கு மைத்ரி ஐயா விஜயம் ஒண்டை மேற்கொண்டுள்ளார்.

என்ன அடிப்படையில் எதுக்கு வந்தார் எண்டு அவருக்கும் அவர் சார்ந்த யாழ்ப்பாணத்து கட்சிக்காரருக்கு மட்டும்தான் வெளிச்சம்.

எங்களைப் பொறுத்தவரை நல்லாட்சி அரசு இருந்த காலத்தில் மைத்ரி எதையுமே எங்களுக்கு பேர் சொல்லும் படியாக செய்துவிடவில்லை. ஆகவே அவரை இனிமேல் "கணக்கில்" எடுக்கும் எண்ணத்தில் நாங்கள் இல்லை.

மேலும் தெற்கில் கூட மைத்ரி அரசியலில் தோற்றுவிட்ட ஒரு தரப்பாகவே காணப்படுவதால் இனிமேல் அந்தளவுக்கு அவருக்கு "முக்கியத்துவம்" ஏதும் இல்லை.

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக மைத்ரி இன்னும் காத்திரமாக "பொறுப்பு" கூறவில்லை.

ஆக, அவர் தெற்கில் செய்யவேண்டிய கன அலுவல் இருக்கும்போது;

13 ஆம் பக்கம்

# மகாவமிச பிரசாரத்தை முடக்கியது அரசு!

## பேராதனை பல்கலைக்கு பறந்த விசேட உத்தரவு

யாழ். நிருபர்

மகாவமிசத்தை உலக நினைவக மரபுரிமை ஆவணமாகக் குறிப்பிட்டு யுனெஸ்கோ மேற்கொண்ட அறிவிப்பை பிரபல்யப்படுத்த வேண்டாமென அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் மகாவமிசத்தை உலக நினைவக மரபுரிமை (Memory of the World - MoW) ஆவணமாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது.

மகாவமிசம் இலங்கையின் லக்திவ மகா விகாரையின் வரலாறு மற்றும் இராசரட்டை இராச்சியத்தின் வரலாறு பற்றி மஹா விஹாரிக மஹாநாம தேரரால் பாளி மொழியில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுக் காவியமாகும்.

இது கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1815 வரையிலான காலகட்டத்தை அது உள்ளடக்கியுள்ளது.

மகாவமிசம் தெற்காசியாவில் ஒரு முக்கியமான வரலாற்று ஆதாரமாகக் கருதப்படுகிறது.

இதில் புத்தர், பேரரசர் அசோகர் தொடர்பாகவும் பௌத்த மதத்தின் எழுச்சி பற்றிய முக்கியமான தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 2023ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பால் வெளியிடப்பட்ட உலக நினைவக மரபுரிமை சர்வதேச ஆவணங்களில், புதிதாக சேர்க்கப்பட்ட 64 பாரம்பரியங்களில் மகாவமிசம் சேர்க்கப்பட்டுள்ளது. 02 ஆம் பக்கம்

## மின்கட்டணத்தை குறைப்பதற்கு முன்மொழிவு

### 14.2% குறையும்

(நா.தினுஷா)

மின்கட்டணத்தை 14.2 சதவீதத்தால் குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதுடன், இந்த கட்டணக் குறைப்பு முதலாம் திகதி (சனிக்கிழமை) முதல் அமுல்படுத்தப்படுவதாகவும் அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்கட்டணத்தை திருத்துவதற்காக மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை விசேட பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றிருந்தது. 02 ஆம் பக்கம்

## பச்சை மிளகாய் கிலோ ஆயிரம் ரூபா



காய்கறி சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாயின் மொத்த விலையும் 800 முதல் 900 ரூபா வரை அதிகரித்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரங்களில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 350 முதல் 500 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

சந்தைக்கு வரும் பச்சை மிளகாயின் அளவு பெருமளவில் குறைந்துள்ளமையால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், எதிர்வரும் நாட்களில் பச்சை மிளகாயின் விலை மேலும் அதிகரிக்குமென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



'தமிழன்' பத்திரிகையின் மூன்றாவது அகவை நிறைவை முன்னிட்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) நடைபெற்ற நிகழ்வின்போது பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும பத்திரிகையை எழுத்துக்கூட்டி வாசிக்கும் காட்சி...
படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன

## கடற்றொழில்சார் பழைய சட்டங்கள் திருத்தப்படும்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



மீன்பிடித்துறை சார்ந்த பல சட்டங்கள் மிகவும் பழையவை என்பதால், காலத்திற்கேற்ப பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய சட்டதிருத்தங்களை செய்ய எதிர்பார்த்துள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 02 ஆம் பக்கம்

## அபாய நிலையில் மருத்துவத்துறை:

### கடைசி நிபுணரும் வெளியேற்றம்!

குழந்தை கதிரியக்கவியல் தொடர்பான இலங்கையின் ஒரேயொரு நிபுணரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக விசேட மருத்துவர்கள் சங்கத்தின் வைத்தியர் அசோக குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் தகவல் வழங்கியுள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது,

2024 மற்றும் 2025ஆம் ஆண்டுக்குள் சுகாதாரத் துறைக்கு குறைந்தது 4,000 நிபுணத்துவ மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். எனினும், தற்போது 2000 மருத்துவர்களே சேவையில் உள்ளனர்.

அத்துடன், சிறப்பு மருத்துவர்களின் ஓய்வு வயதை 60 ஆக நிர்ணயம் செய்யும் அரசாங்கத்தின் முடிவால், மீதமுள்ள 50 சதவீதத்தில் சுமார் 250 மருத்துவர்கள் தமது பதவியை இழப்பார்கள். 02 ஆம் பக்கம்



## மெக்சிக்கோ வெப்பத்தால் நூற்றுக்கணக்கானோர் பலி !

மெக்சிக்கோவில் கடும் வெப்பம் காரணமாக 100 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களில் 50 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அதிகளவானோர் வெப்பத்தின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளதாகவும், ஒருசில மரணங்கள் நீரிழப்பு காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 ஆம் பக்கம்

## இராஜதந்திரிகள் ஏழு பேர் நற்சான்றிதழ்கள் கையளிப்பு



புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர்கள் மூவரும் தூதுவர்கள் ஏழு பேரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தங்களது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர். கண்டி ஜனாதிபதி மாளிகையில் வெள்ளிக்கிழமை (30) இந்த நிகழ்வு இடம்பெற்றது. 02 ஆம் பக்கம்



## யாழ்ப்பாணப் பல்கலை துணைவேந்தருக்கு ஆர்தர் சி. கிளார்க் நிறுவனத்திலும் பதவி

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் கீழ் நிர்வகிக்கப்படும் ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ், உடனடியாகச் செயற்படும் வகையில் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### இராஜதந்திரிகள் ஏழு பேர்...

புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர்கள் திரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசு, உகண்டா குடியரசு மற்றும் சீஷெல்ஸ் குடியரசு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இதேவேளை, பனாமா குடியரசு, பெல்ஜியம், ஹெலனிக் குடியரசு, சிரிய அரபுக் குடியரசு, பெரு குடியரசு, கொரியா குடியரசு மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கான தூதுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களின் பெயர் விவரம் வருமாறு:**

1. கலாநிதி றொஜர் கோபால் - Dr. Roger Gopaul
   திரினிடாட் டொபாகோ குடியரசின் உயர்ஸ்தானிகர் - (புதுடில்லி)
2. பேராசிரியர் (செல்வி) ஜொய்ஸ் கே. கிகாபண்டா - Prof. (Ms.) Joyce K. Kikafunda
   உகண்டா குடியசின் உயர்ஸ்தானிகர் - (புதுடில்லி)
3. திருமதி லாலாட்டியானா அக்கோச் - Mrs. Lalatiana Accouche
   சீஷெல்ஸ் குடியரசு உயர்ஸ்தானிகர் - (புதுடில்லி)
4. எலிஜியோ எல்பர்டோ சலாஸ் டி லியோன் - Mr. Eligio Alberto Salas De Leon
   பனாமா குடியரசின் தூதுவர் - (ஹா நோய் - Ha Noi)
5. டிடியர் வாண்டர்ஹாசெல்ட் - Mr. Didier Vanderhasselt
   பெல்ஜியம் இராச்சியத்தின் தூதுவர் (புதுடில்லி)
6. டிமிட்ரியோஸ் ஐயோனோவ் - Mr. Dimitrios Ioannou
   ஹெலனிக் குடியரசின் தூதுவர் – (புதுடில்லி)
7. கலாநிதி பஸ்ஸாம் அல்-காதிப் - Dr. Bassam Al-Khatib
   சிரிய அரபுக் குடியரசு தூதுவர் - (புதுடில்லி)
8. ஜேவியர் மானுவல் பாலினிச் வெலார்டே - Mr. Javier Manuel Paulinich Velarde
   பெரு குடியரசு தூதுவர் - (புதுடில்லி)
9. திருமதி லீ மியோன் - Ms. Lee Miyon
   கொரியா குடியரசு தூதுவர் - கொழும்பு
10. இஸ்டிவான் ஷப்போ - Mr. Istvn Szab
    ஹங்கேரி தூதுவர் - (புதுடில்லி)

இந்நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவும் கலந்துகொண்டிருந்தார்.

### யாழ்ப்பாணத்தில் சிறுவர்...

2022 ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

எனினும், 2023 ஜனவரி மாதம் முதல் மே மாத இறுதிவரை பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு, கடந்த ஐந்து மாதங்களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன

பொலிஸ் நிலையங்கள் முறையே யாழ்ப்பாணம் 06, சுன்னாகம் 14, மானிப்பாய் 04, கோப்பாய் 06, கொடிகாமம் 03, சாவகச்சேரி 06, வட்டுக்கோட்டை 05, ஊர்காவற்றுறை 07 என் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

18 வயதுக்குட்பட்டோரை அச்சுறுத்தல், துன்புறுத்துதல், காயப்படுத்துதல், மிரட்டுதல், சித்திரவதைக்குட்படுத்துதல் , உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தல், பாலியல் ரீதியாக துன்புறுத்தல், பாலியல் ரீதியான தொல்லை போன்ற வன்முறைச் சம்பவங்களாக இவை காணப்படுகின்றன.

வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் வன்முறை ஏற்படுத்தப்பட்டமை தொடர்பிலாக53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுடன் தொடர்புடையோர் உரிய முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு பலர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுமிடத்து குறித்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற சட்டநியதியின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்துக்கும் உரிய சட்டகோவைக்கமைய நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் முதல் அரையாண்டு பகுதிக்குள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது,

மேலும் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலின்படி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களின் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கி புலனக் (whatsapp) குழுவை உருவாக்கி மாணவர்களின் வரவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறித்த குழுவில் பகிர்ந்து மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் ஏனைய எதிர் விடயங்களை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board வியாழக்கிழமை 2023.06.29 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5160 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,095,287.00 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 3 8 8 5 7 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3402 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,330,835.20 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 05 49 51 75

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1615 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,082,173.12 — வெற்றி இலக்கங்கள் 4 3 1 3 1 4

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1190 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,356,107.60 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 04 11 32 49

ராசிசப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 469 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,527,706.20 — வெற்றி இலக்கங்கள் 06 22 26 41

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1508 — அடுத்த சீட்டிழுப்பின் மெகா பவர் பரிசு ரூ. 333,110,646.00 — W 08 — 11 28 47 49 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00




# கடன் நீடிப்பு தொடர்பிலான உண்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்துங்கள்!

## வர்த்தக, தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடத்தில் ஜனாதிபதி வேண்டுகோள்



கடன் நீடிப்பு தொடர்பில் மக்களை தெளிவூட்டும் சிறப்புப் பணி வர்த்தக, தொழிற்சங்கக் குழுவினரை சார்ந்துள்ளதெனவும் கடன் நீடிப்பு முறைமைகள் பற்றிய உண்மைகளைக் கூறுவதால் இந்நாட்டின் தொழிற்படையினர், பொதுமக்கள் மத்தியில் காணப்படும் அச்சத்தைப் போக்க முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வணிகசபையின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரை ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (29) சந்தித்து கலந்துரையாடியிருந்தபோதே ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வணிக சபையின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் ஆகியோருடனான சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி, கடன் நீடிப்பு வேலைத்திட்டத்தின்கீழ் வட்டி வீதங்கள் குறைவடைவதால் நிதிசார் நடவடிக்கைகளால் பாதிப்புகளை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணம் கிட்டும் என்றும் தெரிவித்தார்.

வட்டி வீதம் குறைவடையும் காலத்தை உறுதியாக குறிப்பிட முடியாதபோதிலும், சில மாதங்களுக்குள் வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடையும் என நிபுணர்கள் கணித்துள்ளனர் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடன் நீடிப்பை செய்யத்தவறும் பட்சத்தில் சிறிய வியாபாரங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்கள் மீண்டும் பெருமளவில் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டினார்.

அதேபோல் டொலர் வலுவடைந்து காணப்படும் இதுபோன்ற நேரங்களில் டொலரின் பெறுமதி மேலும் அதிகரித்தால் நிலைமை பாரதூரமாகிவிடும் என தெரிவித்த ஜனாதிபதி, வெளிநாட்டுக் கடன் நீடிப்பை போன்று உள்நாட்டு கடன் நீடிப்பையும் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அதேபோல் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளர்களுக்கு 9 சதவீத வட்டி அவ்வண்ணமே பெற்றுக் கொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதால் எதிர்கால பலன்கள் பற்றிய நம்பிக்கையை இழக்க வேண்டாமெனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடத்தில் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய கடன் நீடிப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்தில் அபிவிருத்திக்கான உதவிகள் கிடைக்கும் எனவும் அதனால் கடந்த காலத்தில் முடங்கிக் கிடந்த நிர்மாணத்துறை உள்ளிட்ட ஏனைய துறைகளின் அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனால் ஏற்படக்கூடிய பொருளாதார மறுமலர்ச்சியின் ஊடாக பெருமளவான தொழில்வாய்ப்புகள் உருவாகும் எனவும் தெரிவித்தார்.

### மகாவமிச பிரசாரத்தை...

மகாவமிசத்தின் பல கையெழுத்துப் பிரதிகள் பல நாடுகளில் உள்ளன என்பதும் பல தென்கிழக்காசிய மற்றும் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மகாவமிசத்தை மரபுரிமை சின்னமாக பிரகடனப்படுத்தியுள்ளதை பிரசாரப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமடைந்தால் அது இப்போது அரசாங்கம் மேற்கொண்டுவரும் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்பதுடன், தமிழர் தரப்புடன் அரசாங்கம் நடத்திவரும் பேச்சுகளையும் அது முட்டுக்கட்டையை ஏற்படுத்தும் என்பதால் மகாவமிச பிரசார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு அரச மேல்மட்டத்திலிருந்து பேராதனை பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மகாவமிசத்தை மரபுரிமை ஆவணமாக்கும் பணிகளை பேராதனை பல்கலைக்கழகமே முன்னின்று செய்தது.

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக போர்க்கொடி தூக்க உயர்மட்ட பௌத்த தலைவர்மார் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிந்தது.

### மின்கட்டணத்தை...

அதன்போதே ஆணைக்குழுவால் இவ்வாறு அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய விலை திருத்தத்துக்கமைய 0 -30 வரையான பிரிவுக்கான ஒரு அலகு கட்டணம் 30 ரூபாவிலிருந்து 10 ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த அலகு பிரிவுக்கான புதிய மாதாந்த நிலையான கட்டணம் 400 ரூபாவிலிருந்து 150 ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

60 இற்கும் குறைவான பிரிவுக்கான ஒரு அலகு கட்டணம் 42 ரூபாவிலிருந்து 32 ரூபா குறைப்பட்டுள்ளதுடன், இந்தப் பிரிவுக்கான மாதாந்த நிலையான புதிய கட்டணம் 650 ரூபாவிலிருந்து 300 ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 91 முதல் 120இற்கு இடைப்பட்ட பிரிவுக்கான ஒரு அலகு கட்டணம் 42 ரூபாவிலிருந்து 35 ரூபா வரையிலும் குறைக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்த நிலையான கட்டணம் 1500 ரூபாவிலிருந்து 1000 ரூபா வரையில் குறைக்கப் பட்டுள்ளது.

புதிய முன்மொழிவு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

**Electricity Tariff Comparison**

| Category | | Average Manthly Consumption (kWh/Consumer) | Revised Tariff Jul - Dec 2023 | | Existing Tariff | | % Change in Revenue |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Unit Price (Rs./kWh) | Average Monthly Bill (Rs.) | Unit Price (Rs./kWh) | Average Monthly Bill (Rs.) | |
| Domestic | 0-30 | 11 | 20.88 | 224.76 | 59.00 | 635.24 | -64.6% |
| | 31-60 | 45 | 21.64 | 964.47 | 44.63 | 1,989.41 | -51.5% |
| | 61-90 | 82 | 37.68 | 3,093.23 | 49.92 | 4,097.88 | -24.5% |
| | 91-180 | 143 | 47.75 | 6,841.35 | 55.46 | 7,946.37 | -13.9% |
| | 180< | 322 | 62.49 | 20,125.38 | 65.00 | 20,935.38 | -3.9% |
| | D-TOU | 376 | 61.74 | 23,232.27 | 65.95 | 24,815.99 | -6.4% |
| General Purpose | | 309 | 49.80 | 15,398.40 | 52.41 | 16,203.31 | -5.0% |
| Government | | 1,920 | 51.57 | 99,035.40 | 51.97 | 99,790.65 | -0.8% |
| Hotel Purpose | | 38,222 | 37.59 | 1,436,623.36 | 50.97 | 1,948,115.60 | -26.3% |
| Industrial Purpose | | 5,120 | 37.48 | 191,891.37 | 41.20 | 210,958.67 | -9.0% |
| Religious Purpose | 0-30 | 11 | 24.03 | 256.91 | 67.41 | 720.73 | -64.4% |
| | 31-90 | 58 | 19.14 | 1,109.39 | 42.87 | 2,484.87 | -55.4% |
| | 91-120 | 107 | 42.38 | 4,516.56 | 48.48 | 5,166.56 | -12.6% |
| | 121-180 | 155 | 36.28 | 5,620.17 | 48.10 | 7,450.17 | -24.6% |
| | >180 | 573 | 43.46 | 24,923.27 | 46.65 | 26,753.27 | -6.8% |
| Street Lamp | | 406 | 45.00 | 18,291.67 | 45.00 | 18,291.67 | 0.0% |
| Overall | | 156 | 42.42 | | 49.41 | | -14.14% |

### அபாய நிலையில் ...

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 289 மயக்க மருந்து நிபுணர்கள் இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 155 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களில் 30 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். மீதமுள்ள மயக்க மருந்து நிபுணர்கள் 60 வயதில் ஓய்வு பெற்றால், சுகாதாரத் துறை மேலும் 20 மயக்க மருந்து நிபுணர்களை இழக்கும்.

இந்நிலையில் நாட்டில் குழந்தை கதிரியக்க மருத்துவத்தில் ஒரே ஒரு நிபுணர் மட்டுமே இருந்தார், அவரும் தற்போது புலம்பெயர்ந்துள்ளார் என்று விசேட மருத்துவர்கள் சங்கத்தின் வைத்தியர் அசோக குணரத்ன தெரிவித்துள்ளார்.

### மெக்சிக்கோ வெப்பத்தால் ...

சில வடக்கு நகரங்களில் தொடர்ந்து அதிக வெப்பநிலை பதிவாகி வருகிறது. சோனோரா மாநிலத்திலுள்ள அகோஞ்சி நகரத்தில் கடந்த புதன்கிழமை 49 பாகை செல்சியஸ் (120 பாரன்ஹீட்) வெப்பநிலை பதிவானது. ஒருசில பகுதியிலுள்ள மக்கள் அதிக வெப்பம் காரணமாக வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர்.

பகல் நேரங்களில் மக்கள் தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மார்பா பாலைவனத்தில் 16 உதவி நிலையங்களை அமெரிக்க எல்லை ரோந்து படை நிலைநிறுத்தியுள்ளது. கடும் வெயில் காரணமாக அமெரிக்க எல்லைக்குள் நுழையும் புலம்பெயர்ந்தோருக்கு இந்த குழு உதவி வருகின்றது.

### கடற்றொழில்சார் பழைய ...

இதற்கான யோசனைகளை இவ்வருட இறுதிக்குள் அமைச்சரவை அனுமதியைப் பெற்று, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அங்கீகாரத்தைப் பெறவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போதிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டுமே தீர்வுகள் இருப்பதாகவும், ஏற்கனவே இருந்த பல பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வுகளைக் கண்டுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டுக்கு அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த வியாழன் (29) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"பழையன கழிதலும் புதிய புகுதலும் என்பதற்கிணங்க, கடற்றொழில் அமைச்சின் பணிகளை ஏற்று பணியாற்றி வருகிறேன். எரிபொருள் விலையேற்றம், உலகளாவிய கொவிட் பெருந்தொற்று என்பவற்றால் மீனவர்களின் கடற்றொழிலில் தொய்வுகள் ஏற்பட்டிருந்தன. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் முன்னேற்பாடுகளுடன் அமைச்சின் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடல் உணவுகளின் விலையேற்றம் குறித்த விமர்சனங்கள் இருக்கின்றன. நாட்டில் ஏற்கனவே இருந்த நிலைமையால் மீன்பிடித் தொழிலில் ஏற்பட்ட தடங்கல்கள், எரிபொருள் விலையேற்றம், இறக்குமதி கட்டுப்பாடு, போதிய முகாமைத்துவம் இன்மை உள்ளிட்டவையே கடல் உணவு விலையேற்றத்துக்கு காரணமாகும். எனினும், எதிர்வரும் காலங்களில் இவற்றை சீர்செய்து, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, முன்நோக்கிச் செல்ல எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைப் பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதால் கடல் வளங்கள் அழிவடைவதுடன், மீனவர்களின் வாழ்வாதாரத்திலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதியின் அடுத்த புதுடில்லி பயணத்தின்போது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழி ஏற்படும் என்று நம்புகின்றேன். வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நீர் வேளாண்மையை பரவலாக முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக, கடல் அட்டை வளர்த்தல், கடல் பாசி, இறால் பண்ணை, நண்டு பண்ணை என பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். வடமாகாணத்தில் சுமார் 5000 ஏக்கரில் இந்த நீர்வளத் திட்டங்களை முன்னெடுக்கும் இலக்கு இருந்தாலும் இதுவரை 1500 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தத் திட்டங்களை விஸ்தரித்துள்ளோம். இதில் ஈடுபட பல முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். அத்துடன், வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ளவர்கள், அல்லது முதலீடு இல்லாதவர்களுக்கும் அரசாங்கததின் உதவியோடு அந்த முதலீடுகளை செய்துவருகிறோம்.

புதிய முதலீட்டாளர்கள் தங்களின் கோரிக்கைகளை உதவி அரசாங்க அதிபரிடம் முன்வைக்க முடியும். அவர் இந்தக் கோரிக்கைகளை இந்தத் தொழில்துறையுடன் தொடர்புபட்ட கடற்றொழில் திணைக்களம், நெக்டா நிறுவனம், கடலோர பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்கு கையளித்த பின்பு, இந்த நான்கு தரப்பினரினதும் கூட்டு செயற்பாட்டின் ஊடாக ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு, முதலீட்டாளர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை பரிசீலனை செய்து அதனை நிறைவேற்றி வருகின்றனர்.

இதனைத் தவிர, மீன்பிடித்தொழில் துறை தொடர்பான பழைய சட்டங்களைத் திருத்தி, தற்போதைய சூழலுக்கு ஏற்ற வகையிலும், எதிர்காலத்திற்கு ஏற்ற வகையிலும் சட்டங்களில் திருத்தங்களை செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்த வருட இறுதிக்குள் இதற்கான திருத்தங்களை அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சரவை ஊடாக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

இதன்பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், நாட்டில் தற்போதிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டுமே தீர்வுகள் உள்ளன என்றார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அதிகார பரவலாக்கம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஜனாதிபதி உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் கருத்துகளை தெரிவிக்கிறார். இது குறித்து உங்களின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், இந்தப் பிரச்சினைக்கு அரசியலமைப்பில் ஏற்கனவே தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் 13ஆவது திருத்தத்தின் ஊடாக இதற்கான தீர்வுகளை எட்ட முடியும் என்றும் தெரிவித்தார்.

"சர்வரோக நிவாரணியாக ஜனாதிபதி நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைத் தரக்கூடியவர். ஏற்கனவே இருந்த பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டுள்ளார். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னோடியாகவே காணி பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறார். அரசியல் கைதிகள் என்று கூறப்படும் கைதிகளை விடுத்துவித்துள்ளார். ஒரு கை அன்றி இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டினால் மட்டுமே ஓசை வரும் என்பதைபோல் இருதரப்பினரும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால் தமிழர் தரப்பில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும். அரசியல் இலாபங்களைக் கருத்திற்கொண்டு தமிழர் தரப்பில் சில இழுத்தடிப்புகளைச் செய்கின்றனர். இவ்வாறு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முழுமையாக நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா, நேரடியாக பாதிக்கப்பட்ட 15032 மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

''களுத்துறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் விசேட குழுக்களை நியமித்து பல கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், தகவல்களைத் திரட்டி நட்டஈடு வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 3068 மில்லியன் ரூபா நட்டஈடு நான்கு கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளது. இதில் நேரடியாக பாதிக்கப்பட்ட 15,032 மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. மறைமுகமாக பாதிக்கப்பட்ட 4882 மீனவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் அமைச்சுடன் தொடர்புகொண்டு, தகவல்களை வழங்கலாம். இதற்கமைய தேடியறிந்து அவர்களுக்கான நிவாரணங்களையும் வழங்க முடியும்'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

# மரமொன்றை வெட்டுவது 12 பேரை கொல்வதற்குச் சமம்

## யுனிசெப் மாநாட்டில் 12 வயது சம்மாந்துறை சிறுமி உரை

(நூருல் ஹுதா உமர்)

ஓர் அடர்ந்த மரமானது 12 பேர் சுவாசித்து உயிர் வாழ்வதற்கு உதவுகிறது. அதனை வெட்டினால் 12 பேரைக் கொலை செய்வதைப் போலுள்ளதாக உணரவில்லையா? என்று 12 வயது சிறுமியாகிய நான் உலகத்தாரிடம் கேட்கிறேன் என்றும் 2015இல் பரிஸ் காலநிலை மாற்றம் தொடர்பிலான ஒப்பந்தத்தில் இன்றுவரையும் கையெழுத்திடாத உலக நாடுகளின் தலைவர்கள் இவ்வொப்பந்தத்தில் ஒப்பமிட்டு இணைந்துகொள்ளுங்கள் என பகிரங்க அழைப்பை விடுக்கிறேன் என்றும் 28.06.2023 அன்று கொழும்பில் இடம்பெற்ற யுனிசெப் சர்வதேச அமைப்பின் Bussiness Council அங்குராப்பண நிகழ்வில் சிறப்பு உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்ட 12 வயதுச் சிறுமி மின்மினி மின்ஹா சர்வதேச தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மேலும் இங்கு உரையாற்றிய அவர்,

நான் இச்சபையினோர் முன்னிலையில் ஒரு வேண்டுகோளை சர்வதேசத்துக்கு விடுக்கிறேன். இவ்வொப்பந்தத்தில் 12, டிசம்பர் 2015இல் 55 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. பரிஸ் உடன்படிக்கை 2016, நவம்பர், 4ஆம் திகதி



அமுலுக்கு வந்தது. அதில் இலங்கை 2016, ஏப்ரல், 22ஆம் திகதி கைச்சாத்திட்டுவிட்டது.

அதாவது, உலகளவில் வெப்பநிலை அதிகரிப்பைத் தடுப்பதற்காக பிரான்ஸின் தலைநகரமான பரிஸில் 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்நூற்றாண்டின் முடிவில் வெப்பநிலை அதிகரிப்பை 2 பாகை செல்சியஸால் குறைத்தல் அல்லாது போனால் 1.5 பாகை செல்சியஸாவது இந்த வெப்பநிலையைக் குறைக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது - என்றார்.

யுனிசெப் பிசினஸ் கவுன்சில் மாநாடானது யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கொக் தலைமையில் இடம்பெற்றது.

மின்மினி மின்ஹா சம்மாந்துறை அல்-அர்சத் மஹா வித்தியாலயத்தில் தரம் 7இல் கல்வி கற்று வருகிறார்.



இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் (29) புதுடில்லியி லுள்ள வெளியுறவுத் துறை அமைச்சில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தார்.


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/


## கொஸ்லந்த விபத்தில் காயமுற்ற மாணவர்கள் வைத்தியசாலையில்

(பதுளை நிருபர்)

பண்டாரவளை, கொஸ்லந்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை (30) காலை இடம்பெற்றுள்ளது.



கொஸ்லந்த பகுதியில் பயணித்த முச்சக்கரவண்டியொன்று சுமார் 20 அடி பள்ளத்தில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் 4 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

காயமடைந்தவர்கள் கொஸ்லந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் போராட்டம்

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப் பட்டோரின் உறவுகள் வெள்ளிக்கிழமை போராட்டமொன்றை முன்னெடுத்தனர். குறித்த போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (30) கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமலாக்கப் பட்டோரின் உறவுகளது அலுவலகம் முன்பாக ஏ 9 வீதியில் இடம்பெற்றது.




2383ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் உறவுகள் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழிலிருந்து கொழும்பு வந்த சொகுசு பஸ் நடுவீதியில் தீக்கிரையானது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பயணிகள் பஸ்ஸொன்று மதுரங்குளிய கரிகெட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை (30) அதிகாலை திடீரென தீப்பிடித்து எரிந்ததில் பஸ் முற்றாக எரிந்து நாசமானது.

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான ஈஸ்வரன் பஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சொகுசு பயணிகள் போக்குவரத்துப் பஸ் ஒன்றே தீக்கிரையாகியுள்ளது.



இந்த பஸ் கடந்த 29ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது.

பஸ் தீப்பிடித்தபோது, பஸ்ஸில் 40 இற்கும் அதிக பயணிகள் இருந்ததாகவும், யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு பஸ்ஸிலிருந்து பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் தீப்பிடித்ததில் ஒருசில பயணிகளின் பொதிகள் மட்டுமே எரிந்ததாகக் கூறப்படுகிறது.

தீ விபத்திற்கு முன்னர் புத்தளத்தை அண்மித்த பகுதியில் பயணிகள் தேநீர் அருந்துவதற்காக பஸ்ஸை நிறுத்தியபோது சாரதி பஸ்ஸை சோதனையிட்ட போதும் விபத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பஸ் தீப்பிடித்ததையடுத்து, புத்தளம் நகர சபையின் தீயணைப்புப் பிரிவு மற்றும் பாலாவி விமானப்படை தீயணைப்புப் பிரிவினர் வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். ஆனால் அதற்குள் பஸ் முழுமையாக தீப்பிடித்து எரிந்தது.

சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 02, 2023

# தமிழக ஆளுநரின் தீர்மானமும் தமிழக அரசியல் கொந்தளிப்பும்

செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்கி தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி இட்ட உத்தரவு தமிழ்நாட்டில் பெரும் அரசியல் பிரளயமொன்று ஏற்படுவதற்கு வித்திட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் ஆளுநரால் திரும்பப் பெறப்பட்டதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், ஆளுநரின் இந்த நடவடிக்கை தமிழ்நாடு அரசியல் களத்தில் பேசுபொருள் ஆகியுள்ளது. ஆளுநரின் நடவடிக்கை அரசியல் ரீதியாக பல தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

சட்டவிரோத பணப் பரிமாற்றத்தடை சட்ட வழக்கில் செந்தில் பாலாஜியை அமுலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த ஜூன் 14ஆம் திகதி கைதுசெய்த நிலையில், தற்போது அவர் காவேரி மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதற்கிடையே, செந்தில் பாலாஜி வகித்து வந்த மின்சாரத்துறை தங்கம் தென்னரசுவுக்கும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை முத்துசாமிக்கும் பிரித்து வழங்கப்பட்டது. இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி தொடர்வார் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது.

செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் என்று தமிழ்நாடு அரசு பிறப்பித்த வர்த்தமானியை இரத்து செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை ஜூன் 26ஆம் திகதி விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், "செந்தில் பாலாஜி அமைச்சராக நீடிப்பதில் தனக்கு விருப்பமில்லை என்று தெரிவித்துள்ள ஆளுநர், அமைச்சரை நீக்க வேண்டும் என்று எங்கே சொல்லியிருக்கிறார்? இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பதை ஆளுநர் ஏற்கவில்லை என்பதற்கும், அவரை நீக்க உத்தரவிட்டார் என்பதற்கும் வித்தியாசம் உள்ளது" என்று கருத்து தெரிவித்திருந்தது.

இந்நிலையில், செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து ஆளுநர் நீக்கியுள்ளதாக தமிழ்நாடு ஆளுநர் மாளிகை தரப்பில் இருந்து கடந்த வியாழக்கிழமை மாலை அறிவிப்பு வெளியானது. அந்த அறிவிப்பில்,

★ செந்தில் பாலாஜி, வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணமோசடி செய்தல், சட்டவிரோத பணப் பரிமாற்றம் உள்ளிட்ட கடுமையான கிரிமினல் வழக்குகளை எதிர்கொண்டுள்ளார்.

★ அமைச்சர் பதவியை துஷ்பிரயோகம் செய்து, விசாரணையில் செல்வாக்கு செலுத்தி, சட்டம் மற்றும் நீதி வழங்கப்படுவதைத் தடுக்கிறார்.

★ தற்போது அமுலாக்க இயக்குனரகம் விசாரித்து வரும் குற்ற வழக்கில் நீதிமன்றக் காவலில் உள்ளார். அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் மேலும் சில குற்ற வழக்குகள் மாநில காவல்துறையால் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

★ அமைச்சரவையில் செந்தில் பாலாஜி நீடிப்பது, நியாயமான விசாரணை உள்ளிட்ட சட்ட நடைமுறைகளை எதிர்மறையாக பாதிக்கும். இது இறுதியில் மாநிலத்தில் அரசியலமைப்பு இயந்திரத்தை சீர்குலைக்க வழிவகுக்கும் என்ற நியாயமான அச்சங்கள் உள்ளன.

எனவே, செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஆளுநரின் நடவடிக்கை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது, "ஆளுநருக்கு அந்த அதிகாரம் கிடையாது. நாங்கள் சட்ட ரீதியாக எதிர்கொள்வோம் " என்று தெரிவித்துள்ளார்.

"மாநில அமைச்சர் ஆளுநரின் இசைவின்படிதான் பதவி வகிக்கிறார். செந்தில் பாலாஜி விவகாரத்தில் ஆளுநர் இசைவு தெரிவிக்கவில்லை. மாநிலங்களைப் பொறுத்தவரை அரசியல் சாசனத்தின் காவலர் ஆளுநர்தான். அந்தவகையில் ஆளுநர் செய்தது சரிதான்'' என்கின்றனர் புத்திஜீவிகள்.

ஏற்கனவே மசோதாக்களை நிறுத்தி வைப்பது, தமிழ்நாடு, தமிழகம் என்ற சர்ச்சையை ஏற்படுத்துவது என மாநில அரசுடன் முரண்பாட்டில் இருந்தார் தமிழக ஆளுநர். இப்போது செந்தில் பாலாஜியை நீக்கியதன் மூலம் இந்த நடவடிக்கையை ஆளுநர் வேறு கட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார் என்றே கருதவேண்டியுள்ளது.

இது தேவையில்லாத சர்ச்சைதான். செந்தில் பாலாஜியே தனது பதவியை விட்டு விலகியிருக்கலாம். அவர் மீதான வழக்கு எத்தனை ஆண்டுகள் நடைபெறும் என்று தெரியாது. அப்படி இருக்கும்போது எத்தனை ஆண்டுகளுக்கு அவர் துறை இல்லாத அமைச்சராகத் தொடர்வார்? இது அரசுக்கு செலவுதானே? மக்களின் வரிப்பணம் தானே அது என்ற நியாயப்பாட்டில் ஆளுநர் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்திருக்கலாம்.

அமைச்சர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது தனது பதவியை விட்டு அவர் விலகுவதுதான் தார்மீக ரீதியாக சரியாக இருக்கும். அதுதான் நேர்மையான, வெளிப்படையான நிர்வாகத்துக்கு அழகு. கட்சி ரீதியாக எத்தகைய உதவியை வேண்டுமானாலும் செந்தில் பாலாஜிக்கு மு.க.ஸ்டாலின் செய்யலாம். ஆனால், அரசு ரீதியாக எந்த உதவியையும் செய்யக்கூடாது அல்லவா?

இந்தியாவினதும் இலங்கையினதும் அரசியலமைப்பு சட்டதிட்டங்கள் ஒருமித்த போக்கையே கொண்டுள்ளன. இலங்கையிலும் இதேபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. மாநிலமொன்றின் முதலமைச்சர் பரிந்துரைக்கும் அனைத்து விடயங்களுக்கும் ஆளுநர் செவிசாய்க்க வேண்டும் என எந்த கட்டாயமும் இல்லை. ஆளுநர் கையெழுத்திட்டால் மட்டுமே ஒருவர் அமைச்சராக முடியும். ஒருவரை அமைச்சராக்க அதிகாரம் படைத்த ஆளுநரால், குறிப்பிட்ட காரணங்களுக்காக அமைச்சர் பதவியில் இருந்து ஒருவரை நீக்கவும் தனிப்பட்ட அதிகாரம் உண்டு. இதை அரசியலமைப்பு சட்ட ரீதியாக மறுக்க முடியாது.

குற்ற வழக்குகளில் சிக்கி கைதாகியுள்ள செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக நீடிப்பதை ஏற்க முடியாது என ஆளுநர் மறுப்பு தெரிவித்த அடுத்த கணமே, அவரை அமைச்சர் பதவியில் இருந்து முதல்வர் நீக்கியிருக்க வேண்டும். ஆனால், ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக முதல்வர் விசேட வர்த்தமானியைப் பிறப்பித்தார். அமைச்சர் என்ற பதவியில் நீடித்துக்கொண்டு செந்தில் பாலாஜி எப்படி தனக்கு எதிரான குற்ற வழக்கை நேர்மையாக எதிர்கொள்வார்?

அரசியலமைப்பு சட்ட ரீதியாக ஓர் அமைச்சர் எடுத்துக் கொள்ளும் இரகசிய காப்புப் பிரமாணம் மிக முக்கியமானது. அதை நிலைநாட்ட ஆளுநர் எந்த முடிவையும் சட்ட ரீதியாக எடுக்க முடியும். ஒரு மாநிலத்தில் ஆட்சி சட்டத்துக்குப் புறம்பாக எல்லை மீறிச் செல்கிறது என்றால், அந்த ஆட்சியை கவிழ்க்கவும் ஆளுநருக்கு பிரத்தியேக அதிகாரமுண்டு. அமைச்சர் ஒருவர் கை நீட்டிக் காசு வாங்கலாமா? பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டேன் வழக்கை வாபஸ் பெறலாம் என்று கூறுவது சரியா என்ற மக்களின் கேள்விகளை நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் ஆளுநரின் செயற்பாடு சரியானது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்களுக்கு ஆளுநரின் தீர்மானம் அதிருப்தி தந்தாலும், யதார்த்தமாக நோக்கினால் தமிழக ஆளுநரின் தீர்மானம் சரியானதே.

# வங்கிகளின் கடன் மீதான வட்டிவீதமும் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும்

## கடன் மறுசீரமைப்பும் வங்கிகளின் எதிர்காலமும்




சின்னத்தம்பி குருபரன்

பண ரீதியிலான கொடுக்கல் - வாங்கல்களைச் செய்யும் நிறுவனங்கள் வங்கிகளாகும். இப்போது இலத்திரனியல் ரீதியிலான கொடுக்கல் - வாங்கல்கள் மேலை நாடுகளில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. பல நாடுகளில் பணப் பரிவர்த்தனை இல்லாத கொடுக்கல் - வாங்கல்களும் நடந்து வருகின்றன. வங்கிகள் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பாரிய பங்களிப்புச் செய்கின்றன. பாமர மக்கள் முதல் கோடீஸ்வரர்கள் வரை பணக் கொடுக்கல் - வாங்கல்களுக்கு வங்கிகளையே நம்பி இருக்கின்றனர். வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் வங்கிகளினால் வழங்கப்படும் கடன் மற்றும் மேலதிகப் பற்று, கடன் அட்டைகள், Online என்பவற்றைப் பயன்படுத்தித் தமது தொழில் முயற்சிகளைக் கொண்டு நடத்துகின்றனர். சாதாரண மக்களைப் பொறுத்தவரை அவற்றுடன் நகைகளை அடகு வைத்தும் தமது பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இவ்வாறு வங்கிகள் அரசுடனும் மக்களுடனும் பின்னிப் பிணைந்த நிதி நிறுவனங்களாகக் காணப்படுகின்றன.

மத்திய வங்கி நாட்டிலுள்ள வங்கிகளுடன் வங்கி வீதம், ஒதுக்கு வீதம், வட்டி வீதம், முறிகள், கடன் பத்திரங்களின் விற்பனை என்ற அடிப்படையில் இறுக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றது. வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் மீதான வட்டி வீதம் வைப்புகள் மீதான வட்டிவீதம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதும் நாட்டின் பணநிரம்பல், பணச் சுற்றோட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்குவதும் மத்திய வங்கியின் பிரதான கடமைகளாகக் கொள்ளப்படுகின்றன. மத்திய வங்கி பணநிரம்பல், பணச் சுற்றோட்டம், பணவீக்கம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது பல பில்லியன் கணக்கான பணத்தை அச்சிட்டு வெளியிட்டிருப்பது நாட்டில் பாரதூரமான விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றன.

மத்திய வங்கியினதும் சம்பள நிர்ணய சபையினதும் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களினதும் ஆலோசனைகளைச் செவிமடுக்காது ஊழியர்களின் சம்பளங்களைத் தாறுமாறாக அதிகரிப்பதும் கண்டபடி பணவடிவிலான நிவாரணங்கள் வழங்குவதும் நாட்டில் பணநிரம்பலையும் பணச் சுற்றோட்டத்தையும் அதிகரித்து மேலும் சிக்கலான பொருளாதார விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். இதனால் சந்தைக் கேள்வி சடுதியாக அதிகரிக்கும். உற்பத்தியாளர்களால் பொருட்களின் நிரம்பலை உடனடியாக அதிகரிக்க முடியாது என்பதால் பதுக்கல், கள்ளச்சந்தை வியாபாரம் ஆகியன ஏற்பட்டுப் பொருட்களின் விலையைக் கண்டபடி அதிகரிப்பார்கள். அதனால் நாட்டில் பணவீக்கம் வேகமாக அதிகரிக்கும். மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து உணவுக்கான பணவீக்கத்தையும் வேகமாக உயர்த்திவிடும்.

இலங்கையில் பல வணிக, நிதி நிறுவனங்கள் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நிதியீட்டத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இந்த நிதியீட்டத்தைக் கொண்டு வங்கிகள் தனிநபர் முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், இறக்குமதியாளர்கள் ஆகியோருக்குப் பெருமளவு கடன்களை வழங்குகின்றன. வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் வழங்கிய நிதிகள் யாவும் அமெரிக்க டொலர் மூலமாகவே வழங்கப்பட்டன. நாணய மாற்று வீதத்தின்படி அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி மிக வேகமாகக் குறைந்தமையினால் வங்கிகள் வழங்கிய கடன், வழங்கப் போகின்ற கடன் தொடர்பாக வட்டிவீத மறுசீரமைப்புத் தொடர்பாக வங்கிகளும் மத்திய வங்கியும் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டன. அத்தோடு கொவிட்-19 அவசரநிலை காரணமாகவும் நாட்டின் வர்த்தக பொருளாதாரக் கொள்கைகள் நிதி இறைக் கொள்கைகளின் வங்குரோத்து நிலைமை காரணமாகவும் அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகள் செய்த ஊழல், மோசடி காரணமாகவும் நாட்டில் படுமோசமான அரசியல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாட்டின் அரசியல் இருப்பையே ஆட்டங்காண வைத்தன. இதனால் சகல துறைகளும் பாதிக்கப்பட்டன. இதற்கு இலங்கை வங்கிகளும் விதிவலக்கல்ல. அதனால் வங்கிகள் கடன்கள் மீதான வட்டிவீதச் சீராக்கத்தைச் செய்தன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனைகளுக்கு இணங்க நாட்டின் வர்த்தக, வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் மீதான வட்டி வீதத்தைத் தாறுமாறாக அதிகிரித்தன. ஏற்கனவே வழங்கியிருந்த தனிநபர் கடன்களுக்கு 5 - 7 வீதம் வரையும் வர்த்தக மற்றும் முயற்சியாளர்களுக்கான கடன்களுக்கு 8 - 13 வீதமும் நிர்ணயிக்கப்பட்டு 01-01-2022 முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டன. அதேபோல் 01-01-2022 முதல் வழங்கப்பட்ட கடன்களுக்கும் வட்டிவீதச் சீராக்கத்தின்படி கடன்கள் வழங்கப்பட்டன. அதன்படி தனிநபர் கடன்களுக்கு 20 - 25 வீதமும் வணிக முயற்சிக்கான கடன்களுக்கு 15 - 25 வீதமும் துணிவுள்ள முயற்சியாண்மைகளுக்கு 15 - 25 வட்டி வீதமும் அதிகரிக்கப்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. அடகு நகைகளுக்கான வட்டிவீதம் 8 - 12 வீதம்வரை அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வட்டிவீதங்கள் அடிக்கடி மாற்றப்படக் கூடியனவாகவும் அமைந்திருக்கின்றன. வட்டிவீத உயர்வின் அடிப்படையில் தனிநபர் கடன்களுக்கு 27 - 35 வீதமும் வணிக வியாபார முயற்சிகளுக்கு 30 - 35 வீதமும் துணிவுள்ள முயற்சியாண்மைகளுக்கு 30 - 35 வீத அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அடகு நகைகளுக்கான வட்டிவீதம் 22 -26 எனவும் அறவிடப்படுகின்றன. அத்துடன் கடன் அட்டைகள், வங்கி மேலதிகப் பற்று ஆகியவற்றுக்கும் இவ்வாறுதான் வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இச்சீராக்கம் நீண்ட, குறுகியகால சேமிப்பின் மீது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இவ்வட்டிவீத அதிகரிப்பு அரச, தனியார் வங்கிகளுக்கிடையே சற்று வித்தியாசப்பட்டுக் காணப்படுகின்றன.

வங்கிகளின் வட்டிவீதச் சீராக்கமானது உண்மையில் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் (ஐ.எம்.எவ் உட்பட) நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையையும் கருத்தில் கொண்டு பணநிரம்பல பணச்சுற்றோட்டம் ஆகியவற்றில் உறுதித் தன்மையைப் பேணுவதற்காகவும் வங்கிகளைப் பாதுகாப்பதற்காகவும் வட்டிவீதச் சீராக்கம் செய்யப்பட்டது. இச்சீராக்கம் காரணமாக சேமிப்புக்கான வட்டிவீதம் அதிகரிக்கப்படாமையால் 45 - 50 வீதம் வரை சேமிப்புக் குறைந்துள்ளது. கடன்களுக்கான வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டமையினால் தனிநபர் கடன் உடபட வணிக வியாபார உற்பத்தி நடவடிக்கைகளுக்கான கடன் பெறுவோர் 40 வீதம் வரைக் குறைந்துள்ளது. பொருட்களின் விலை அதிகரித்து வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை காரணமாக 30 வீதமானோர் வங்கிகளில் இருந்த சேமிப்பை எடுத்து உணவுப் பொருள் கொள்வனவுக்குப் பயன்படுத்துவதாக கடந்த மாதம் Asia Learn நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகின்றது.

வட்டிவீதம் அதிகரித்துச் சேமிப்புக் குறைந்த நிலையில், வர்த்தகம், உற்பத்தி தொழில் முயற்சிக்கான முதலீட்டுப் பாய்ச்சல் குறைந்து கொண்டே போகும். அதனால் தொழில் முயற்சிகள் பாதிப்படைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடையும். இதனால் பொருட்களின் சந்தை நிரம்பல் குறைவடைந்து பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும். சந்தைச் சமநிலை பாதிப்படையும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் பொருட்களைப் பதுக்கி வைத்து மேலும் கேள்வியை அதிகரித்து விலையைக் கூட்டுவார்கள். அதன் காரணமாகப் பணவீக்கம் அதிகரிக்கும். இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகக் குறிப்பிட்ட பொருட்களின் மீது அதிகபட்ச கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கும். கட்டுப்பாட்டு விலையினால் பாதிப்படையும் உற்பத்தியாளர்கள் மேலும் உற்பத்தியைக் குறைப்பார்கள். இந்நடவடிக்கை 'கிணறு வெட்டப் பூதம் வெளிக்கிட்டது போல்' பொருட்களின் பதுக்கல் அதிகரித்து மேலும் விலை அதிகரிக்கும். இதுதான் இப்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கிறது.

வங்கிகளின் வட்டிவீத அதிகரிப்பினால் முதலீட்டுக்கான கேள்வி 30 வீதம்வரை குறைந்துள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். நாட்டின் தலைவரும் ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளும் கொள்கை வகுப்பாளர்களும் ஆலோசகர்களும் உயர் அதிகாரிகளும் நாட்டைப் பிழையாக வழி நடத்தியமையால் நாடு அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் விட்ட தவறுகள் பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாது நாட்டை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கின்றனர். இதனால் (வங்கிகளின் வட்டிவீத அதிகரிப்பு உட்பட) மத்தியதர வர்க்கமும் பாமர, ஏழை, எளிய மக்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளர். இது தொடர்பான முழு விபரத்தினையும் Asia Learn நிறுவன ஆய்வறிக்கை தெளிவான புள்ளி விபரங்களுக்கூடாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றது. மலைபோல் 250 வீதம் வரை எகிறிய விலை ஏற்றத்தினாலும் கட்டண ஏற்றங்களினாலும் வடடிவீத அதிகரிப்பினாலும் அமெரிக்க டொலரின் பெறுமதி ஏற்றம் காரணமாகவும் பணவீக்கம், உணவுக்கான பணவீக்கம் ஆகியன 70 வீதத்தையும் தாண்டிச் சென்றன. ஆட்சியாளர்கள் செய்த மன்னிக்க முடியாத தவறுகளின் காரணமாக சாதாரண பொது மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாகப் பல குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. இதனைப் பயன்படுத்தி நிவாரணம் வழங்க முன்வருவார்கள். அதிலும் பெருமளவு ஊழல், மோசடிகள் நடந்தேறும். 'இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா' என்பது போல் ஆசைப்பட்டவாறு ஆளுந்தரப்பு அவரசியல்வாதிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் 'பழம் நழுவிப் பாலில் விழுந்து. அது நழுவி வாயில் விழுந்தது போல்' நிவாரணங்கள் வரப்பிரசாதமாக அமைந்துவிடும்.

உள்நாடு, வெளிநாடுகளில் இருந்தும் சர்தேச நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள், அதன் மீதான வட்டி செலுத்துகை தொடர்பாக 2022இல் கடனை மீளச் செலுத்துவதைப் பிற்போடுவதற்கு அரசு எடுத்த தீர்மானத்தின் காரணமாக கடன் வழங்கிய, கடன் வழங்க இருந்த நாடுகள் இலங்கை மீதான நம்பிக்கையை இழந்தன. கடனை மீளச் செலுத்துகை தொடர்பாக வெளியிடப்பட்ட பீச் அறிக்கையானது தரவரிசையில் பின்னுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தன. இந்த அறிக்கையும் இலங்கைக்குக் கடன் வழங்குவது பற்றிய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தின. அதன் காரணமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமானது.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

# கடன் மறுசீரமைப்பு விடயத்தால் சூடுபிடித்த கொழும்பு அரசியல்

## சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு கடந்த வாரம் நாடு திரும்பிய கையோடு கொழும்பில் பல முக்கிய சந்திப்புகளை நடத்தினார்.

அதனையடுத்தே வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகள் கடந்த புதன்கிழமை (28) விசேட அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயங்கள் விரிவாக பேசப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர்களின் கேள்விகளுக்கு விளக்கமளித்தார்.

2022ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83,700 மில்லியன் டொலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3 வீதமாகும். 2022ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை 41,500 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.6 வீதமாகும். அப்போது மொத்த உள்நாட்டுக் கடன் தொகை 42,100 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 64.6 வீதமாகும்.

நாட்டின் கடனை மறுசீர மைக்காமல் பேணினால், 2035ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 வீதத்துக்கும் அதிகமான அரச கடன் இருக்கும். வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் நாட்டின் கடனை மறுசீரமைக்க ஏற்கனவே உடன்பட்டுள்ளதால் இலங்கையில் கடன் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு, கடன் மறுசீரமைப்பு அவசியமானது. அத்தோடு உள்நாட்டுக் கடனும் மறுசீரமைக்கப்பட வேண்டும் .

எதிர்வரும் 5 வருடங்களில் மாத்திரம் 17 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப் பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் உட்பட எந்தவொரு பொது நிதியின் அங்கத்துவ மிகுதியில் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும், கடந்த காலங்களில் செலுத்தப்பட்ட உயர் ஓய்வூதிய நிதிய வீதத்தையும் எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸுக்கான கடைசி உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, பொதுநலவாய பொதுச் செயலாளர் பெட்ரிசியா - ஸ்கொட்லாந்து, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, நெதர்லாந்து பிரதி பிரதமர் (முதல்) மற்றும் நிதி அமைச்சர் சிக்ரிட் கொக், அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜெனட் யெலன் மற்றும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி ஆகியோருடன் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் நிதித்துறை யில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் கலந்துரை யாடியிருந்தார்.

அண்மையில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடனான தொலைபேசி உரையாடலின்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு சாதகமான பங்களிப்பை வழங்கவுள்ளதாக அவர் ரணிலிடம் உறுதியளித்திருந்தார்.

தற்போது சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கிவின் கான்ட் உடன் நடத்திய கலந்துரையாடலின்போது, இருதரப்பு மற்றும் பொருளாதார தொடர்புகளை பலப்படுத்துவதுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

சீன நிதியமைச்சர் லீ கியூன் உடனான கலந்துரையாடலின்போது, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான முன்னேற்றத்துக்கான திட்டம் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவால் நியமிக்கப்பட்டுள்ள சைனா எக்சிம் வங்கியின் தலைவர் வூ புலின் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. கடன் மறுசீரமைப்புக்கு உச்ச பங்களிப்பு அளிப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்



### கடன் மறுசீரமைப்பு பேச்சும் ஆளுநரின் சர்ச்சையான கருத்தும்

கடன் மறுசீரமைப்பு தொடர்பான விளக்கங்களைக் கோரும் சந்திப்பொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தார்.

கடந்த வியாழன் இரவு இந்த கலந்துரையாடல் கொழும்பு ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால், திறைசேரியின் செயலாளர் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் சுமந்திரன் மற்றும் ரவூப் ஆகியோர் மத்திய வங்கி ஆளுநருடன் நீண்டநேரம் தர்க்கப்பட்டுள்ளனர். ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கம் கை வைக்காதென முன்னர் கூறினாலும் இப்போது புதிய கதைகள் சொல்லப்படுவது குறித்து சுமந்திரன் எம்.பி. ஆளுநரிடம் கேட்டுள் ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான ஊழியர் சேமலாப நிதியத்திலேயே (ஈ..பி. எவ்.) இலங்கை அரசாங்கம் கை வைத்துள்ளதாகவும் உள்நாட்டுக் கடனில் பெரும் பகுதியை அண்ணளவாக 93 சத வீதத்தை அதிலிருந்தே மறு சீரமைக்கவுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இங்கு தெரிவித்ததாக சுமந்திரன் எம்.பி. சொல்கிறார்.

ஊழியர் சேமலாப நிதியத்தி லிருந்து எதனையும் எடுக்கப் போவதில்லையென்று முன்னர் கூறியதால் அரசாங்கம் இதனை கையாடாமல் வேறு வழிகளில் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளலா மென கட்சித் தலைவர்கள் இங்கு சுட்டிக்காட்டினார். ஆனால், வேறு தெரிவுகள் இல்லாத காரணத்தினால்தான் ஊழியர் சேமலாப நிதியத்தின் கை வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக மத்திய வங்கியின் ஆளுநர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

எப்படியாயினும் ஊழியர் சேம லாப நிதியத்தில் கை வைத்தால் தனியார்துறை ஊழியர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் இதனை பாராளுமன்றத்தில் எதிர்க்கப்போவதாக சுமந்திரன் எம்.பி. இங்கு அறிவித்தார்.

இதனையடுத்தே ஐக்கிய மக்கள் சக்தியும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத் துக்கு எதிராக வாக்களிக்கவுள் ளதாக அறிவித்தது. ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் இதனால் ஒரு பிளவு ஏற்பட்டது. அக்கட்சியின் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவராக உள்ளார். எனவே, இந்தக் கடன் மறுசீரமைப்பை அந்தக்குழுவும் ஆதரிக்க வேண் டும். ஆனால், ஹர்ஷவின் கட்சி இதனை எதிர்க்கத் தீர்மானித் துள்ளதால், ஹர்ஷ பதவியில் தொடர்ந்து நீடிப்பாரா அல்லது இதனை கட்சியின் தீர்மானத்தை மீறி ஆதரிப்பாரா என்ற கேள்வி கள் எழுந்துள்ளன. இதிலும் ஐக்கிய மக்கள் சக்தியை பிளவு படுத்தும் வேலையை ரணில் இரகசியமாக மேற்கொண்டதாக விமர்சனங்கள் எழுந்தன.

"அஸ்வெசும" சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்ட விடயத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரணிலுக்கு கடும் அதிருப்தியை வெளியிட்டதையடுத்து கடந்த வாரம் அரசாங்கம் அறிவிப்பொன்றை விடுத்தது. அதன் விபரம் இதோ..

"அஸ்வெசும" சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்துக்காக நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு 3.7 மில்லியன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. பரீசீலனையின் பின்னர் அவற்றில் 3.3 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களில் "அஸ்வெசும" பலன்களைப் பெற்றுக்கொள்ள தகுதியானவர்கள் என்ற வகையில் மேன்முறையீடு மற்றும் எதிர்ப்புகளைத் தெரிவிப்பதற்காக 02 மில்லியன் பேரின் பெயர்ப்பட்டியலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் மூவர் அடங்கிய தெரிவுக்குழுக்களின் கீழ் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட பின்பே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

"அஸ்வெசும" நலன்புரித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நலன்கள் கிடைக்க வேண்டும் என்கின்ற போதிலும், தற்போது பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தங்களது மேன்முறையீடுகளை ஜூலை 10 வரையில் சமர்ப்பிக்கலாம்.

அதேபோல் சமூக நலன்புரித் திட்டங்களுக்கு தகுதியற்றவர்களின் விவரம் அடங்கிய பட்டியலில் பெயரிடப்பட்டிருப்போர் தமது எதிர்ப்புகளையும் முறைப்பாடுகளையும் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்போது மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பு வெளியிடுவதற்கான கடிதத்தை பிரதேச செயலகத்தில் கையளிக்க முடியும். அது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்திட்டத்தை எவருக்கும் பாதிப்புகள் ஏற்படாத வகையிலும் தகுதியானவர்கள் எவரையும் கைவிடாத வகையிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். அரசாங்கத்தின் நியதிகளுக்கமைய செயற்படுமாறு பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"அஸ்வெசும" நலன்புரித் திட்டத்துக்கு இணையாக நடைமுறைப்படுத்தப்படும் பொதுமக்களுக்கான கொடுப்பனவுத் திட்டங்களான முதியோர் கொடுப்பனவு 4,56,806 பேருக்கும், சிறுநீரக நோயாளர்கள் 19,496 பேருக்கும், அங்கவீனமானவர்கள் 46,857 பேர் உள்ளடங்கலாக 5,23,159 பேருக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதற்கான பெயர் விவரங்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளன.

"அஸ்வெசும" சமூக நலன்புரித் திட்டத்தில் பதிவு செய்துகொள்ள முடியாவிட்டாலும் இதில் இணைந்துகொள்ள விரும்புவோருக்கு வருடாந்தம் வாய்ப்பளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆளுங்கட்சி கூட்டத்துக்கு கேக்குடன் வந்த ரணில்

கடன் மறுசீரமைப்பு மற்றும் நிவாரண மானிய முறைமை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமை மாலை ஆளுங்கட்சி கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் தனது உதவியாளர் ஒருவரை கேக் ஒன்றுடன் வரச் செய்திருந்தார். அஸ்வெசும நிவாரணத்திட்ட பிரச்சினை மற்றும் கடன் மறுசீரமைப்பு சர்ச்சைகளுக்கு மத்தியில் ரணில் கேக்குடன் வருகை தந்தது ஏன் என்று அனைவரின் மனங்களிலும் கேள்வி எழுந்தது.

"இதோ பேர்த்டே போய் இருக் கிறார்.." என்று சஷீந்திர ராஜபக் ஷவை நோக்கி ரணில் காண் பிக்க அனைவரும் அதனை புரிந்து கொண்டு சஷீந்திரவை வாழ்த்தினர். பின்னர் அந்த கேக் வெட்டப்பட்ட கையோடு கூட்டம் ஆரம்பித்தது.

சஷீந்திர ராஜபக்ஷவின் பிறந்த நாளை கொண்டாடியதன்மூலம் ராஜபக்ஷமாருக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்த ரணில் முனைகிறார் என அங்கு சிலர் பேசிக்கொண்டனர். சஷீந்திர ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷவின் புதல்வர். ஆனால், அவரை விட நாமல் ராஜபக்ஷவே ராஜபக்ஷக் களால் அரசியலில் முன்னிலைப்படுத் தப்படுவது வழமை. இப்போது ரணில், நாமலுக்கு முன்னுரிமை வழங்காமல் சஷீந்திரவை முன்னி லைப்படுத்தியமை புதிய கருத்தாடல் களை தோற்றுவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் பல விவாதங்கள் இடம் பெற்றுள்ளன. நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவுக்கும் இடையில் காரசாரமான உரையாடல் இடம்பெற்றுள்ளது.

நிவாரண உதவித்தொகை முறையின் குறைபாடுகளை பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுட்டிக்காட்டியபோது அந்த குறைபாடுகளை சரிசெய்யுமாறு ஜனாதி பதி அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவின் கருத்துக்கு எதிராக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கருத்து தெரிவித்ததால் காரசார மான விவாதம் எழுந்துள்ளது. இந்த நிலைமையை ஜனாதிபதி தலையிட்டு தடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### பொலிஸ் மா அதிபர் யார்?

சீ.டி.விக்ரமரட்ன ஓய்வுபெறுவதால் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இருந்த அனைத்து உடைமைகளையும் அவர் அகற்றி யுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 26ஆம் திகதி தனது பதவிக்காலம் பூர்த்தியானதன் பின்னர் அவர் இவ்வாறு, அலுவலகத்தை காலி செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலுவலகத்தின் தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிட மாகியுள்ள காரணத்தால் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட் டுள்ளது. தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ் மா அதிபராக ரணில் நியமிப்பாரென எதிர்பார்க்கப்பட்டாலும் இந்த நியமனம் தொடர்பில் எந்த முடிவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அரசியலமைப்புப் பேரவைக்கு புதிய பொலிஸ் மா அதிபரின் பெயர் அனுப்பப் படாத காரணத்தால் இப்போதிருக்கும் பொலிஸ் மா அதிபருக்கு மேலும் மூன்று மாதகால சேவை நீடிப்பு வழங்க வாய்ப்பு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

### மைத்ரி கலந்துகொண்ட நிகழ்வில் காலாவதியான குளிர்பானம்

யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கலந்துகொண்டிருந்த நிகழ்வுக்காக கொள் வனவு செய்யப்பட்ட குளிர்பானம் காலாவதியானமை பாதுகாப்பு அதிகாரி களால் கடந்த வியாழன் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் விளை யாட்டு மைதானம் ஒன்றுக்கான நிதி உதவி வழங்கியமையை ஒட்டிய நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கலந்துகொண்டுள்ளார். இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட தேநீர் விருந்துக்காக உடுப்பிட்டியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 4 குளிர்பான போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன்.

இதனை பாதுகாப்புப் பிரிவினர் பரி சோதித்தபோது அது காலாவதியானமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாவனையாளர் பாதுகாப்பு விவகார அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.






# நெருக்கடி நிலை தொடரும்!

## எதிர்வு கூறுகிறார் வீரசுமன வீரசிங்க எம்.பி.

உரையாடல் - நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான வழிமுறைகளையே பின்பற்றுகிறார். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வுகள் வழங்கப்படவில்லை. தேசிய கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசாங்கத்தால் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானங்களும் நாட்டின் நெருக்கடி நிலைமையை மேலும் உக்கிரப்படுத்தும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவருடனான உரையாடலின் முழுவிபரம் வருமாறு,

**நாட்டில் இன்று கடன் மறுசீரமைப்பு முக்கிய பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

இந்தப் பொருளாதார நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்னர் 2018ஆம் ஆண்டிலிருந்தே ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் கொரோனா தொற்று பரவலடைந்த காலப்பகுதியிலும் பொருளாதார நெருக்கடி குறித்து தெளிவுபடுத்தலை வழங்கியிருந்தோம். நெருக்கடி நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக சில பரிந்துரைகளையும் முன்வைத்திருந்தோம். ஆனால், அதனை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரு தீர்வாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடவேண்டி ஏற்பட்டது. நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதால் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. அதனால், நாடு மேலும் நெருக்கடிக்குள்ளாகும்.

எந்த முயற்சியும் இல்லாமல் எம்மோடு ஒப்பந்தம் மேற்கொண்டவர்களுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்காமல் நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது என்று அறிவித்துவிட்டு கடன் செலுத்துகையையும் இடைநிறுத்திவிட்டார்கள். அதனாலேயே, இறுதியில் நெருக்கடி மேலும் உக்கிரமடைந்தது. சர்வதேச நாணய நிதியமே அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இறுதித் தீர்வாக அமைந்துள்ளது.

நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் ஒரு பாகமாகவே, 2002ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அசுவெசும நலன்புரி வேலைத்திட்டம் தொடர்பாக சட்டத்தை மீளவும் சட்டபூர்வமாக்கி நாட்டில் சிக்கல் நிலையைத் தோற்றுவித்துள்ளார்கள்.

எமக்கு கடன் வழங்கிய நாடுகள், அமைப்புகளின் கோரிக்கைகளுக்கமைய வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பு செய்வதாயின் முதலில் தேசிய கடனை மறுசீரமைப்பு செய்யுமாறு கடுமையாக பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அதனையே தற்போது அரசாங்கம் செய்து வருகிறது.

தேசிய கடன் மறுசீரமைப்பால் மீண்டும் நாடு பாரதூரமான நெருக்கடிக்குள்ளாகும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல்கள் எதுவும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால், வங்கிகளுக்கும், ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என்பதை மாத்திரமே அரசாங்கம் கூறுகிறது. பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் எவ்வாறு இந்த மறுசீரமைப்பை செய்யப்போகிறார்கள் என்ற தெளிவுபடுத்தலையும் வழங்குவதாக இல்லை. தெளிவுபடுத்தலுக்குப் பதிலாக, தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தனியான யோசனையொன்றை பாராளுமன்றத்தில் முன்வைத்து பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் வாக்குகளுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கே ஜனாதிபதி திட்டம் வகுத்துள்ளார்.

இந்த யோசனைகள் தொடர்பில் எங்களுக்கு முறையான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படாவிட்டாலும் இறுதியில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அரச வங்கி கட்டமைப்பில் சிக்கல் ஏற்படும் என்பது உறுதியாகத் தெரிகிறது. தற்போதுள்ள நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் செயன்முறைகளே இடம்பெற்று வருகின்றன. இந்த மறு சீரமைப்புக்கு நாங்கள் இணங்கப்போவதும் இல்லை.

> **தமது பாதுகாப்புக்காக ரணிலை ஜனாதிபதியாக்கிய பொதுஜன பெரமுனவினர், தற்போது ரணிலின் கைபொம்மையாகிவிட்டார்கள்**

**சரியான தெளிவுபடுத்தல்கள் எதுவுமின்றி, ஏன் இவ்வளவு அவசரமாக இதுதொடர்பில் தீர்வொன்றை எடுக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார்?**

நாணய நிதியத்தின் நிதி உதவியில் முதலாவது தவணையாக 330 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதுவும் வரி திருத்தம் போன்ற பல்வேறு பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அந்த கடன் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இரண்டாவது தவணை கொடுப்பனவு எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது. அதனையும் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் இம்மாத இறுதிக்குள் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

அதற்கு பாராளுமன்றத்தில் அனுமதி இருக்கிறது என்பதை ஒப்பிப்பதற்காகவே இவ்வாறு அவசரமாக இந்த யோசனைகளை முன்வைக்கிறார்கள். எவ்வாறான யோசனைகளை முன்வைக்கப் போகிறார்கள் என்ற தெளிவுபடுத்தல் கூட வழங்கப்படவில்லை. இதனை சட்டமாக இவர்கள் சமர்ப்பிக்கவும் இல்லை. சட்டமாக சமர்ப்பித்திருந்தால் அதற்கு சில படிமுறைகள் இருக்கின்றன. ஆனால், இதனை ஒரு யோசனையாக கொண்டுவந்து அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படும் பங்காளிக் கட்சியினரின் ஆதரவுடன் நிறைவேற்றிக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இந்த யோசனைகளை கொண்டுவருகிறார்கள். அதனால் நாடே நெருக்கடிக்குள்ளாகும்.

**தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடந்த வாரம் மத்திய வங்கி ஆளுநருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றிருந்தது. அதன்போது இதிலுள்ள உள்ளடக்கங்கள் குறித்து விளக்கமளிக்கப்படவில்லையா?**

புதன்கிழமையே இது தொடர்பில் முதல் தடவையாக ஆளுந்தரப்பு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, நிதி இராஜாங்க அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்டோர் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தெளிவுபடுத்தியதாகவே குறிப்பிடப்படுகின்றது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஆளுந்தரப்பினர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், இதில் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்று ஜனதிபதியும் மத்திய வங்கி ஆளுநரும் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. எது எவ்வாறாயினும் அவர்கள் அதற்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள்.

ஆனால், இதில் அதிருப்திக்குரிய விடயம் என்னவென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றுள்ளது. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே ஏற்பாடு செய்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரும் அதில் பங்குப்பற்றியுள்ளார். ஹர்ஷ டி சில்வா எம்.பியும் அதில் கலந்துகொண்டதாக அறிவித்திருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் எங்களுக்கு எந்த அழைப்பும் கிடைக்கவில்லை. எங்களுக்கு அறிவிக்க முயற்சி எடுக்கவும் இல்லை. எவ்வாறாயினும் எதிர்க்கட்சியிலுள்ள சிலரும் நாணய நிதியத்தின் யோசனைகளுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள். அதாவது, ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக செயற்படுவர்கள் எதிர்த்தரப்பில் இருக்கிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தியும் நாணய நிதியத்தை ஏற்று செயற்படும் அரசியல் கட்சியாகும். ஒருசில காரணங்களுக்கே அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள்.

அரசாங்கத்துடன் இணங்கி செயற்படும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஒருசில கட்சிகளின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

**அசுவெசும வேலைத்திட்டத்துக்கு மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது? இதன் உண்மையான நிலைமை என்ன?**

1994ஆம் ஆண்டு சமுர்த்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இவை முழுமையாக வெற்றியை பெற்றுக்கொடுத்த வேலைத்திட்டம் அல்ல. சமுர்த்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அண்ணளவாக 30 வருடங்களாகின்றன.

இந்த வேலைத்திட்டம் முழுமையாக வெற்றியடையாவிட்டாலும், ஒருசில நன்மைகளும் இருக்கின்றன. மக்களுக்கு கிடைக்கும் நிவாரணத்துக்கப்பால் நலன்புரி, சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், காப்புறுதி, பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

சமுர்த்தி பயனாளர்களை ஓரங்கட்டிவிட்டு தனியான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்காகவே அசுவெசும வேலைத்திட்டம் கொண்டுவரப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்படும் வகையிலேயே இந்தக் கொடுப்பனவுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளன. ஆனால், அந்தக் காலங்கள் நிறைவடைந்ததன் பின்னர் நிவாரணங்கள் கிடைக்குமா இல்லையா என்பது தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

உலக வங்கியின் அறிக்கைக்கமைய 25 இலட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டில் வாழுகின்றன. ஆய்வுகளின் பிரகாரம், 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்ததை விட நாட்டில் வறுமை அதிகரித்துள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த நிலைமை மேலும் உக்கிரமாக இருக்கிறது. அவ்வாறிருக்கையில், நடைமுறையிலுள்ள ஒரு நிவாரணத்தை இல்லாமலாக்கினால் சமூகத்தில் குழப்ப நிலை உருவாகும். இந்த அசவெசும வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதும் நாணய நிதியத்தின் பரிந்துரையாகும். சமுர்த்தி கொடுப்பனவைப் பொறுத்தவரையில் இதற்கு சரியான கணக்கெடுப்புகள் முன்னெடுக்கப்பட்டு அதனை நிர்வகிப்பதற்காக தனியான அதிகாரிகளும் இருந்தார்கள். ஆனால், அசுவெசும வேலைத்திட்டத்தில் அது போன்ற முறையான செயற்பாடுகள் எதுவும் இல்லை. இதனால், சமுர்த்தி பயனாளர்கள் ஓரங்கட்டப்பட்டு, உண்மையில் வறுமையில் இருப்பவர்களுக்கு அநீதி இழைக்கும் வகையிலேயே அசுவெசும அமைந்துள்ளது.

**ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டபோது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் அவருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வந்தது. அவர் இன்னும் பொதுஜன பெரமுனவினரின் அலுத்தத்திலா செயலாற்றுகிறார்?**

இந்த பதவி ரணிலுக்கு கிடைத்த அதிர்ஷ்டலாபச் சீட்டாகும். அவரின் கட்சி பாராளுமன்றத்துக்கு கூட தெரிவுசெய்யப்படவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் அவர்களின் பாதுகாப்புக்காகவே இந்தப் பதவிக்கு ரணிலை தெரிவு செய்தார்கள். அதன்போது இருந்த அரசியல் நிலைவரம் முற்றிலும் வேறுப்பட்டதாகும். அரசாங்கத்துக்கு எதிரான சூழ்நிலையே அதன்போது இருந்தது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக குறுகிய கால வேலைத்திட்டமொன்றை வகுத்து சகலரும் ஒன்றிணைந்த வகையில் இடைக்கால சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். அப்போது இருந்த பிரதமரை பதவி விலகுமாறு அறிவித்து அதற்கான சூழ்நிலையையும் உருவாக்கியிருந்தார்.

ஆனால், சர்வகட்சி அரசாங்கமொன்று உருவானால் தமது இருப்பு கேள்விக்குறியாகும், தம்மால் முன்னெடுக்கப்பட்ட ஊழல்கள் வெளிப்படும், அரசியல் இருப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்ற எண்ணத்தில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிலர் இருந்தார்கள். சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் பேச்சுவார்த்தை முன்னெடுத்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே திருட்டுத்தனமாகச் சென்று பிரதமரானார். பிரச்சினை தீவிரமடைந்தமையினால் அவரே இடைக்கால ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டார். பொதுஜன பெரமுனவின் ஆதரவுடனேயே இந்தப் பதவி கிடைத்தது.

அன்று, ரணிலை தமது கைபொம்மையாகவே பொதுஜன பெரமுன பயன்படுத்தியது. ஆனால், இன்று பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளமையால் ரணிலின் திட்டங்களை செயற்படுத்திக் கொள்வதற்காக பொதுஜன பெரமுன அவரின் கைப்பாவையாக மாறிவிட்டது. இறுதியில், ரணிலின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாட்டில் புதிய லிபரல்வாத திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் வாக்குகளைப் பயன்படுத்தி ரணில் அவரின் பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறார்.

> **வாக்குறுதிக்காகவும் தனது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவும் பாராளுமன்றத்தை இப்போதைக்கு கலைக்கமாட்டார்**

**எதிர்க்கட்சியான நீங்கள் அனைவரும் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில், அரசாங்க நிதி பற்றிய குழுவில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அங்கத்தவராகவுள்ளார். அவ்வாறிருக்கையில், நாட்டின் நலன் கருதி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கடன் மறுசீரமைப்பு யோசனைகளுக்கு அனுமதி கிடைத்தால் சிக்கல் நிலை ஏற்படுமல்லவா?**

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படும் நிதி பற்றிய ஒவ்வொரு சட்டமூலமும் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு முன்னர் நிதி பற்றிய குழுவுக்குச் சென்று அங்கு கலந்துரையாடியதன் பின்னர் இணக்கப்பாடு ஏற்பட்டதன் பின்னரே பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்த பதவிகள் எதிர்க்கட்சிகே கிடைக்க வேண்டும் என்பது நிலையியல் கட்டளைச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹர்ஷ டி சில்வா அந்த பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு பொதுஜன பெரமுன தரப்பில் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டிருந்தாலும், இறுதியில் நாணய நிதியத்துடனான அரசாங்கத்தின் பொது இணக்கப்பாடுகளுக்கு பாராளுமன்ற பெறும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஹர்ஷ டி சில்வாவும் அவர்களுடன் பொது இணக்கப்பட்டுக்கு வந்துள்ளதாக அறிய முடிகிறது. நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு கிடைத்திருந்தாலும், அதன் செயற்பாடுகள் குறித்து சந்தேகக்கண்ணோடு பார்க்கவேண்டிய நிலையே இருக்கிறது.

**தேர்தல் தொடர்பில் யாரும் தற்போது பேசுவதில்லை. தேர்தல் வேண்டாம் என்று எதிர்க்கட்சியினர் முடிவுசெய்துவிட்டார்களா?**

உத்தர லங்கா சபாகய என்ற அடிப்படையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு நாங்களும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தோம். ஆனாலும் அந்தத் தேர்தல் தொடர்ச்சியாக காலந்தாழ்த்தப்பட்டு வருகிறது. நீதிமன்றத் தீர்ப்பும் காலதாமதமாகிக் கொண்டே இருக்கிறது. ஆனாலும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இந்த அரசாங்கம் ஒருபோதும் நடத்தாது. இருந்தபோதும் கட்சி என்ற அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை எடுத்தே வருகிறோம். ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தப்போவதாக அரசாங்கம் குறிப்பிட்டாலும் அந்தத் தேர்தலையும் இவர்கள் நடத்தமாட்டார்கள்.

**உள்ளூராட்சிமன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களைக்கொண்டு, மீண்டும் அந்தச் சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளதே?**

உள்ளூராட்சிமன்றங்களில் பெரும்பான்மைப் பலம் பொதுஜன பெரமுனவுக்கே இருக்கிறது. ஆனால், உள்ளூராட்சி மன்றங்களை கலைக்கப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு தேர்தலும் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தேர்தலை நடத்தவும் இல்லை. இருந்தபோதும் பழைய உறுப்பினர்களை கொண்டு உள்ளூராட்சி மன்றங்களை முன்னெடுத்துச் செல்ல முயற்சித்தார்கள். நீதிமன்ற உத்தரவால் அதனையும் செய்யவில்லை.

உள்ளூராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால் அந்த உள்ளூராட்சிமன்றத்தையே மீண்டும் அழைப்பதற்கு அமைச்சருக்கு அனுமதி கிடைக்கவேண்டும் என்று கோரி ஜயந்த கெட்டகொடவால் தனிநபர் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அது இன்னும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய முடியும். கட்டாயம் இந்த யோசனைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம்.

உள்ளூராட்சிமன்றங்களின் காலம் முடிவடைந்ததும் ஒரு வருடத்துக்கு காலத்தை நீடிக்க முடியாது. நீடிக்கப்பட்ட ஒருவருட காலமும் முடிவடைந்துவிட்டது. அந்த காலமும் நிறைவடைந்து, தேர்தல் அறிவிக்கப்பட்டது. அந்தத் தேர்தலும் இடம்பெறவில்லை. அவ்வாறிருக்கையில் பழைய உறுப்பினர்களைக்கொண்டு தொடர்ந்து உள்ளூராட்சிமன்றங்களை முன்னெடுப்பது அடிப்படை உரிமை மீறலாகும். அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்துக்கு நீதிமன்ற அனுமதி நிச்சயம் கிடைக்காது. பாராளுமன்றத்தின் பெரும்பான்மை விருப்பு அல்லது மக்கள் அபிப்பிராயத்தை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்படும்.

**எஞ்சியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பாரா?**

தற்போதைய நிலையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். ஆனால், அவர் அதனை செய்யமாட்டார். பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாலும் வெற்றியை பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை அவர்களுக்கு இல்லை. பொதுஜன பெரமுனவின் ஆதரவுடனேயே இவர் இந்த பதவியில் இருந்துவருகிறார். குறிப்பிட்ட காலப்பகுதி வரை இந்த அரசாங்கத்தை கொண்டுசெல்வதாகவே ரணில் அவர்களிடம் ஒப்புக்கொண்டுள்ளார். இருந்தபோதும் அவரின் பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தை கலைக்க தயாராக இருப்பதாக தெரிவித்து காய்நகர்த்திக்கொண்டிருக்கிறார். பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலரும் ரணிலிடம் பணயக் கைதிகளாக இருந்து வருகிறார்கள்.

ரணில் இந்தப் பயணத்தை தடுப்பதானால் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

> **ஜயந்த கெட்டகொட எம்.பியின் தனிநபர் யோசனை சபைக்கு வந்தால் தோற்கடிப்போம்**

**எஞ்சியிருக்கும் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியால் நாட்டுக்கு சேவையாற்ற முடியுமா?**

தான் நினைத்த சகலதையும் செய்யவே ரணில் எண்ணுகிறார். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைத்த வாக்குகளிலேயே இவருக்கு இந்தப் பதவி கிடைத்தது. ஆனால், அவர் தவறான பாதையில் பயணத்துக்கொண்டிருக்கிறார். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவில்லை. இருக்கும் பிரச்சினைகளை மேலும் உக்கிரமாக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகிறார். தொடர்ந்து கடன் பெறும் நாடாக நாட்டை மாற்றி, இருக்கும் வளங்களையும் வெளிநாடுகளுக்கு விற்கவே முயற்சிக்கிறார். அதனூடாக இந்த பதவிக்காலம் முடியும் வரை பயணிப்பதே ரணிலின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. எனவே, ரணிலால் இந்தப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என்பதுடன் பொதுஜன பெரமுனவினரும் மாற்றுத் தீர்வு எடுப்பார்கள் என்றும் நம்புகிறோம்.



# இலங்கையில் 'ஜுக்கி பெண்களின்' பரிதாப நிலை!

**பிரியதர்ஷினி சிவராஜா**

“நாங்கள் தலைகுனிந்தே வீதிகளில் நடக்கின்றோம். எங்களைப் பார்த்தவுடன் ஆண்கள் கேலி பேச ஆரம்பித்து விடுகின்றனர். ''ஊ'' சத்தம் வைக்கின்றனர். விடியற்காலையில் வேலைக்கு நடந்து செல்லும்போதும், இரவில் வேலை முடிந்து இருப்பிடங்களுக்குத் திரும்பும்போதும் எங்கள் வருகைக்காக காத்திருந்து எங்களுக்குத் தொல்லை தருவது வாடிக்கையான விடயமாகிவிட்டது. ஆனால், நாங்கள் இவற்றைப் பொறுத்துக்கொள்ள பழகிவிட்டோம். இப்பொழுதெல்லாம் அவ்வாறான செயல்கள் எங்களுக்குள் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை”.

28 வயதான ஆடைத்தொழிற்சாலை பணியாளர் தருஷி நிதானமாகக் குறிப்பிட்டார். ஆனால், அந்த நிதானத்தின் பின்னணியில் தருஷி போன்ற பெண்களின் வேதனையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஜுக்கி பெண்கள் என்று அழைக்கப்படும் தருஷி மற்றும் அவரது சகோதரப் பணியாளர்களின் வாழ்க்கையானது ஜுக்கி என்று அழைக்கப்படும் தையல் இயந்திரத்தை மையமாகக்கொண்டே சுற்றிச் சுழல்கின்றது. இதனால் இவர்களை இவ்வாறு அழைப்பது பொதுவான விடயமாக உள்ளது.

தருஷி மொனராகலையைச் சேர்ந்தவர். 28 வயதான அவர் குடும்பத்தின் வறுமையைப் போக்க ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்ற வந்து இப்பொழுது 3 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால், அவரின் தொழிலோ பாரபட்சங்கள் நிறைந்ததாகவும் ஆணாதிக்கம் மிக்கதாகவும் இருப்பதை அவர் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

33 வயதான விமலா அநுராதபுரத்தைச் சேர்ந்தவர். படையில் பணியாற்றிய கணவர் போரில் இறந்துவிட்டதனால் தனது இரு பிள்ளைகளையும் தாயாரையும் காப்பாற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் தலைவராக அவர் இருக்கின்றார். தருஷி போன்றில்லாமல் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்களின் பரிதாப நிலை குறித்து நேர்படப் பேசுகின்றார். கடும் கோபத்தை வெளிப்படுத்துகின்றார்.

“எங்களை மதியுங்கள். நாங்களும் மற்ற பெண்களைப்போல் மரியாதையுடன் தலைநிமிர்ந்து வாழவே விரும்புகின்றோம்” மக்கள் எங்களை இழிவாக நடத்தும் அளவுக்கு நாங்கள் என்ன செய்துவிட்டோம் என்று எங்களுக்குப் புரியவில்லை” என்று அவர் கூறினார்.

இலங்கையின் தலைநகர் கொழும்பின் புறநகர்ப் பகுதியான கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் தருஷியும் விமலாவும் பணியாற்றி வருகின்றனர்.

அண்மைய தகவல்களின்படி இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயங்கள் எனப்படும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களைச் சேர்ந்த ஆடைத்தொழிற்சாலைகளில் (300க்கும் மேற்பட்ட ஆடைத்தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன) பணியாற்றுபவர்களில் சுமார் 80 சதவீதமானவர்கள் பெண்களாவர். இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 44 சதவீதமாக உள்ளதுடன், இலங்கையின் ஒட்டுமொத்த தொழிற்படையில் இந்த எண்ணிக்கை 15 சதவீதமாக உள்ளது. சுமார் 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இத்தொழிற்றுறையில் பணியாற்றி வருகின்றனர்.

“நீண்டகாலமாக நான் ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வருகின்றேன். ஒரு பெண்ணாக நான் எத்தனையோ துன்பங்களை இங்கு அனுபவித்து விட்டேன். எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால், எங்களை பாலியல் தொழிலாளர்கள்போல் நடத்துவதுதான் பொறுத்துக்கொள்ள இயலாமல் உள்ளது” என்று கண்களில் கண்ணீர் மல்கிய நிலையில் ராஜி கூறினார். அவருக்கு 25 வயது.

“எல்லோரும் ஏன் எங்களை இந்தளவுக்கு வெறுத்து அவமானப்படுத்துகின்றார்கள்?” இளம் வயதிலேயே திருமணம் முடித்த அவர், போதைக்கு அடிமையாகி புனர்வாழ்வுப் பெற்றுவரும் தனது கணவரையும் அவரின் குடும்பத்தினரையும் பராமரிக்கவென இங்கு பணியாற்றி வருவதாகத் தெரிவித்தார். நீர்கொழும்பைச் சேர்ந்த அவர் கடந்த 4 ஆண்டுகளாக ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வருகின்றார். “ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்கள் என்றதும் சமூகம் எங்களை வித்தியாசமாகத்தான் பார்க்கின்றது. வறுமையைப் போக்க நாங்கள் இப்படித்தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால், இதனை எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை'' என்று அவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கூறினார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் தரவுகளின்படி 2022ஆம் ஆண்டில் 5.6 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை இத்துறை எமது நாட்டுக்கு ஈட்டித்தந்துள்ளது. சர்வதேசத்தில் மிகவும் பிரபலம் பெற்ற வணிகச்சின்னங்களான Calvin Klein, Tommy Hilfiger, Nike, Victoria's secret, Next, Marks and Spencer, Colombia Sportswear, Ralph Lauren ஆகியவற்றுக்கான ஆடைகள் இங்கு தைக்கப்படுவதுடன், இந்த ஆடைகள் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பிரதானமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், இந்த தொழிற்றுறை பெண்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்துக்கு வழியேற்படுத்தாமல் ஏன் அவர்களுக்குப் பெரும் சாபமாக இருக்கின்றது?

இலங்கையின் ஆடைத்தொழிற்றுறையில் பணியாற்றும் இப்பெண்களின் நிலையானது அடக்குமுறைக்குள்ளான நிலையிலும், கண்ணியமான பணிச்சூழலை இழந்து அடிமைகளாக பணியாற்றும் நிலையிலும் காணப்படுகின்றது. தொழில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும், இலகுவில் பாலியல் சுரண்டலுக்குள்ளாகும் நிலையிலும் இப்பெண்கள் உள்ளனர்.

தொழிற்சாலைகளில் தமது ஜுக்கி தையல் இயந்திரத்தில் ஏற்படும் கோளாறுகளை சரிப்படுத்துவதற்குக்கூட பாலியல் இலஞ்சம் வழங்கவேண்டிய நிலை உள்ளதாக ராஜி குறிப்பிடுகின்றார்.

“என்னுடன் பணியாற்றும் ஒரு சகோதரிக்கு இந்த நிலை ஏற்பட்டது. முடித்துக்கொடுக்கப்பட வேண்டிய பணிகள் எக்கச்சக்கமாக இருக்க தையல் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை சரிசெய்து தரவேண்டுமாயின் தன்னுடன் பாலியல் உறவு வைத்துக்கொள்ளுமாறு தையல் இயந்திரங்களைப் பழுது பார்க்கும் நபர் தொடர்ச்சியாக அவரிடம் கோரிக்கை விடுத்துக்கொண்டிருந்தார்”.



பொதுவாகவே நாட்டின் ஏனைய சாதாரண மக்கள் அனுபவிக்கும் தொழில் உரிமைகள் சம்பந்தப்பட்ட சட்டங்களின் நலன்கள் கூட இவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாக பெண்ணுரிமை செயற்பாட்டாளர் யோகேஷ்வரி கிருஷ்ணன் கூறுகின்றார்.




“குறிப்பாக 5 வருடங்கள் சேவைக்காலம் பூர்த்தியான பின்பு வழங்கப்படும் 'கிரட்டிவிட்டி' மற்றும் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் பேறுகால விடுப்பு கூட சரியாக இவர்களுக்குக் கிடைப்பதில்லை. 5 ஆண்டுகள் சேவைக்காலம் பூர்த்தியடைந்தவர்களின் சேவையை ஏதாவது காரணங்களைக் கூறி இடைநிறுத்தவே தொழிற்சாலை நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்கின்றன.

உதாரணமாக கொவிட்-19 பெருந்தொற்று காரணத்தால் நிலவிய மூலப்பொருட்கள் பற்றாக்குறையை காரணமாகக் கூறி அவற்றைப் பெறும்வரை வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு பணியை இடைநிறுத்திய நிர்வாகம் பின்னர் அவர்களை பணிக்கு அழைக்காமல் விட்டுவிட்டு முற்றிலும் புதியவர்களைப் பணிகளில் சேர்த்துக்கொள்ளும் உபாயத்தைக் கடைப்பிடித்தது.

அதேபோன்று தொழிற்சாலைகளில் பணியாற்றும் கர்ப்பிணிப்பெண்களுக்கு கடுமையான பணிகள் வழங்கப்பட்டு அவர்கள் தாமாகவே விலகிச்செல்லும் அளவுக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணமாக, மின் அழுத்தியைப் பயன்படுத்தி ஆடைகளை அயன் செய்யும்போது கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றுப் பகுதி வெப்பத்தால் பாதிக்கப்படுவது பொதுவான விடயமாகும். இதனால் கருச்சிதைவு சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனை சுட்டிக்காட்டி தம்மை வேறொரு பணிப்பிரிவுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்தாலும் அதனை செவிமடுக்காமல் நிர்வாகம் விட்டுவிடும் அநீதியும் நடைபெறுகின்றது. அதேநேரம் மகப்பேற்று கால விடுப்புகள், குழந்தைக்கு பாலூட்டும் நேரம் தொடர்பான அனுமதிகளிலும் பல பிரச்சினைகள் உள்ளன”.

**நீண்டகால போராட்டம்**

1978ஆம் ஆண்டு இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகளுடன் இந்த சகோதரிகளின் பரிதாப நிலையும் ஆரம்பமாகத் தொடங்கியது எனலாம். திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஆரம்பிக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்ற ஆரம்பித்த பெண்கள், 'மலிவுத்தொழிலாளர்களாகவும்' பேரம்பேசும் ஆற்றலற்று நாட்டின் தொழிற்சட்டங்களின் நலன்களையும் சலுகைகளையும் பெற முடியாதவர்களாகவும் மாறினர்.

அவர்களின் உழைப்பை சுரண்டிப் பெற்று கோடிக்கணக்கான டொலர்களை இலாபமீட்டும் தரப்பினர்களாக ஆடைத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும், முதலீட்டாளர்களும், சர்வதேச வணிகச்சின்னங்களும் உள்ளன.

“கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் நாடு முழுமையாக முடக்கப்பட்ட நிலையில் இருந்தபோதும் நாங்கள் தொடர்ச்சியாக தொழிற்சாலைகளில் பணியாற்றிக்கொண்டு நாட்டுக்கும் எமது உள்நாட்டு முதலாளிகளுக்கும் வெளிநாட்டு முதலாளிகளுக்கும் டொலர்களில் வருமானத்தை அயராமல் ஈட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தோம்” என்று தருஷியும், விமலாவும், ராஜியும் ஒருமித்தக் குரலில் குறிப்பிட்டனர்.



அதிகாரமற்ற பாரபட்ச நிலையானது இவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சட்டங்களைப் புறக்கணிக்கும் திடுக்கிட வைக்கும் சம்பவங்களையும் உருவாக்குகின்றது. உதாரணமாக, 'விழுதுகள்' அமைப்பின் திட்ட செயற்பாட்டாளர் இந்துமதி ஹரிஹரதாமோதரன் இவ்வாறு கூறினார்.

“கடந்த 2019ஆம் ஆண்டு திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சில பெண்கள் எமது பயிற்சிப்பட்டறையொன்றில் பங்குபற்றியிருந்தனர். அதன்போது அவர்கள் விற்றமின் 'சி' என்று கூறி அவர்கள் பணியாற்றும் ஆடைத்தொழிற்சாலையில் காலைவேளையில் மாத்திரையொன்றைத் தருவதாகவும் அந்த மாத்திரையை தொடர்ச்சியாக உட்கொள்ள ஆரம்பித்து சில நாட்களின் பின்பு மாதவிடாய் தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டதாகவும் கூறியிருந்தனர். தொழிற்சாலையின் உற்பத்தி இலக்குகளுக்கும் பணிகளுக்கும் பெரும் தடையாக உள்ளதைக் கருத்திற்கொண்டு உபத்திரம் தரும் மாதவிடாயை தள்ளிப்போட விற்றமின் 'சி' என்று வழங்கப்பட்ட இந்த மாத்திரை கருத்தடை மாத்திரையாகும் என்று ஆதாரபூர்வமாகக் கண்டறியப்பட்டது. இந்தச் செயற்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆடைத்தொழிற்சாலையின் நிர்வாகிகளிடம் கடும் அதிருப்தியை வெளியிட்டதன் பின்னர் எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாத இந்தச் செயற்பாட்டைக் கைவிடுமாறும் அல்லாதுவிடின் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது”.

வடக்கு, கிழக்கில் பெண்கள் உரிமை, யுத்தத்துக்குப் பின்னரான நிலைமாறுகால நீதி, பெண்களின் முன்னேற்றம் ஆகியவை தொடர்பில் விழுதுகள் நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்துமதி மேலும் கூறுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

“இந்தச் சம்பவம் தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றவேளை, கொவிட் பெருந்தொற்று நிலை காரணமாக நாடு முடக்கப்பட்டதால் எங்களால் எந்தவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. ஆனால், பெண்களுக்குத் தெரியாமல் அவர்களின் விருப்பம் இல்லாமல் கருத்தடை மாத்திரைகளை வழங்கியிருப்பதானது ஒரு மனித உரிமை மீறலாகும்”.



ஆடைத்தொழிற் சாலைகளில் கருத்தடை மாத்திரைகள் பாவனை என்பது பொதுவான விடயம் என்று ஆடைத் தொழிற்சாலை பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் வியர்வைத்துளிகள் கூட்டமைப்பின் (தாபிந்து) தேசிய இணைப்பாளர் சமிலா துஷாரி குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்,

“பெரும்பாலான தொழிற்சாலைகளில் இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கருத்தடை மாத்திரைகள் வைக்கப்பட்டுள்ளன என்று எங்கள் அமைப்புடன் இணைந்து பணியாற்றும் பெண்கள் பலர் கூறியுள்ளனர். ஆனால், அவை சரியான முறையில் வழங்கப்படுகின்றனவா? அவற்றை அவர்களுக்கு வழங்குவது யார்? பெண்கள் அவற்றை சரியான முறையில் உட்கொள்கின்றனரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. இதனால்தான் நாங்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகளை அவர்களுக்காக தொடர்ச்சியாக நடத்தி வருகின்றோம்”.

செயற்பாட்டாளர்களின் கருத்துப்படி ஆடைத் தொழிற்சாலைகளில் பணியில் இணைந்துகொள்ளவரும் பெண்களிடம் 3 முதல் 6 மாதங்கள் வரை கருத்தரிக்க வேண்டாம் என்ற வாய்மூலமாக நிபந்தனை விதிக்கப்படுகின்றன. ஊழியர்களினதும் தொழில் தருனர்களினதும் பொருளாதார தேவைகளைக் கருத்திற்கொண்டு வேலைக்கு வரும் பெண்களுக்கு இவ்வாறான அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவது ஆடைத்தொழிற்சாலைகளில் பரவலாக நடைபெறுகின்றது. அதனையும் மீறி அக்காலப்பகுதிக்குள் கருவுற்றால் தொழிலை இழக்க நேரிடும் என்று அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இதனால் எப்படியாவது வேலையை தக்கவைத்துக்கொள்ளும் நிர்ப்பந்தத்தில் அவர்கள் அதற்கு உடன்படும் நிலையில் உள்ளனர்.

**தீவிரமடையும் நெருக்கடி**

இலங்கையில் சர்ச்சையை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உத்தேச தொழில் சட்டதிருத்தம் தொடர்பில் பரவலாக உரையாடல்கள் சமூகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இந்த சட்டதிருத்தப் பரிந்துரைகள் மிகவும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆடைத்தொழிற்சாலை பணியாளர்களின் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்பினரும் செயற்பாட்டாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த அடிப்படையில் பார்க்கும்போது அடுப்பில் இருந்து சட்டிக்குள் விழுந்த கதையாகவே இப்பெண்களின் நிலை இருக்கப்போகின்றது.

**உத்தேச சட்டதிருத்த யோசனைகள் என்று தொழிற்சங்கங்கள் கூறும் அடிப்படை விடயங்களாவன:**

தற்போது அமுலிலுள்ள எட்டு மணித்தியால வேலை நாட்கள் 12 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படுவதுடன், நான்கு தினங்கள் வேலை நாட்களாக அறிவிக்கப்பட்டு எஞ்சிய மூன்று தினங்கள் சம்பளமற்ற வேலை தினங்களாக அங்கீகரித்தல்.

பணியாளர்களை பணிநீக்கம் செய்யும் உரிமையை தொழில்தருனர்களுக்கு வழங்கவேண்டும். (தற்போதுள்ள சட்டத்தின்படி ஒழுக்கம் மீறிய செயற்பாடுகள் இல்லாத போது ஒரு பணியாளரை பணிநீக்கம் செய்வதற்கு தொழில் ஆணையாளரின் அனுமதியைப் பெற்று அவர் பிரேரிக்கும் இழப்பீட்டை வழங்க வேண்டும். கொவிட் காலத்தில் இலட்சக்கணக்காண ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது இந்த நடைமுறையினாலாகும்.)

மூலப்பொருட்கள் பற்றாக்குறை, தையல் இயந்திரங்களில் கோளாறு, பெருந்தொற்று போன்ற தொழில்தருனர்களின் எதிர்பாராத சூழ்நிலைகளின்போது ஊழியர்களுக்கு அரைவாசி சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது சம்பளம் வழங்காமல் இருப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும்.

ஆகக்குறைந்த சம்பளத்தை தீர்மானிக்கும் சந்தர்ப்பததை தவிர, தனியார் துறையினர் சம்பளம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் தலையிடக் கூடாது.

ஊழியர்கள் மற்றும் தொழில்தருனர்களுக்கு இடையிலான பிரச்சினைகள், முரண்பாடுகளின்போது தொழில் திணைக்களம் தலையிடுவதானது அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடும் ஒரு விடயமாக உள்ளதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊழியர்களுடனான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு தொழில்தருனர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

'மேன்பவர்' போன்ற தற்காலிக தொழில் முறைகளில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும். தொழில் வழங்குதலில் நிரந்தர தற்காலிக தொழில்கள் வீதம் 50க்கு 50 ஆக இருக்கவேண்டும்.

பகுதிநேர வேலைகள் அறிமுகம் குறித்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான இரவு வேலை தொடர்பான அனுமதி

இந்த யோசனைகளில் மிக முக்கியமான விடயமான 8 மணித்தியால வேலை 12 மணித்தியாலங்களால் அதிகரிக்கப்படுவதால் பணியாளர்களுக்கு அதிக மணித்தியாலங்கள் வேலை செய்ய நேரிடுவதன் காரணமாக மேலதிக வேலைப்பளுவும் அதனால் ஏற்படும் மன உளைச்சலும் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் மிக முக்கியமான காரணியாக அமைவதாகவும், குறிப்பாக, ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களுக்கு இது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பெரும் பிரச்சினையாக அமையப்போகின்றது என்றும் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக பணியாற்றி வரும் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர தெரிவித்தார். அத்துடன், பெண்கள் இரவுநேர வேலைக்கு அனுமதி அளிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,



“இரவு வேலை என்பது பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களுக்கு காரணமாக அமையும் பிரதான விடயமாகும். ஏனெனில், ஆடைத்தொழிற்சாலைகளிலும் இதர ஏற்றுமதி சார்ந்த தொழிற்றுறைகளிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் பொதுவான விடயமாக உள்ளதனால் இந்த யோசனை பிரச்சினைக்குரியது” என்றார்.

யோகேஷ்வரியின் இவ்விடயம் தொடர்பில் கூறுகையில் இவ்வாறு தெரிவித்தார். “ஆடைத்தொழிற்சாலை பெண் பணியாளர்கள் இலங்கையின் தொழிற்சாலை கட்டளைச்சட்டத்தின்படி ஒரு நாளில் 9 மணித்தியாலங்களுக்கு மேற்படாதவாறும், வாரத்திற்கு 45 மணித்தியாலத்துக்கு மேற்படாதவாறும் பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)

# இனப்படுகொலையால் இலட்சக்கணக்காக உயிர்களை இழந்த இனம் தமிழினம் மட்டுமே!





பா.அரியநேத்திரன்

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான சுதந்திரம் பறிக்கப்பட்ட 1948, பெப்ரவரி 04ஆம் திகதி தொடக்கம் 2009, மே 18 வரை இலட்சக்கணக்கான இனப்படுகொலையை சந்தித்த ஒரே இனம் என்றால் அது தமிழினம் மட்டுமே.

ஈழ விடுதலைப் போராட்டத்தால் மூன்று இன மக்களும் (தமிழர், சிங்களவர், இஸ்லாமியர்) படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது உண்மை ஆனால், இலட்சக்கணக்கில் உயிரிழந்தவர்கள் தமிழர்கள்தான்.

இரண்டாவது நிலையில், ஆயிரக்கணக்கில் உயிரிழந்தவர்கள் சிங்கள மக்கள்தான்,

மூன்றாம் நிலையில், நூற்றுக்கணக்கில் உயிரிழந்தவர்கள் முஸ்லிம் மக்கள்தான்.

இதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

தந்தை செல்வா தொடங்கிய அகிம்சை ரீதியலான விடுதலைப்பயணம் 1949ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டுவரை நடைபெற்றபோது நூற்றுக்கணக்கில் தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர்.

தமிழ்பேசும் மக்களாக தமிழர்களும், முஸ்லிம்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியால் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம், கறுப்புகொடிப் போராட்டம், பேரணிகள், மாநாடுகள், தமிழ் தபால் போராட்டம், ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், வீதிமறிப்புப் போராட்டம், கடையடைப்புப் போராட்டம் என பலவிதமான போராட்டங்களில் எல்லாம் தமிழ்த் தலைவர்களுடன் - தமிழ் மக்களுடன் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், முஸ்லிம் பொதுமக்கள், ஆண்கள், பெண்கள் எல்லோரும் ஒன்றாக கலந்துகொண்ட வரலாறுகளை மறுக்கமுடியாது.

அதன்பின்னர் 1976, மே 14இல் வட்டுக்கோட்டை தீர்மானம், சுதந்திர தமிழீழம் அமைக்கும் பிரேரணை ஆகியன தமிழர் விடுதலைக் கூட்டணியால் தந்தை செல்வா தலைமையில் நிறைவேற்றிய பின்னர் அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக ஆரம்பித்த வேளையில் இளைஞர்கள் 36 விடுதலை இயக்கங்களை ஆரம்பித்தனர். இந்தக் காலத்திலும் தமிழ் இளைஞர்களுடன் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து உயிர்நீத்த வரலாறுகளையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

தமிழ்த் தேசிய அரசியலுடன் பின்னிப் பிணைந்து பயணித்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள், தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகி, 1981 செப்டெம்பர் 21ஆம் திகதி முதன்முதலாக காத்தான்குடியில் முஸ்லிம்களுக்கு தனியான அரசியல் கட்சி தேவை என அஷ்ரப் உணர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினார். பின்னர் அந்தக் கட்சியை உத்தியோகபூர்வமாக 4 வருடங்களின் பின்னர் 1986, நவம்பர் 29இல் அரசியல் கட்சியாக நிறுவி அங்குராப்பணக் கூட்டம் இடம்பெற்றது.

1988, பெப்ரவரி 11இல்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

1987, செப்டம்பர் 29இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யும் காலம் வரை பெயரளவிலும் சில கரந்தடி தாக்குதல்களுடனும் செயற்பட்ட 35 விடுதலை இயக்கங்களில் ஓரிரு இயக்கங்கள் அரசியல் நீரோட்டத்தில் அரசியல் கட்சிகளாக செயல்பட்டன. ஏனைய பல இயக்கங்கள் தொடர்ந்து செயல்படாமல் தமது இயக்கங்களைக் கலைத்துவிட்டு ஒதுங்கிவிட்டன.

அந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் இயக்கங்களை தடைசெய்து அவர்களுக்கு எதிராக மோதல்களை மேற்கொண்டதையும் காணலாம்.

இருந்தபோதும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987இல் செய்யப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறெந்த இயக்கமும் விடுதலைக்காக போராடவில்லை. அதேபோல் 1987, செப்டம்பர் 29 இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரை கரந்தடி தாக்குதல் மட்டும் நடத்திய விடுதலைப் புலிகள் இயக்கம், அதன் பின்னர் மரபுப்படையணியாக மாறியது. மரபுப்படையணியாக வேறெந்த தமிழ் ஆயுத இயக்கங்களும் செயல்படவில்லை.

இந்திய அமைதிகாக்கும் படையினருடன்தான் முதலாம் கட்ட ஈழப்போரை 1987, ஒக்டோபர் 10ஆம் திகதி தொடக்கம் 1990, மார்ச் 24ஆம் திகதிவரை மேற்கொண்டனர். இந்தியப்படை அன்றைய தினம் இலங்கையை விட்டு வெளியேறியது.

1990, ஜூன் 10 தொடக்கம் 1994, டிசம்பர் 19 வரையும் விடுதலைப் புலிகள் இரண்டாம் கட்ட ஈழப்போரை இலங்கைப் படையுடன் முன்னெடுத்தனர்.

1995, ஏப்ரல் 19 தொடக்கம் 1992, பெப்ரவரி 22ஆம் திகதிவரை மூன்றாம் கட்ட ஈழப்போரை இலங்கைப் படையினருடன் மேற்கொண்டனர். 2006, மே மாதம் தொடக்கம் 2009, மே 18 முள்ளிவாய்க்கால் மௌனம் வரை நாலாம் கட்ட ஈழப்போர் விடுதலைப் புலிகளால் மேற்கொண்டாலும் இலங்கை இராணுவத்துக்கு துணையாக பல சர்வதேச நாடுகள் செயல்பட்டன என்பது உண்மை.

இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலையால் இலட்சக்கணக்கான தமிழர்கள் பலியானார்கள். அதில் ஏறக்குறைய ஐம்பதாயிரம் மாவீரர்களும் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளும் உயிர்நீத்தனர் என்பது உண்மை.

சிங்கள மக்களும் சிங்களப் படையினரும் அடங்கலாக ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டுள்ளனர்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை 46 மாவீரர்கள் அடங்கலாக நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துள்ளனர் என்பதற்கும் மாற்றுக்கருத்துகள் இல்லை.

இலங்கையில் 1915இல் முஸ்லிம் களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் முதன்முதலாக ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது தென்பகுதியில் 4075 முஸ்லிம் கடைகள் எரிக்கப்பட்டும், 85 பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டும், 136 முஸ்லிம் மக்கள் படுகொலைசெய்யப்பட்டதும் சிங்களவர்களால் நடந்த மோதலாகும்.

அதன்பின்னர் 1976, ஜனவரியில் புத்தளத்தில் ஏற்பட்ட சிங்கள - முஸ்லிம் இனக்கலவரத்தால் 18 முஸ்லிம்கள் பொலிஸாரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இதன் எதிரொலியாக பொத்துவிலில் ஒரு பள்ளிவாசல் சிங்களவரால் சேதமாக்கப்பட்டது.

1982, ஜூலை மாதம் காலியில் ஏற்பட்ட முஸ்லிம் - சிங்களவர் மோதலால் கண்டி, மாவனல்ல,கொழும்பு வரை முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர்.

2002 நவம்பரில் சிலாபம், புத்தளம், காலி வரை சிங்கள - முஸ்லிம் இனமோதல் இடம்பெற்றது. இதனால் காலியில் ஒரு முஸ்லிம் இளைஞர் படுகொலை செய்யப்பட்டார்.

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில்தான் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரித்தாளும் தந்திரம் சிங்கள அரசியல் தலைவர்களால் திட்டமிடப்பட்டு விஷமத்தனமான பிரசாரங்கள் முஷ்லிம் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன.

இதன் வெற்றி 1988, டிசம்பர் 18இல் ஜனாதிபதியாக தெரிவான ஆர்.பிரமதாசவின் நிறைவேற்று அதிகாரம் 1990களில் முஸ்லிம் ஊர்காவல் படையை இனரீதியாக கிழக்கில் ஆரம்பித்தார்.

பிட்டும் தேங்காய்ப்பூவும் என ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களை முட்டி மோதும் சமூகமாக மாற்றினார். இதன் விளைவு தமிழ், முஸ்லிம் மக்களிடையே குரோத மனப்பாங்கு இன்றுவரை தொடர்கிறது.

1985க்குப் பின்னர் ஏற்பட்ட தமிழ், முஸ்லிம் முரண்பாடு மோதல்களால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் விபரம்;

1. 1985, ஏப்ரல் 07 - மன்னார் பள்ளிவாசலில் 06 பேர்.
2. 1990, ஜூலை 12 - குருக்கள்மடம் கிரான்குமில் 19 பேர்.
3. 1990, ஓகஸ்ட் 03 - காத்தான்குடி பள்ளிவாசலில் 103 பேர்.
4. 1990, ஓகஸ்ட் 05 - முள்ளியங்காட்டில் 17 பேர்.
5. 1990, ஓகஸ்ட் 06 - அம்பாறையில் 33 பேர்.
6. 1990, ஓகஸ்ட் 11 - ஏறாவூரில் 121 பேர்.
7. 1990, ஓகஸ்ட் 11 - அறுகம்பையில் 09 பேர்.
8. 1990, ஓகஸ்ட் 20 - வாகனேரியில் 17 பேர்.
9. 1990, ஒக்டோபர் 13 - அரந்தலாவயில் 09 பேர்.
10. 1991, மார்ச் 24 - அக்கரைப்பற்றில் 09 பேர்.
11. 1991, மே 20 - சம்மாந்துறையில் 09 பேர்.
12. 1991, செப்டெம்பர் 19இல் புதூரில் 18 பேர்.
13. 1991, செப்டெம்பர் 19 - பள்ளித்திடலில் 13 பேர்.
14. 1992, ஏப்ரல் 29 - அழிச்சிப்பொத்தானையில் 170 பேர்.
15. 1992, ஜூலை 21 - பறங்கிமடுவில் 07 பேர்.
16. 1997, ஒக்டோபர் 15 - பட்டித்திடலில் 172 பேர்.
17. 1997, ஜூலை 20 - இலுப்பைக்குளத்தில் 06 பேர்.
18. 2006, செப்டெம்பர் 05 - மூதூரில் 28 பேர்.
19. 2006, செப்டெம்பர் 12 - பொத்துவிலில் 04 பேர்.

மொத்தமாக 770 முஷ்லிம் மக்கள் இதனால் மரணித்துள்ளனர். (இந்தத் தரவு அந்தந்த காலப்பகுதியில் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளில் திரட்டப்பட்டது)

ஆனால் கடந்த 2023, ஜூன் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஓட்டமாவடியில் முஸ்லிம்கள் வாழும் கிராமத்தில் கல்குடா தியாகிகள் நினைவுத்தூபி குழுவினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, அல்-கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் மௌலவி எம்.எம்.ஹாரூன் ஸஹ்வி தலைமையில் இடம்பெற்றது.

இதில் வேடிக்கை என்னவெனில், இலட்சக்கணக்காக தமிழினப் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு மே 18, முள்ளிவாய்க்கால் நினைவு, கார்த்திகை 27 மாவீரர்நாள் நினைவு, முஸ்லிம் ஊர்காவல் படையினரைப் பயன்படுத்தி தமிழர்களை படுகொலைசெய்த அம்பாறை மாவட்ட திராய்மடு படுகொலை நினைவு, வீரமுனை படுகொலை நினைவு, உடும்பன்குளம் படுகொலை நினைவு, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை, புதுக்குடியிருப்பு, காரைதீவு தொடக்கம் வாழைச்சேனை வரை 1990இல் இடம்பெற்ற படுகொலை நாட்களை நினைவு கூர முடியாமல் கடந்த காலங்களில் தடுத்த அரசாங்கம், இன்று ஓட்டமாவடியில் யாரை நினைவுகூர இந்த நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது இதன் பின்னணி என்ன என்பதெல்லாம் எவருக்கும் தெரியாமல் இல்லை.

ஓட்டமாவடி நினைவுத்தூபி திறப்பு நிகழ்வின்போது கூறப்பட்ட கருத்தில் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தின்போது தாய் மண்ணையும் நாட்டுமக்களையும் பாதுகாப்பதற்காக கல்குடா முஸ்லிம் பகுதியில் உயிர்நீத்த வீரர்கள், துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்கள், கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரதேச கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் நினைவுகூரப்பட்டதாக காட்டப்பட்டது.

உண்மையில் மூன்று சகாப்தமாக உயிர்நீத்த இலட்சக்கணக்கான தமிழர்களை பற்றி அங்கு நினைவுகூரப்படவில்லை. இதுவும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரித்தாளும் நிகழ்ச்சி நிரலாகவும் தொடர்ந்து தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு வேலைத்திட்டமே இது என்பதை புரிவது நல்லது.

## இலங்கையில் 'ஜூக்கி பெண்களின்' (07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், யதார்த்தத்தில் இந்தப் பணியாளர்கள் நாளாந்தம் 12 முதல் 15 மணித்தியாலங்கள் வரை பணியாற்றுகின்றனர்.

அதேபோன்று மேலதிக நேரப் பணி மாதாந்தம் 60 மணித்தியாலங்களாக இருக்கவேண்டும். ஆனால், 90 முதல் 110 மணித்தியாலங்கள் அவர்கள் பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும் வருடாந்த விடுப்பு 14 நாட்களாக வருடத்துக்கு இருந்தாலும் அதுவும் அவர்களுக்கு உரியவாறு வழங்கப்படுவதில்லை. தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தை மீறும் வகையில் பணியாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பதற்கு இடமளிக் கப்படுவ தில்லை".



உத்தேச தொழில் சட்ட திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சி களில் ஒன்றான ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் தேசிய நிலையத்தின் அழைப்பாளருமான காமினி ரத்நாயக்க இந்த உத்தேச திருத்தச்சட்டம் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் அரசாங்கத்தின் சதியாகும் என்றார்.

"கடும் பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவே இங்கு முயற்சிக்கப்படுகின்றது. நடப்பாண்டில் இலங்கையின் ஆடைத்தொழிற்றுறை ஏற்றுமதியில் ஒரு பில்லியன் நட்டம் ஏற்படப்போகின்றது என்று பொருளியல் வல்லுனர்கள் எதிர்வுகூறியுள்ள நிலையில், இந்த சட்டதிருத்தம் சுதந்திர வர்த்தக வலயங்களில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களைப் பெரிதும் பாதிக்கப்போகின்றது. பெண்களை இரவு வேலைகளில் ஈடுபடுத்த அனுமதித்தல், 12 மணித்தியாலங்கள் மேலதிக வேலைநேரம் என்பன இப்பெண்களை பெரிதும் பாதிப்பதுடன் அவர்களை மென்மேலும் பொருளாதார ரீதியில் சுரண்ட மென்மேலும் வழிவகுக்கும்."

### வேண்டுகோள்

கண்ணியமற்ற பணிச்சூழல்கொண்ட தொழிற்சாலைகளில் தயாராகும் ஆடைகளை எதிர்க்கும் கிளீன் குளோத் கெம்பெய்ன் இலங்கையில் ஆடைத்தொழிற்சாலைப் பெண்கள் எதிர்கொள்ளும் இந்த பாரபட்சங்கள் பற்றி கூறப்போவது என்ன?

45க்கு மேற்பட்ட நாடுகளில் 235க்கு மேற்பட்ட அமைப்புகளின் உலகளாவிய வலையமைப்பாக இணைந்து செயற்படும் இந்த அமைப்பு தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக பாதிக்கப்படுபவர்களுக்கு நேரடி யான உதவிகளை வழங்கி வருகின் றது. தொழிலாளர்களுடன் இணைந்து செயலாற்றும் இவர்கள் தொழிலாளர் களுக்கு பலமூட்டும் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், இலங்கையில் ஜூக்கி பெண்களின் நிலை குறித்து இவர்கள் அறிந்துள்ளார் களா என்று இலங்கையின் மூத்த தொழிற்சங்க வாதியும் சுதந்திர வர்த்தக வலயங்கள் பொது ஊழியர் தொழிற்சங்கத்தின் செயலாளருமான அன்டன் மார்க்ஸிடம் வினவியபோது அவர், இவையெல்லாம் அவர்களின் கவனத்துக்குச் சென்றுள்ளன. ஆனால், அந்த சர்வதேச வணிகச் சின்னங்களின் நிறுவனங்கள் இங்கிருக்கும் விநியோகஸ்தர்களிடம் வினவும்போது அவர்கள் தங்கள் பக்க நியாயங்களைக் கூறுகின்றார்கள்" என்றார்.

"இந்தப் பெண்களின் உழைப்பைச் சுரண்டி பெரும் இலாபத்தை இவர்கள் குவிக்கின்றார்கள். ஆனால், இங்கு பணியாற்றும் ஒரு பணியாளருக்கு மாதம் அடிப்படைச் சம்பளமாக 16 ஆயிரம் ரூபா மட்டுமே பல ஆண்டுகளாகக் கிடைக்கின்றது. இலங்கையின் பொருளா தார நெருக்கடியில் குறைந்துபோன ரூபாவின் பெறுமதி சர்வதேச நிறுவனங் களின் இலாபத்தை மென்மேலும் அதிகரித்துள்ளது".

அதுமட்டுமன்றி அவர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார். அதாவது, இலங்கையில் ஆடைத்தொழிற் சலைகளில் பிராண்டட் ஆடைகளைத் தைக்கும் எமது பெண் பணியாளர்களின் உண்மை யான தொழில்தருனர்கள் அதாவது முதலாளிகள் இந்த சர்வதேச பிரான்டட் நிறுவனங்கள்தான். இதனால் அவர்களும் இந்தப் பெண்களின் நிலைமைக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பிரபலமான வணிகச்சின்னங் களுக்காக தங்களது உழைப்பை வாரி வழங்கும் இந்தப் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசம் கவனத்திற் கொள்ளாதது குறித்து யோகேஷ்வரி கிருஷ்ணணிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினார்:

"இந்நிலையில் கண்ணியமான பணிச் சூழலை வலியுறுத்தும் சர்வதேச அமைப்புகள் எதுவும் எமது பெண் களின் நிலை குறித்து கவனம் செலுத்துவ தில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக அவர்கள் மீது சுமத்து வது அர்த்தமற்றது என்றே நான் கருதுகின் றேன். யதார்த்த நிலை திட்டமிட்டு மறைக் கப்படுகின்றது. குறிப்பாக, தொழிற்சாலை களிலுள்ள மனித வள பிரிவுகள் பெண்களிடமிருந்து வரும் முறைப்பாடு களை கவனத்திற்கொள்ளாது முற்றாகப் புறக்கணிக்கும் நிலையே உள்ளது. இதனால் முறைப்பாடுகள் செய்து எந்தபட பயனும் இல்லை என்ற முடிவுக்கு வரும் பெண்கள் முறைப்பாடுகளை செய்ய முன்வருவதில்லை. இதனால் பிரச்சினைகள் எதுவும் பதிவாவதில்லை. இது மிகவும் மோசமானதொரு நிலையாகும். இது முதலாவது பிரச்சினை.

அடுத்ததாக வருடாந்தம் கணக்காய் வுக்காக வரும் சர்வதேச தரப்புகளிடம் முற்றாக மாறுபட்ட சூழலையே தொழிற் சாலை நிர்வாகங்கள் காட்டுகின்றன. நாங்கள் அறிந்தவரையில் தெரிவுசெய் யப்பட்ட 5, 6 பணியாளர்களுக்கு நன்கு பயிற்சியளித்து கண்ணிய மான பணிச் சூழல் நிலவுவதாக அவர்களுக்கு காட்டப் படுகின்றது. இதன் காரணமாக கண்ணிய மான பணிச்சூழல் உள்ள தொழிற்சாலை என்ற சான்றிதழ் இலகுவாகக் கிடைத்து விடுகின்றது. வேலையை இழக்க நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாக தொழிற் சங்கங்களில் இணைந்து தமது உரிமை களுக்காகக் குரல் கொடுக்க பெண்கள் முன்வருவதில்லை. கட்டுநாயக்க ஏற்று மதி ஊக்குவிப்பு வலயத்தில் ஓரிரண்டு தொழிற்சாலைகளில் மட்டுமே தொழிற்சங்க செயற்பாடுகள் சிற் சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட் டுள்ளன" என்றார்.

சமிலா துஷாரியும், "நாங்களும் அப்பெண்களை தொழிற்சங்கங்களில் இணைத்துக்கொள்ள கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால், பெண்கள் தொழிலை இழந்து விடுவோம் என்ற அச்சத்தில் தங்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க அஞ்சுகின்றனர். நாங்கள் வழங்கும் துண்டுப்பிரசுரங்களைக் கூட வைத்திருப்பதற்கும் அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்" என்றார்.

ஆனால் தருஷியோ, "இலங்கைக்கு நாங்கள் டொலர்களைக் கொண்டு வருகின்றோம். அதற்காக பல துன்பங்களை அனுபவிக்கின்றோம். எங்களுக்கு இருப்பதோ சின்னஞ்சிறு கனவுகள்தான். அவற்றை நிறைவேற்ற எங்களுக்கு டொலர்கள் தேவையில்லை. கண்ணியமும் மதிப்பும் நிறைந்த பணியில் கிடைக்கும் நியாயமான சம்பளமே போதுமானது" என்றார்.

# பல்கலை மாணவர்களது சுதந்திரமான செயற்பாடுகளை விரிவுரையாளர்கள் கட்டுப்படுத்த முடியுமா?

எம்.எஸ். அமீர் ஹுசைன்

பாடசாலைக் கல்வியின் பின்னர் உயர்கல்விக்காக மாணவர்கள் காலடி வைக்கும் இடங்களாக பல்கலைக்கழகங்கள் உள்ளன. பேராதனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, தென்கிழக்கு, கொழும்பு, களனி, ரஜரட்டை, ஜெயவர்தனபுர, வயம்ப ஆகிய பல்கலைக்கழகங்கள் என்ற அடிப்படையில் நாடெங்கிலும் 10 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இந்த பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக உயர் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் என்று பல கல்வி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் உயர் கல்வி நிறுவனங்கள் என்ற வகையில் பல்கலைக்கழக சூழல் ஏனைய கல்வி நிறுவனங்களிலிருந்து முற்றாக வேறுபட்டதாக உள்ளன.

மாணவர்கள் எந்தவிதமான தடைகள், கட்டுப்பாடுகள், இடையூறுகளுமின்றி சுதந்திரமான சூழலில் கல்வி பயில சகல வசதிகளையும் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன. மாணவர்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான எந்தவிதமான ஒழுக்கநெறிக் கோவை களும் பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதாக இல்லை. ஆனாலும் பல்கலைக்கழகங்களில் நடைமுறையில் இருந்துவருகின்ற சட்டங்களின் அடிப்படையில் 'ராக்கிங்' என்றழைக்கப்படுகின்ற அன்புத் தொல்லை கொடுத்தல், மாணவர்களது நடவடிக்கை களால் பல்கலைக்கழக சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், ஏனைய மாணவர் களது கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறாக நடந்துகொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக பல்கலைக்கழக சட்டவிதிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு பூரணமான அதிகாரங்கள் உள்ளன. அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக பல்கலைக்கழகங்களுக்கென்று தனியான பாதுகாப்புப் பிரிவுகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பொலிஸார் கூட பல்கலைக்கழகங்களுக்குள் உப வேந்தரின் அனுமதியின்றி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படும் நடைமுறை இல்லை.

விரிவுரைகளின்போது நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குவிதிகளை மீறாமல் இருத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றும் அத்தகைய ஒழுங்குவிதிகளை மீறுகின்றபோது மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கின்ற நடைமுறைகளும் ஏனைய கல்வி நிறுவனங்களிலிருந்து மாறுபட்டதாகவே உள்ளன.

இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகள் இன்றி எல்லா மாணவர்களும் சுதந்திரமாக விரிவுரைகளில் பங்குபற்றல், உயர்வுகளை வெளிப்படுத்தல், சகவாழ்வை கடைப்பிடித்தல் என்பன ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் காணப்படுகின்ற சிறப்பம்சங்களாகும். அவரவருக்குரிய இன, மத, கலாசார அடையாளங்களுடன் நடமாடவும் மத, கலாசார பாரம்பரியங் களைப் பின்பற்றவும் அந்த அடையாளங் களுடன் விரிவுரைகளில் பங்குபற்றவும் பல்கலைக்கழகங்களில் எந்தத் தடைகளும் இல்லை.

ஆனாலும் பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் பாடசாலை நிர்வாகம் மாணவர்களைக் கட்டுப்படுத்த வென சில ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்திருக்கின்றது. ஏனெனில் பல்கலைக் கழகங்களிலிருந்து பாடசாலைகள் முற்றாக வேறுபட்ட நிலையில், ஆசிரியர்களதும் அதிபரதும் கட்டுப்பாட்டின்கீழ் மாணவர்கள் செயற்படவேண்டிய நிலை இருக்கின்றது. அதன் காரணமாகவே மாணவர்கள் எவ்வாறான முறையில் உடை அணிய வேண்டும், பாதணி அணிய வேண்டும், தலைமுடி வெட்டியிருக்க வேண்டும், வகுப்பறையில் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறை, பாடசாலைக்கு வருகின்ற நேரம், அந்த நேரத்திற்கு சமுகமளிக்கத் தவறினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்றெல்லாம் மாணவர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவைகள் ஒவ்வொரு விடயத்தையும் வலியுறுத்துகின்றன. அதன்படி அந்த ஒழுக்கக்கோவையை மீறுகின்றபோது பாடசாலை நிர்வாகத்தால் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நிலை காணப்படுகின்றது.

ஆனாலும் இன்றைய நாட்டு நிலைமை களின் கீழ் இத்தகைய நிலைமைகளைப் புரிந்துகொள்ளாமல் ஒருசில அதிகாரிகள் நடந்துகொள்ள முற்படுகின்றபோது பாதிக்கப்படும் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது இன, மத, கலாசார உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு என்னும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறு நடைமுறையில் இருக்கின்ற சட்டங்களைக் கொண்டு தமது இனத்துக்கும் மதத்துக்குமான உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்திக்கொள்ளாவிட்டால் இவ்வாறான ஒருசில அதிகாரிகளின் அசமந்தப்போக்கு காரணமாகவும் புரிந்துணர்வு இல்லாத செயற்பாடுகள் காரணமாகவும் எதிர்காலத்தில் தமது உரிமைகளுக்கு முற்றாக பாதிப்பு ஏற்படும் நிலைமைகள் உள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சில விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றபோது ஏனைய அதிகாரி களும் அதுபற்றி பூரண அறிவுடனும் தெளிவுடனும் நடந்து கொண்டால் நாட்டில் பிரச்சினைகள் இல்லாமல் ஒற்றமையாகவும் இன, மத, மொழி, பேதங்கள் இல்லாமல் சக வாழ்வை பலப்படுத்தும் வகையிலும் நடந்துகொள்ள முடிகின்றது.

குறிப்பாக, அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவரான அக்கரைப்பற்றைச் சேர்ந்த முஹம்மத் நுஸைக் என்பவருக்கு இரண்டு விரிவுரையாளர்களால் ஏற்பட்ட அனுபவம் இங்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. அவருக்கு தமது இஸ்லாமிய மத கலாசார நடைமுறைகளுக்கேற்ப தாடிவைத்தவராக பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சை எழுத சென்றபோது தடை ஏற்படுத்தப்பட்டு பரீட்சை எழுத அனுமதிக்கப்படவில்லை.

குறித்த மாணவர் தமக்கு நீதி, நியாயம் வேண்டி மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அவருக்கு தாடியுடன் பரீட்சை எழுத அனுமதி வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கின்றது.



அதேநேரம் இந்த விவகாரம் தொடர்பாக திருகோணமலையை தளமாகக்கொண்டு இயங்கும் குரல்கள் அமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு வொன்றையும் தாக்கல் செய்ததிருக்கின்றது.

2023 மே மாதம் 31ஆம் திகதி சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மாணவர் நுஸைக் பரீட்சை எழுத பரீட்சை மண்டபத்துக்கு சென்றபோது பரீட்சை கடமையில் ஈடுபட்டிருந்த அதே பல்கலைக்கழகத்தைச் சோந்த விரிவுரையாளர் ஒருவர் குறித்த மாணவர் தாடி வைத்திருந்ததால் அவரை பரீட்சை எழுதவிடாமல் தடுத்துள்ளார். பின்னர் இவ்விடயம் பற்றி கடந்த 2023.06.01ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றை செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை விசாரணை செய்த ஆணைக்குழு, குறித்த மாணவரை 2023.06.19 ஆம் திகதி நடைபெற இருந்த பரீட்சையை மாணவர் விரும்புகின்ற முறையில் தாடியுடன் சென்று எழுத அனு மதிக்குமாறு உத்தரவிட்டு கிழக்குப் பல்கழைக்கழகத்திற்கு அறிவிப்பு செய்திருக்கின்றது.

ஆனாலும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உத்தரவை அமுல்படுத்த பல்கலைக்கழக நிர்வாகம் பின்வாங்கி இருக்கின்றது. அதற்காக பல்கலைக்கழக பேரவையின் அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதாக ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அதன்படி 19ஆம் திகதி நடக்கவிருந்த பரீட்சைக்கே மாணவரை தாடியுடன் அனுமதிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தல் செய்திருக் கின்றது. அதேநேரம் பல்கலைக்கழக நிர்வாகம் இந்த விடயத்தில் இழுபறி நிலை ஏற்பட்டதால் குரல்கள் அமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2023.06.15ஆம் திகதி இந்த மாணவரின் உரிமைக்காக குரல் எழுப்பும் வகையில் ரீட் மனுவொன்றை (WRIT) தாக்கல் செய்து மாணவர் நுஸைக்கிற்கு நீதி கோரி இருக்கின்றது.

இந்த மனு மீதான விசாரணை 2023.06.16ஆம் திகதி மேன்முறையீட்டு நிதியரசர்களான சோபித ராஜகருண மற்றும் மரிக்கார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. 2023 ஜூன் மாதம் 19ஆம் திகதி பரீட்சை நடைபெற்றால் தனக்கு அநீதி ஏற்படலாம் என்ற காரணத்தால் மாணவர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். மாணவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் குறித்த மாணவரை அநீதியான முறையில் பரீட்சைக்கு செல்ல விடாது தடுத்திருப்பதாகவும் அவர் தாடியுடன் பரீட்சை எழுதும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் கோரியிருந்தனர்.

இவ்விடயத்தை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அடுத்த விசாரணை ஜூலை 04ஆம் திகதி நடைபெறவிருப்பதால் அதுவரையில் பரீட்சையை பின்போடுமாறு கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருக்கின்றது. அதேநேரம் மன்றில் ஆஜராகிய குறிப்பிட்ட பல்கலைக்கழக அதிகாரிகளும் பரீட்சை பின்போடப்பட்டமையை மன்றுக்கு அறிவித்தனர். மாணவர் சார்பாக சட்டத்தரணிகளான முகைமின் மற்றும் உவைஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதேபோன்று ஏற்கனவே திருகோண மலையில் நடைபெற்ற மற்றுமொரு சம்பவமும் சிறந்த படிப்பினையாக அமைகின்றது. திருகோணமலை சண்முகா கல்லூரிக்கு புதிதாக ஆசிரியராக நியமனம் பெற்று கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா ரமஸ் என்பவருக்கு ஏற்பட்ட அனுபவமும் இவ்வாறானதாகவே இருக்கின்றது. இந்த விடயத்திலும் இறுதியில் கல்லூரி அதிபர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பஹ்மிதா ஆசிரியைக்கு அவரது இஸ்லாமிய மத கலாசர, விழுமியங்களை பேணிய நிலையில் கடமையாற்ற உரிமை இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டு நீதிமன்ற உத்தரவிற்கு வளைந்துகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அபாயா என்ற இஸ்லாமிய கலாசார மரபுகளுக்கமைவான ஆடையை அணிந்து ஆசிரியராக கடமையாற்ற வர வேண்டாம் என்று சண்முகா கல்லூரி அதிபர் ஆசிரியை பஹ்மிதாவை 02.02.2022இல் தடுத்ததால் சர்ச்சையும் முரண்பாடும் ஏற்பட்டன.

இவ்விடயம் நீதிமன்றம் வரையில் சென்றதால் வழக்கின் முடிவில் சண்முகா கல்லூரி அதிபர் அப்பாடசாலையில் எதிர்காலத்தில் ஆசிரியை பஹ்மிதா உட்பட முஸ்லிம் ஆசிரியைகள் எவரா னாலும் அவர்களது கலாசார உடையான முழு உடம்பையும் மறைக்கும் அபாயா என்ற அடை அணிந்து கடமையாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அபாயா ஆடையானது முஸ்லிம் பெண்களது ஒரு கலாசார உரிமை என்பதையும் ஏற்றுக் கொண்டதால் இந்த வழக்கு சுமுகமான தீர்வின் அடிப்படையில் சமாதானமான முறையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

2023 மே மாதம் 22ஆம் திகதி திருகோணமலை மஜிஸ்ரேட்டில் நடைபெற்ற விசாரணைகளின்போதே இவ்வாறான சுமுகமான இணக்கம் ஏற்பட்டதோடு, வழக்கும் முடிவுக்கு வந்தது. திருகோணமலை சண்முகா கல்லூரி அதிபர் லிங்கேஸ்வரி சார்பாக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.சுமந்திரன் அவரது சமர்ப்பணத்தில் எதிர்காலத்தில் சண்முகா கல்லூரிக்கு அபாயா ஆடை அணிந்துவரும் பஹ்மிதா ஆசிரியை உட்பட முஸ்லிம் ஆசிரியைகள் விடயத்தில் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படுத்தப்பட மாட்டாது. மேலும் 2022 பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி ஆசிரியை பஹ்மிதாவுக்கு எதிரான சம்பவம் கல்லூரி வளாகத்தில் நடந்திருப்பது வருந்தத்தக்க சம்பவமாகும். இவ்வழக்கு சமாதான முறையில் இணக்கமாக தீர்க்கப்பட்டால் ஆசிரியை பஹ்மிதாவுக்கான சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆவணங்களில் உடனடியாக கையொப்பமிட்டு வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அதிபர் சார்பாக மன்றில் முன்வைத்திருந்தார்.

எவ்வாறாயினும் மன்றின் உத்தரவுகள் அதிபரால் ஏற்கப்பட்டதற்கிணங்க வழக்கு சுமுகமான முறையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மன்றில் இணக்கம் காணப்பட்டதற்கிணங்க பஹ்மிதா ஆசிரியை இஸ்லாமிய கலாசார ஆடையான அபாயா அணிந்து தனது சட்டத்தரணிகளான ஹஸ்ஸான் மற்றும் ராஸி முஹம்மத் ஆகியோருடன் சண்முகா கல்லூரிக்கு விஜயம் செய்தபோது அதிபர் லிங்கேஸ்வரி பஹ்மிதாவின் பதவிய உயர்வு, சம்பள அதிகரிப்பு தொடர்பான அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிட்டார்.

இந்தச் சம்பவங்களை அடிப்படையாக வைத்து நோக்குகின்றபோது நாட்டிலுள்ள எந்த நிறுவனமானாலும், திணைக்களமாயினும், கல்வி நிறுவனமாக இருந்தாலும் அவற்றோடு தொடர்புபடுகின்ற மக்கள் எந்த இனம், சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அதிகாரிகள் வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையான நிலையில் நிர்வாகம், அதிகாரம் செலுத்தாமல் நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற அரசியலமைப்புச் சட்டம், மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள், சர்வதேச மனித உரிமைகள் சாசனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனம், குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள், நாட்டு சட்டம் பற்றி போதுமான அறிவும் தெளிவும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்போதே எல்லா இனங்களுக்குமான சம நீதியை நிலை நாட்டும் வகையில் பாரபட்சம் ஏற்படுவதை தடுத்தல், இன அடிப்படையிலான ஒதுக்கல், புறக்கணிப்புகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை வெளிப்படுத்த முடியும். நிர்வாக செயற்பாடுகளில் ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்கி ஒடுக்க முற்படாமல் புரிந்துணர்வுடன் ஒற்றுமை, இன நல்லிணக்கம், சகவாழ்வு போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை வெளிப்படுத்த முடியுமாகின்றது.

## இலங்கையின் 2023ஆம் ஆண்டு சிறந்த தொலைபேசி ஊடகவியலாளருக்கான விருதுகள்

இலங்கையில் முதல் முறையாக நடத்தப்பட்ட Sri Lanka's FIRST Mobile journalism Festival தொலை பேசி ஊடகவியல் விருது விழாவில் தமிழ், சிங்கள, ஆங்கில கதைகளில் 'தமிழன்% பத்திரிகையின் வவுனியா மாவட்ட செய்தியாளரான சிவகுமார் திவியாவின் கதை சிறந்த கதையாக தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

USAID Sri Lanka, IREX இணைந்து நடத்திய Srilanka's FIRST Mobile journalism Festival கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு நாள் நிகழ்வாக கொழும்பில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில்










சர்வதேச ஊடகவியலாளர்கள் ஊடாக தொலைபேசி ஊடகவியல் தொடர்பான தெளிவுபடுத்தல்கள், புதிய நுட்பங்கள் தொடர்பில் இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள், ஆவணப்பட தயாரிப்பாளர் களுக்கு இரண்டுநாள் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதில் ஒரு பகுதியாக நாட்டின் சிறந்த தொலை பேசி ஊடகவியலாளர்களுக்கான கதை தயாரிப் பதற்கான போட்டி இடம்பெற்ற நிலையில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட 500 க்கு மேற்பட்ட கதைகளில் முல்லைத்தீவு வட்டுவாகல் பிரதேசத்தில் வசித்து வருகின்ற மீனவர் சிங்காரம் சூசைமுத்து என்பவரது விடாமுயற்சி தொடர்பான கதை.

இவருக்கு பிறப்பில் இரண்டு கால்களும் இருந்துள் ளன. அந்தக் காலப்பகுதியில் கடல் தொழில்செய்து வந்தவர். 2009ஆம் ஆண்டு ஒரு விபத்தில் யுத்தத்தில் விழுந்து காலை இழந்தவர். ஆனால் இன்றுவரை கால் இல்லை என்பதை காட்டிக் கொள்வதில்லை. தனக்கு சொந்தக் கால்கள் இருக்கு என்று நினைத்து உடலில் குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் உறுதியுடன் இருக்கும் மாற்றுத்திறனாளியான இவர், தனது சுயமுயற்சியால் மீன்பிடித்துறையில் சாதனை படைத்து வருகின்றார். அவரை சமூகம் கண்டுகொள்வதில்லை. மாறாக, அவர்களை ஊனமுற்றோர் என்று அலட்சியப்படுத்துவதும் இங்கே நடக்கிறது.

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினராக உள்ள ஒருவரான இவர், சிரித்தபடியே தனது வாழ்க்கை பற்றி சுருக்கமாகக் கூறுகின்ற கதை, வவுனியா மாவட்ட 'தமிழன்' பத்திரிகையின் செய்தியாளரான சிவகுமார் திவியாவினால் உருவாக்கப்பட்ட சிறந்த கதையாக தெரிவுசெய்யப்பட்டு விருதைப் பெற்றுக் கொண்டது. இத்துடன், மீன்பிடி சார்ந்த உப தொழில்களை மேற்கொண்டுவரும் மீனவ பெண்கள் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஜோசப் நயனால் உருவாக்கப்பட்ட கதையும் சிறந்த கதையாக தெரிவு செய்யப்பட்டு பரிசைப் பெற்றுக்கொண்டது.

குறித்த கதை வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த மொபைல் ஊடகவிய லாளருக்கான விருதும் அதேநேரம் மூன்று இலட்சம் பெறுமதியான பரிசும் USAID நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான இயக்குனர் மைக்கல் ஹெய்ன்ஸினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.



# வன்னியின் வனாந்தரங்களைப் பாதுகாக்கத் தவறின் வாழ்விழந்து விடுவோம்!



மு.தமிழ்ச்செல்வன்

இயற்கையின் சூழலுக்குள் மனிதனின் அளவுக்கதிமான தலையீடு காரணமாக நமது கிரகம் மிகப்பெரும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளது. சுற்றுச்சூழலுக்கு எதிராக மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையும் பூமராங் போன்று மனிதனை திருப்பித் தாக்கும். அத்தாக்கம் பல மடங்காக இருக்கும், மீள முடியாத அளவுக்கும் காணப்படும்.

எவனொருவன் திட்டமிடாமல் செயற்படுகின்றானோ அவன் திட்டமிட்டே தோல்வியைத் தழுவிக்கொள்கிறான் என்பதுபோல் சூழலுக்கு எதிராக மனிதனின் திட்டமிடப்படாத செயற்பாடுகளின் விளைவாக மனிதகுலம் திட்டமிட்டே அழிவை நோக்கிச் செல்கிறது என்றே கூறவேண்டும்.

சூழலுக்கு எதிரான மனிதகுலத்தின் நடவடிக்கைகள் அமெரிக்காவில் இடம்பெற்றால் என்ன, அமேசனில் இடம்பெற்றால் என்ன, ஆசியாவில் இடம்பெற்றால் என்ன அதன் தாக்கம் உலகம் முழுவதற்குமே இருக்கும். இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வன்னியில் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் நமக்கென்ன என்று யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களோ, கொழும்பில் இருப்பவர்களோ, கண்டியில் இருப்பவர்களோ எண்ணி கடந்துசெல்ல முடியாது. ஏனெனில், பாதிப்பு அனைவருக்குமானது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப்



பணிகளின்போது இயற்கைச் சூழலிலிருந்து பெருமளவுக்கு கிரவல் மற்றும் மணல் அகழப்பட்டு வருகின்றன. இவ்வாறு கிரவல், மணல் அகழ்வின்போது காடுகள் அழிக்கப்படுகின்றன.

சூழலின் முக்கியத்துவம் உணராமல் ஒருசிலரின் சுயநலன்களுக்காக மனிதகுலத்தின் பொதுநலன் பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறது. மனிதனைச் சுற்றியுள்ள அனைத்து அம்சங்களும் சூழல் எனக் கொள்ளமுடியும். எனவே, அந்த அனைத்து அம்சங்களும் மனித வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியத்துவம் என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பௌதீக சூழல் அல்லது இயற்கைச் சூழல் மற்றும் பண்பாட்டுச் சூழல் என இரண்டு வகையாக சூழலை பிரித்துப் பார்க்கின்றனர்.

இதில் பண்பாட்டுச் சூழல் மனிதனால் உருவாக்கப்படுவது. இயற்கைச் சூழல் மனிதனுக்குக் கிடைத்தது. இதில் இயற்கை காடுகள் மனிதனுக்கு அளித்த அற்புதம். இந்த இயற்கைச் சூழலை மனித இனத்தின் வாழ்வுக்குப் பயன்படுத்தும்போது அதன் முக்கியத்துவம் கருதி சிறந்த திட்டமிடல்களை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும் என்பதே இன்றைய சூழலியலாளர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்துவருகிறது.

இயற்கைச் சூழலிலிருந்து வளங்களைப் பெறுகின்றபோது மீள உருவாகும் வளம், மீள உருவாக்க முடியாத வளம் என்ற வகையிலும் வளங்கள் காணப்படுகின்றன. மீள உருவாகும் வளங்களில் சில நீண்டகாலத்தின் பின் மீள உருவாகும் வளங்களாகவும் சில குறுகிய காலங்களில் மீள உருவாகும் வளங்களாகவும் உள்ளன.

எனவே, இந்நிலையில் வளங்களை மனித இனத்தின் பயன்பாட்டுக்குப் பெறுகின்றபோது மிக மிக நேர்த்தியான சிறந்த திட்டமிடல் மூலம் பெறுவது கட்டாயமாகும். இல்லையெனில் அதன் பாதிப்புகள் மீண்டும் மனிதகுலத்தை திருப்பித் தாக்கும். இந்தத் தாக்கம் மனிதன் இயற்கைச் சூழலிலிருந்து தான் பெற்ற வளத்தைக்கொண்டு பெற்ற பயனை விட பல மடங்காகக் காணப்படும். இதனை நாம் இன்று எம் கண்முன்னே கண்டும் வருகின்றோம்.

இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் வன்னியில் நிலவிய காலநிலைக்கும் தற்போது நிலவுகின்ற காலநிலைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் சீராகக் கிடைக்கப்பெறுகின்ற மாரி மழை இல்லை, அதிக வெப்பம் நிலவுகிறது. 20 தொடக்கம் 40 அடி வரைக்குள் காணப்பட்ட நிலத்தடி நீர் தற்போது நூறு அடிக்கு மேல் காணப்படுகிறது. பயிர்ச்செய்கைகளில் போதுமான விளைச்சல் இல்லை, சூழலில் காணப்பட்ட பல்லின உயிரினங்களைக் காணமுடியவில்லை. மனிதனுக்கு ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கமென ஏற்பட்ட பாதிப்புகளைக் கூறிக்கொண்டே போகலாம். மனிதனால் இயற்கையின் சமநிலையில் ஏற்பட்ட பாரிய குழப்பமே இந்த நிலைமைக்குக் காரணம்.

இதன் காரணமாக தற்போது அபிவிருத்தி பற்றி பேசப்படுகின்றபோது அதில் சுற்றுச்சூழல் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. அபிவிருத்திக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான சிக்கலான தன்மை பற்றி அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. இருப்பினும், அரசியல், பொருளாதார, சமூக காரணிகளால் - அதன் அழுத்தங்களால் அபிவிருத்தி மேலோங்கி நிற்க சுற்றுச்சூழல் காரணிகள் பின்தள்ளப் படுகின்றன. இந்தச் சந்தர்ப்பங்களில் மனிதனால் மனிதனுக்கு குழி தோண்டப்படுகிறது. இதுவே தற்போது வன்னியெங்கும் இடம்பெற்று வருகிறது.

யுத்தத்தின் பாதிப்புகளை அதிகம் சுமந்த வடக்கில் - அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. யுத்த காலத்தில் பேணி பாதுகாக்கப்பட்ட வன்னி காடுகள் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அழிவுக்குள்ளாகி வருகின்றன.

இதற்கு எதிராக சூழலியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என ஒருசில தரப்பினர்கள் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றனர். ஆனால், சட்டத்தைப் பாதுகாக்கவேண்டியவர்களும், பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும், திணைக்களங்களும் அதனை கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, வீதி மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்காக கிரவல் அகழப்படுகின்றபோது ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஒன்றை பெறுகின்றபோது



இன்னொன்றை இழப்பது தவிர்க்க முடியாதென்றாலும் திட்டமிடலும் மாற்றுத் திட்டங்களும் அவசியமானதாக வலுயுறுத்தப்படுவது இங்கே கவனத்தில் எடுக்கப்படுவதில்லை.

பல ஒப்பந்தக்காரர்கள் கிரவல் அகழ்வின்போது இயற்கை பற்றி சிறிதளவும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் முழு நோக்கமும் கிரவல் அகழ்வு மாத்திரமே. இதுவே இன்று பாரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கொக்காவில், புத்துவெட்டுவான், இராமநாதபுரம, கல்மடு அக்கராயன், கல்லாறு, கல்லியங்காடு, கனகராயன்குளம், போன்ற இடங்களில் பாரியளவில் கிரவல் அகழப்பட்டு வருகிறது. கிரவல் அகழ்வு ஒப்பந்தங்களைப் பெற்றிருப்பவர்கள் பெருமளவுக்கு வடக்குக்கு வெளியே உள்ளவர்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை வன்னி காடுகள் இலங்கையின் வனவளத்தில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. இந்தக் காடுகளில் பல வருடங்கள் பழைமைவாய்ந்த பெறுமதியான மரங்கள் காணப்படுகின்றன. முதிரை, பாலை, கருங்காலி போன்ற பெறுமதிமிக்க மரங்கள் வன்னி காடுகளின் சிறப்பம்சம். ஆனால், தற்போது இந்த மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு வருகின்றன. கிரவல் அகழ்வு



மேற்கொள் பவர்களால் ஒருபுறமும், சட்டவிரோத மரங்கள் கடத்துபவர்களால் மறுபுறமும் என மரங்கள் வெட்டப்படு கின்றன.

தோல் இருக்க சுளையை விழுங்கியது போன்று வன்னி காடுகளின் உட்பகுதிகள் பெருளவுக்கு அழிக்கப்பட்டுவிட்டன, அழிக்கப்பட்டும் வருகின்றன. யாழ். - கண்டி வீதியில் மாங்குளம் தொடக்கம் முறுகண்டி வரையான பகுதிகளில் வீதியோரங்களிலேயே காடுகள் காணப்படு கின்றன. உள்ளே பெருமளவு வெறுமையாக வெட்டைவெளியாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக, கிரவல் அகழப்படுகின்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற காட்டுமரங்களைச் சுற்றி கிரவலை அகழ்ந்த பின் அந்த மரங்கள் இன்றோ நாளையோ விழுந்துவிடும் அபாய நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கிரவல் அகழப்படுகின்றபோது அந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து பெறுமதிவாய்ந்த மரங்களும் அழிக்கப்படுகின்றன. சொல்லப்போனால் அந்தப் பிரதேசம் பாலைவனம் போன்று மாறிவருகிறது.

எனவேதான் இதற்கான மாற்றுத் திட்டங்களை சூழலியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். முக்கியமாக முறுகண்டி தொடக்கம் கொக்காவில் வரை ஏ-9 வீதியின் மேற்கு பக்கம் வீதியிலிருந்து நோக்கினால் அடர்ந்த காடுகள் இருப்பதுபோலவே காணப்படும். ஆனால், சற்று சில மீற்றர்கள் இறங்கிச் சென்றால் உள்ளே பாரியளவில் கிடங்குகளையும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மரங்களையும் காணமுடியும். இந்த நிலைமையைப் பார்க்கின்ற சூழல் மீது அக்கறை கொண்டவர்கள் கண்ணீர் விடுவார்கள். வன்னியின் வனாந்தரங்களைப் பாதுகாக்கத் தவறின், எமது வருங்கால சந்ததியினரின் சுவாசத்தை நிறுத்தி விடும் படுபாதகத்தை மேற்கொள்கின்றவர்களாக நாம் மாறிவிடுவோம்.



அபிவிருத்திக்காக கிரவல் அகழப்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால், அந்தக் கிரவலைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி யால் கிடைக்கும் நன்மையை விட கிரவல் அகழ்வால் ஏற்படும் பாதிப்பு அதிகம் என்றால் இந்த இடத்தில் ஒருகணம் சிந்திக்க வேண்டும். ஐந்தாறு வருடங்களுக்கு முன் கிரவல் அகழப்பட்ட இடங்களும் இப்போதும் வெட்டவெளியாக இருக்கின்றன. இங்கே அடர்த்தியான காடுகள் இருந்த இடம் அந்தச் சுவடே இல்லாமல் இருக்கிறது. இந்த இடங்களில் மீள வனமாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி, அக்கராயனின் ஒரு பகுதியில் 2009க்கு முன்னரும் மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்திலும் கிரவல் அகழப்பட்ட பிரதேசங்களில் மீள் வனமாக்கல் திட்டத்தின் மூலம் மரங்கள் நாட்டப்பட்டது போன்று தற்போது கிரவல் அகழப்படுகின்ற - அகழப்பட்ட பிரதேசங்களிலும் மீள் வனமாக்கல் திட்டத்தை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படுகின்றபோதே மீள வனமாக்கல் செயற்றிட்டத்துக்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், எந்த ஒப்பந்தக்காரர்களும் அதனை மேற்கொள்வது கிடையாது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் அதனைக் கண்டுகொள்வதில்லை. இதனை விட ஆபத்தானது என்னவெனில், கிரவல், மணல் அகழ்வின்போது கனியவளத் திணைக்களத்தால் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த இடத்தில் கிரவல், மணல் அகழ்வுக்கு அனுமதி கோருகின்றவருக்கு எத்தனை ஏக்கர் பரப்பளவில், எத்தனை அடி ஆழம் வரை எவ்வளவு கியூப் அளவு எனக் குறிப்பிட்டே அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், அனுமதி பெற்றவர்கள் எவரும் இதனை ஒரு துளியேனும் கதைப்பதில்லை. இதனை குறித்த

நிறுவனங்களும் கண்டுகொள்வதில்லை. இந்த நிலைமையும் பெருமளவு காடழிப்புக்குப் பெரும் காரணமாக அமைந்துள்ளது.

காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படுகின்ற பாதிப்புகளும், அழிவுகளும் நாளும் எதிர்கொண்டு வருகின்ற சூழ்நிலையில் இன்றும் அதனை உணர்ந்துகொள்ளாதவர்கள் தொடர்பில் வியப்பாக உள்ளது, உணர்ந்தும் கண்டுகொள்ளாதவர்கள் தொடர்பில் கோபமாக இருக்கிறது.

இயற்கை காடுகள், நமக்களித்த மிகப்பெரும் சொத்து. காடுகள், மரங்கள் இல்லாத சூழலில் மனிதன் வாழவே முடியாது. புதிதாக மரங்களை நாட்டுவதைக் காட்டிலும் இருக்கின்ற மரங்களைப் பேணி பாதுகாப்பதில் அக்கறையோடு செயற்பட வேண்டும். மனிதன் உயிர் வாழ்வதற்கான உயிர்மூச்சை தருவது மரங்களே.



# தொழில்நுட்பத்தால் அழிந்துவரும் பத்திரிகைத் துறையும், வாசிப்பும்!

உமர் அலி உஸ்மான்

என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் மல்லாக்க படுத்துக்கொண்டு வாசிப்பதில் இருக்கும் சுகம் எதிலும் இல்லை. தொழில்நுட்பத்துடன் ஒட்டி உறவாடுவதில் இருக்கும் சுகத்தை விட பன்மடங்கு சுகம் வாசிப்பில் அதிகம் என்பதை மறுக்க முடியாது. வாசிப்பு நெஞ்சுக்கு நெருக்கமானது. இப்படியான வாசிப்பு மறுவிக்கொண்டு வருகிறதென்றால் நம்ப முடிகிறதா?

தொலைக்காட்சி, வானொலி, முகப்புத்தகம் பரவலாகியதன் பின்னர் பத்திரிகைகள் நிறையவே வெளிவருவதை நிறுத்திக்கொண்டன. சில பத்திரிகைகள் நிகழ்நிலைக்கு மாறிவிட்டன. இன்னும் சில பத்திரிகைகள் நட்டத்திலும், கடமைக்கும் ஊர்ந்துகொண்டிருக்கின்றன. அதிகாலையில் எல்லா பத்திரிகைகளையும் மேசையில் பரப்பி வைத்துக்கொண்டு முக்கால் மணிநேரத்தினுள் எல்லா பத்திரிகைகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அணில் கடி கடிக்கும் தொகுப்பாளர்கள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்களால் பத்திரிகை விநியோகம், வியாபாரம் கணிசமாகக் குறைந்துள்ளது. அதனால் பத்திரிகைகள் விற்பனையாவதில்லை. நூற்றுக்கணக்கில் விற்ற பத்திரிகைகள் இப்போது பத்துகூட விற்பனையாவதில்லை என்கின்றனர் பத்திரிகை விற்பனை முகவர்கள்.

இப்படியான சூழ்நிலையில் வாசிப்புப் பழக்கமானது தற்போதைய காலத்தில் மிக வேகமாக அருகி வருகின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றபோதும் அவற்றில் எந்தவொரு காரணமும் ஆமோதித்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதன்று. ஏனெனில், 'வாசிப்பை' தவிர்த்து ஒரு மனிதனின் வாழ்வு நிறைவுடையதாக அமைய முடியாது. வாசிப்பு என்றால் என்ன? என்ற வினாவுக்கு தேடல் மிகப் பரந்தது. வாசிப்பு என்பது ஒரு விஞ்ஞான ரீதியான செயற்பாட்டுக்கு ஈடானது. முக்கியத்துவமானது. அதனால்தான் 'வாசிப்பு ஒரு செயன்முறை'யாகக் கருதப்படுகின்றது.

வாசிப்பு என்பது எழுத்துகள், குறியீடுகளிலிருந்து கருத்தொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான சிக்கலான அறிவுசார்ந்த செயன்முறையாகும். இது மொழிப் பயன்பாட்டைப் போன்று தொடர்பாடலை மேற்கொள்ளவும், தகவல்களையும் எண்ணங்களையும் பரிமாறிக்கொள்ளவும் பயன்படுகின்ற, வாசகருக்கும் எழுத்துகளுக்கும் இடையிலான சிக்கலான ஒரு இடைத்தொடர்பாகும். இது வாசகரது முன்னறிவு, மொழியறிவு, அனுபவம், உளப்பாங்கு ஆகியவற்றால் சமூக, கலாசார நிலைமைகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்படுகிறது.

வாசிப்புச் செயன்முறையை வெற்றிகரமாக்குவதற்கு தொடர்ச்சியான பயிற்சி, அப்பயிற்சியில் விருத்தி புத்துருவாக்க சிந்தனை, ஆக்கத்திறன், சிக்கலான விடயங்களை பகுப்பாய்வுசெய்யும் திறன் என்பன அவசியமாகும். வாசிப்பு என்பதற்குக் கொடுக்கப்பட்ட மேற்படி வரைவிலக்கணத்திலிருந்தே வாசிப்பின் முக்கியத்துவத்தை எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றதல்லவா.

வாசிப்புப் பழக்கமானது தற்பொழுது மிக வேகமாக அருகி வருகின்றது. வாசிப்புப் பழக்கத்தைக் குறைப்பதில் அல்லது முற்று முழுதாக இல்லாதொழிப்பதில் இலத்திரனியல் ஊடகங்களும், இலத்திரனியல் சாதனங்களும் அளப்பரிய பங்கை ஆற்றிவருகின்றன என்பது மிக வருத்தத்திற்குரிய, மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். தற்போதைய காலகட்டத்தில் திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என ஒரு பக்கமாகவும் இலத்திரனியல் பத்திரிகைகள், இலத்திரனியல் சஞ்சிகைகள், இலத்திரனியல் புத்தகங்கள் என ஒரு பக்கமாகவும் இணையம், முகநூல், டுவிட்டர் என ஒரு பக்கமாகவும் மும்முனைத் தாக்குதலிலிருந்து தப்பித்து ஒரு மனிதன் வாசிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றான். இலத்திரனியல் ஊடகங்களையோ அல்லது இலத்திரனியல் சாதனங்களையோ குறைத்து மதிப்பிடுவதோ, குறை காண்பதோ, பரிகாசம் செய்வதோ இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

வாசிப்பு எனும்போது பெரும்பாலும் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் சார்ந்த வாசிப்பே கருதப்படுகின்றது. மின்னல் வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் உலகில் அன்றாட நிகழ்வுகள் தொடக்கம் ஆழமான ஆய்வுகள் வரை பலவகையான தகவல்களை அறிந்துகொள்வதற்கும், அறிவை இற்றைப்படுத்திக்கொள்வதற்கும், நல்ல பண்புகளை வளர்த்து உன்னதமான மனிதனாக மாறுவதற்குத் தேவையான உற்சாகத்தையும் ஊக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் அளப்பரிய பங்களிப்பைச் செய்துவருகின்றன.

நல்ல நூல்கள் நம் கையிலிருந்தால் அவை எமக்கு அரவணைக்கும் தாயாக, தைரியமூட்டும் தந்தையாக, கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் நண்பனாக, சிறந்ததொரு வழிகாட்டியாக இருக்கும். எம்மில் மறைந்திருக்கும் ஆற்றல்களைக் கண்டுபிடிப்பதற்கும், தெளிவான சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் வாசிப்புப் பழக்கம் மிக முக்கியமானது. கலைகளைப் படிப்பதும் ஒரு கலைதான். அக்கலைகள் அனைத்தையும் ஒருங்கே'கொண்ட கலைதான் வாசிப்புக்கலை என்கிறார் எழுத்தாளர் சித்திக் செயின்.

வாசிப்புத்திறன் மிக்க ஒருவர் பேச்சுத் திறன்மிக்கவராகவும், ஞாபகசக்திமிக்கவ ராகவும், விடயங்ளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல்மிக்கவராகவும், பொது அறிவு மிக்கவராகவும் விளங்குவார் என்பது ஆய்வுகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. பிற்காலத்தில் அவன் அறிவாற்றல் மிக்கவராகவும், வாழ்வில் மேம்பட்டவராகவும் விளங்குவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. உலகமறிந்த சில உன்னத மனிதர்களின் வாழ்வில் நடந்த சில சம்பங்களைப் பார்ப்போமாக இருந்தால், வாசிப்புப் பழக்கமே அவர்கள் தங்கள் வாழ்வில் அவ்வாறான உன்னதமான நிலையை அடைந்து, உலக வரலாற்றின் சில பக்கங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள உந்துசக்தியாக இருந்தது என்பது தெளிவாகும்.

உலகின் வளர்ச்சியுற்ற சமூகங்கள் அனைத்தும் அறிவு என்ற அத்திவாரத்தின் மீதே எழுச்சி என்ற கட்டடத்தை எழுப்பியுள்ளன. இங்கே அறிவுக்கு அடிப்படையாக இருப்பது வாசிப்பாகும். வாசிப்பு குறையும்போது அறிவு குறைகிறது. அறிவு குறையும்போது அழிவு நெருங்குகிறது என்பதே அர்த்தம். புராதன காலத்திலும் கூட வாசிப்பு அறிவுத் தேடலின் அடிப்படை வழியாகவே இருந்துவந்துள்ளது. எகிப்திய ஃபார்வோன்கள் தங்கள் கடவுள் ஆசீர்வாதத்துடன் உருவாக்கிய முதல் நூல் நிலையத்தில் "இங்கே ஆத்மாக்களுக்குரிய உணவும் சிந்தனைக்கு விருந்தும் உண்டு" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்ததாக புராணங்கள் கூறுகின்றன. இந்தக் கூற்றே வாசிப்பின் முக்கியத்தின் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

"அறிவு உயர்த்தப்படுவதும், அறியாமை நிலை பெறுவதும் யுக முடிவின் அடையாளங் களில் ஒன்றாகும்" என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி). இதிலிருந்து இந்த உலகமும் அறிவிலேயே நிலைத்திருக்கின்றது என்ற உண்மையை விளங்க முடிகின்றது.

வாழ்வும் சாவும் தங்கியிருப்பதே வாசிப்பில்தான் என்பதுதான் மேற்குறித்த ஹதீஸ் சுட்டிக்காட்டும் அர்த்தமாகும். இந்த உலகில் மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமான சமூக மாற்றத்தை தோற்றுவித்த இஸ்லாம் தனது தூதை "வாசிப்பீராக" என்றே துவங்கியது. காரணம், சமூக மேம்பாட்டின் ஆணிவேர் வாசிப்பாகும். அந்தவகையில்தான் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றல் எனும் தேடலை மனித வாழ்வின் இலக்காகக் குறிப்பிட்டார்கள். கற்றலுக்கு அடிப்படை வாசிப்பு. வாசிப்பு எல்லா விடயங்களிலும் வெற்றிக்கு வழிகோலும். வாசிப்பு அறிவின் வேராக இருந்தாலும் சமூக யதார்த்தத்தைப் பார்க்கும்போது கவலை தரும் வெளிப்பாடுகளையே காண முடிகிறது.

**வாசிப்பின் அடிப்படையில் எமது மக்களை பல்வேறு வகையில் வகைப்படுத்தலாம்:**

***வாசிக்கத் தெரிந்தவர்கள். ஆனால், வாசிக்காதவர்கள்.***

வாசிப்பு முக்கியம் என்ற உணர்வு இருந்தும் சோம்பல் அல்லது நேரமின்மை காரணமாக வாசிக்காதவர்கள். உண்மையில் இவர்கள் பெரும் நட்டத்தில் இருப்பவர்கள்.

***வாசிக்கத் தெரிந்தவர்கள். ஆனால், வாசிப்பின் முக்கியத்துவம் தெரியாதவர்கள்.***

எமது சமூகத்தின் கணிசமான பகுதி இப்பிரிவைச் சார்ந்தவர்களே. வாசிப்பின் முக்கியத்துவம் உணராமலேயே பட்டப் படிப்பையும் முடித்துவிட்டு பலதரப்பட்ட தொழில்களிலும் அமர்ந்து விடுபவர்கள். அறியாமையில் தூங்கும் இப்பிரிவினரை தட்டியெழுப்புவது எமக்கிருக்கும் தார்மீகக் கடமையாகும்.

**வாசிக்கத் தெரிந்தவர்கள். வாசிப்பின் முக்கியத்துவமும் அறிந்தவர்கள்:**

மிகக் குறைந்தளவு தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இவர்களே. இவர்கள் உண்மையில் அருள் பாக்கியம் பெற்றவர்கள்.

***வாசிக்கத் தெரிந்தவர்கள். ஆனால் வாசிப்பதற்கான வளங்களோ வசதிகளோ அற்றவர்கள்:***

நூலகங்கள் கூட இவர்களின் அறிவுப் பசிக்குத் தீனி போடும் அமைப்பில் இல்லை என்பது கசப்பான உண்மை. எனவே, வளமான நூலகங்களை அமைத்துக்கொடுப்பதில் சமூக ஆர்வலர்கள் மிகுந்த கவனமெடுக்க வேண்டும்.

***வாசிக்கத் தெரியாதவர்கள். ஆனால், வாசிப்பின் முக்கியத்துவம் தெரிந்தவர்கள்:***

ஊர்களில் ஒருவர் வாசிக்க சுற்றியிருந்து கேட்கும் மக்கள் கூட்டம் எமக்கு உணர்த்துவது இதைத்தான். இயலாது என்று ஒன்றும் இல்ல. துணிந்தால் இவர்களும் நல்ல வாசகர்களாக மாறலாம். இப்படி பல்வேறு வகையானோர் இந்த உலகில் வாழ்கின்றனர்.

உலகமறிந்த சில உன்னத மனிதர்களின் வாழ்வில் நடந்த சில சம்பங்களைப் பார்ப்போமாக இருந்தால், வாசிப்புப் பழக்கமே அவர்கள் தங்கள் வாழ்வில் அவ்வாறான உன்னதமான நிலையை அடைந்து, உலக வரலாற்றின் சில பக்கங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள உந்துசக்தியாக இருந்ததென்பது தெளிவாகும். எமது அண்டைய நாடான இந்திய சுதந்திரத்துக்கு முக்கிய பங்காற்றிய மாவீரன் பகவத்சிங் தூக்கில் இடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பதாகக் கூடப் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தாராம் என்பது வரலாறு.

மகாத்மா காந்தியிடம் "உங்களுக்கு ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்கப்பட்டபோது "மிகச் சிறந்த நூலகம் ஒன்றை அமைப்பேன்" என்றாராம். "யாருமற்ற தனிமைத் தீவில் தள்ளிவிடப்பட்டால் என்ன செய்வீர்கள்?" என்று பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் கேட்கப்பட்டபோது "புத்தகங்களுடன் சந்தோசமாக வாழ்க்கை நடத்துவேன்" என்றாராம். நெல்சன் மண்டேலா சிறையில் அடைக்கப்பட்டிருந்த நாட்களில் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த ஓர் அரசியல் பிரமுகர், "உங்களுக்கு என்ன சலுகைகள் சிறைச்சாலையில் வேண்டும்?" என்று கேட்டபோது "புத்தகங்கள் படிப்பதற்கு அனுமதித்தால் போதும்" என்றாராம். "மகாத்மா காந்தியின் சத்திய சோதனையைப் படித்த பின்புதான் கறுப்பின விடுதலைக்காக போராடும் எண்ணமே எனக்கு உதித்தது" என்ற நெல்சன் மண்டேலாவின் கூற்றும் இங்கு கவனிக்கத்தக்க ஒன்றே. "மனிதனது கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எது?" என்று ஐன்ஸ்டீனிடம் கேட்கப்பட்ட பொழுது "புத்தகங்கள்தான்" என்றாராம். இப்படி வாசிப்பின் முக்கியத்துவத்தைக் கூறும் விடயங்கள் நீண்டுகொண்டே செல்லும். இப்பட்டியல்கள் தருகின்ற பாடங்களை உற்று நோக்கினால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தாம் பிறந்ததற்கான நன்றிக்கடனை தமது நாட்டுக்கோ, தமது இனத்துக்கோ அல்லது உலகத்துக்கோ அதியுச்ச அளவில் திருப்பிச் செலுத்தி இவ்வுலக வரலாற்றில் இடம்பிடித்தவர்கள். அவ்வாறானவர்கள் வாசிப்புத் தொடர்பாகக் கொண்டிருந்த சிந்தனைகள் வாசிப்பின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்தியம்புகிறது.

வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமடை கின்றான். ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது உலகின் ஒரு ஜன்னலைத் திறக்கிறோம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். புத்தகம் என்பது பையில் சுமந்து செல்லும் ஒரு பூந்தோட்டம் என்கிறது ஒரு சீனப் பழமொழி. புதிய புத்தகத்தை வாசிக்கும்போது புதிய நண்பன் ஒருவனைச் சந்திக்கின்றோம். அதை மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது நீண்டகால நண்பனைச் சந்திக்கின்றோம் என்கிறது மற்றுமொரு சீனப் பழமொழி. ஒரு புத்தகத்தை இரவல் தருபவன் முட்டாள். அதைத் திருப்பித் தருபவன் அதைவிடப் பெரிய முட்டாள் எனும் அரேபியப் பழமொழி போன்ற உலகப் பழமொழிகள் பலவும் வாசிப்பின் முக்கியத்துவத்தை சுட்டி நிற்பதை அவதானிக்க முடிகிறது. இவ்வாசிப்பின் முக்கியத்துவம் இலங்கை அரசாலும் உணரப்பட்டு, வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பரந்தளவில் எமது நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக முக்கியமான நிகழ்வுகள் ஒரு நாள் மாத்திரமே கொண்டாடப்படுவது வழமையானது. ஆனால், வாசிப்பின் முக்கியத்துவம் கருதி ஒக்டோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாக இலங்கையில் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது வாசிப்பின் முக்கியத்துவத்துக்கு சிறந்த சான்றாகும்.

ஒரு குழந்தை பேசக் கற்றுக்கொள்ளும் போதே வாசிக்கவும் பழக்குதல் வேண்டும். ஆரம்பத்தில் படங்கள் மட்டும் கொண்ட புத்தகங்களை வழங்குதல், பிள்ளை எழுத்துகளைத் தெரிந்துகொண்ட பின்னர் படங்களையும் பெயர்களையும் கொண்ட புத்தகங்களை அறிமுகம் செய்தல், சித்திரக் கதைப் புத்தகங்களை அறிமுகம் செய்தல், சிறிய புத்தகங்களை அறிமுகம் செய்தல் என்றவாறாக இச்செயன்முறை விருத்தி செய்யப்பட வேண்டும். இச்செயன்முறை மூலம் வாசிப்புப் பழக்கத்தை குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரம்பித்து, பின்னர் படிப்படியாக அதிகரிக்கச்செய்து, வாசிப்புப் பழக்கம் மிக்க சமுதாயமொன்றை உருவாக்கு வதன் மூலம் ஒரு சமுதாயத்தையே நல்வழிப் படுத்தலாம். வாசித்தல் குறைபாடுடைய மாணவன் அனேகமாக கற்றலில் பின்தங்கியிருப்பதைக் காணலாம். பிள்ளை வயதிலும், அறிவிலும் முதிர்ச்சியடையும்போது வாசித்தலின் முக்கியத்துவம் மேலும் உணரப்படும். அறிவைப் பெற்றுக்கொள்ளும் ஒரேயொரு வழி வாசித்தல் என்று கூறுமளவுக்கு உயர் கல்வியில் வாசிப்பின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

அறிவைப் பெற பாடநூல்கள், பத்திரிகைகள் இருந்தால் மட்டும் பயன் கிடைப்பதில்லை. அறிவைத்தேடி அணுகும் வாயிலாக வாசிப்பை நாம் பயிற்ற வேண்டும். தற்காலத்தில் அறிவை அடைந்துகொள்வதற்கான சாதனம் வாசிப்பு என்பதால் சிறுபராயத்திலிருந்தே வாசிப்புத் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கப் பொருத்தமான சூழ்நிலையை வகுப்பறையில் உண்டாக்குவது ஆசிரியருக்குரிய கடமையாகும். மாணவர்கள் விரும்பக்கூடிய முறையில் வாசிப்பை ஆரம்பித்து நீண்டகாலம் நிலைபெறக்கூடிய வாசிப்பில் ஆர்வத்தை அவர்களிடம் உண்டாக்குவது இன்றியமையாதது.



மாணவர்களின் முதிர்ச்சிக்கும் விருப்பத்துக்கும் உரிய முறையில் வாசித்தல் செயற்பாடொன்றை அமைத்துக்கொள்வது ஆசிரியர்களுக்குரிய செயலென்பது இதனால் தெளிவாகிறது. வகுப்பறையில் சிறந்த வாசிப்புச் சூழலொன்றை அமைப்பதால் குறைபாடுகள் நிரம்பிய சூழலில் வாசிக்கும் பிள்ளைக்கும் வாசிப்பில் ஆர்வத்தை உண்டாக்கலாம். வகுப்பறையில் உபயோகிக்கப்படும் படங்கள், வாசிப்புத் தாள்கள், மாதிரி உருவங்கள் ஆகியவற்றைக் கொண்டும் அவற்றை வைத்துத் தயாரிக்கப்படும் பல விளையாட்டுச் செயன்முறைகளாலும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை வளர்க்கலாம்.

உறவினர் வீடுகளுக்குச் செல்லும்போது பிஸ்கட் பெட்டிகளைக்கொண்டு செல்வதற்குப் பதிலாக புத்தகங்களைக் கொண்டுசெல்லும் பழக்கம் எம்மிடையே ஏற்படவேண்டும். பிறந்தநாள் பரிசாகவும் நினைவுப் பரிசாகவும் புத்தகங்களை வழங்குகின்ற ஒரு சமுதாயம் எம்மிடையே தலைதூக்க வேண்டும். அப்போதுதான் மனிதனின் அறிவுத் தேடல் நிறைவுசெய்யப்பட்டு, எமது சிறார்களும், இளைஞர், யுவதிகளும் தவறான வழியில் செல்வதிலிருந்து தடுத்துநிறுத்த முடியும். நல்ல நூல்கள் நம் கையிலிருந்தால் அவை எமக்கு அரவணைக்கும் தாயாக, தைரியமூட்டும் தந்தையாக, கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் நண்பனாக, சிறந்ததொரு வழிகாட்டியாக இருக்கும். எம்மில் மறைந்திருக்கும் ஆற்றல்களைக் கண்டுபிடிப்பதற்கும், தெளிவான சிறந்த அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் வாசிப்புப் பழக்கம் மிக முக்கியமானது. கலைகளைப் படிப்பதும் ஒரு கலைதான். அக்கலைகள் அனைத்தையும் ஒருங்கே கொண்ட கலைதான் வாசிப்புக் கலை. வாசிப்புக் கலைக்கு தினசரி பத்திரிகைகள் உச்சகட்ட பங்களிப்பைச் செய்கிறது. அந்த பத்திரிகைகளை தொழில்நுட்பத்தைக்கொண்டு அழிக்காமல் பாதுகாக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.



# 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்செய்யப்படாமைக்கு தமிழர் தரப்பும் காரணமே!



தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்

தமிழர்களுடைய அரசியல் பொதுவெளியில் தற்போது உள்நாட்டிலும் (இலங்கையிலும்) வெளிநாடுகளிலும் (புலம்பெயர் தேசங்களிலும்) இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல்செய்யவேண்டி ஓர் அருட்டுணர்வு ஏற்பட்டுள்ளதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகிறது. அந்த அருட்டுணர்வு விழிப்புணர்வாக வளர்ந்தும் வருகிறது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் உள்நாட்டில் பழைய மற்றும் புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அவ்வப்போது இதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் கூட அவை ஒப்புக்காகச் செய்யப்பட்டனவே தவிர, உண்மையான அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப் பட்டவையல்ல. அவை எல்லாமே சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகள்தான். பழைய மற்றும் புதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை பிரச்சினைக்கான தீர்வை அர்ப்பணிப்புடன் நாடு வதைவிட பிச்சைக்காரன் புண்போல் பிரச்சினையைத் தீர்க்காமல் வைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். இது அவர்களுடைய தேர்தல் அரசியலுக்கு எப்போதும் தேவையானதாகிவிட்டது.

இலங்கைத் தமிழர் தரப்பின் அரசியல் பலவீனங்கள் ஒருபுறமிருக்க, எந்த இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக 13ஆவது அரசியலமைப்புச் சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட்டதோ அந்த சமாதான ஒப்பந்தத்தின் கைச்சாத்திகளான இலங்கையும் இந்தியாவும் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு 36 வருடங்கள் கழிந்தும் 13ஆவது அரசியலமைப்புச் சட்டதிருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் ஏன் நிறைவேற்றி வைக்கவில்லை? என்ற கேள்வி எழுதல் தர்க்கரீதியாக நியாயமானதே.

இக்கேள்விக்கான பதிலையும் தர்க்கரீதியாக நோக்கலே தகும்.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் கைச்சாத்திட்ட இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தானாக மனம் விரும்பி அதனைச் செய்யவில்லை. 13ஆவது அரசியலமைப்புச் சட்டதிருத்தத்தைக் கூட அதன் நகலை முன்கூட்டியே இந்தியாவின் பார்வைக்கு முறையாகக் காட்டி அதிலுள்ள போதாமையையும் குறைபாடுகளையும் சீர்செய்வதற்குச் சந்தர்ப்பமும் கால அவகாசமும் வழங்குவதை வேண்டுமென்றே தவிர்த்துக்கொண்டுதான் அதனை அரசியல் குள்ளத்தனத்துடன் அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். தமிழர்களின் அரசியல் தரப்பாக அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் இது விடயத்தில் எச்சரிக்கையோடு நடந்துகொள்ளத் தவறிவிட்டது.

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் ஜே.ஆர். கையெழுத்திட்டதும், 13ஆவது அரசியலமைப்புச் சட்டதிருத்தத்தை நிறைவேற்றியதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்புக்காகவேனும் ஒத்துக்கொண்டதும் இந்தியா கொடுத்த அழுத்தத்தினாலேயாகும். அதனால் ஒப்பந்தத்தின் கீழான தனது அரசியல் கடமைப்பாட்டை முழுமனதோடல்லாமல் வேண்டா வெறுப்பாகவே நிறைவேற்றினார். ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு வருட காலத்துக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பின்போது தான் இணைப்புக்கு எதிராகவே பிரசாரம் செய்ய விருப்பதாகவும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகக் கூறியுமிருந்தார். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவரே ஒப்பந்த ஷரத்திற்கு எதிராகச் செயற்படப் போவதாகக் கூறியது ஒப்பந்தத்திற்கே முரணானதாகும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தவாறு வடக்கு, கிழக்கு நிரந்தர இணைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பு ஒரு வருட காலத்துக்குள் நடைபெற்றிருந்திருக்குமானால் அன்றிருந்த சூழ்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பின் பெறுபேறு தமிழர்களுக்குச் சாதகமாகவே அமைந்து ஒப்பந்த ஷரத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சட்டரீதியாக நிரந்தரமாக இணைக்கப்பட்டிருந்திருக்கும். இன்றுள்ளதுபோல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்படாமல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்ததோர் ஒற்றை அதிகாரப் பகிர்வு அலகாக - ஒரே மாகாணமாக இருந்திருக்கும். இப்படித் தானாக வரவிருந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளியது தமிழர் தரப்புத்தானே. (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தானே)

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவேளை (29.07.1987) அதனை எதிர்த்த பிரதமர் ஆர்.பிரேமதாச 1988இன் இறுதியில் ஜனாதிபதியாக வந்தவுடன் அவரோடு கைகோர்த்துக்கொண்ட தமிழர் தரப்பு (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்) இந்திய அமைதிகாக்கும் படையுடன் ஏற்கனவே 1987 ஒக்டோபரில் தாம் தொடுக்க ஆரம்பித்த யுத்தத்தைத் தீவிரப்படுத்தியதுடன், தேர்தல் மூலம் அமைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் (தற்காலிகமாக) இணைந்த அதிகாரப்பகிர்வு அலகுக் கட்டமைப்பைச் சீர்குலைக்கவும் செய்தது. அப்போது தமிழ் மக்களின் அரசியல் தலைமையை ஏற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்களை அரசியல் ரீதியாக ஆற்றுப்படுத்தவேண்டிய தனது சமூகப் பொறுப்பிலிருந்து விலகி, தனது தேர்தல் அரசியல் தேவைகளுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்திய எதிர்ப்புக் குறித்தும் தவறான அரசியல் மற்றும் இராணுவப் போக்குக் குறித்தும் மௌனம் சாதித்தது.

இந்த இடத்தில் தமிழர்களின் சிந்தனைக்குப் பின்வரும் தர்க்க ரீதியான வாதத்தை இப் பத்தி முன்வைக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முந்திய வருடம் சோல்பரி அரசியலமைப்பின் கீழான இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற 1947இலிருந்து இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பெற்ற 1987 வரை சுமார் நாற்பது ஆண்டு காலங்கள் இலங்கைத் தமிழர்களின் பொது எதிரியான பௌத்த சிங்களப் பேரினவாத அரசாங்கங்களுடன் பொறுமையாகப் பேச்சுவார்த் தையில் ஈடுபட்ட தமிழர் தரப்பு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழர்களுக்காகக் கைச்சாத்திட்ட இந்தியாவுக்குக் குறைந்தபட்சம் நான்கு வருடங்களாவது அவகாசம் வழங்கிப் பார்த்திருக்க வேண்டாமா? நாற்பது வருடங்கள் ஆக்கப் பொறுத்த தமிழர் தரப்புக்கு நான்கு ஆண்டுகள்தானும் ஆறப் பொறுக்க முடியவில்லை. 1987 ஜூலையில் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை வந்தது. 1987 ஒக்டோபரில் அதாவது ஆக நான்கே நான்கு மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிகாக்கும் படையின் மீது யுத்தம் தொடுத்தார்கள்.

இந்த நிலைமைதான் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை முறையாகவோ முழுமை யாகவோ அமுல் செய்ய அரசியல் விருப்பம் கொண்டிராத இலங்கை அரசாங்கங்களுக்கு அதன் அமுலாக்கலை அரை குறையாகச் செய்வதற்கும் இழுத்தடிப்பதற்கும் இன்றுவரை வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. இதுவே இலங்கை அரசாங்கங்கத் தரப்புகளின் விவகாரம்.

**இனி இந்தியத் தரப்பு விவகாரத்தை அடுத்த வாரப் பத்தியில் பார்க்கலாம்.**

---



# மூலிகைகளும் குழந்தைகளின் சுக வாழ்வும்

குழந்தைகளுக்கு நோய் ஏற்படும் போது பெற்றோர் மிகவும் வேதனைப்படுவதைக் காணலாம். குழந்தைகளின் போசணையிலும் உடல், உள வளர்ச்சியிலும் நோய் வராமல் தடுப்பதிலும் நோய் வந்த பின்னர் குணப்படுத்துவதிலும் நோய் எதிர்ப்புச் சக்தி மிகுந்த முலைப்பாலின் முக்கியத்துவத்தால் முலைப்பால் சேர்ந்த பல மருந்துகள் சித்த மருத்துவ குழந்தை மருத்துவத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்பட் டுள்ளன.

முலைப்பால் எண்ணெய், முலைப்பால் குளிகை, முலைப்பால் குழம்பு, முலைப்பால் நெய் போன்ற மருந்துகள் தமிழ் மருத்துவர்களால் கொடுக்கப்பட்டு வருகின்றன. முலைப்பால் பல்வேறு மருந்துகளுக்கு அனுபானமாகவும் வழங்கப்படுவதைக் காணலாம்.

சுவாத நோய் நிலையில் சன்னி நிலைக்கு சென்று மரணமடை+யும் நிலையில் கூட பெரிய கோரோசனை மாத்திரையை இஞ்சி, தேன், முலைப்பால் ஆகியவற்றில் உறைத்து மூன்று மணிக்கு ஒரு தடவை வழங்கும்+போது குழந்தை உயிர் தப்புவதைக் காணலாம்.

சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் கடும் சளி, சுரம், சுவாதம், இழுப்பு, முட்டு நிலைகளில் தக்காளிச்சாற்றுக் கோரோசனை மாத்திரை சிறப்பாக செயற்படுவதை அனுபவத்தின் மூலம் காணலாம். சித்த மருத்துவர்கள் சாதனா போதனா முறையில் நெறிமுறையில் முறைப்படி கற்றவற்றை செயன்முறையில் செய்து அனுபவம் பெறுவது அவசியம்.

செங்கிரந்தியுடல் சிவக்கு மிடறு கட்டுஞ்
செயலற்று சோருமன்றி யுதரமூதும்
துங்கமுற மலங்கட்டும் பாலுண்ணாது
தோன்று மைந்து தினங்கழியின்மை
சாரும் பங்கமுறு கருங்கிரந்தி கறுத்துக்
காட்டும் பகரும் வாய் வரண்டு
மிகக் குரலுங் கட்டும் பொங்கி மிக
வயிறூதி மலமுங் கட்டும்
பொல்லாத நோயிதெனப் புகன்றா
ரன்றே

(பரராசசேகரம் பாலரோகம் பாடல் 01)

செங்கிரந்தி ஏற்படும்போது உடல் சிவந்து காணப்படும், தொண்டை அடைத்துக்கொள்ளும். உடல் அசதியுடன் சோர்வடைந்து காணப்படும். வயிறு பொருமிக்கொள்ளும். மலம் போகாது. பால் குடிப்பதற்கு கஷ்டப்படும் இந்த நோயானது சீரான சிகிச்சையால் ஐந்து நாட்களில் குணமடையும். ஆனால், கருங்கிரந்தி உடலை கருமையாகப் புலப்படுத்தும். நாக்கு, உதடுகள் வறண்டு தொனி குறையும், மலமானது போகாது, குழந் +தைக்கு மிகத் துன்பத்தைக் கொடுக்கும் பொல்லாத நோயாகும். குழந்தை உயிர் வாழ்வது கடினம்.

"வேர்க்கொம்பு வசும்போடுள்ளி
விளம்பிய கடுக்காயிந்துப் பேர்க்களுஞ்
சீர் வேப்பங் கூரித மிள கசம தாகம்
சீர்க்கடு வுலுவ மல்லி திப்பலி
யிவைகளெல்லாம். கார்ப்பெரு மரிசி
கூட்டிக் கருக்கிநீர் குடிக்கப் போமே"

(பரராசசேகரம் பாலரோகம் பாடல் 87)

வேர்க்கொம்பு, வசம்பு, உள்ளி, கடுக்காய், இந்துப்பு, கருஞ்சீரகம், வேப்பங்கூர், மிளகு, ஓமம், கடுகு, உலுவா, மல்லி, திப்பிலி, பெருஞ்சீரகம் தக்க அளவாக கருக்கிய நீரைக் கொடுக்க மாந்தம் மாறும்.

பரராசசேகரம் பாலரோகத்தில் குறிப்பிடப்படும் மாந்தத்துக்கான சிகிச்சை சிறப்பாகச் செயற்படுவதை அனுபவத்தில் காணலாம். குழந்தை மருத்துவத்தில் கிரந்தி எண்ணெய், கொதியெண்ணெய், பெருங்கிரந்தி எண்ணெய், செவ்வரத்தம் பூ எண்ணெய், தாக்காளிச்சாற்றுக் கோரோசனை மாத்திரை, கஸ்தூரி மாத்திரை போன்றன வழங்கப்படுகின்றன.

கிரந்தி எண்ணெய், கொதியெண்ணெய், செவ்வரத்தம் பூ எண்ணெய், பெருங் கிரந்தி எண்ணெய் என்று பல பெயர்களில் குறிப்பிட்டு கூறப்படுவதற்குக் காரணம் கிடைக்கும் மூலிகைகளைக்கொண்டு அதற்கேற்ப செய்வதற்கும் பல்வேறு நோய் நிலைகளுக்கேற்ப கொடுப்பதற்கும் உதவும். மேலும் கொதி எண்ணெய் குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதங்கள் வரைக்கும் தடுப்பு முறையாக (Preventive) கொடுப்பதுடன், அதன்பின்னர் கிரந்தி எண்ணெய் நோய் நீக்கத்திற்கும் (Curative) கொடுக்க உதவும்.

மகாஏலாதி, இராச ஏலாதி, மிருதசஞ் சீவினி, வசந்த குசுமாகரம் போன்ற மருந்துகள் சிறுவர்களுக்கு ஏற்படும் அதீத சுரம், அதீத சளி, சன்னி போன்ற தீவிர நிலைகளில் அல்லது மரணத்தை நெருங்கும் நிலைகளில் உயிர் காக்கும் மருந்துகளாக பயன்படுத்துவதைக் காணலாம்.

யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவ மாணவர்களுக்கு, ஆங்கில மருத்துவ பட்டதாரிகளுக்கு உரிய பாடங்களையும் பாடப்புத்தகங்களையும் விரிவாகவும் ஆழமாகவும் காலங்காலமாக கற்பிக்கப்பட்டு வந்தமை வேதனைக்கு உரியது. இதனால் சித்த மருத்துவர்கள்



ஆங்கில மருத்துவர்கள்போல் தம்மை வேடதாரிகளாக மாற்றி ஆங்கில மருந்துகளை வழங்கி மக்களுக்கு யமனாக மாறிவிடுகின்றனர்.

சட்டரீதியாக சித்த மருத்துவர்கள் நோயாளிகளுக்கு ஆங்கில மருந்துகள் வழங்குவது குற்றச்செயலாகும். இதனைத் தடுப்பதற்கு தேசிய மாகாண சுகாதார சுதேச அமைச்சு நடவடிக்கை எடுப்பதோடு, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் ஆங்கில மருத்துவ பாடநெறிகள் கடந்த 40 ஆண்டுகால பயணத்தில் கற்பிக்கப்பட்டபோது துணைவேந்தர்கள், மருத்துவ பீட பேராசிரியர்கள் அதில் தலையிட்டு தடுத்துநிறுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு சித்த மருத்துவ மாணவர்களுக்கு ஆங்கில மருத்துவ பாடங்களை கற்பிப்பது தமிழ் இலக்கியம் கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கில இலக்கியம் கற்பிப்பது போன்றதாகும்.

தமிழரது அறிவுச் செல்வங்களை தமிழரே அழித்துக்கொண்டிருப்பது வேதனைக்குரியது. ஈழத்து சித்த மருத்துவ நூல்களிலுள்ள எல்லா மருந்துகளையும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு செய்முறையாக செய்து காண்பிப்பதுடன், வடமாகாண மருந்து உற்பத்தி நிலையத்தில் ஈழத்து சித்த மருந்துகள் முழுமையாக உற்பத்திசெய்து பயன்பாட்டுக்கு விடவேண்டும்.

அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல் லாந்தர் போன்றவர்களால் சைவத்தமிழ் பண்பாடு அழிக்கப்பட்ட போது, வாழை இலையில் உணவு உட்கொண்டுவிட்டு அவர்களுக்கு தெரியாமல் கூரையில் செருகும் பழக்கம் ஏற்பட்டது. அமெரிக்க மிஷனரிமார் கல்வி கற்பித்தல் என்ற வெளிப்படையான சிந்தனையுடன் உள்நோக்கமாக மதமாற்றம் நடைமுறைப்படுத்தல் என்பதைக் கொண்டவர்களாக காணப்பட்டனர்.

இன்றும் எத்தனையோ பெற் றோர்கள், ஆங்கில மோகத்தில் தமது பிள்ளைகளை அங்கு அனுப்பி அந்நிய பண் பாட்டு மத சூழ்நிலையில் சமய, கலாசார மடிவு நிலைக் குத் (Religious and Cultural schizophrenia) தள்ளப் படுகின்றனர். புலம்பெயர் தமிழரின் நிதியுதவியுடன் சைவப்பண்பாட்டுச் சூழலில் தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் அமைப்பதற்கு இதுவரை தமிழர்முயற்சி எடுக்காமல் இருப்பது எமது கலாசார விழுமியங்களை தமிழர்களே அழிப்பதற்கு உடந்தையாக இருப்பது வேதனைக்குரியது.

யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மூலிகை அறிவியல் வளர்ச்சிக்கும் (Advancement of Herbal Science), பிரபல்யப்படுத்துவதற்கும் (To popularise Herbal Medicine) உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A . m c . b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
தெல்லிப்பழை.

ரமணி

# சர்வாதிகாரிபோல் செயற்படும் தமிழக ஆளுநர் ரவி

இந்திய மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இணைப்புப் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர்கள் சில மாநிலங்களில் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். பாரதீய ஜனதா அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் மாநிலங்களிலுள்ள ஆளுநர்கள் சர்வாதிகாரிபோல் நடந்துகொள்கிறார்கள்.

மாநில அரசுக்கு வழிகாட்டி நல்ல ஆட்சியைக் கொண்டுசெல்ல உதவ வேண்டிய ஆளுநர்கள், முட்டுக்கட்டைப் போட்டு ஆட்சியைக் குழப்புவதில் குறியாக இருக்கிறார்கள். தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்டதும் குடைச்சல் கொடுப்பதற்காகவே ஆர்.என்.ரவி ஆளுநராக நியமிக்கப்பட்டார். தமிழக அரசுக்கு எதிராக அவர் முன்னெடுத்த முட்டுக்கட்டைகள் எல்லாவற்றையும் முதலமைசர் ஸ்டாலின் சட்டப்படி தகர்த்தார்.

தமிழ்நாடு என்பதை மாற்றி தமிழகம் எனச் சொல்ல வேண்டும், சட்டசபை உரையில் உள்ளதைப் படிக்காமல் தான் விரும்பியதை வாசித்தது போன்றவற்றால் மூக்குடைப்பட்டார். ஆனாலும் சட்டத்துக்குப் புறம்பாக காரியங்களை மேற்கொண்டு வருகிறார்.

செந்தில் பாலாஜிக்கும் அண்ணாமலைக்கும் இடையிலுள்ள அரசியல் போட்டியில் அண்ணாமலைக்கு ஆதரவாக ஆளுநர் ரவி செயற்படுகிறார். செந்தில் பாலாஜியை முடக்க வேண்டும் என்பதே டில்லி பாரதீய ஜனதா தலைவர்களின் அஜந்தா. அதற்கு ஆளுநர் ரவியும் தன் பங்குக்குத் தூபமிடுகிறார்.

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் செந்தில் பாலாஜி கைதுசெய்யப்பட்டுள்ளார். இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் அமைச்சர் பதவியிலிருந்து அவரை விலக்கி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். ஆளுநர் ரவி அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இணைக்க முடியாது எனப் பதிலளித்தார்.

ஆளுநரின் அறிவித்தலை புறந்தள்ளிய முதல்வர் ஸ்டாலின், அரசாணை வெளியிட்டு செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் என அறிவித்தார். ஸ்டாலினின் அரசாணை ஆளுநர் ரவியின் கௌரவத்தைச் சீண்டியது. ஆளுநர் என்பவரின் கடமைகள் அரசியல் சட்டத்தில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது. அதை மீறி ஆளுநர் செய்யும் சில நடவடிக்கைகள் அடாவடித்தனமாக இருக்கின்றன.

வியாழக்கிழமை சுமார் 7 மணியளவில் செந்தில் பாலாஜியை அமைச்சரவையிலிருந்து நீக்குவதாக ஆளுநர் ரவி அறிவிப்பை ஒன்றை வெளியிட்டார். இது அரசியல் களத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. முதல்வர் ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சியினர் தரப்பிலிருந்து கடும் கண்டனம் எழுந்தது. குறிப்பாக, சட்டரீதியான



விமர்சனங்கள் இதற்குக் குவிந்தன.

ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறதா என்ற வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. ஆளுநருக்கு ஆதரவானவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிரானவர்களும் வரிந்து கட்டிக்கொண்டு வாதம் செய்தனர். இந்தியாவில் இதற்கு முன்னர் இப்படி நடந்ததா எனக் கேட்டதற்கு, இல்லை என்ற பதில் வந்தது. ஆளுநரின் வரம்பு எது என உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்த பின்னரும் ஆளுநர் தம் இஷ்டத்துக்கு நடவடிக்கை எடுக்கிறார்.

இரவு 7 மணிமுதல் விவாதங்களும் விமர்சனங்களும் நாலாபக்கமும் எழுந்த நிலையில், செந்தில் பாலாஜியை நீக்கிய உத்தரவை நள்ளிரவில் ஆளுநர் ரவி நிறுத்திவைத்துள்ளார். செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிய உத்தரவை ஆளுநர் நிறுத்தி வைத்திருப்பதாகவும் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞருடன் கருத்து கேட்க முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி உத்தரவிட்டதை நிறுத்திவைத்துள்ளதாக முதல்வர் ஸ்டாலினிடம் ஆளுநர் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி ஆளுநர் உத்தரவிட்டுள்ளமை சரியான சட்ட அணுகுமுறை இல்லை என்ற வாதத்தையும் நிபுணர்கள் முன்வைத்து வருகிறார்கள். "செந்தில் பாலாஜி விவகாரத்தில் இப்படி தன்னிச்சையாக செயற்பட ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அமைச்சரவையில் ஏதாவது புதிதாக மாற்றம் செய்யவேண்டும் என்றாலோ அல்லது ஓர் அமைச்சரை நீக்க வேண்டும் என்றாலோ அல்லது புதிதாக ஒருவரை அமைச்சராக்க வேண்டும் என்றாலோ இதற்கெல்லாம் அமைச்சரவையின் தலைவராக உள்ள முதல்வருக்கு மட்டுமே அதிகாரம் இருக்கிறது. இதுதொடர்பாக முதல்வர் எடுக்கும் முடிவுகளுக்குத்தான் ஆளுநர் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமே தவிர, அவரது இஷ்டம்போல் யாரையும் புதிதாக அமைச்சரவையில் சேர்க்கவோ அமைச்சரவையிலிருந்து நீக்கவோ அரசியலமைப்பு சட்ட ரீதியாக ஆளுநருக்கு



அதிகாரம் வழங்கப்படவில்லை. செந்தில் பாலாஜி நீக்கத்தில் அவர் சட்டத்துக்குப் புறம்பாக ரம்பு மீறி செயல்பட்டுள்ளார். ஆளுநரின் இந்த உத்தரவு முதல்வரையோ தமிழக அரசையோ எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்று திமுகவின் மூத்த வழக்கறிஞர் விஜயன் உள்ளிட்டோர் வாதிட்டனர்.

அமைச்சர் கே.என்.பாலகோபல் தனது பதவியில் தொடரக்கூடாது என்று ஆளுநர் ஆரிப் முகமது கான் தன்னுடைய இசைவின்மையை தெரிவித்திருந்தார். ஆனாலும் ஆரிப் முகமது கான் பதவி நீக்கம் என்ற நிலைக்கு செல்லவில்லை. ஆனால், ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சரை நீக்கி நடவடிக்கை எடுத்துள்ளார்.

"முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் வீட்டில் சோதனை நடைபெற்றபோது சில ஆவணங்களைத் தூக்கி வெளியே எறிந்தார்கள். அன்றைக்கு ஆளுநர் என்ன செய்துகொண்டு இருந்தார்? ஆவணத்தை வெளியே வீசுவதும் அப்படி வீசும்போது ஒருவர் எடுத்துக்கொண்டு ஓடும் வீடியோவும் வைரலானதே? அதையே சாட்சியமாக வைத்து அப்போது விஜயபாஸ்கரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்தானே? ஆனால், நடவடிக்கை எடுக்கவில்லை என சிலர் நினைவூட்டுகின்றனர்.

தமிழ்நாடு அமைச்சர்கள் விவகாரத்தில் தேவை இல்லாமல் தலையிட்டு அதே முடிவை உடனேயே மாற்றிக்கொண்ட ஆளுநரின் செயல்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றன. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் முந்தைய உத்தரவுகள் அனைத்துமே தெளிவாக அமைச்சர்கள் விவகாரம் என்பது ஒரு மாநில முதல்வருகான அதிகார வரம்புக்குட்பட்டது. அதில் மாநில ஆளுநர் தலையிடவே கூடாது எனக் கூறி இருக்கின்றன. அதனையும் மீறி ஆளுநர் ஆர்.என்.ரவி இப்படி செய்திருப்பதற்கு கடுமையாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

மத்தியில் தற்போது ஆளும் பாஜக அரசில் 3 ஆண்டுகள் அட்டர்னி ஜெனரலாக பதவி வகித்த முகுல் ரோத்தகி, ஆளுநர் தமக்கான வரம்பை அப்பட்டமாக மீறி இருக்கிறார். அமைச்சர் ஒருவரை தன்னிச்சையாக



ஆளுநரால் பதவிநீக்கம் செய்யவே முடியாது. முதல்வர் மற்றும் அமைச்சரவையின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டுத்தான் ஆளுநர் செயல்படவே முடியும். தற்போதைய விவகாரத்தில் ஆளுநர் அப்பட்டமாக அதிகார வரம்பை மீறியுள்ளார் என சாடியுள்ளார்.

இந்நிலையில், சரியாக 5 மணிநேரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி தனது முடிவை மாற்றினார். அதாவது செந்தில் பாலாஜியை நீக்கியது செல்லாது என்று அறிவித்தார். அத்தோடு இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சுதான் எனக்கு அறிவுறுத்தியது. அவர்களின் அறிவுரை காரணமாக எனது அறிவிப்பை நிறுத்திவைக்கிறேன். அதோடு இது தொடர்பாக மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்துவிட்டு முடிவு எடுக்கிறேன் என்றும் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார். ஆலோசிக்கவில்லை.

நேற்று நடந்த இந்தச் சம்பவங்கள் மூலம் ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் அதாவது அட்டர்னி ஜெனரலிடம் ஆலோசனை செய்யவில்லை என்பது தெளிவாகிறது. அவரிடம் பேசாமலே ஆளுநர் ஆர்.என்.ரவி முடிவெடுத்துவிட்டார் என்பது தெளிவாகிறது. பொதுவாக இது போன்ற பெரிய விடயங்களில் முடிவெடுக்க ஆளுநர் ரவி தலைமை செயலாளரிடம் ஆலோசனை செய்யவேண்டும் அல்லது மத்திய உள்துறை அமைச்சிடம் ஆலோசனை செய்யவேண்டும். அது இரண்டையும் ஆளுநர் செய்யவில்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறது. அமைச்சர் ஒருவரை நீக்கும் அதிகாரம் இல்லாமலே ஆளுநர் ஆர்.என்ரவி செந்தில் பாலாஜியை நீக்குவதாக அறிவித்தார்.

இதனால் அவருக்கு இந்த ஆலோசனையை வழங்கியது யார் என்ற விவாதம்தான் தற்போது எழுந்துள்ளது. ஏற்கனவே பல வழக்குகளில்.. ஆளுநர்களுக்கு எதிராக உயர், உச்ச நீதிமன்றம் இதில் கண்டிப்பான கருத்தை கூறியுள்ளது. அமைச்சரவையை தன்னிச்சையாக மாற்றும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லவே இல்லை என்று அறிவித்துள்ளது. முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிப்பார் என்றும் பதவிநீக்கம் செய்யும் அதிகாரத்தைப் பற்றி பேசக்கூடாது என்றும் பிரிவு 164 கூறுகிறது. அதை ஆளுநர் மீற முடியாது. இதனால் சட்டம் தெரியாமலே அவருக்கு யாரவது இந்த ஆலோசனையை வழங்கினார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

செந்தில் பாலாஜிக்கும் அண்ணாமலைக்கும் இடையிலான அரசியல் போட்டி தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான போட்டியாக மாற்றமடைந்துள்ளது. அண்ணாமலை சொல்வதை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி செய்ய முயற்சித்து அவமானப் படுகிறார்.

---

## வெடிமணியம்

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*வடக்கில் அவருக்கு என்ன வேலை ? எண்ட நியாயமான கேள்வி எங்களுக்கு வருவதில் பிழையில்லைத்தானே!*

*இந்த லட்சணத்தில் மைத்ரியை சந்தித்த சிவசேனை எண்ட அமைப்பு "தேள்வையில்லாத கருத்தை" அவரோடு பேசியிருப்பதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.*

*"இந்தியாவில் பாபர் மசூதிக்கு நடந்த நிலமை தையிட்டி விகாரைக்கு நடக்கும்" எண்டு பேக்கதை பறைஞ்சிருக்கினம்.*

*ஏற்கனவே இந்த பத்திகளில் பலமுறை இதுபற்றி பேசியிருக்கிறம்.*

*ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட விகாரையை இடிக்கச்சொல்வதும் அதை அகற்றச்சொல்லி போராடுவதும் தெற்கில் "எதிர்மறை விளைவை" ஏற்படுத்தும் எண்டு இடிச்சு சொல்லியும் கேக்காத ஆக்களை என்ன வார்த்தைகளால் திட்டுவது எண்டு தெரியவில்லை.*

*தெற்கில் உள்ள பௌத்த இனவாதிகளையும் சிங்கள மக்களையும் தமிழ்மக்களுக்கு எதிராக "கொம்பு சீவிவிடும்" இந்த இழிசெயலை யார் செய்தாலும் கண்டிச்சே ஆகவேணும்.*

*தையிட்டி விகாரை விவகாரம் நீதிமன்றத்தின் ஊடாகத்தான் அணுகப்படவேண்டும் எண்ட நிலை வந்த பிறகு அதுபற்றி "பெத்தனமாக கருத்துகளை" பொதுவெளியில் பகிரக்கூடாது.*

*"தையிட்டி விகாரையை இடிப்பம் அல்லது கொளுத்துவம்" எண்டமாதிரியான சிவசேனை அமைப்பின் கருத்து வன்மையாக கண்டிக்கத்தக்கது.*

*அது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பொதுக் கருத்தல்ல. இதை தெளிவாக பாராளுமன்றத்தில் தமிழ்த்தரப்புகள் எடுத்துரைக்கவேணும்.*

*வீணான மத ரீதியான வன்மத்தையும் சர்ச்சைகளையும் கிளப்பிவிடும் மத அமைப்புகளின் எழுந்தமான நடவடிக்கைகளை சனம்தான் கட்டுப்படுத்தவேணும்.*

*அல்லது மீண்டும் ஒரு மத ரீதியான வன்முறைக் கலாசாரத்தை தூண்டிவிட்ட பழி எங்களுக்கு வந்துசேரும்.*

*சிவசேனை அமைப்பு கூவுவதுபோல ஒருபோதும் இந்திய இந்துமத அமைப்புகள் ஈழத்தமிழர்களுக்காய் குரல் கொடுக்கவில்லை.*

*எத்தனையோ ஆலயங்கள் அழிக்கப்பட்டபோது அவை பொத்திக்கொண்டுதான் இருந்தவை.*

*இப்ப என்ன கோதாரிக்கு திடீரெண்டு பாசம் கொண்டு கிளம்பி வருகினம் எண்டு தெரியவில்லை.*

*முதலிலே ஈழத்தில் உள்ள அழிந்த இந்து ஆலயங்களின் மீள் கட்டமைப்புக்கு சிவசேனை சொல்லுகின்ற இந்திய இந்து அமைப்புகள் உதவி செய்யட்டும். அதுக்குப் பிறகு அவைக்கு கதைக்கிறதுக்கு உரிமை உண்டு.*

*அதைவிட்டுப்போட்டு "விகாரையை இடிப்பம், கொளுத்துவம்" எண்ட பேக்கதைகள் கதைக்கப்படாது.*

*தையிட்டி விகாரை விவகாரம் இனிமேல் நீதிமன்றத்தின் ஊடாகத்தான் அணுகப்படவேண்டும். அது எமக்கொரு பாடம்.*

*ஆனால், இனிமேல் ஒரு விகாரை அடாத்தாக அல்லது சட்டவிரோதமாக அமைக்க முயலும் போது அதை ஆரம்பத்திலேயே எதிர்க்கவேண்டியது அவசியம். அதைச் செய்வதில் தப்பில்லை.*

*அதைவிட்டுப்போட்டு கட்டி முடிஞ்ச விகாரையில் கைவைப்பம் எண்டது விசர்க்கதை.*

*அது ஒரு பக்கம் இருக்க;*

*இஞ்சால வெளிநாடு போன ரணில் மாத்தையா புலம்பெயர்ந்த தமிழ் மக்களை ஏதோ "பேக்கொத்துகள்" மாதிரி நினைப்பது கண்டனத்துக்குரிய செயல்.*

*கேள்வியை ஆங்கிலத்தில் கேட்டால் அதுக்கு பதிலை ஆங்கிலத்தில் அவர் சொல்லலாம் தானே!*

*அதென்ன ஒரு "நக்கல்"?*

*கேள்வியை கேட்டவர் சரியாகத்தான் கேட்டார். பிறகென்ன அதுக்கொரு விண்ணாணம்.*

*"தமிழில கேள்வியை கேளுங்கோ. சிறிலங்காவுக்கு வாங்கோ கதைப்பம்" எண்ட ரணிலின் நக்கல்களை பார்க்கும்போது எரிச்சலாக இருக்கிறது.*

*"புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தமிழர்களையும் சிறிலங்காவுக்கு வாங்கோ. முதலீடுகளை செய்யுங்கோ" எண்டு ஒருக்கால் கெஞ்சுறது.*

*இப்ப IMF கடன் கிடைச்சதும் புலம்பெயர் தமிழர்களை நக்கலடிக்கிறது.*

*உந்த நரிவேலையாலதான் ரணிலை புலம்பெயர் மக்கள் யாரும் இன்னமும் நம்ப தயாரில்லாமல் இருக்கினம்.*

*உந்த சீத்துவக்கேட்டில் ரணில் தமிழர்களுக்கு நல்ல ஒரு அரசியல் தீர்வை தருவார் எண்டு கொஞ்சப்பேர் கூவித் திரியினம்.*

*தமிழ்மக்கள் மீதான "வன்மத்தை" ரணில் அப்பப்ப கக்கிக்கொண்டுதான் இருக்கிறார்.*

*இதுவரைக்கும் ரணில் எந்த ஒரு நம்பிக்கை தரும் நல்லெண்ணத்தையும் தமிழ்மக்களுக்கு காட்டவில்லை என்பதுதான் கடந்தகால, நிகழ்கால வரலாறு.*

*ஆக;*

*மீண்டும் மீண்டும் ரணிலை நம்பி தமிழ்த்தரப்பு பேச்சுகளை முன்னெடுப்பதில் அஞ்சு சதத்து பிரயோசனமும் இல்லை.*

*இந்த லட்சணத்தில் "தமிழ்க்கட்சிகள் எல்லாரும் ஒண்டாக பேச்சுக்கு வரவேணும்" எண்டு ரணில் அழைப்பு விடுத்திருப்பதை என்னண்டு பாக்குறது எண்டு தெரியவில்லை.*

*தமிழ்த்தரப்பில் உள்ள பிச்சல் புடுங்கல்களை நக்கல் அடிக்கிறாரா?*

*அல்லது;*

*சர்வதேச நாடுகளுக்கு தான் ஒரு சமாதான விரும்பி, நல்லெண்ண நாயகன் எண்டு தன்னை படம் காட்ட முனைகிறாரா?*

*எது என்னவோ...*

*இன்னும் கொஞ்ச நாட்களில் ரணிலின் "கயிறு திரிக்கும்" கபடத்தனமான எண்ணங்களும் நடவடிக்கைகளும் முடிவுக்கு வரத்தான் போகிறது.*

*உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பின் பின்னர் சிறிலங்காவில் ஏற்படப்போகும் பொருளாதார மாற்றம் பல அரசியல் மாற்றங்களை உருவாக்கும்.*

*அப்போது மீண்டும் ஒரு "பிரளயம்" ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.*

*ஆகவே, தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த நாட்டில் நிகழும் ஒருசில "மாற்றங்களை" வெளியில் இருந்து மட்டும் அவதானித்துக்கொண்டிருப்பதே எங்களுக்கு நல்லது.*

*தேள்வையில்லாமல் தெற்கில் நிகழும் ஒரு சில அரசியல் மாற்றங்களுக்குள் எங்கட "தலைகளை" வலியப்போய் ஓட்டாமல் கவனமாக இருக்க வேணும்.*

*ஏலுமெண்டால் இதை ஒருக்கால் சம்பந்தன் ஐயாவிடம் சொல்லிவிடவும்.*

*ஏனெண்டால் அவர்தான் அடிக்கடி உந்த தேள்வையில்லாத விவகாரங்களுக்குள் "தலையை" வலியப்போய் ஓட்டுறவர்.*

*இனியும் ஒருமுறை ரணில் தமிழ்த்தரப்பை பேச அழைத்தால் மிகத்தெளிவாக "நிபந்தனைகளை" வைச்சு பேசவேணும்.*

*"நிபந்தனைகளை நிறைவேற்ற ரணில் பின்னடிச்சால்" அப்படியான பேச்சு+களில் கலந்துகொள்ளாமல் இருப்பதே தமிழ்மக்களுக்கு செய்யும் கோடி புண்ணியம்.*

# அலியான்ஸ் லங்கா மற்றும் அதன் தலைசிறந்த தலைவர்களுக்கு 5ஆவது ஆண்டாக Great Managers Awards 2022 நிகழ்வில் அங்கீகாரம்

பெருமதிப்புமிக்க Colombo Leadership Academy (CLA) அண்மையில் ஏற்பாடு செய்திருந்த 2022ஆம் ஆண்டுக்கான Great Managers Awards எனப்படும் சிறந்த முகாமையாளர்கள் விருதுகளில் அலியான்ஸ் லங்கா மிகச் சிறந்த அங்கீகாரத்தைச் சம்பாதித்திருந்தது.

வணிகரீதியான பெறுபேறுகளை அடைவதிலும், நிறுவன இலக்கைச் சீரமைப்பதிலும், அணியின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், ஒத்துழைப்பை ஊக்குவிப்பதிலும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய அணித் தலைவர்களைக் கொண்டாடவும், அங்கீகரிப்பதற்காகவும் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. BMICHஇல் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அலியான்ஸ் லங்காவின் அணியில் ஒன்பது அங்கத்தவர்கள் "Driving Results and Execution Excellence", "Aligning Organizational Vision", மற்றும் "Team Effectiveness and Collaboration" போன்ற பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வென்றவர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

மேலும், அலியான்ஸ் லங்கா Great Managers for 2022க்கான சிறந்த முகாமையாளர்களைக்கொண்ட ஒரு நிறுவனம் என்ற அங்கீகாரத்தையும் பெற்றது. இது நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தொடர்ச்சி யாக ஐந்தாவது ஆண்டாகவும் இந்த மதிப்புமிக்க பாராட்டு அங்கீகாரமாகும். இந்தச் சாதனையானது, வெற்றி மற்றும் மேன்மைப் பண்புகள்கொண்ட தலைசிறந்த தலைவர்களை வளர்ப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் அலியான்ஸ் லங்கா கொண்டுள்ள ஓயாத





அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் அலியான்ஸ் லங்காவின் மொத்தம் 28 அணி உறுப்பினர்கள் Great Managers Award விருது அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளதுடன், அதில் 25% பெண் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தனிப்பட்ட முறையில் அங்கீகாரத்தை சம்பாதித்த முகாமையாளர்களுக்கு தனது மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவித்து, அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், இலங்கைக்கான முகாமையாளருமான அலன் ஸ்மி மற்றும் அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜெயலால் ஹேவாவசம் ஆகியோர் இணைந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது தலைசிறந்த அணி உறுப்பினர்களுக்கு அவர்களின் சிறந்த சாதனைகளுக்காக வாழ்த்துகளை நாம் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதுடன், நிறுவனத்துக்குள் தலைசிறந்து விளங்குவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் திடசங்கற்பத்துக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். 2018 முதல் ஒவ்வொரு ஆண்டும் Great Mangersகளைக்கொண்ட ஒரு தொழில்தருநராக அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எனவே, மேன்மையில் சிறந்து விளங்கும் இந்த பாரம்பரியத்தைத் தொடர்வதில் நாங்கள் மட்டற்ற அளவில் பெருமிதம் கொள்கிறோம், மேலும், எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் பல சிறந்த தலைவர்களை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஆவலாக உள்ளோம்" என்று குறிப்பிட்டனர்.

Great Managers Awards 2022 விருதுகள் நிகழ்வில் அங்கீகரிக்கப்பட்டவர்களில், சனத் வீரசிங்க - Driving Results and Execution Excellence, நிரோஷன ரணவீர, மிஹிரி லியனகே, மனோஜா அபேகுணவர்தன, பிரபோத சூலசிறி, கிஹான் அபேவர்தன, சுரன் டி சில்வா மற்றும் தாரா சேனாநாயக்க - Aligning Organizational Vision மற்றும் கயானி தரங்கிகா - Team Effectiveness & Collaboration ஆகியோர் அடங்கியிருந்தனர்.

அலியான்ஸ் லங்காவின் பிரதம மனித வள அதிகாரியான இஷானி சேனவீர மேலும் தெரிவிக்கையில்,

"அலியான்ஸில், நாங்கள் எமது பணியாளர்கள் மீது முதலீடு செய்வதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். சரியான ஆதரவுடன், எங்கள் பணியாளர்களால் பிரகாசிக்க முடியும். அவர்களின் திறனை முழுமையாக வெளிக்கொண்டுவர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அதனால்தான், சமீபத்திய தொழில்துறை போக்குகள் மற்றும் முன்னோக்குகளுக்கேற்ப எங்கள் பணியாளர்களுக்கு பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் அறிவு வளர்ச்சி ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளித்துள்ளோம். எங்களின் புதிய நவீன தலைமை அலுவலகம் மற்றும் எங்களின் நெகிழ்வான பணி ஏற்பாடுகள் போன்ற சிறந்த பணிச்சூழல் மற்றும் நிலைமைகளை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதில் அதிக முதலீடு செய்துள்ளோம். எனவே, எங்கள் முயற்சிகள் எங்கள் பணியாளர்கள் சிறந்த முறையில் செயல்படவும், தொழில்துறை அளவிலான அங்கீகாரத்தைப் பெறவும் உதவுவதைக் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்று குறிப்பிட்டார்.

அலியான்ஸ் லங்கா என பொதுவாக அழைக்கப்படுகின்ற அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் மற்றும் அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் ஆகியன ஜேர்மனியின் மூனிச் மாநகரைத் தலைமையிடமாகக்கொண்ட காப்புறுதி மற்றும் சொத்து முகாமைத்துவ வணிகத்தில் முதன்மையான சேவைகளைக் கொண்ட உலகளாவிய நிதியியல் சேவை வழங்குநரான Allianz SE இன் முழுமையான உரிமையாண்மையின் கீழான துணை நிறுவனங்களாகும்.

அலியான்ஸ் குழுமத்தின் உலகளாவிய பலம் மற்றும் வலுவான மூலதனமயமாக்கல், உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் வணிக அறிவு ஆகியவற்றுடன் இணைந்து, அலியான்ஸ் லங்காவின் வெற்றிக்கான சக்திவாய்ந்த சூத்திரமாக உள்ளன.

# FRIENDS Adult Diapers முதியவர்களின் சௌகரியத்தை மேம்படுத்த நிதி நன்கொடை வழங்கவுள்ளது

Darley Butler & Company நிறுவனத்தினால் இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் FRIENDS Adult Diapers, முதியோர்களின் வசதியை மேம்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில் சமூகத்தில் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட பிரிவினருக்குப் பயனளிக்கும் வகையில் இந்நிறுவனத்தின் நிறுவன சமூகப் பொறுப்பு திட்டங்களின் சமீபத்திய முன்முயற்சியின் அடிப்படையில் ரசிக ஹிரிமுத்துகொட (CEO – Healthcare), G. உதயமோகன் (தலைவர் - வணிக மேம்படுத்தல்) குஷான் புத்திக (வர்த்தக சந்தைப்படுத்தல் நிர்வாகி) திருமதி ஜினு தோமஸ் (உதவி பொது முகாமையாளர் - Nobel Hygiene, இந்தியா) ஆகியோர் முன்னிலையில் 2023 மார்ச் 16 அன்று HelpAge Sri Lankaவுக்கு இரண்டு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை நிதி உதவியாக வழங்கியது. இந்தத் தொகை சமந்த லியனவடுகே (நிர்வாக இயக்குனர்) மற்றும் சமிந்த டி சில்வா (திட்டத் தலைவர்) ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.




மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களை வழங்குவதை எளிதாக்குவதற்கும் கிராமப்புறங்களில் விசேட கவனம் செலுத்தி அப்பிரதேசங்களில் இயங்கும் நடமாடும் மருத்துவ முகாம்களுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டது. மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக FRIENDS Adult Diapers இன் 5ஆவது CSR முயற்சி இதுவாகும்.

முதியவர்கள் மீது Darley Butler நிறுவனம் கொண்டுள்ள பெருநிறுவன அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில் விற்கப்படும் ஒவ்வொரு FRIENDS Adult Diapers பொதியிலிருந்தும் பெறப்படும் பணத்திலிருந்து ஒரு பகுதி HelpAge Sri Lankaவுக்கு நிதிப் பங்களிப்பாக வழங்கப்படும். இதன்மூலம் FRIENDS வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு கொள்வனவும் மூத்த குடிமக்களின் நல்வாழ்வுக்கு உதவுகின்றது. இதனால் அவர்கள் சிறந்த வாழ்க்கையை நடத்த உதவுகிறது. FRIENDS Adult Diapers, பெயருக்கேற்றவாறே வாழ்க்கையில் கூடுதலான ஆதரவு தேவைப்படும் முதியவர்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் வழங்குவதனால் அவர்களது உற்ற நண்பனாக இருக்கின்றது.

FRIENDS Adult Diapers முதியவர்கள் பெருமிதத்துடன் வாழ உதவுவதோடு அவர்களுக்குத் தேவையான கவனத்தை அளிப்பதன் மூலம் அவர்கள் சுயமதிப்புடன் இருக்கவும் உதவுகின்றது.

FRIENDS Adult Diapers இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால்அவற்றின் அளவுகள் மற்றும் வடிவமைப்புகள் இலங்கையர்களின் உடல் வடிவமைப்புகளுக்கும் பொருத்தமாக இருப்பதோடு பாவனையாளர்களுக்கு சௌகரியமாகவும் இருக்கும். FRIENDS Adult Diapers, முதியவர்களது டயப்பர்களுக்கான இந்தியாவின் முதற்தர வர்த்தகநாமமாகும். இது முதியவர்களுக்கு பக்டீரியாக்களுக்கு எதிரான பாதுகாப்பு, அதிக உறிஞ்சுதல் தன்மை (absorption), ஈரத்தன்மை காட்டி(wetness indicator), கசிவு பாதுகாப்பு (leak guard) மற்றும் எட்டு மணிநேர பாதுகாப்பு (8hr protection) போன்ற பல அம்சங்களைக்கொண்டுள்ளது. முன்னிலைச் சுரப்பி (Prostate) கோளாறுகள், மூலவியாதி, சிறுநீர் அடக்கமுடியாமை, சிறுநீரக பிரச்சினைகள் மற்றும் நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த வயது முதிர்ந்தவர்களுக்கான டயப்பர் பரிந்துரைக்கப்படுகின்றன. மேலும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள், படுத்த படுக்கையாக இருப்பவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு இது பரிந்துரை செய்யப்படுகின்றது.

குறிப்பாக, FRIENDS Adult Diapers ஐப் பயன்படுத்திய பல மில்லியன் கணக்கான முதியோர்கள் கண்ணியத்துடன் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

FRIENDS Adult Diapers இந்தியாவில் பாவனையின்பின் நீக்கக்கூடிய சுகாதாரப் பொருட்களின் மிகப்பெரிய உற்பத்தியாளரான Nobel Hygiene நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றது. இந்நிறுவனம் 2 தசாப்த கால அனுபவத்தையும் 40 ஏக்கர் பரப்பளவில் அதிநவீன உற்பத்தி வசதியையும் கொண்டுள்ளது. இது ISO 9001:2015, WHO GMP மற்றும் ஐரோப்பிய தரநிலைகள் CE உட்பட பல சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது. FRIENDS Adult Diapers அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, குவைத் மற்றும் கென்யா உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த காலங்களில் Darley Butler தனது பங்காளியான HelpAge Sri Lankaவுடன் இணைந்து முதியோர்களை மையப்படுத்தி பல்வேறு சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. குறிப்பாக, மருத்துவம் மற்றும் கண் பராமரிப்புக்கான நடமாடும் பஸ்ஸின் உபகரணங்களை வழங்குவதை எளிதாக்குதல், முதியோர் தினத்தன்று நல்லொழுக்கக் கொண்டாட்டம் நடத்துதல், குறைந்த வருமானம் பெறும் முதியோர்களுக்கு 30 Detu Puravasi Suwasahana உதவித்தொகை பரிசாக வழங்குவதன் மூலம் மருத்துவம் மற்றும் மருத்துவ சேவைகள் ஆகியவற்றுக்கு முழு அணுகலை இலவசமாக வழங்குதல், முதியோர்களின் மதிப்பைப் பற்றி அவர்களுக்கு கற்பிப்பதற்கான கருத்தரங்குகள், முதியவர்களைக் கவனித்துக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய அணுகுமுறையை மக்களிடையே பரப்புதல் மற்றும் களுத்துறையில் முதியவர்களைக் கொண்டாடும் நடைப்பயணத்தை நடத்தியமை ஆகியவை இதில் அடங்கும்

# 19ஆவது புதிய விமானப்படைத் தளபதியாக எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ நியமனம்



இலங்கை சோஷலிச ஜனநாயக குடியரசின் ஜனாதிபதியும் முப்படை சேனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவால் எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ எயார் மார்ஷல் நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டு 19ஆவது புதிய விமானப்படைத் தளபதியாக 2033 ஜூன் 30ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

1969ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தின் இஹலகம பிரதேசத்தில் பிறந்த எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, கம்பஹா பராக்கிரம வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் பண்டாரவத்த மற்றும் பண்டாரநாயக்க கல்லூரியிலும் கல்விப் பயணத்தை தொடர்ந்து, அவரின் இடைநிலை கல்வியை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் தொடர்ந்தார். நாட்டுக்காக தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்க அவர் 1988ஆம் ஆண்டு ஒக்டோபர் 06ஆம் திகதி சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 06ஆவது கடேட் உள்வாங்களில் கடேட் அதிகாரியாக இணைந்தார்.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் அடிப்படை போர்ப்பயிற்சி மற்றும் பட்டப்படிப்பை நிறைவுசெய்த எயார் மார்ஷல் உதேனி, அநுராதபுர விமானப்படைத் தளத்தின் இல 01 விமானிகளுக்கான பயிற்சி படைப்பிரிவில் அடிப்படை விமானி பயிற்சிநெறியை நிறைவுசெய்து 33ஆவது கடேட் பயிற்சிநெறியில் சிறந்த விமானியாக தெரிவானார். பின்னர் அவர் இரத்மலானை விமானப்படைத் தளத்தில் இல 2 படைப்பிரிவில் உயர்நிலை விமானி பயிற்சிகளை மேற்கொண்டார். 1990 ஒக்டோபர் 05ஆம் திகதி இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு கல்விபீடத்தில் பொதுக் கடமைகளுக்கான விமானிகள் கிளையில் பைலட் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

மேலும் எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ வீ.வீ. ஐ.பி. கேப்டன் விமானியுமாவார் அவர் 10 வகையான விமானங்களை ஓட்டுவதில் தலைசிறந்தவர். அவற்றுள் CESSNA–150 ரக விமானம் உட்பட HARBIN Y-12, HS–748, SF–260TP, IA–58 PUCARA, B–200T, AN–32 மற்றும் C–130 ரக விமானங்கள் போன்றவை உள்ளடங்கும். இதுவரை 7000 மணிநேரத்துக்கும் அதிகமாக விமானியாக பறக்கும் நேரங்களைக் கடந்து அவர், மிக உயர்ந்த கருவி மதிப்பீட்டைப் பெற்றுள்ளார். மேலும் முதன்மை பசுமை மதிப்பீடு மற்றும் சிவில் ATPL (விமானப் போக்குவரத்து) விமானிகள் உரிமமும் பெற்றுள்ளார்.

1997ஆம் ஆண்டு புகாரா விமானத்தின் மூலம் இரவுநேர தாக்குதலை நிகழ்த்தி தன்னை ஒரு தலைசிறந்த விமானியாக நிரூபித்தார். இதன் மூலம் அவசர சூழ்நிலையை சிறப்பாக கையாண்டமைக்காக பல்வேறு பாராட்டுகளையும் பெற்றார். மாட்டின் பேக்கர் விமான நிறுவனத்தால் கௌரவமான அங்கீகாரமும் அவருக்கு வழங்கப்பட்டது

எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவருடைய சேவை காலத்தில் பங்களாதேஷ் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் கனிஷ்ட கட்டளை மற்றும் பணியாளர் பயிற்சிநெறியையும், பாகிஸ்தானில் விமான பாதுகாப்புப் பயிற்சியையும், ஐக்கிய அமெரிக்காவில் மேம்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்புப் பயிற்சியையும் நிறைவுசெய்துள்ளார். அவர் கல்வித்துறையில் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் மேலாண்மையில் பாதுகாப்பு ஆய்வுகளில் அறிவியல் பிரிவில் முதுகலை பட்டமும் பெற்றார்.

மேலும் அமெரிக்காவிலுள்ள அலபமா வான் பல்கலைக்கழகத்தில் இராணுவ அறிவியல் முதுகலை பட்டமும், லண்டன் கிங்ஸ் கல்லூரியில் சர்வதேச பாதுகாப்பு மற்றும் மூலோபாய முதுகலை பட்டமும் பெற்று "இதில் முதன்மை சித்தியும்" பெற்றார்.

# வங்கிகளின் கடன் மீதான வட்டிவீதம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. ஐ.எம்.எவ். இலங்கைக்கு விதித்த பல நிபந்தனைகளில் ஒன்றுதான் வெளிநாடுகள், சர்வதேச மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்ற கடன் மறுசீரமைப்புப் பற்றியதாகும். இவர்களின் நிபந்தனையில் உள்நாட்டுக் கடன் மறுசீராக்கம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. வெளிநாடுகளும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுமே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் குறித்த நாடுகளின் நிதி நிறுவனங்கள் உள்நாட்டு வங்கிகளில் முதலீடு செய்திருக்கின்றமையால் தமது நாட்டு நிதி நிறுவனங்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்நிபந்தகையை விதித்துக்கொண்டிருக்கின்றன.

கடன் மறுசீரமைப்பு என்பது அரசு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களை அவ்வங்கிகளுடன் பேசிக் கலந்துரையாடி கடன் மீளச் செலுத்தும் காலத்தைப் பிற்போடுவதாகும். அதற்காக அரசு 29-06-2023 முதல் 03-07-2023 வரையுள்ள காலத்தைப் பயன்படுத்துகிறது. 30-06-2023 ஆம் திகதி வங்கிகளுக்கும் பங்குச்சந்தை நடவடிக்கைகளுக்கும் விடுமுறை வழங்கியிருக்கிறது. இந்த ஐந்து நாள் காலப் பகுதிக்குள் வங்கிகளுடன் பேசிக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்கள் எட்டப்பட இருக்கின்றன.

இலங்கை அரசு உள்நாட்டு வங்கிகளில் இருந்து மத்திய வங்கித் திறைசேரி முறிகளை (Bills) உள்ளேயும் வெளியேயும் விற்பனை செய்து 16.8 ரில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றிருக்கிறது. இதில் 8.8 ரில்லியன் ரூபா உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெறப்பட்டிருக்கிறது. இக்கடனில் 44.5 வீதம் வங்கிகளில் இருந்தும், 43 வீதமானவை ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் இருந்தும் மிகுதி 12.5 வீதமானவை காப்புறுதி நிறுவனங்களில் இருந்தும் பெறப்பட்டிருக்கின்றன. இதில் 75 வீதத்துக்கு மேலானவை மக்களின் பணமாகும்.

மத்திய வங்கி ஆளுநர் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, காப்புறுதி நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து பெற்ற கடன்கள் மறுசீரமைப்புச் செய்யப்படமாட்டாது என உத்தரவாதம் அளித்துள்ளார். அதன்படி வங்கிகளில் இருந்த பெற்ற கடன்கள் மாத்திரமே கடன் மறுசீரமைப்புக்கு உட்பட இருக்கின்றன. மத்திய வங்கி வழங்கிய திறைசேரி முறிகளை மீளப் பெற்றுக் கடனைச் செலுத்தும் காலம் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு நீடிக்கப்பட இருக்கின்றன. அவ்வாறு காலநீடிப்புச் செய்யபட்டால் அக்கடனுக்குள் பொதுமக்கள் வங்கிகளில் நீண்டகால நிரந்தர வைப்பில் இட்ட பணமும் அடங்கியிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு கடன் செலுத்தம் காலம் நீடிக்கப்பட்டால் அரச வங்கிகள் பாதிக்கபடக்கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளன. இவ்வாறுதான் பல நாடுகளில் சில வங்கிகள் திவாலாகி உள்ளன. அண்மையில் ஐக்கிய அமெரிக்காவில் மூன்று வங்கிகளும் பிரித்தானியாவில் ஒரு வங்கியும் திவாலாகின. அதேபோல் சர்வதேச முதல்தர (2023) பணக்காரர் எலான் மஸ்க் டுவீட்டர் குழுமத்தைக் கொள்வனவு செய்ததன் மூலம் பாதிப்படைய இருந்தார். அதனைத் தவிர்ப்பதற்குத் தனது சொந்த நிறுவனங்களின் பங்குகளைக் கூடுதலாக விற்பனைசெய்து சொத்துகளைச் சேர்த்ததன் மூலம் மீண்டும் முதலிடத்துக்கு வந்தார். இந்திய அதானி குழுமம் இவ்வாண்டில் மிக மோசமான பின்னடைவைச் சந்தித்தது. அவ்வாறு இலங்கை அரச வங்கிகள் பின்னடைவைச் சந்திக்காமல் இருக்கின்ற விடயத்தில் அரசும் மத்திய வங்கியும் கவனமாக இருத்தல் வேண்டும்.

அத்தோடு கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக வங்கிகள்மீது சுமத்தப்படும் சுமையானது 'மரத்தால் வீழுந்தவனை மாடேறி மிதித்த' கதையாக மக்கள்மீது சுமத்தப்படாமல் இருப்பதிலும் கவனமாக இருத்தல் வேண்டும். கடன் மறுசீரமைப்பு மூலம் கால எல்லை நீடிக்கப்பட்டதனால் வங்கிகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகளை ஈடுசெய்வதற்காக மீண்டும் வட்டிவீதத்தை மறுசீரைமைத்து கடன்களுக்கான வட்டி வீதத்தை அதிகரித்தால் எதிர்காலத்தில் வங்கிகள் பாதிப்படைவதோடு சேமிப்பு மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறைந்து நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வெகுவாகப் பாதிப்படையும். இதனால் பொருட்களுக்கான விலை மேலும் அதிகரிக்கும். பணவீக்கத்தை ஒறறை இலக்கத்துக்குள் வெகுவிரைவில் கொண்டுவர முடியும் என்ற மத்திய வங்கி ஆளுநரின் கனவானது நனவாகிப் போவதற்குரிய சாத்தியங்களும் உள்ளன. மக்கள்மீது சுமையை ஏற்படுத்தி 70 இலட்சம் பேராக இருக்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படாமல் இருப்பதிலும் கவனம் செலுத்ததல் வேண்டும்.

2019இல் 30 இலட்சமாக இருந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் 2023இல் 70 இலட்சமாக அதிகரித்துள்ளனர் என்பதும் குறிபிடத்தக்கது.

# தூறல்கள்

## வண்ணக் கனவுகள்

தினமும் காண்கிறாள்
விதவைப் பூக்காரி.

★★★

தொலைந்த உறவு
வந்து போகும்
அவளின் நினைவு.

★★★

வெட்டப்படும் மரங்கள்
புதிதாய் முளைக்கும்
நெடுஞ்சாலை.

★★★

நிலத்தைக் கிளறுகையில்
வெளித் தெரிகின்றன
நெகிழிப் பைகள்.

★★★

வரப்போர வாய்க்கால்
மிதந்து வரும்
நாசிணிப் புட்டிகள்.

★★★

வற்றிய குளம்
வரண்டு கிடக்கும்
மீனவன் வாழ்க்கை.

★★★

இளமையில் முதுமை
தள்ளாடும் இளைஞன்
மது போதை.

- அய்ஷத்அப்சத் - பாலமுனை

## கடல்

என் பேனாவுக்கு மையானது
இதை கேள்வியுற்ற
நீர் நிலையங்கள் யாவும்
கடலோடு கலந்தது.

எல்லா வானமும் பூமியும்
இலைகளும் தாளானது.

ஆபத்தான கட்டத்தில்
அகதியாய் ஓடுவது போல்
எத்தனையோ கோணத்தில்
ஏதேதோ
ஓடோடி வந்தது.

என் சுவாசக் காற்றுகளையே
பட்டை தீட்ட நினைத்தேன்.
சத்தான முத்தான
சொத்துகளை மதிக்குமாறு
மனுக்கள் அனுப்பினேன்.

குருடனுக்கு
காட்டிக் கொடுத்ததை
கழுகுகளுக்கு
காட்டிக் கொடுத்தேன்
காணாமல் போனது.

விழுகண்டங்களை
விடாமல் துரத்திச்
சென்றேன்.

இன்னொரு விழுகண்டம்
எதற்கு?

வினாக்களும்
விடைகளும் இல்லாத
வாழ்க்கை
பாடப் புத்தகங்கள் எதற்கு?

- மூதூர் றிஸ்வின் -

## நரகத்து பொரியல்

கறுப்பாய்...
சிகப்பாய்...

எரிச்சலாய்...
புகைச்சலாய்...

சுவாசிக்கும்
பக்தர்களே!

கரும்பை
மறந்த யானைகளே!

ஆமை
விருது வாங்கும்
பாயும் புலிகளே!

நீங்களா?
விளக்குகள்.

வேதங்கள்
நொண்டும்
வேளையிலே!
வீர பக்தர்
போட்டியடா!...

கண்களில்
தூசி விழுந்த போது
இமைகள்
நெருப்பானது.

வேதங்களின்
வேட்டி
அவிந்தவேளை
பக்தி கரங்கள்
சிறகடித்து பிரிந்தன.

மனிதம்
செத்த பூமியில்
தேநீர்
சுடவில்லை.

சுயநலத்தின்
உளியே!

உனது சிற்பம்
நரகின்
அனலே!

உப்பில் சமைத்த
சோறுகளே!

ஆயிரம் இரும்புக்
கரங்களால்..

உண்மை எனும்
தக்காளிப் பழத்தை
நசுக்க முடியாது.

- மூதூர் - றிஸ்வின்

## என் மனசைத் தொட்டவளே...

மனசத் தொட்டு
மயக்கிப் போறவளே
தரிசான மனசுக்கு
பரிசாக வருவாயா
தரிசனத்தைத்
தினந்தோறும்
தவறாமல்
தந்துவிட்டால்
கரிசனையாய்
நானும் கண்குளிர
ரசித்திடுவேன்

திரும்பும்
திசையெல்லாம்
உன் திருவுருவம்தானே
தெரியுது
விரும்பும் மனசான

என்
விண்ணப்பம் ஏற்பாயா

இல்லாளே நீதானென
இறுக்கமாய் எண்ணி
விட்டேன்
பொல்லாப்பே
எழுந்தாலும்
பொசுக்கிப்
போட்டிடுவேன்

புருஷனாய் ஏற்றிட
புன்முறுவலைக்
காட்டிவிட்டால்
அவசரமாய் நானும்
அகமகிழ்வாய்
மாலையிடுவேன்

இதயத்தில்
நிறைந்தவளே
வாழ்வின் உதயமென
ஜொலிப்பவளே
இலக்கியமாய் குடும்பம்
தழைத்திட இசைந்தே
சம்மதம் தந்துவிடு

வசந்தத்தை
வரவழைத்து
வாழ்வாங்கு வாழ்ந்திட
வந்திடு என்னோடு
வாகையும் நம்மோடு.

- உசனார் எம்.பஷீர்.
ஏறாவூர்.

## போன நான்

என்னை நானே தேடுகிறேன்
நான் காணாமல் போனதை
உணர்ந்து கொண்ட
நேரம் முதல்
என்னை நானே தேடுகிறேன்

காலை நேரங்களில்
கடற்கரை காற்று வாங்கச்சென்று
மணற்தரையில் நடக்கையில்
அலைகள் வந்து துரத்துகிறது
அதற்குப் பயந்து
ஒளிந்து கொள்கிறேன்

மாலை நேரம்
மரத்தின் கீழ் இருந்து
கடலுடன் கலக்கும்
சூரியனைக் காணவென்று
வானத்தைப் பார்க்கையில்
முகில்கள் துரத்துகின்றன

செடிகளுக்கு தண்ணீர்
தருகையில்
பூக்களின் வாசனையை
முகர முனைகையில்
தென்றல் சுடுகிறது

குறைகளைத் தேடும்
மனிதர்களின் விமர்சனங்களுக்கு
விளக்கம் கொடுக்கும் இயலாமை
ஒதுங்கிப் போக வைக்கிறது

பயங்கள் என்னை
ஒதுங்கச் சொன்னதால்
நான் காணாமல் போனேன்
பயங்கள் பயனைத் தருவதில்லை
என்பதால்
என்னை நானே தேடுகிறேன்

அ . ஜெகன்
சுவிஸ்

## நான் குதிரை வண்டிக்காரனாவேன்!



150 ஆண்டுகளுக்கு முன்பு குதிரை வண்டிதான் போக்குவரத்துக்கு பயன்பட்டது. அப்படியொரு குதிரை வண்டியில் ஒரு சிறுவன் பாடசாலைக்கு செல்வது வழக்கம். ஒரு முறை வகுப்பில் ஆசிரியர் மாணவர்களிடம் ''நீங்கள் பெரியவனானதும் என்னவாக ஆசைப்படுகிறீர்கள்'' என்று கேட்டார்.

அதற்கு ஒவ்வொரு மாணவர்களும் வக்கீல், ஆசிரியர், மருத்துவர் என சொல்லிக்கொண்டே வந்தனர், அப்போது ஒரு மாணவன் கூறினான் "நான் குதிரை வண்டிக்காரனாவேன்." சுற்றியிருந்த மாணவர்கள் எல்லாம் சிரித்தனர், ஆசிரியரும் அவனை கேலி செய்து உட்காரச் சொன்னார். அந்த சிறுவன் வீட்டிற்கு சோகமாக வந்ததை பார்த்து தாய் என்னவென்று கேட்க, நடந்ததை கூறினான் அந்த சிறுவன். அதை கேட்ட அந்தத் தாய் மகன் மீது கோபம் கொள்ளவில்லை, அந்த தாய் கேட்டார், "நீ ஏன் குதிரை வண்டிக்காரனாக ஆசைப்படுகிறாய், அதற்கு என்ன காரணம்". அந்த சிறுவன் கூறினான் "தினமும் பாடசாலைக்கு செல்லும்போது குதிரை வண்டிக்காரன் குதிரை ஓட்டுவதை பார்ப்பேன், அவர் குதிரை ஓட்டுவது அழகாக இருக்கும். எனக்கும் அதுபோல் குதிரை வண்டி ஓட்ட வேண்டும் என்று ஆசை, அதனால்தான் அப்படி கூறினேன்".

இதை கேட்ட தாய் வீட்டினுள் சென்று ஒரு மகாபாரத படத்தை எடுத்து வந்தார், அதை மகனிடம் காட்டி, "நீ குதிரை வண்டிக்காரனாக வேண்டும் என்று சொன்னது தவறில்லை, ஆனால், நீ எப்படிப்பட்ட குதிரை வண்டி ஓட்டுபவனாக இருக்க வேண்டும் தெரியுமா. மகாபாரதத்தில் அர்ஜுனனுக்கு தேர் ஓட்டினானே கிருஷ்ணன், அந்த கிருஷ்ணன் போன்ற தேரோட்டியாக இருக்க வேண்டும்" என்றார்.

அந்த சிறுவன்தான், தற்போது உலகெங்கிலும் உள்ள இராமகிருஷ்ண மடத்தை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தர்.

## நான் பாடசாலைக்கு போறேன்!



சுற்றமும், நட்பும் அறிவுரை கூறிய பிறகும், நான் என் குழந்தையை ஐந்து வயதில்தான் பாடசாலையில் சேர்ப்பேன் என்று உறுதியாக இருந்தாள் அந்தத் தாய்.

சரியாக ஐந்து வயதானது, கோடை விடுமுறை முடிந்து பாடசாலையும் திறக்கப்பட்டது, அவளே தன் குழந்தையை பாடசாலைக்கு முதல் நாள் அழைத்துச் சென்றாள். வகுப்பறைக்கு வெளியே பல குழந்தைகள் பாடசாலைகடகு செல்லமாட்டேன் என்று அடம் பிடிக்கும்போது, இவள் குழந்தை, அம்மா டாட்டா என்று புன்னகையுடன் வகுப்பறைக்குள் சென்று, முதல் வரிசையில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்துகொண்டது.

ஐந்து வருடத்தில் முதல் முறையாக தன் குழந்தையை அரை நாள் பிரிகிறாள், மிகக் கனத்த இதயத்துடன்...!

ஆசிரியை பாடம் எடுக்க ஆரம்பித்தார், அழும் குழந்தைகளை சமாதானப்படுத்துவது தான் முதல் நாள் பாடம். அந்த வகுப்பில் அழாமல் இருந்த ஒரே குழந்தை ஜன்னல் ஓரம் அமர்ந்திருந்தது, வகுப்பு அரை நாள் முடியும் நேரத்தில், அந்த ஆசிரியை அந்த குழந்தையிடம் சென்று செல்லமாக கன்னத்தை தட்டி, ''நீதான் சமத்து. அழாமல் இருக்கிறாய்'' என்றார். அதற்கு குழந்தை, ஜன்னலுக்கு வெளியே கையை சுட்டிக்காட்டி, ''என் அம்மா அழுகிறாள்'' என்றது.

குழந்தையை பாடசாலையில் சேர்த்த முதல் நாள், குழந்தை அழக்கூடாது, தாய்தான் அழவேண்டும், அப்படிப்பட்ட தாயாக நீங்கள் இருங்கள்.

# தமிழன் தர்பார்



இது எங்க ஏரியா

## எடுத்துக்காட்டு!



ஒரு செல் உயிரியிலிருந்து குரங்கின் வழியாக மனிதன் தோன்றினான் என்ற பரிணாமத் தத்துவத்தை உலகுக்குச் சொன்னவர் சார்லஸ் டார்வின்.

அவரையும் அவரது தத்துவத்தையும் கேலி செய்ய விரும்பிய ஒருவர், டார்வினிடம்,

"குரங்கிலிருந்து மனிதன் உருவாகி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் உங்களது தோற்றத்தை வைத்துத்தான் முடிவு எடுத்திருக்க வேண்டும் என நினைக்கிறேன், என்ன சரிதானா?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட டார்வின் சிறிதுகூட கோபம் கொள்ளவில்லை. மிகவும் அமைதியாகச் சொன்னார்: "சரியாகச் சொன்னீர்கள். நான் கண்டுபிடித்த தத்துவத்துக்கு நானே எடுத்துக்காட்டாக இருக்கிறேன் என்பது எவ்வளவு சந்தோஷம் தரும் விடயம்."

கேலி செய்ய நினைத்தவர் வெட்கித் தலைகுனிந்தார்.

## கடைசிக் கடிதம்



எட்டயபுரத்தில் பாரதியாருக்கு மணிமண்டபம் அமைக்க பொதுமக்களை நிதி வழங்குமாறு தமிழிலேயே காந்தியடிகள் கையெழுத்து போட்டுக் கொடுத்தார்.

சேவா கிராமத்தில் இருந்த தமிழர் ஆர்.சங்கரன் என்பவர் காந்தியடிகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தார். நாள்தோறும் அரைமணி நேரம் தமிழுக்காக ஒதுக்கி வைத்து ஒரு மாதம் காந்தியடிகளுக்கு தமிழ் கற்றுக் கொடுத்தார் சங்கரன். இவரது ஒரே மகள் சுலோச்சனா காலமானபோது, காந்தியடிகள் 29.1.1948இல் எழுதிய ஆறுதல் கடிதம்தான் அவர் கடைசியாக எழுதிய கடிதம்.

## மகாமனம்!



ஒருநாள் இராமகிருஷ்ணர், புல்வெளி ஒன்றில் நடந்து சென்று கொண்டிருந்தார். நடந்து போய்க் கொண்டிருந்தவர் திடீரென்று தன்னையும் அறியாமல் திரும்பிப் பார்த்தார்.

அப்போதுதான் நடந்து வந்த பாதையில் தன் காலின் கீழ் மிதிபட்ட புற்கள் மிகுந்த சிரமத்துடன் தலையை நிமிர்த்தப் போராடிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

இதைக் கண்ட அவரின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்க ஆரம்பித்துவிட்டது.

மனம் கலங்கிப் போனவர், "அடடா இவற்றுக்கும் உணர்ச்சி இருக்கும் என்பதை உணராமல் இருந்துவிட்டேனே. நம் காலடி பட்டதால்தானே இவை இவ்வளவு துன்பப்படுகின்றன?" என்று நினைத்தார்.

அன்று முதல் புல்வெளிகளில் நடப்பதை அவர் தவிர்த்துவிட்டார்.

## 15 வயது ஆசிரியர்!



உள்ளூர் செய்திகளை சுடச்சுட தருவதற்காக 'கிராண்ட் ட்ரங்க் ஹெரால்ட்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார் தோமஸ் ஆல்வா எடிசன்.

அந்தப் பத்திரிகைக்கு அவரே ஆசிரியர், அச்சுக் கோர்ப்பவர், நிருபர், வெளியிடுபவர், விற்பனையாளர் எல்லாம்...

அச்சடிக்கும் இயந்திரத்தை ரயிலுக்குள்ளேயே வைத்து அச்சடித்து ஒரு பத்திரிகை விலை 3 சத வீதம் விற்றார். மாத சந்தா 8 சதம் என 300 சந்தாதாரர்களையும் சேர்த்துவிட்டார்.

ஒருசில எழுத்துப் பிழைகள் தவிர பத்திரிகை மிக நன்றாகவே இருப்பதாக லண்டன் ரைம்ஸ் பத்திரிகை பாராட்டியது.

உலக வரலாற்றிலேயே ரயிலில் அச்சடிக்கப்பட்ட முதல் பத்திரிகை அதுதான். ஒரு 15 வயதுப் பையன் பத்திரிகை ஆசிரியராக இருந்து வெளியிட்ட பத்திரிகையும் அதுதான்.

## வாரியாரின் விளக்கம்



கிருபானந்த வாரியார் கூறிய விளக்கம் இது... ஒருவருக்கு ஐந்து ஆண் குழந்தைகள் இருந்தார்கள். அவரிடம் ஒருவர், ''தங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?'' என்று கேட்டார். அதற்கு அவர், ஒரு மகன், ஒரு பிள்ளை, ஒரு மைந்தன், ஒரு குமாரன், ஒரு புத்திரன்" என்று பதில் அளித்தார். கேட்டவர் விழிக்க, அதற்கு அவர் தகுந்த விளக்கம் அளித்தார்.

அதாவது, தன் குடும்பத்தைப் பேணுபவனை மகன் என்றும், தொல்லை தருபவனை பிள்ளை என்றும், குடும்பத்துடன் சுற்றத்தாரை ஆதரிப்பவனை மைந்தன் என்றும், தன்னைவிட அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவனை குமாரன் என்றும், தன்னை நற்கதிக்கு அனுப்பக்கூடியவனை புத்திரன் என்றும் குறிப்பிட்டதாகத் தெரிவித்தார்.





காரைக்கவி



# சீத்துவக்கேடு 246

உந்த வல்லாட்டம் சரியான பழைய விளையாட்டு எண்டதை "வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்றே. நாயும் பலகையும் வரூஉம் காலை" (தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் – 3-374) எண்டு தொல்காப்பியம் சொல்லுறதிலை இருந்து அறியலாம் எண்ட அப்பு, அட மேனை உனக்கு ஒண்டு தெரியுமே. உந்த விளையாட்டை முருகனும் விளயாடி இருக்கிறார் எண்ட செய்தி பரிபாடலிலை இருக்குது கண்டியோ எண்டார் அப்பு.

"வில்லுச் சொரி பகழியின் மென் மலர் தாயின
வல்லுப் போர் வல்லாய்! மலைமேல் மரம்.
வட்டு உருட்டு வல்லாய்" (பரிபாடல்-18) எண்டு குன்றம்பூதனார் பாடி இருக்கிறார் எண்டார் அப்பு.

வில்லிலிருந்து அம்பு பாயிறது மாதிரி பூக்கள் கொட்டும் வட்டு உருட்டும் வல்லவனே கேள், சொக்கட்டான் எண்டும் தாயம் எண்டும் சொல்லுற கூறப்படும் வல்லு விளையாட்டில் வல்லவனே கேள் எண்டது பொருள் எண்ட அப்பு, உதிலை இன்னொரு விளையாட்டு வட்டு எண்டு வருகுது கவனிச்சனியே. உதையும் அந்தக் காலத்திலை வயதுபோன ஆக்கள் விளையாடி இருக்கினம் கண்டியோ எண்டார் .

வட்டு எண்டது நாங்கள் இப்ப விளையாடுற குண்டெறிதல் விளையாட்டு மாதிரி ஒரு விளையாட்டு. அப்ப அந்தக் காலத்திலை வட்டு எண்ட குண்டுகளை வைச்சுக்கொண்டு விளையாடி இருக்கினம் எண்டது கன பாட்டுகளிலை இருக்குது கண்டியோ எண்ட அப்பு, உந்த வட்டு மாதிரி நெல்லிக்காயும், ஆமை முட்டையும், ஈங்கைப் பூவின் மொட்டும் உருண்டு திரண்டு இருந்ததாம் எண்டு பாட்டுகளிலை இருக்குது எண்டு அந்தப் பாட்டு வரியளைச் சொன்னார்.



நெல்லி மோட்டிரும் பாறை யீட்டு வட் டேய்ப்ப (அகநானூறு 5- பெருங்கடுங்கோ)

"யாமை மறைத்து ஈன்று, புதைத்த கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை" (அகநானூறு 160- குமுழி ஞாழலார் நப்பசலையார்)

"அட்டரக்கு உருவின் வட்டு முகை ஈங்கை" (நற்றிணை 193). உப்ப நான் சொன்ன பாட்டுகளிலை உந்த நற்றிணைப் பாட்டை ஆர் பாடினது எண்டு தெரியேல்லை எண்ட அப்பு, உந்த வட்டு விளையாட்டு விளையாட எண்டு தனியான இடங்கள் அப்ப அந்தக் காலத்திலை எங்கடை ஆக்கள் வைச்சிருந்திருக்கினம். அதை அவை வட்டரங்கு எண்டு சொல்லி இருக்கினம் எண்ட தகவல், இளங்கீரனார்

"ஈன் பருந்து உயவும் வான் பொரு நெடுஞ் சினைப்
பொரி அரை வேம்பின் புள்ளி நீழல்,
கட்டளை அன்ன வட்டு
அரங்கு இழைத்து,
கல்லாச் சிறாஅர் நெல்லி
வட்டு ஆடும்
வில் ஏர் உழவர் வெம்
முனைச் சீறூர்" (நற்றிணை 3) எண்டு பாடின பாட்டிலை இருக்குது எண்டார்.

பள்ளிக்கம் போகாத பெடியள் புள்ளி புள்ளியா நிழலைத் தாற வேப்ப மரத்துக்கு கீழை இருக்கிற கட்டளைக் கல் மாதிரி இருக்கிற வட்டரங்கிலை இருந்து நெல்லிக்காய்களை உருட்டி வட்டு விளையாடினாங்களாம் எண்டது பொருள் எண்டார் .

உனக்கு ஒரு விஷயம் தெரியுமே. உந்த கட்டளைக்கல்லைத்தான் அப்பத்தே ஆக்கள் தங்கத்தை உரசிப்பாக்கப் பாவிச்சவையாம் எண்டார் அப்பு.

அப்ப ஈட்டுவட்டு, உருட்டுவட்டு, கைகரப்புவட்டு, கையாடுவட்டு, கோட்டுவட்டு, நீர்வட்டு, சூதுவட்டு, எண்டு விதம் விதமான வட்டு விளையாட்டுகள் விளையாடி இருக்கினம் எண்ட அப்பு, நான் சொன்ன உந்த உருட்டு வட்டு விளையாட்டுத்தான் இப்பத்தே எங்கட பெடியள் விளையாடுற மாபிள் விளையாட்டா வந்திருக்குது எண்டு சொன்னார் .

(இன்னும் ஆடுவம் )



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

இந்த வாரம் எதிலும் சற்று பொறுமையுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டும். தொலை தூரத்திலிருந்து கிடைக்கும் செய்தி சற்று சஞ்சலப்படுத்தும் என்றாலும் பாதிப்பு இருக்காது. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். தாய்வழி உறவினர்களுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். தந்தைவழியில் திடீர் செலவுகளுக்கு வாய்ப்புண்டு.

அலுவலகப் பணிகள் அதிகரிக்கும். பணிகளை முடிப்பதில் சில தடைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். பணியின் காரணமாக பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்றுசேரும் வாய்ப்பு ஏற்படும். கடன்கள் விடயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. இளைய சகோதரர்களால் உதவி உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செலவுகளும் அலைச்சலும் ஏற்படும்.

சக ஊழியர்களுக்குப் பணிகளை முடிப்பதில் ஏற்படக்கூடிய சிற்சில தடைகளின் காரணமாக, அவர்களின் பணிகளையும் நீங்களே சேர்த்துப் பார்க்கவேண்டி வரும். அதன் காரணமாக சற்று அசதி ஏற்படக்கூடும்.

வியாபாரத்தில் புதிய முதலீடுகள் வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு கூடுதல் பொறுப்புகளின் காரணமாக சற்று சோர்வு ஏற்பட்டாலும் கணவரின் அன்பும் உற்சாகம் தரும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு சூழ்நிலை உற்சாகம் தருவதாக இருக்கும்.

### மிதுன ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தருவதாக இருக்கும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்துவந்த பிற்போக்கான நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். தாயாரின் உடல்நலனில் அக்கறை எடுத்துக்கொள்வது அவசியம். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இழுபறியான நிலையே காணப்படுகிறது.

பணிச்சுமை குறைவதால் உற்சாகமாக இருப்பீர்கள். அதிகாரி மூலம் நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. தடைப்பட்ட சலுகை கிடைக்கும்.

வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்கவேண்டி வரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது..

### கடக ராசி அன்பர்களே!

பணவரவுக்குக் குறைவில்லை. அவசியத் தேவை என்றாலும்கூட இப்போது கடன் வாங்குவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகி முடியும்.

அலுவலகப் பணிகள் அதிகரிக்கும். இருந்தாலும் பணிகளை முடிப்பதற்கேற்ற அவகாசமும் சலுகையும் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அலுவலகம் செல்பவர்களுக்கு திருப்தி தரும் வாரம். சலுகைகளும் கிடைக்கும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திருமண வயதிலுள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

அலுவலகம் தொடர்பான விடயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டாம். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சலுகைகள் கிடைப்பது தாமதமாகும்.

வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

### கன்னி ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே சரியாகிவிடும். சிலருக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்புண்டு. வாரத் தொடக்கத்தில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

அலுவலகப் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். அதிகாரியின் ஆலோசனை உங்கள் பணியில் ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்வதாக இருக்கும். சலுகை கிடைக்கும்.

வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளுடன் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம்.

### துலா ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்கு பணவரவு இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கி, அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பதற்கு சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் தவிர்க்கவும்.

வியாபாரத்தில் சிற்சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வாடிக்கையாளர்களிடம் கனிவாக நடந்துகொள்ளவும்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி சுமாராகத்தான் இருக்கும். ஆனாலும், செலவுகளும் குறைவாகவே இருக்கும் என்பதால் பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. குடும்பம் தொடர்பான எந்தவொரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. சிலருக்குக் குடும்ப விடயமாக முக்கிய முடிவொன்றை எடுக்க நேரிடும்.

பணிகளில் அலட்சியம் வேண்டாம். சிறு தவறும் பெரியளவில் பாதிப்பு ஏற்படுத்திவிடும் என்பதால் மிகுந்த கவனமாக இருக்கவும்.

வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் கூடுதல் வேலை செய்யவேண்டி இருக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

பணவரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சகோதர வகையில் இருந்துவந்த சச்சரவுகள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். நீதிமன்றத்தில் வழக்குகள் இருந்தால், சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலுவலகம் தொடர்பான பணிகளுக்காக சிலருக்கு வெளியில் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செல்வது அவசியம்.

வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும்.

### மகர ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததை விட பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன் வந்துசேரும். உடல் நலன் சிறிய அளவில் பாதிக்கப்படும். திருமண முயற்சிகள் சற்று இழுபறிக்குப் பின்னர் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

அலுவலகத்தில் ஏற்படக்கூடிய முக்கியமான ஒரு பிரச்சினைக்கு உங்களுடைய அனுபவ அறிவு பயன்படும். எதிர்பாராத சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்புண்டு.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை திருப்தி தருவதாக இருக்கும்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தடைப்பட்டுவந்த சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை கனிந்து வரும். அரசாங்க வகையில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்கவும்.

அலுவலகப் பணிகளைக் குறித்த நேரத்துக்குள் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த பண உதவி கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

அலுவலகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

### மீன ராசி அன்பர்களே!

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். பணவரவு திருப்தி தரும். வீண் செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்கள் உதவி செய்வார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வழக்குகளில் பொறுமை அவசியம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். சிலருக்கு நண்பர்கள் மூலம் ஆதாயம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த சுபச் செய்தி கிடைக்கக்கூடும்.

வேலையைப் பொறுத்தவரை அதிகப்படியான பொறுப்புகளின் காரணமாக சற்று சோர்வு ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நிர்வாகத்தினரின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சலுகைகளும் கிடைக்கும்.

தமிழன் தொடர்கதை

# யார் அவன்

அத்தியாயம்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

“நான் உங்களிடம் இன்னொரு முக்கியமான கதையை சொல்லணும். அதற்குத்தான் உங்களை இங்கு வரச் சொன்னேன்'' என்றவள், அவள் அம்மா சொன்ன கதையை சொன்னதுடன், அதற்கான நியாயமான காரணங்களையும் அவனிடம் விளக்கிச் சொன்னாள். அதனை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தவன்,

''அதற்கென்னடா செல்லம். அதை செய்தால் போச்சு. நான் என்றால் இன்றைக்கும் ரெடிதான். அதற்காகத்தானே காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று அவன் இயல்பாக சொல்ல, அவளுக்கு அதை கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த சந்தோஷத்தில் அவனை மீண்டும் கட்டியணைத்துக்கொள்ள அந்தப் பேரதிர்ச்சி நடந்தது.

அவனுக்கு பின்னால் ஒருவன் வெறிகொண்ட கண்களுடன், ரவியின் முதுகுப் பக்கம் குறி பார்த்தபடி கத்தியை தூக்கியபடி குத்துவதற்காக ஆயத்தமாகிக்கொண்டு நின்றிருந்தான். அதனைக் கண்டவள் உடனே அதிர்ச்சியடைந்ததுடன், தன்னையறியாமலேயே,

''ரவி...'' என்று அலறினாள்.

அப்போது ராதா பரடிக்கையில் அலறியபடியே ரவியை கட்டிப்பிடித்தபடி அப்படியே பின்பக்கமாய் செங்குத்தாய் கீழே தள்ளிவிட்டாள். அதனால் கொலைகாரன் குறி வைத்து குத்தியது ரவியின் உடம்பில் படாமல் வேறு பக்கமாக போக, உடனே தன்னை சுதாகரித்துக்கொண்ட ரவி தன் கால்களால் அக்கொலைகாரனின் காலை தட்டிவிட்டான். எதிர்பார்க்காத அந்தத் தாக்குதலால் திக்குமுக்காடிப் போன அந்தக் கொலைகாரன் தட்டுத்தடுமாறி கீழே விழுந்தான். அதனால் அவன் கையிலிருந்த கத்தியும் வேறொரு பக்கமாக வீசுப்பட்டுப் போய் விழ, கொலைகாரன் தன்னை காத்துக்கொள்வதற்காக ரவி எழும்புவதற்கு முன்னாடியே விழுந்தடித்தபடி தப்பினால் போதும் என்று எழுந்து ஓடத் தொடங்கினான்.

அக்கொலைகாரன் எழுந்து ஓடத் தொடங்கினாலும் அவன் முகத்தை நன்கு கண்டுகொண்டதால் அது யார் என்பதை ராதா கண்டுகொண்டாள். ஆனாலும் அதைப் பற்றி ரவியிடம் அவள் காட்டிக்கொள்ளவில்லை. அதேநேரம் அக்கொலைகாரன் எழுந்து ஓடும் பொழுது,

''நீயா...?'' என்று ரவியும் வாய்க்குள் முணுமுணுத்து சொன்னது ராதாவின் காதுகளுக்குள்ளும் விழுந்தது. ஆனாலும் அதுபற்றியும் அவனிடம் அவள் விசாரிக்கவுமில்லை.

இருந்தாலும் ரவியிடம்,

''இவனை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா..?'' என்றாள். அதற்கவன் சற்று அமைதியாக இருந்துவிட்டு,

''எனக்கு இவனைப் பற்றி எதுவும் தெரியாதே... எதற்காக இவன் என்னை கொலை செய்ய வந்தான். ஒருவேளை யாரோ இவனை என்னை கொலை செய்வதற்காக ஏவி விட்டாங்களோ தெரியாது. அப்படி ஏவி விடுவதற்கும் நான் யாருக்கும் எதுவும் செய்யவும் இல்லையே. அது மாத்திரமல்லாமல் எனக்கு வேறு யாரும் எதிரிகளும் இல்லையே. ஒருவேளை வேறு யாரையோ கொலை செய்வதற்குப் பதிலாக அடையாளம் தெரியாமல் மாறி என்னைக் கொலைசெய்ய வந்துவிட்டானோ என்பதும் தெரியலை. எல்லாம் ஒரே குழப்பமாகவே இருக்குது'' என்றான். ஆனாலும் அவன் முகத்தில் ஒருவகையான பதற்றம் தெரிந்தது. அதன் அர்த்தம் ராதாவுக்கு விளங்கவில்லை.

எனவே, அவற்றையெல்லாம் மனதில் உள்வாங்காமல் அந்தச் சூழ்நிலையில் அங்கு இருப்பது நல்லதில்லை என முடிவெடுத்த ராதா,

''சரிங்க இனி நாம் இங்கு இருக்க வேண்டாம். இதற்குமேல் நாம் இங்கிருப்பது அவ்வளவு நல்லதில்லை. எனவே, இவ்விடத்தை விட்டு இப்போதைக்குப் போய் விடுவோம். அதுதான் இப்போதைக்கு நல்லது. ஒருவேளை அந்தக் கொலைகாரப் பாவி மீண்டும் இங்கு வந்துவிடுவான். எனவே, மற்றதை பிறகு பார்ப்போம்'' என்று ரவியிடம் ராதா சொன்னதும் அதனைக் கேட்ட ரவியும்,

''ஆமாம் ராதா. நீ சொல்வதும் நூற்றுக்கு நூறு உண்மைதான். அதனால் அப்படி செய்வதுதான் சரி. இப்போதைக்கு மனசும் சரியில்லை. அதனாலே முதலில் நாம் இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடுவோம். அதற்கப்புறம் மற்றதை யோசிப்போம்'' என்று அவன் சொன்னதும் இருவரும் அவ்விடத்திலிருந்து விடைபெற்றுச் சென்று விட்டனர்.

இப்போது வீட்டுக்கு வந்த ராதாவுக்கு அதைப் பற்றிய யோசனையே அதிகமாக இருந்தது. காரணம், அந்தக் கொலைகாரன் யாரென்பதை அவள் நன்கு அறிந்து கொண்டதுதான்.

இவன் எதற்கு அப்பாவியான ரவியை கொலைசெய்ய வரணும்...? ரவிக்கும் இவனுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்றெல்லாம் யோசித்தாள்.

ஒருவேளை ராதாவின் நண்பியை கொலை செய்ததும் இவனாக இருக்குமோ எனும் எண்ணமும் இவளுக்கு வந்தது. அப்படியொரு எண்ணம் வரும்போதுதான் ஒரு விடயமும் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அதாவது ராதாவின் நண்பி வேலை பார்த்ததும் அந்த புடவைக் கடையில்தான். அப்படியென்றால் அங்கு அந்த முகாமையாளரின் நண்பரான ரவி அடிக்கடி வந்துபோகிறவன். எனவே, இதற்கெல்லாம் ஏதாவது தொடர்புகள் இருக்குமோ...?

என்றவாறெல்லாம் பல கோணங்களில் அவள் சிந்தித்தாள். ஆனால், அவளுக்கு எந்தவிதமான விடையும் தெளிவாகக் கிடைக்கவில்லை.

இருந்தாலும் அதனை அவள் சாதாரணமாக விடுவதாக இல்லை. அதற்குக் காரணம் இந்த விடயம் ரவியின் உயிர் சம்பந்தப்பட்டிருந்ததாலும், நண்பியின் கொலையுடன் அக்கொலைகாரன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று ராதா சந்தேகிப்பதாலும் எப்படியும் இதை கண்டுபிடித்தேயாக வேண்டும் என்று மனதுக்குள் உறுதி எடுத்தாள்.

(தொடரும்)



## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

அடியா அடிச்சாங்க
அடிம சனம் என்றாங்க
தலைமேல் ஏறி நின்று
அதிகாரம் செய்தாங்க

கல்லுக்குள்ளே ஈரமுண்டு
சுடுமணலிலும்
வியர்வையுண்டு
குத்துக்கிற முள்ளுலயும்
ஒருசிலதில்
மென்மையுண்டு

அதிகார தோரணையில்
ஆடி நின்ன துரைமாரில்
லாப நோக்கதுக்காய்
மண் பார்த்த
துரைமாரில்

மக்கள் மனச பார்த்த
துரைமாரும் இருந்தாங்க
காக்கும் கடவுளாக
மக்களுக்கு தெரிஞ்சாங்க

அன்பு என்று சொல்லி
அரவணைச்சி பாத்தாங்க
பாவம் என்று சொல்லி
குரல் கொடுத்து
நின்னாங்க

கருணை வடிவமந்த
ஏசப்பா என்றாங்க
எழுந்து வாங்களென்று
அன்பாலே
சொன்னாங்க...

இப்படியாய் சாமி போல
கோப்பி தோட்ட
தேசத்திலே
இறைவன்
ரூவம்கொண்ட
துரைமாரை பார்த்த
சனம்

சாமி துரை என்று
பேரு கூட வெச்சாங்க
காக்கும் சாமியாக
அவர்களையும்
நினைச்சாங்க

தொழிலாளர்
மக்களுக்காய்
குரல் கொடுத்து
வந்தாங்க
சீக்கு வந்த மக்களுக்கு
மருத்துவங்கள்
பாத்தாங்க...
பள்ளிக்கூடங்களில்

பாதிரிமார் வந்தாங்க
இரக்கம் என்று சொல்லி
புதுப்பாதை என்றாங்க...

லாபத்தையே நோக்கமாக
பார்த்துவிட்ட தேசத்திலே
இப்டியாய் துரைமார்கள்
தோட்டத்திலே
இருப்பதுவும்
ஒருசில பேருக்கிங்கு
எள்ளளவும்
பிடிக்கலியே.....

கங்காணி சுப்பனுக்கோ
துரைமேலே
பெருங்கோபம்
ஆதிக்கம் போனதினால்
வந்ததிந்த கடுங்கோபம்

கூடருந்த மக்களையே
கூறுபோட்ட மனுசனாச்சே
கூறுகெட்ட தேசத்திலே
கூனான
மனுசனாச்சே...

எத்தனையோ புகாரு
சொல்லி
நாட்டை விட்டு
விரட்டினரே
சாமி துரைகளெல்லாம்
மாயமாகி போனார்களே

ஊட்டுவள்ளி
தோட்டத்திலே
சாமி போன்ற
துரையாலே
அக்கிரும்பு கொரஞ்சி
வந்து
இருந்த அந்த அமைதி
எல்லாம்

புயலாய் பறந்தோடி
சாமி துரையோடு
போயிருச்சே
சுப்பன் கங்காணியின்
குறும்புகளும் அதிகரிக்க

மீண்டும் அநீதிகள்
பூகம்பமாய்
கிளம்பிருச்சி...

[சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்]

தொடரும்
எம். ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

# தவிக்கும் தலைமுறை

அ . ஜெகன் சுவிஸ்

குளிர்காலம் தனது முடிவுக் கோட்டைத் தொட்டுக்கொண்டிருந்தபோது கோடைகாலத்தின் வாசல் வரவேற்புக் கொடுக்கும் வசந்தகாலப் பகுதி என்பதால், ஆடையின்றி நிர்வாணமாக இருந்த மரங்கள் தளிர்விட்டுப் புதிய ஆடைகள் உடுத்தி பசுமையாகவும், வயல்வெளிகளைப் பண்படுத்தி புதிய பயிர்ச்செய்கைக்குத் தயார்ப்படுத்தும் விவசாயிகளின் ஆரவாரமும், துருத்துமாடத்தில் பூஞ்செடிகளை வைத்து அழகுபடுத்திப் பார்க்கும் ஆவலில் குடியிருப்போரின் மகிழ்வுமாக ஒரே பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது வெளிச்சூழல். ஒன்றன் மேல் ஒன்றாக பல ஆடைகளால் மூடப்பட்டிருந்த உடல்கள் வெறும் மெல்லிதான ஆடையுடன் வெளிச் செல்லக்கூடிய காலநிலையில் முகங்களெல்லாம் வெளித் தோற்றதை முழுமையாகக் காட்டிச் சென்றது.

குளிர்காலம், வசந்தகாலம், கோடைகாலம், இலையுதிர்காலம் என்று வருடத்தின் நான்கு காலங்களும் மாறி மாறி வருவதால் இந்த நாட்டுக்கு வந்து பல வருடங்கள் எப்படிக் கடந்தது என்று தெரியாமலே இளமையிலிருந்து வயோதிபம் வரையான மாற்றங்களில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. திருமணம், பிள்ளைகளின் படிப்பு, எதிர்காலம் என்ற விசாரிப்புகள் மாறி நோய்கள் பற்றிய விசாரிப்புகளாக மாறியுள்ளது. மருத்துவமும் மருந்துமாகத் திரிபவர்களிடம் இதைவிட எதைத்தான் விசாரிக்க முடியும். இளமையான நாட்களில் பணத்தின் பெறுமதியை எங்கள் நாட்டுப் பணத்திற்கு பெருக்கிப் பார்த்து நேரம் மாறிய உணவுப் பழக்கமும், உடலைப் பற்றிய கவனத்தைத் தவிர்த்து ஓடி ஓடி உழைத்து பணம் சேர்த்ததன் அறுவடையாக இன்றைய மருத்துவத்தின் தேடல்கள்.

பாடசாலைப் பருவங்களில் கூட ஓய்வில்லா ஓட்டமாக இருந்தாலும். அது எமது சொந்த மண் என்பதால் அந்த வாழ்கைமுறைகளும், காலநிலைகளும் பழகிப்போனதால் அந்தக் காலங்களில் அதுபற்றித் தெரிந்துகொள்ளாமலே கடந்து வந்துவிட்டோம். அங்கும் போட்டிகளாகவே எங்களின் படிப்பும் எங்களை நகர்த்தியது. உத்தியோகம் பார்க்கையிலும் தரங்கள் வகுக்கப்பட்டிருந்ததால் அதில் குறிப்பிடும் உயர் உத்தியோகத்துக்கான புள்ளிகளைப் பெறுவதற்கு பகல், இரவென்று பார்க்காது பாடசாலை, தனியார் வகுப்புகளென்று திரிந்துவிட்டு வீட்டுக்கு உறக்கத்துக்கு மட்டுமே வருவதுபோல வந்து போவதுமான காலங்களையும் கடந்துதான் வந்தோம். சனி, ஞாயிறுகளில் மட்டுமே சிறிய ஓய்வு என்றான நிலையில் கடந்துவந்தோம்.

என்னைச் சுற்றியுள்ளவர்களே எனது துறையை தெரிவுசெய்யும் நிலையில் இருந்தது அந்தக் காலத்துப் படிப்பு. எனக்கு எது வரும், எனது விருப்பமென்ன என்பதையும் கடந்து என்னை சுற்றியுள்ளவர்களைவிட நான் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்ற திணிப்பே எங்களின் தர நிர்ணயமாகியது. அதனால் குழம்பிப்போய் பாதியில் படிப்பை குழப்பியவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால், அதுவெல்லாம் பொருட்படுத்தாது அடுத்து வருபவர்களும் அதையே தொடர் நடைமுறையாகப் பெற்றனர். அதற்கான தீர்வைத் தேடவும் முற்படவில்லை. அதனால் விடைகளும் கண்டறியப்படவில்லை.

வளர்ந்து வரும்போது ஒவ்வொருவரும் தங்களின் எதிர்காலக் கனவுகளுடனேயே தங்களின் வாழ்வுக் காலங்களை மகிழ்வாகக் கடந்து வருகின்றனர். சிலர் அந்தக் கனவுகளை அடைந்தவர்களாகின்றனர். இன்னும் சிலருக்கு அது அமையாமலே போய்விடுகிறது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை, அதனால் வந்த பொருளாதார நிலை என்பவற்றால் பலர் தங்களின் கனவுகளைத் துறந்து புதிய கனவுகளுடன் நாட்டைவிட்டு வெளியேறும் நிலையில், பல்வேறு நாடுகளில் குடியேறினார்கள். நானும் அதில் ஒருவனாக இங்கு வந்து வருடங்கள் பலதைக் கடந்துவிட்டேன். இங்கு வரும்போது எங்குமே சுமந்து செல்லும் பல கனவுகளைச் சுமந்துதான் இங்கும் எனது பயணம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் இப்போ திரும்பிப் பார்க்கையில்தான் உணரக்கூடியதாக உள்ளது. சுமந்த கனவுகள் வெறும் சுமையாகவே எதுவுமே இல்லாத வாழ்வாகிய காலத்தின் இழப்பாகவே எனது பயணங்களும்.

இங்கு வந்த இளமைப் பருவங்கள் உற்சாகமாக இயங்கும் திறன்கொண்ட காலங்களாக இருந்த நேரங்கள் எங்களுக்குத் தெரியாமலேயே நாகரிகமான முறையில் சுரண்டப்பட்டுக்கொண்டிருப்பதை உணர்ந்துகொள்ள முடியாத உழைப்பைத் தந்து கொண்டிருந்தோம். அவர்களும் எங்களைப் பயன்படுத்தி செல்வந்த நாடுகளாக தம்மை நிலைநிறுத்திக் கொண்டார்கள். இப்போதுதான் நாங்களும் உணரத் தொடங்கி யுள்ளோம்.



எங்களின் இறுதிக் காலங்களை எங்கு கழிப்பது என்பதை இங்கு பிறந்து வளர்ந்த பிள்ளைகளை விட்டுப் பிரிவதா அல்லது பிறந்த நாட்டில் குடியேறுவதா என்ற முடிவை எடுக்க முடியாத தலைமுறைகளாகத் தவிக்கிறோம். அந்தத் தவிக்கும் தலைமுறையில் நானும் ஒருவனாக இருப்பதை நினைத்துக்கொண்டு சாளரத்தால் வெளியே எட்டிப் பார்க்கிறேன். வெளியே நல்ல வெயில் அதனால்தான் உள்ளே புழுக்கமோ?

# இனவெறி, பாலின வெளியால் பாதிக்கப்படும் இங்கிலாந்து கிரிக்கெட்

நிறுவனரீதியான இனவெறி, பாலின பாகுபாடு மற்றும் வர்க்க அடிப்படையிலான பாகுபாடு ஆகியவை இங்கிலாந்து கிரிக்கெட்டை தொடர்ந்து பாதிக்கின்றன என்று ஒரு சுயாதீன ஆணையம் கண்டறிந்துள்ளது.

ICEC எனப்படும் கிரிக்கெட்டில் ஈக்விட்டிக்கான சுதந்திர ஆணையத்தால் விளையாட்டின் நிலை குறித்த நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட அறிக்கை செவ்வாயன்று வெளியிடப்பட்டது. இனவெறி ஆங்கில விளையாட்டில் "வேரூன்றியது", பெண்கள் "இரண்டாம் தர குடிமக்களாக" நடத்தப்பட்டனர், மேலும் கிரிக்கெட் என்பது அரச பாடசாலைகளில் அரிதான விருப்பமாக இருந்தது.



பின்னர், சிக்கல்களைப் பற்றி யாராவது புகார் செய்ய விரும்பினால், ICEC அமைப்பு குழப்பமானது மற்றும் நோக்கத்துக்குப் பொருந்தவில்லை என்று கூறுகிறது.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபைத் தலைவர் ரிச்சர்ட் தோம்சன் பகிரங்க மன்னிப்புக் கோரினார். அறிக்கையை "விழித்தெழும் அழைப்பு" என்று விவரித்தார்.

"கிரிக்கெட்டிலிருந்து விலக்கப்பட்ட அல்லது தாங்கள் சொந்தம் இல்லை என உணர்ந்த எவரிடமும் நான் நிபந்தனையின்றி மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்" என்று தோம்சன் கூறினார். "அறிக்கையிலுள்ள சக்திவாய்ந்த முடிவுகள் நீண்டகாலமாக பெண்கள் மற்றும் கறுப்பின மக்கள் புறக்கணிக்கப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இதற்காக நாங்கள் உண்மையிலேயே வருந்துகிறோம்."

2008-18ஆம் ஆண்டுமுதல் நாட்டின் மிக வெற்றிகரமான கிளப்பில் இரண்டு எழுத்துப்பிழைகள் மூலம் இனரீதியான துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதலுக்கு ஆளானதாக முன்னாள் யார்ன்ஷயர் வீரர் அசீம் ரபிக் கூறியபோது, 2020+ஆம் ஆண்டில் இங்கிலாந்து கிரிக்கெட் அதிர்ந்தது.

2021ஆம் ஆண்டு பாராளுமன்ற விசாரணையில் கண்ணீர் மல்க சாட்சியமளிக்கும் போது, அவர் இஸ்லாமோஃபோபியா மற்றும் கொடுமைப்படுத்துதல் பற்றி பேசினார்.

"இனவெறியால் நான் என் தொழிலை இழந்தேன் என்று நான் நம்புகிறேனா? ஆம், நான் செய்கிறேன்" என்று ரபிக் விசாரணையில் கூறினார்.

பாரபட்சம் மற்றும் கிரிக்கெட்டில் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ECB இன் பரந்த அளவிலான முயற்சியின் ஒரு பகுதியாக நவம்பர் 2020 இல் ICEC நியமிக்கப்பட்டது. கண்டுபிடிப்புகள் ஆரம்பத்தில் கடந்த ஆண்டு அறிவிக்க திட்டமிடப்பட்டது.

அறிக்கை "தீர்மானமான நடவடிக்கைக்கு" அழைப்பு விடுக்கிறது, 44 பரிந்துரைகளையும் பல துணைப் பரிந்துரைகளையும் செய்கிறது. சில சீர்திருத்தங்கள் "விரைவாக செயல்படுத்தப்படலாம்" என்று ECB கூறியது, ஆனால் மற்றவை "இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் கிரிக்கெட்டில் அடிப்படை, நீண்ட கால மாற்றங்கள் மற்றும் அதன் நிதி மாதிரி" தேவைப்படும்.

ICEC நிர்ணயித்த காலக்கெடுவில், பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் கலந்தாலோசிக்கவும், செயல் திட்டத்தை உருவாக்கவும் ஆளும் குழு மூன்று மாதங்கள் எடுக்கும் என்று தோம்சன் கூறினார்.

"இது அனைவருக்கும் ஒரு விளையாட்டு என்பதை நிரூபிக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்துவோம், தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு இதை சரியாக வைக்கவேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது" என்று தோம்சன் கூறினார். "கிரிக்கெட் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் மிகவும் உள்ளடக்கிய விளையாட்டாக இருக்க வேண்டும் என்பதே எனது முழுமையான அர்ப்பணிப்பு."

கமிஷன் சிண்டி பட்ஸால் தலைமை தாங்கப்பட்டது, அவர் பல பாத்திரங்களில், சுயாதீன பொலிஸ் புகார்கள் ஆணையம் மற்றும் பாகுபாடு எதிர்ப்பு கால்பந்து தொண்டு நிறுவனமான கிக் இட் அவுட் ஆகியவற்றில் பதவிகளை வகித்துள்ளார்.

ICEC அனைத்து மட்டங்களிலும் உள்ளவர்களிடமிருந்து 4,000க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகளைப் பெற்றது. முந்தைய ஐந்து ஆண்டுகளில் பாகுபாட்டை அனுபவித்ததாக பாதி பேர் கூறியுள்ளனர். ஆனால், இனத்தால் பிரிக்கப்பட்டபோது புள்ளிவிவரங்கள் அதிகமாக இருந்தனஇ பாகிஸ்தானிய மற்றும் பங்களாதேஷிய பாரம்பரியம் கொண்ட 87% மக்கள், இந்திய பாரம்பரியம் கொண்ட மக்கள் 82% மற்றும் அனைத்து கறுப்பின பங்களிப்பாளர்களில் 75% பேர் பாதிக்கப்பட்டனர்.

"இந்த அனுபவங்களுக்காக நாங்கள் நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம், மேலும் ICEC உடன் அவற்றைப் பகிர்ந்துகொண்டவர்களின் தைரியத்திற்கு நன்றி தெரிவிக்கிறோம், அதேநேரத்தில் தங்கள் கணக்குகளை வழங்க முடியாமல் போனவர்கள் இன்னும் பலர் இருப்பார்கள் என்பதை அங்கீகரிக்கிறோம்" என்று தோம்சன் கூறினார்.

2018ஆம் ஆண்டிலிருந்து ஏற்கனவே "குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை" செய்துள்ளதாக ECB கூறியது. ஆனால், "அறிக்கை இன்னும் நிறைய செய்யவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது" என்றும் கூறினார்.

தலைமை நிர்வாக அதிகாரி ரிச்சர்ட் கோல்ட் மேலும் கூறுகையில், "கிரிக்கெட்டை மேலும் உள்ளடக்கியதாகவும், அது சேவை செய்யும் சமூகங்களைப் பிரதிபலிப்பதாகவும் மாற்றுவது எனது முதல் முன்னுரிமையாகும். இது ஒரு விரைவான தீர்வாக இருக்க முடியாது மற்றும் முடியாது. நாம் விரும்பும் விளையாட்டில் நம்பிக்கையை மீட்டெடுக்க ஒரு தலைமுறைக்கு ஒருமுறை கிடைக்கும் வாய்ப்பாக இதை நாம் பார்க்க வேண்டும்" என்றார்.

# ஜிம்னாஸ்ரிக்ஸ் நட்சத்திரம் சிமோன் மீண்டும் வருகிறார்



ஜிம்னாஸ்ரிக்ஸ் சூப்பர் ஸ்டார் ஓகஸ்ட் தொடக்கத்தில் சிக்காக்கோவுக்கு வெளியே யுஎஸ் கிளாசிக் போட்டியில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளார், இது தொற்றுநோயால் தாமதமான 2020 டோக்கியோ ஒலிம்பிக்குக்குப் பிறகு அவரது முதல் போட்டியாகும்.

ஏழு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்றவரும், 2016 ஒலிம்பிக் சம்பியனுமான பைல்ஸ், ஓகஸ்ட் 5ஆம் திகதி ஹாஃப்மேன் எஸ்டேட்ஸிலுள்ள NOW அரினாவில் நடைபெறும் ஒற்றை நாள் போட்டிக்கான பெண்கள் களத்தின் ஒரு பகுதியாக இருப்பதாக USA ஜிம்னாஸ்ரிக்ஸ் புதன்கிழமை அறிவித்தது.

2021ஆம் ஆண்டு கோடையில் ஜப்பானில் தங்கியிருந்ததைத் தொடர்ந்து பைல்ஸ் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெரும்பாலான விடுமுறையை எடுத்துள்ளார். அங்கு அவரது மனநலத்தில் கவனம் செலுத்துவதற்காக பல போட்டிகளிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள அவர் எடுத்த முடிவு விளையாட்டுகளிலிருந்து ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு கவனம் செலுத்தியது.

அவரது அமெரிக்க அணியினர் அணி வெள்ளி வென்றதால் அவர் ஒரு சியர்லீடராக பணியாற்றினார், பின்னர் "தி ட்விஸ்டிஸ்" என்று அழைக்கப்படும் ஜிம்னாஸ்ரிக்ஸில் ஒரு தடகள வீரர் தோல்வியுற்றதைக் கையாளும்போது அவர் தகுதிபெற்ற ஓல்ரவுண்ட், வோல்ட் மற்றும் ஃப்ளோர் உடற்பயிற்சி இறுதிப் போட்டிகளில் பங்கேற்றார்.

பைல்ஸ் பேலன்ஸ் பீம் பைனலுக்குத் திரும்பினார். அங்கு அவர் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றார். இது ஒரு அமெரிக்கப் பெண் ஜிம்னாஸ்ரிக் மூலம் அதிக ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற ஷானன் மில்லரின் சாதனையை சமன் செய்தது. அவர் பரிஸ் 2024 ஒலிம்பிக்கில் குறியாக உள்ளார்.

# 145 வருட டெஸ்ட் கிரிக்கெட்டில் தனித்துவமான சாதனை படைத்த நேதன் லயன்




இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தொடர்ச்சியாக 100 போட்டிகளில் விளையாடிய பந்து வீச்சாளர் என்ற சாதனையை நேதன் லயன் படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இருக்கும் புகழ்பெற்ற அடிலெய்ட் ஓவல் மைதானத்தின் பராமரிப்பாளராக கிரிக்கெட்டில் கால் பதித்த அவர், நாளடைவில் அதன் மீது அதிகப்படியான ஆர்வத்தால் விளையாட ஆரம்பித்து உள்ளூர்ப் போட்டிகளில் அசத்தி கடந்த 2011ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமானார். ஒருநாள் கிரிக்கெட்டில் 29 போட்டிகளுக்கு மேல் வாய்ப்பு பெறாவிட்டாலும் கிரிக்கெட்டின் உயிர்நாடியான டெஸ்ட் போட்டிகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வந்த அவர், சுழலுக்கு சாதகமற்ற அவுஸ்திரேலிய மைதானங்களில் வெற்றிகரமாக செயல்பட்டு நிரந்தர ஸ்பின்னராக உருவெடுத்தார்.

ஜாம்பவான் ஷேன் வார்னேவின் இடத்தில் பாதியை நிரப்பும் அளவுக்கு கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவின் வெற்றிகளில் பங்காற்றிவரும் அவர், 2023 டெஸ்ட் சம்பியன்ஷிப் ஃபைனலில் இந்தியாவை தோற்கடிப்பதற்கும் உதவினார். அந்தவகையில் இதுவரை 121 போட்டிகளில் 495 விக்கெட்டுகளை எடுத்துள்ள அவர், நவீன கிரிக்கெட்டில் ஜாம்பவானாக போற்றும் அளவுக்கு அசத்தி வருகிறார் என்றால் மிகையாகாது.

அந்த நிலையில் ஜூன் 28ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிய 2ஆவது ஆஷஸ் போட்டியில் களமிறங்கிய நேதன் லயன், 145 வருட டெஸ்ட் கிரிக்கெட்டில் இடைவெளியே இல்லாமல் தொடர்ந்து 100 போட்டிகளில் விளையாடிய முதல் பந்து வீச்சாளர் என்ற சரித்திர உலக சாதனையைப் படைத்துள்ளார். அதாவது, கடந்த 2011இல் அறிமுகமாகி ஆரம்பத்தில் நிலையற்ற வாய்ப்புகளைப் பெற்று அவர், கடந்த 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் ஆம் திகதி இதே இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் 3ஆவது போட்டியில் விளையாடினார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டி வரை கடந்த 10 வருடங்களில் அவுஸ்திரேலியா களமிறங்கிய 100 டெஸ்ட் போட்டிகளிலும் ஒன்றை கூட தவறவிடாமல் நேதன் லயன் விளையாடியுள்ளார். அந்தவகையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 போட்டிகளில் தொடர்ந்து விளையாடிய முதல் பவுலர் என்ற உலக சாதனையை அவர் படைத்துள்ளார்.

**தொடர்ச்சியாக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர்கள்**

அலெஸ்டர் குக் 159, அலன்போடர் 153, மாக்வுக் 109, சுனில் கவாஸ்கர் 106, பிரெட்டன் மக்கலம் 101

# ஹட்ரிக் சம்பியனாகும் முனைப்பில் அமெரிக்கா

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

உலகக்கிண்ண மகளிர் போட்டியில் தொடர்ச்சியாக இரண்டு முறை சம்பியனான அமெரிக்கா 3ஆவது முறையாக சம்பியனாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருசில முக்கிய வீரர்கள் இல்லாவிட்டாலும் கூட, யுனைடெட் ஸ்டேட்ஸ் பெண்கள் உலகக்கிண்ணத்தில் தந்திரமான வீரர்கள் மற்றும் ஆர்வமுள்ள புதியவர்களின் வலிமையான குழுவுடன் செல்கிறது. கடந்த இரண்டு உலகக்கிண்ணங்களையும் அமெரிக்கா வென்றுள்ளது.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவீடன் ஆகிய அணிகள் வலுவாக உள்ளன. டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற கனடாவும் வலுவாக உள்ளது.

உலகளவில் பெண்கள் கால்பந்தாட்டத்தின் வளர்ச்சியானது அதிக சமநிலையைக் குறிக்கிறது. அதாவது அமெரிக்கா மாற்றியமைக்க வேண்டியிருந்தது.

"உலகெங்கிலும் பல லீக்குகள் வீரர்களுக்கு அதிக ஊதியம் வழங்குகின்றன, அவை சீசன் முழுவதும் அடிக்கடி விளையாடுகின்றன, மேலும் நாங்கள் நீண்டகாலமாக போராடிவரும் தொழில்முறை வழியில் வீரர்களை நடத்துகிறோம், எனவே, அதில் நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டும்'' என்று ஸ்டார் ஃபார்வர்ட் அலெக்ஸ் மோர்கன் கூறினார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் நெதர்லாந்தை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த அமெரிக்கர்கள் இப்போது மிகவும் வித்தியாசமாகத் தெரிகிறார்கள்.

18 வயதான அலிசா தோம்சன் +, முன்னாள் NBA நட்சத்திரம் டென்னிஸ் ராட்மேனின் 20 வயது மகள் டிரினிட்டி ராட்மேன் ஆகியோர் அமெரிக்க அணியில் உள்ளனர்.




தேசிய மகளிர் கால்பந்து லீக்கின் போர்ட்லேண்ட் தோர்ன்ஸ் என்ற தனது கிளப்பிலும், தேசிய அணியிலும் விளையாடும் சோபியா ஸ்மித்தும் இருக்கிறார். வெறும் 22 வயதான அவர், கடந்த ஆண்டு NWSL மிகவும் மதிப்புமிக்க வீராங்கனையாகவும், US சாக்கர் சிறந்த வீராங்கனையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

25 வயதான ஸ்வான்சன், ஏப்ரல் தொடக்கத்தில் அயர்லாந்திற்கு எதிரான கண்காட்சிப் போட்டியின் போது இடது முழங்காலில் பட்டெல்லார் தசைநார் காயமடைவதற்கு முன்பு இந்த ஆண்டு அணியின் அதிக மதிப்பெண் பெற்றவராவார்.

23 வயதான மக்காரியோ கடந்த ஆண்டு பிரெஞ்சு கிளப்பான லியோனுக்காக விளையாடும்போது காயமடைந்தார். அவர் சரியான நேரத்தில் குணமடைய முயன்றார். உலகின் முன்னணி எலும்பியல் மருத்துவமனைகளில் ஒன்றான அஸ்பெடரில் கத்தாரில் சிகிச்சை பெற்றார். ஆனால், அவர் விளையாடுவதற்குத் தயாராக இல்லை.

மிகப் பெரிய இழப்பு கப்டன் பெக்கி சோர்ப்ரூன் ஆவார், அவர் ஏப்ரல் மாதம் வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ணத்திலிருந்து விலகினார்.

38 வயதான சௌர்ப்ரூன் மூன்று உலகக்கிண்ணம் மற்றும் மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் அணியின் பின்வரிசையின் வீரர் மட்டுமல்ல, சம ஊதியத்துக்கான போராட்டத்தை வழிநடத்தினார் மற்றும் தார்மீக திசைகாட்டியாக செயல்பட்டார், அடிக்கடி சமூக நீதி பிரச்சினைகளில் பேசுகிறார்.

ஒட்டுமொத்தமாக நான்கு உலகக் கிண்ணப் பட்டங்களை வென்றுள்ள அமெரிக்கா, எந்த நாட்டிலும் இல்லாத வகையில், அடுத்த மாதம் வியட்நாம், நெதர்லாந்து, போர்த்துக்கல் ஆகியவற்றுடன் குழு E இல் விளையாடுகிறது. போட்டிகள் முழுவதுமாக ஜூலை 20ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

தற்போது விற்பனையில்...
தரம் 4, 5 மாணவர்களுக்கான
ஜூனியர் தமிழன் புலமைப்பரிசில் வழிகாட்டி


நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்
வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்
மாதிரி வினாத்தாள்
தொடர்புகளுக்கு 0768313896
விலை ரூ.60 மட்டுமே

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இரு மனங்கள் இணையும் திருமணத்திற்காக...

VIVAHA
விவாஹா
# விவாஹா

மலர் :1 இதழ் : 38- 02.07.2023

**கழுத்தில் அவலட்சணமாக இருக்கும் கருமையை போக்க ...**

**மாங்கல்ய தோஷம், களத்திர தோஷம் காரணமும் பரிகாரங்களும்...**

**பெண்கள் விரும்பும் முத்து நகைகள்**



Suresh
Selvi



# கழுத்தில் அவலட்சணமாக இருக்கும் கருமையைப் போக்க ...


















சிலருக்கு முகம் என்னதான் அழகாகவும், நிறமாகவும் இருந்தாலும்கூட கழுத்திலுள்ள கருவளையங்கள் அவர்களது அழகையே சீர்குலைப்பதாக இருக்கும். வெயிலில் அதிகநேரம் அலைவதாலும் செயின் போன்றவற்றை அணிவதாலும் கழுத்தில் கருமையாகிவிடுகிறது. இந்தக் கருமையை வெறும் சோப்புகொண்டு போக்குவது கடினம். அதேசமயம் நீங்கள் முகத்துக்கு என்னதான் அலங்காரம் செய்திருந்தாலும் கூட கழுத்தில் கருவளையங்கள் இருந்தால் உங்களது முகத்தை யாரும் பார்க்க மாட்டார்கள்.

கழுத்து என்ன இவ்வளவு அவலட்சணமாக இருக்கிறது என்றுதான் மனதுக்குள் நினைத்துக் கொள்வார்கள். இத்தகைய தர்மசங்கடமான நிலை உங்களுக்குத் தேவைதானா? எனவேதான் உங்களுக்காக இந்தப் பகுதியில் சில இயற்கைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி உங்களது கழுத்திலுள்ள கருவளையங்களைப் போக்கிக்கொள்ளுங்கள். இதனை தொடர்ந்து செய்துவரும்போது நல்ல பலன் கண்கூடாக தெரியும்.

**1. கற்றாழை :**

கற்றாழை ஜெல்லில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் ஏராளமாக நிறைந்துள்ளன. மேலும் இது சிறந்த ஸ்கின் லைட்னரும் கூட. எனவே, இந்த ஜெல்லை கழுத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து பின் வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இல்லாவிட்டால், தினமும் இரவில் படுக்கும் முன் கற்றாழை ஜெல்லை கழுத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவலாம். இப்படி தினமும் செய்துவந்தால் நல்ல மாற்றத்தை நீங்களே காண்பீர்கள்.

**2. எலுமிச்சைச் சாறு :**

பாதி எலுமிச்சையைப் பிழிந்து சாறு எடுத்து அதில் சிறிது தண்ணீர் கலந்து கழுத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால் அதிலுள்ள ப்ளீச்சிங் தன்மையினால் கழுத்திலுள்ள கருமை அகலும்.

**3. வெள்ளரிக்காய் :**

வெள்ளரிக்காய் சருமத்திலுள்ள இறந்த செல்களை நீக்க உதவும். எனவே, வெள்ளரிக்காய் சாறு மற்றும் எலுமிச்சைச் சாற்றை சரிசம அளவில் எடுத்து ஒன்றாகக் கலந்து கழுத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து பின் நீரில் கழுவ வேண்டும்.

**4. பேக்கிங் சோடா:**

4-5 டேபிள் ஸ்பூன் பேக்கிங் சோடாவை 1-2 டேபிள் ஸ்பூன் நீருடன் கலந்து பேஸ்ட் செய்து கழுத்தில் தடவி உலர வைத்து பின் நீரில் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் கருமைகள் வெளியேற்றப்படும்.

**5. தேன் :**

1/2 ரீஸ்பூன் பட்டை பொடியில் ஒரு டேபிள் ஸ்பூன் தேன் கலந்து கழுத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இந்த முறையால் கழுத்திலுள்ள கருமை நீங்குவதோடு தழும்புகள் இருந்தாலும் மறைந்துவிடும்.

**6. ஆரஞ்சு தோல் :**

ஆரஞ்சு தோல் சரும செல்களை புதுப்பிக்க உதவும். மேலும், இது சிறந்த ஸ்கரப்பரும் கூட. எனவே, சிறிது ஆரஞ்சு பொடியில் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து கழுத்தில் தடவி சிறிதுநேரம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**7. தக்காளிச் சாறு :**

தக்காளிச் சாற்றை எடுத்து அதனை கழுத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால் கழுத்தி லுள்ள கருமை மறைந்து விடும்.

**8. அப்பிள் சீடர் வினிகர் :**

அப்பிள் சீடர் வினிகரை நீரில் சரிசம அளவில் கலந்து பருத்தித் துணியை அதில் நனைத்தெடுத்து கழுத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு இரண்டு முறை தினமும் பின்பற்றி வந்தால் விரைவில் கழுத்திலுள்ள கருமை மறையும்.

**9. இளநீர் :**

இளநீர் கூட கழுத்து கருமையை மறைக்க உதவும். அதற்கு இளநீரை கழுத்தில் தினமும் தடவி உலர வைத்து பின் கழுவ வேண்டும். இதனால் கழுத்திலுள்ள கருமை மட்டுமல்லாமல் தழும்புகளும் மறையும்.

**10. சந்தனப் பொடி :**

பொதுவாக சருமத்தின் நிறம் அதிகரிக்க சந்தனப் பொடி கொண்டு பேஸ் பேக் போடப்படும். அத்தகைய சந்தனப் பொடியை கழுத்தில் தடவி வர கழுத்திலுள்ள கருமை வேகமாக மறையும். அதற்கு இரவில் படுக்கும் முன் சந்தனப் பொடியை ரோஸ் வாட்டர் கலந்து பேஸ்ட் செய்து கழுத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வர கழுத்திலுள்ள கருமை நீங்கும்.

**11. கோதுமை மாவு :**

கோதுமை மாவு, ஓட்ஸ் பவுடர், பாசிப்பயறு மாவு - இந்த மூன்றையும் சமமாக எடுத்து பாலுடன் கட்டியாகக் குழைத்துக்கொள்ளவும். அதை கழுத்தில் தடவி சில நிமிடங்கள் மசாஜ் செய்து 20 நிமிடம் அப்படியே விட்டு விடுங்கள். பிறகு கழுவிக்கொள்ளவும்.

**12. பப்பாளிப் பழம் :**

பப்பாளிப்பழத்தின் தோல், எலுமிச்சை பழத்தோல், ஆரஞ்சு பழத்தோல் - இதில் ஏதாவது ஒன்றை நன்றாக அழுத்தி கழுத்தில் தேய்த்து வந்தால் படிப்படியாக கருமை நிறம் மறையும்.

**13. முட்டைகோஸ் :**

முட்டைகோஸை அரைத்து அந்தச் சாறையும் கருப்பாக நிறம் மாறிய கழுத்தில் தேய்க்கலாம். இதனுடன் சிறிது தேன் அல்லது எலுமிச்சைச் சாறு கலந்து தேய்ப்பது கழுத்து கருமையை போக்குவதோடு மினுமினுப்பையும் தரும்.

**14. பாசிப்பயறு மாவு**

பாசிப்பயறு மாவு, ஒலிவ் எண்ணெய், ரோஸ் வாட்டர் இவற்றை ஒன்றாக கலந்து கழுத்தில் பூசினாலும் கருமை நிறம் படிப்படியாக மறையும்.

**15. பால் / தேன் :**

சிறிது பால், தேன், எலுமிச்சைச் சாறு கலந்து கழுத்தில் தடவி 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் அலசி விடவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் கழுத்து நிறம் படிப்படியாக மாறுவதை காணலாம்.

**16. மைதா மாவு :**

வாரத்திற்கு மூன்று முறை மைதா மாவில் வெண்ணெய் கலந்து கழுத்தை சுற்றி நன்கு பசை போல் தடவி முப்பது நிமிடம் கழித்து கழுத்தை கழுவ கழுத்தில் ஏற்பட்ட கருமை போகும் .

**17. வெண்ணெய் :**

வெண்ணெயுடன் கோதுமை மாவை கலந்து நன்கு பசை போல் கழுத்தை சுற்றி தடவி விட்டு முப்பது நிமிடம் கழித்து கழுத்தை கழுவினால் கழுத்தின் கருமை நீங்கும்.

# மாங்கல்ய தோஷம், களத்திர தோஷம்

# காரணமும் பரிகாரங்களும்..!

பொதுவாக ஆணுக்கு 25 வயதுக்குள்ளும், பெண்ணுக்கு 21 வயதுக்குள்ளும் திருமணம் நடைபெறுவது நல்லது. ஆனால், எல்லோருக்கும் அப்படி நடந்துவிடுவதில்லை. பொருளாதாரச் சூழல் காரணமாக இருக்கலாம். அதேநேரம், வசதி வாய்ப்புகள் பெற்றிருந்தாலும் சிலருக்கு உரிய வயதில் திருமணம் நடைபெறுவதில்லை. ஜோதிட ரீதியாகப் பார்த்தால், இந்த நிலைக்கு களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் போன்ற தோஷங்கள் காரணமாக இருக்கலாம். இத்தகைய தோஷங்கள் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் பரிகாரங்களை பார்ப்போம்.



கல்யாணமாகி ஒரு பெண் வீட்டுக்கு வந்தாலோ அல்லது நம் வீட்டிலேயே ஒரு பெண் கல்யாணத்துக்கு தயாராக இருந்தாலோ அந்தப் பெண்ணின் ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம் இருக்கிறதா என்று முதலில் பார்க்கவேண்டும். சுமங்கலியாக இறந்த பெண்ணுக்கு வருடாவருடம் சுமங்கலி பூஜை செய்யாமல் இருந்தால் இந்தத் தோஷம் ஏற்படும். (நம் பித்ருக்களுக்கு திதி கொடுக்காமல் இருந்தால், எப்படி பித்ரு தோஷம் ஏற்படுமோ அப்படி)

கல்யாணம் ஆகாமல் இருந்தாலோ, திருமணமாகி ஒரு பெண் புகுந்த வீட்டுக்குச் சென்றாலோ கணவனுக்கு அல்லது மாமனார், மாமியாருக்கு மாங்கல்ய தோஷத்தின் மூலமாக அசௌகரியங்கள் ஏற்படலாம்.

### மாங்கல்ய தோஷத்துக்கு உரிய பரிகாரம் என்ன?

★ வீட்டில் சுக்லபக்ஷ வெள்ளிக்கிழமையிலோ, அஷ்டமி, நவமி இல்லாத ஒரு சுத்தமான சுப நாளிலோ சுமங்கலி பூஜை செய்யவேண்டும்.

★ வீட்டில் ஒரு வெள்ளிக்கிழமை, மகாலக்ஷ்மி பூஜை செய்து சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், ரவிக்கைத் துணி, முகம் பார்க்கும் கண்ணாடி, சீப்பு, பூ, பழம், வெற்றிலைப் பாக்கு, சந்தனம் ஆகியவற்றை தானம் செய்து அறுசுவை உணவு படைத்து அவர்களை நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் பெற்றால் இந்தத் தோஷம் நீங்கும்

★ மிருத்யுஞ்சய ஹோமமும் ஜபமும் வீட்டில் செய்தால் இந்தத் தோஷத்துக்கு சிறந்த பரிகாரமாக விளங்கி விசேட பலன்களைத் தரும்.

### களத்திர தோஷமும் அதற்குரிய பரிகாரங்களும்

மாங்கல்ய தோஷம் போலவே, களத்திர தோஷமும் திருமணத்தின்போது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். களத்திர தோஷம் ஏன் ஏற்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

★ லக்னம், சந்திரன், சுக்கிரன் இவர்கள் இருக்கும் இடத்திலிருந்து 1, 2, 4, 7 , 8, 12 ஆகிய இடங்களில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்கள் இருந்தால் அல்லது சேர்ந்திருந்தால் இந்தத் தோஷம் ஏற்படும்.

★ 4ஆம் இடத்தில் சனி, செவ்வாய், ராகு அல்லது கேது சேர்ந்திருந்தாலும், 2, 7ஆம் இடத்து அதிபதிகளும், சுக்கிரனும் கூடி பாவ கிரகங்களுடன் சேர்ந்து 6, 8, 12ஆம் இடத்தில் இருந்தாலும் களத்திர தோஷமாகும்.

★ சுக்கிரனுடன் சூரியன், சனி அல்லது ராகு, கேதுவுடன் கூடி இருந்தாலும், 7ஆம் இடம் பாவ கிரகங்களின் வீடாகி அதில் சுக்கிரன் இருந்தாலும், மிகவும் பாதகமான களத்திர தோஷமாகும்.

இந்தத் தோஷம் 10இல் 6 ஜாதகங்களில் இருக்கும். கீழ்க்கண்ட பரிகாரங்களைச் செய்து தங்களது மணவாழ்க்கையை நல்லவிதமாக அமைத்துக்கொள்ளலாம்.

### பரிகாரங்கள் :

முதலில் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று முறைப்படி வழிபாடு செய்து, வீட்டில் சுமங்கலி பூஜை செய்யவேண்டும்.

★ ஸ்ரீ ரங்கநாயகி தாயாருக்கு பங்குனி மாதம் வரும் வளர்பிறை வெள்ளிக்கிழமையில் திருமாங்கல்யமும், மஞ்சள் பட்டு பாவாடையும் சாத்தி ஒரு மஞ்சள் சரடும் பாதத்தில் வைத்து வாங்கி வந்து வீட்டு பூஜை அறையில் வைக்கவேண்டும். இதைத் தொடர்ந்து ஆறு வெள்ளிக்கிழமைகள் மகாலக்ஷ்மி ஸ்தோத்ரம் சொல்லி வந்தால், இந்தத் தோஷம் நீங்கி சீக்கிரம் திருமணம் நடைபெறும்.

### ஆண்களின் ஜாதகத்தில் ஏற்படும் களத்திர தோஷம்:

ஆண்களின் ஜாதகத்தில் ஏற்படும் களத்திர தோஷம் என்பது மேலே சொன்ன தோஷங்களோடு சூரியன், சுக்கிரன் இருவரும் 5, 7, 9ஆம் வீட்டில் இருந்தாலும், சூரியன், ராகு அல்லது கேது சேர்ந்து 7ஆம் வீட்டில் இருந்தாலும் 2ஆம் வீடு பாதகப்பட்டாலும் ஏற்படும்.

### பரிகாரங்கள்:

சூரியனால் தோஷம் ஏற்பட்டால், உங்கள் வீட்டுக்கு அருகாமையிலுள்ள கோயிலுக்குச் செப்புப் பாத்திரங்கள் வாங்கிக் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

களத்திர தோஷங்களுக்கு, நவகிரக ஹோமங்கள் செய்வதும், வெள்ளிக்கிழமைகளில் வரும் பௌர்ணமிகளில் சத்யநாராயண பூஜை செய்வதும் நல்ல பலனை அளிக்கும்.




Ajinthan photography

Aji Studio

0758535267.

0777865696

# பெண்கள் விரும்பும் முத்து நகைகள்



வெள்ளை முத்துகளை மட்டுமல்லாமல், வண்ண முத்துகளையும் நகைகளாகச் செய்து ஆடைகளுக்கு ஏற்றவாறு அணிந்துகொள்வதும் பிரபலமாகி வருகின்றது என்றே சொல்லலாம்.

தங்கம், வெள்ளி, வைரம், பிளாட்டினம் என எத்தனையோ வகையான நகைகள் இருந்தாலும் முத்துகளால் செய்யப்பட்ட நகைகளுக்கு எப்பொழுதுமே தனி மவுசு இருக்கத்தான் செய்கின்றது. பொதுவாக முத்துகள் வெள்ளை, சந்தன நிறம் மற்றும் சாம்பல் வண்ணத்தில் இருக்கும். ஆனால், முத்துகளில் ஊதா, கறுப்பு, இளஞ்சிவப்பு, பச்சை, ஷாம்பெயின், சாக்லேட், நீலம் மற்றும் லாவெண்டர் நிறங்களும் உள்ளன.





நீர்வாழ் உயிரினமான மெல்லுடலியில் (மொலுஸ்க்) இருந்தே இயற்கை முத்தானது உருவாகின்றது. ஊதா நிற முத்துகளே அரிய வகையான முத்துகளாகக் கருதப்படுகின்றன.

முத்துகளால் செய்த நகைகள் என்று எடுத்துக்கொண்டால் முத்து மூக்குத்தி, முத்து வளையல், முத்து நெக்லஸ், முத்து மாலை, முத்து ஆரம், முத்து கம்மல், முத்து ஜிமிக்கி என்று சொல்லிக்கொண்டே போகலாம். அளவில் பெரியதாக இருக்கும் முத்துகளை ஒவ்வொன்றாகக் கோர்த்து அதற்கு தங்கத்தால் செய்த மயில், சந்திரன், லட்சுமி போன்ற டொலர்களில் கற்கள் பதித்து அவற்றின் கீழ்ப்புறத்தில் சிறிய முத்துச் சலங்கைகள் தொங்குவதுபோல் வடிவமைக்கப்பட்டிருப்பது எந்தவித விழாக்களுக்கும் அணிந்து செல்ல ஏற்றவையாக இருக்கும்.

நடுத்தர அளவிலிருக்கும் முத்துகள் அல்லது சிறிய முத்துகளை இரண்டு மூன்று சரங்களாகக் கோர்த்து அவற்றுக்கு தங்கத்தால் செய்த பெரிய டொலர்கள் இருப்பதுபோல் இருக்கும் முத்து மாலைகளை அணியும்போது கம்பீரமான தோற்றத்தைத் தருவதாகவே இருக்கும். இந்த முத்துச் சரங்களை இணைத்து இடையில் வரும் தங்க முகப்புகள் சிறிய அளவாக இருந்தால் அதே டிசைனில் டொலரானது பெரியளவில் இருப்பதுபோன்று வருபவை பிளெயின் பட்டுச்சேலைகளுடன் அணியும்போது பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று சொல்லலாம்.

முத்துகள் தங்கக் கம்பிகளில் கோர்க்கப்பட்டு இரண்டு சரங்களாக வர இவற்றின் இடையில் தங்கக் குண்டுகளைக் கோர்த்த மிளகுச் சரமானது வர அவற்றிற்கு பக்கவாட்டில் யானைகள் தும்பிக்கையை தூக்கி இருக்க, தாமரையில் அமர்ந்திருக்கும் லட்சுமி டொலரின் கீழே முத்துகள் இரண்டு அடுக்குகளாகத் தொங்குவதுபோல் இருக்கும். முத்து ஆரங்களை முத்து ஜிமிக்கிகளுடன் அணிந்தால் அவற்றின் அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்று சொல்லலாம்.

மிகச்சிறிய முத்துகளைக் கொத்துக் கொத்தாகக் கோர்த்து செய்யப்படும் மாலைகளுக்கு இரட்டை டொலர்களுடன், அதற்கு ஏற்ற ஜிமிக்கிகளும் அணியும்போது ஒரு மிரட்டலான, அழகான தோற்றத்தைத் தரும்.

இதுபோன்ற சிறிய முத்துகளைக் கோர்த்து வருபவற்றை லோரியல்கள் என்றும் அழைக்கிறார்கள்.

முத்துகளோடு தங்கம், பவளம், மரகதம், வெள்ளை மற்றும் சிகப்புக் கற்களும் சேர்த்து மிகவும் அருமையான மொடல்களில் மாலைகள், நெக்லஸ்கள், பதக்கங்கள், காதணிகள், வளையல்கள் போன்றவை செய்யப்படுவது பிரமிப்பான தோற்றத்தைத் தரும்.

முத்துகளை ஆங்கில எழுத்துகளில் பதித்து செய்யப்படும் நெக்லஸ்கள் இன்றைய இளைய தலைமுறையினரிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. முத்துகளால் செய்யப்படும் ஒற்றை, இரட்டை மற்றும் மூன்று அடுக்கு மொடல்களும், முத்தால் செய்யப்பட்ட சோக்கர் செட்டுகளும், முத்து பிரேஸ்லெட்டுகளும் அப்பப்பா என்று புருவத்தை உயர்த்தும் அளவுக்கு எண்ணற்ற டிசைன்களில் வந்துள்ளன.

தங்கக் குண்டும், முத்தும் குறிப்பிட்ட இடைவெளியில் கோர்க்கப்பட்டு இருக்கும் தங்க மாலையில் பச்சைக் கல்லை நடுவே பதித்து சுற்றியும் சிறிய வெள்ளைக் கற்கள் பதித்த முகப்பு. அந்த முகப்பில் முதல் சரமும், மூன்றாவது சரமும் தங்கக் குண்டுகளும் முத்துக் குண்டுகளும் கோர்த்து மேலே கூறிய மாலையைப் போலவே இருக்க, நடுவில் முகப்பிலிருந்து வரும் சரத்தில் முகப்பைப் போன்றே சிறிய அளவிலான கற்கள் பதித்த டிசைன்கள் கோர்க்கப்பட்டு அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பதக்கம் முகப்பு டிசைனிலேயே அதே அளவில் இருப்பது புதுமையாகவும், அட்டகாசமாகவும் இருக்கும்.

முத்துகள் பதித்த ஸ்டைலிஷான பென்டெண்டுகள் சிறிய அளவிலிருந்து பெரிய அளவு வரை தனியாக விற்கப்படுகின்றன. அவற்றை நம் விருப்பத்திற்கேற்ப தங்கச் மாலையிலோ அல்லது வெள்ளி மாலையிலோ அணிந்துகொள்வதும் இன்றைய இளம் பெண்களிடையே பிரபலமாகி வருகின்றது.

ஒரேயொரு பெரிய முத்தை மெல்லிய மாலையில், கழுத்தை ஒட்டி அணிந்துகொள்வதும், பேஷனாகவே உள்ளது. முத்துகளை வைத்து செய்யப்படும் பெஷன் நகைகளுக்கு இளம் பெண்கள் மட்டுமல்லாமல், நடுத்தர வயதுப் பெண்களும் அதிக ஆதரவைத் தருவதோடு அணிந்துகொள்ளவும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

வெள்ளை முத்துகளை மட்டுமல்லாமல் வண்ண முத்துகளையும் நகைகளாகச் செய்து அணிந்துகொள்ளும் ஆடைகளுக்கு ஏற்றவாறு அணிந்துகொள்வதும் பிரபலமாகி வருகின்றது என்றே சொல்லலாம்.

# ஆயில்ய நட்சத்திரப் பெண்ணை

# திருமணம் செய்யலாமா?

திருமணப் பேச்சுவார்த்தை எடுத்ததும் திருமணத்துக்கான ஆணுக்கு மற்றும் பெண்ணுக்கு சேரும் ராசி, நட்சத்திரமென அவர்களின் ஜாதகத்திலேயே எழுதிக்கொடுத்து அனுப்பக்கூடிய காலமாக தற்போது உள்ளது.

அதிலும் சில நட்சத்திரங்களில் பிறந்த பெண்களுக்கு மாப்பிள்ளை வீட்டாருக்கு ஆகாதென தட்டிக்கழிக்கப்படுகிறது.

அந்தவகையில் இங்கு கடக ராசியில் இடம்பெறக்கூடிய ஆயில்ய நட்சத்திரம் 3ஆம், 4ஆம் பாதத்தில் பிறந்த பெண்கள் ஒதுக்கப்படுவது வாடிக்கையாகி வருகிறது.

### ஆயில்ய நட்சத்திரத்தின் பெருமை:

மகாவிஷ்ணு இராமாவதாரம் எடுத்தபோது, ராமனை விட்டு எப்போதும் பிரியாதவராக ராமனின் பணிகளை சிரமேற்கொண்டு செய்தவர் ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த லட்சுமணன்.

மகாவிஷ்ணு ராமாவதாரம் எடுக்கும்போது தன்னுடன் ஆதிசேஷன், சங்கு, சக்கரம் ஆகியோரை தன்னுடன் இருக்கும்படி செய்தார். அதாவது ஆதிசேஷன் லட்சுமணனாகவும், பஞ்சஜான்யம் எனும் சங்கு பரதனாகவும், சக்கரம் சத்ருகனனாகவும் பிறந்தனர்.

ஜோதிடத்தின்படி ஆயில்ய நட்சத்திரத்தின் அதிபதி புதன். நட்சத்திரத்தின் அதிதேவதை நாகம். இப்படிப்பட்ட மிக புனிதமான நட்சத்திரங்களை ஏன் தோஷ நட்சத்திரமாக பார்க்கின்றனர்?

கடக ராசி ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணை திருமணம் செய்தால், மாமியாருக்கு ஆகாதென மணமகன் வீட்டார் ஒதுக்குகின்றனர்.

### ஆயில்ய நட்சத்திரத்தினர் எப்படிப்பட்டவர்கள்?

கடக ராசியில் இருக்கும் ஆயில்யம் 3ஆம், 4ஆம் பாதம் கொண்ட பெண்களுக்கு அவர்களின் திருமணப் பருவ காலத்தில் சுக்கிர திசை நடக்கும்.

குறிப்பாக, ஆயில்யம் 4ஆம் பாதம் அம்சத்தில் உச்சமாக இருக்கும். சுக்கிர திசை நல்ல முறையில் இருப்பின், அந்தப் பெண்ணுக்கு சுக்கிர திசை நல்ல பலனையே தரும்.

அதிதேவதை நாகம் என்பதால் பாம்பின் வழியில் குறுக்கிட்டால் அதன் குணமான சீறுதல், கொத்துதல் என இருப்பர். அத்தோடு எவரையும் மதிக்காத குணம், அலட்சியப்படுத்தும் குணம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

இருப்பினும், இந்தக் குணம் உடைய ஆணாக இருந்தால் சமூகத்தில் 'கௌரவமானவர்' என்றும், அதுவே பெண்ணாக இருந்தால் 'அடங்காப்பிடாரி,



திருமிருபிடித்தவள்' என்ற எண்ணத்தைத் தருகிறது.

### ஆயில்ய நட்சத்திரம் மாமியாரின் உயிரைப் பாதிக்குமா?

கலகலப்பாக பேசி பழக்கக்கூடியவராக இருக்கும் ஆயில்ய நட்சத்திரத்தினர், தன் இயல்பான பேச்சு, பழகும் தன்மையால் திருமணத்துக்குப் பின்னர் தன் கணவரை தன் சொல்படி கேட்க வைத்துவிடுவார்.

சுக போகத்தையும், செல்வத்தையும் வாரி வழங்கக்கூடிய சுக்கிர திசை நடக்கும் காலம் என்பதால், தன் மனைவி வந்த பின்னர்தான் தனக்கு அதிர்ஷ்டங்கள் அடிக்கின்றன என எண்ணி கணவர் தன் மனைவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார். மனைவியின் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை என்பதுபோல் நடந்துகொள்வார். அதேபோல் மனைவியும் கணவருக்குத்தான் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார். மாமியாருக்கு இரண்டாம் பட்சமாகத்தான் இருப்பார்.

இவர்கள் சற்று தூக்கப்பிரியர்கள். அதனால் காலையில் நேரம் கழித்து எழுந்திருப்பது மாமியாருக்குப் பிடிக்காது. இவர்கள் மிகவும் சுத்தம் பார்ப்பவராக இருப்பதால் மாமியார் - மருமகள் இடையே அவ்வப்போது பிரச்சினைகள் வந்துகொண்டே இருக்கும்.

கடக ராசி தாயைக் குறிக்கும் ராசி என்பதோடு சந்திர கிரகத்தை அதிபதியாக கொண்டது. எனவே, கடக ராசியினர் எப்போதும் தாய்ப்பாசம் அதிகம் உடையவராக இருப்பார்கள். தாய்வீட்டுப் பெருமை பேசுவார்கள்.

### ஆயில்யம் 4ஆம் பாதம்

ஆயில்ய நட்சத்திரத்தில் ஆயில்யம் 3ஆம் பாதத்தை விட 4ஆம் பாதம் அமைந்திருந்தால் கவனத்திற்குரியதாக இருக்கிறது. நவாம்ச கட்டத்தில் ஆயில்ய நட்சத்திரம் 4ஆம் பாதம் மீன ராசியில் வரும். அதாவது, சுக்கிரன் உச்சமடையும் ராசி மீன ராசி என்பதால், ஆயில்ய நட்சத்திரப் பெண்ணை திருமணம் செய்பவர்கள் மனைவி பேச்சை தட்டாமல் நடப்பவராக, மனைவி கிழித்த கோட்டை தாண்டாத நபராக இருப்பார்கள்.

தன் மகனை பொண்டாட்டி தாசன் ஆக்கிவிட்டாளே என்றும் கணவரை மதிக்கத் தெரிந்த அளவுக்கு மாமியாருக்கு அடிபணியமாட்டேன் என்கிறாளே என்ற எண்ணத்தால்தான் ஆயிலிய நட்சத்திரப் பெண்ணை தோஷம் எனக் கூறி விலக்கிவைத்து வருகின்றனர்.

### ஆயில்ய நட்சத்திரப் பெண்ணை திருமணம் செய்யலாமா?

திருமணம் என்பது கணவன் - மனைவி சேர்ந்து இல்லற சுகத்தைத் தாண்டி, இல்லற இன்ப துன்பங்களைக் கையாண்டு சமூகத்தில் வெற்றிநடை போடவேண்டும் என்பதுதானே.

அப்படி கணவன் - மனைவி இருவரும் இணைபிரியாமல் ஒட்டி வாழும் எண்ணம் கொண்டதுதான் ஆயில்யம். ஆயில்ய நட்சத்திரப் பெண் கணவரை விட்டுக்கொடுக்காத - கணவருடன் அதிக அன்பை செலுத்தக்கூடிய நபராக இருப்பார். அதனால் ஆயில்ய நட்சத்திரம் கொண்ட பெண்ணை திருமணம் செய்வதில் தவறே இல்லை. எந்தத் தோஷமும் இல்லை.

மற்றபடி ஆயில்ய நட்சத்திரப் பெண்ணை திருமணம் செய்தால் மாமியாரின் உயிருக்கு ஆபத்து இல்லை.மாமியாரின் ஆயுள் பாவம் நன்றாக இருப்பின், அவரின் உயிருக்கு எந்தப் பாதிப்பும் இருக்காது. உண்மையில் தன் மகன் நன்றாக வாழவேண்டும் என்று விரும்பும் தாய், ஆயில்ய நட்சத்திரப் பெண்ணை ஒதுக்காமல் இருப்பது நல்லது.

# திருமண பால்மரம் பொருத்தம் என்றால் என்ன?

திருமணப் பொருத்தத்தில் முக்கிய பொருத்தங்களாக தற்போது 10 பொருத்தங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் மகேந்திர பொருத்தம் எனும் குழந்தை பாக்கியத்தை அருளும் பால் பொருத்தம் குறித்தும், திருமணத்துக்கான எளிய பரிகாரம் மற்றும் மந்திரம் குறித்தும் விரிவாக இந்தப் பதிவில் பார்ப்போம்.

திருமண பால்மரம் பொருத்தம் என்றால் என்ன?

பால் பொருத்தம் எனும் விருட்ச பொருத்தம் தன் பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய தீர்மானித்ததும் தன் பிள்ளைக்கு வரக்கூடிய வரனின் ஜாதகத்துடன் திருமணப் பொருத்தம் பார்த்து பொருத்தம் சிறப்பாக இருந்தால் திருமணம் செய்வது வழக்கம்.

பெரும்பாலானோர் 10 பொருத்தங்களைப் பார்ப்பது வழக்கம். இதில் முக்கியமான திருமணப் பொருத்தங்களில் ஒன்றுதான் பால் பொருத்தம்.

பால் பொருத்தம் என்பது விருட்ச பொருத்தம் அல்லது புத்திர பாக்கியத்தைக் குறிக்கும் என ஜோதிட விதி கூறுகிறது.

ஜோதிடத்தில் ஒவ்வொரு ராசிக்கும், ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் ஒரு மரம் உள்ளது. திருமணப் பொருத்தத்தைப் பார்க்கும்போது இந்த ஆண் மற்றும் பெண்ணின் ராசி, நட்சத்திரத்துக்கான பால்மரம் அமையும் என்பதைப் பொறுத்துத்தான் புத்திர பாக்கியம் உறுதியாகும். அதனால் பொருத்தத்தில் ஆண், பெண் இருவருக்கும் பால்மரம் அமைந்தால் மிகவும் நல்லது.

27 நட்சத்திரங்களுக்கான பால்மரம் என்ன என்ற பட்டியலைப் பார்ப்போம்.



**பால்மரம் உள்ள நட்சத்திரங்கள்**

| | |
|---|---|
| அசுவினி – எட்டி | சுவாதி – மருதம் |
| பரணி – நெல்லி | விசாகம் – விளா |
| மிருகசீரிடம் – கருங்காலி | அனுஷம் – மகிழ் |
| திருவாதிரை – செங்கருங்காலி | அவிட்டம் – வன்னி |
| புனர்பூசம் – மூங்கில் | சதயம் – கடம்பு |
| சித்திரை – வில்வம் | உத்திரட்டாதி – வேம்பு |

# தாலி பிரித்து கோர்த்தல்



திருமணத்துக்குப் பிறகு வரும் ஒற்றைப்படை (1, 3, 5) மாதங்களில் உறவினர்கள் மற்றும் அக்கம்பக்கத்தினரை அழைத்து தாலி பிரித்து கோர்க்கும் சம்பிரதாயம் நடத்தப்படுவது தொன்றுதொட்டே பின்பற்றிவரும் நடைமுறையாகும்.

இந்த தாலி பிரித்துக் கோர்க்கும் நாளன்று திருமணத்துக்கு எடுத்த பட்டுப்புடவை மற்றும் வேட்டியை புதுமணத் தம்பதியினர் உடுத்திக்கொள்ள வேண்டும். அதன்பின் நல்ல நேரம் பார்த்து தம்பதியினரை கிழக்கு முகமாக மணப்பாயில் உட்கார வைக்கவேண்டும்.

மணப்பெண் கழுத்தில் இருக்கும் தாலிக்குப் பதிலாக ஒரு மஞ்சள் கயிற்றை கட்டிவிட்டு, திருமணத்தின்போது மாப்பிள்ளை கட்டிய தாலியை அவிழ்த்து அதில் காசு, முத்து, பவளம், குண்டு, ஞானக்குழாய் போன்றவற்றை மஞ்சள் கயிறு அல்லது செயினுடன் சேர்த்து கட்டிவிடப்படும்.



அதன்பின்னர் சுமங்கலிப் பெண்கள் ஒவ்வொருவராக வந்து தம்பதியினரை மஞ்சள், குங்குமம் வைத்துவிட்டு மாங்கல்யத்துக்கும் பூ, மஞ்சள், குங்குமம் வைத்து எல்லோரும் அட்சதை தூவி ஆசீர்வாதம் செய்வர். நல்ல நேரம் முடிவதற்குள் ஆரத்தி எடுத்து முடித்துவிடுவார்கள்.

புது செயினில் திருமாங்கல்யத்தை அணிந்துகொண்டபின், சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய், புஷ்பம் இவற்றுடன் ஒரு ஜாக்கெட் துண்டு வைத்துக்கொடுத்து அவர்களுக்கு சாப்பாடு பரிமாறி அனுப்பலாம்.

இன்னும் வசதியானவர்கள் சுமங்கலிகளுக்கு புடவை கொடுக்கலாம். வசதியற்ற முதியவர்களுக்கு அன்னதானம் வழங்கலாம். இப்படிச் செய்வதால், தானம் பெற்றுக்கொண்டவர்கள் மனமும் வயிறும் நிறைந்து உங்களை வாழ்த்துவார்கள். நீங்கள் எப்போதும் தீர்க்க சுமங்கலியாக வாழ்வீர்கள். பிரித்தெடுத்த மஞ்சள் கயிற்றை கண்ணில் ஒற்றி, பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்ததும் குழந்தைக்கு கட்டிவிடலாம். சிலர் பத்திரமாக வைத்திருப்பார்கள்.

இந்தச் சம்பிரதாயம் திருமணமான பெண் கர்ப்பமாக இருந்தால் செய்யமாட்டார்கள். அந்த சமயத்தில் பெண்ணுக்கு தாலி பிரித்து கோர்க்கக் கூடாது. அதனால்தான் இதை மூன்று அல்லது ஐந்து மாதங்களில் செய்துவிடுகின்றனர். சிலர் பதினைந்து நாட்களிலும் இதை செய்துவிடுவர்.

# சித்திரை நட்சத்திர திருமணப் பொருத்தம்



பொதுவாக திருமண நட்சத்திரப் பொருத்தம் பார்ப்பதென்பது பெண் நட்சத்திரத்திலிருந்து ஆண் ஜாதகத்துக்குப் பார்க்க வேண்டும்.

அவ்வாறு பெண் சித்திரை நட்சத்திரத்துக்குப் பொருந்தும் ஆண் நட்சத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அவற்றைப் பார்ப்போம்.

இதில் உத்தம மற்றும் மத்திம பலன் உள்ள நட்சத்திரங்களைக் கொடுத்துள்ளோம். இவற்றில் இல்லாத நட்சத்திரங்கள் பொருத்தம் இல்லை என்று பொருள்.

*பெண் நட்சத்திரம் – கன்னி ராசி*

*சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்*

உத்தமம்

அசுவனி, கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்தம், அனுஷம், மூலம், சதயம்.

மத்திமம்

பரணி, புனர்பூசம், ஆயிலியம், பூரம், விசாகம், ரேவதி.

*பெண் நட்சத்திரம் – துலாம் ராசி*

*சித்திரை 3ஆம் 4ஆம் பாதம்*

உத்தமம்

அசுவனி, கார்த்திகை, ரோகிணி, திருவாதிரை, பூசம், அஸ்தம், சுவாதி, மூலம், திருவோணம்.

மத்திமம்

பரணி, புனர்பூசம், ஆயிலியம், பூரம், விசாகம், கேட்டை, ரேவதி.

கொழும்பை வதிவிடமாகக்கொண்ட 1991இல் பிறந்த, உயரம் 5'3'' procurement manager ஆக பணிபுரியும் இந்து (வேளாளர்) மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு 077-2222325

இந்து முக்குலம் அரச துறையில் பணியாற்றும் இவருக்கு வயது 33. திருமணமாகி ஒரு நாளில் ஒருசில காரணங்களால் விவாகரத்துக்குள்ளான இவருக்குதகுந்தநல்லொழுக்கமுள்ளஅரசதுறை அல்லது தொழில்செய்யும் மணமகள் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 077 3022758/072 6328336

இந்து நாயுடு இந்திய வம்சாவளி வயது 23 அழகிய சிவந்த நிறமுடையவர். இவருக்கு பதிவுத் திருமணம் மட்டும் ஆகி ஒரு வாரத்தில் சில காரணங்களால் விவாகரத்தானவர். நல்லொழுக்கமுள்ள 30 வயதுக்குள் நல்ல மணமகளை ஐரோப்பிய நாடுகளில் எதிர்பார்க்கிறோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 077 3022758 / Whatsapp 072 6328336.

மாத்தளை 1992இல் பிறந்த தனியார் துறையில் சுப்பர்வைசர் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி மதம் தடை இல்லை, சீதனம் தேவை இல்லை. தொடர்பு 0765424575.

யாழ். இந்து வேளாளர் 1993, பூரட்டாதி, Doctor, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை. டச்சுவீதி, சாவகச்சேரி. 021 4923738, 077 4380900. Realmatrimony.com.

RC கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உயரம் 5'4'' (வேறு மதத்தவரும் விரும்பத்தக்கது) வயது 35. 076 6612325.

புலோலி, இந்து வேளாளர், 1995 மகம் கல்வியியல் கல்லூரி ஆசிரியர், 5'6'', B.A படித்துக்கொண்டிருக்கும் 7இல் செவ்வாய், பா.கிரகம் 521/4 மணமகனுக்கு பட்டதாரி ஆசிரியர், கல்வியியற் கல்லூரி ஆசிரியர், பட்டதாரி உத்தியோகத்தர் மணமகளை எதிர்பார்க்கின்றோம். T.P:076 2674603, 0212261374

யாழ். கிறிஸ்தவம் (RC) வேளாளர் 1978இல் பிறந்த, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புக்கு 076 3547191

யாழ். இந்து வேளாளர் 1988 அத்தம் 1இல் செவ்வாய் 38 பாவம் Auditor, 1989 உத்தரம் 12இல் செவ்வாய் 44 பாவம் சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1987 அத்தம் அவுஸ்திரேலியா PR, 1990 ரேவதி 8இல் செவ்வாய் சுவீடன் PR, 1991 அஸ்வினி சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1990 அவிட்டம் 8இல் செவ்வாய் நியூசிலாந்து இஞ்ஜினியர் தகுந்த மணமகள்மார் தேவை. தொடர்பு: 0770783832, 0779649245

இந்து வேளாளர் 1995இல் பிறந்த பூராடம் 3ஆம்பாதம் குற்றங்களற்ற இலங்கையில் கல்வி கற்று அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றும் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற மணமகளுக்கு மருத்துவம் அல்லது பொறியியல்துறை சார்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். whatsapp number +61493097250

இந்து சைவ வேளாளர், 1992.11.14, திருவாதிரை, மிதுனம், Brand Manager,B.B.A. (Kelaniya), C.I.M.A. M.B.A. (PIM), 56'',பொது நிறம்.மணமகன் தேவை. தொடர்புக்கு 0776562550/0770356527

நீர்கொழும்பை வதிவிடமாக கொண்ட, உயரம் 55'' , 42 வயது , திருமணம் செய்து 30 நாளில் விவாகரத்து ஆன Training Manager மணமகனுக்கு NRC (bible) நல்லொழுக் கமுள்ள மணப்பெண் தேவை. தொடர்புக்கு: 0771416590

உங்கள் வரன்தேடும்
விளம்பரங்களை
இலவசமாக
பிரசுரித்துக்கொள்ள
076 1393805
Whatsapp இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்

# எந்தெந்த மாதங்களில் திருமணம் செய்யலாம்

எந்தவொரு நல்ல காரியங்கள் செய்யும்போதும் நேரம், காலம் என அனைத்தையும் பார்த்து செய்வது வழக்கம். வீடு கட்டுதல், திருமணம் நடைபெறுதல் போன்ற வீட்டில் நடக்கக்கூடிய ஒவ்வொரு விசேடத்துக்கும் நல்ல நாள் பார்த்து பின் முடிவுகளை எடுப்பர்.

அதிலும் திருமணம் என்பது இரு பந்தங்கள் ஒன்றிணைவதாகும். அதிலும் திருமணம் செய்ய முடிவுகளை எடுப்பதற்கு ஜோதிடர்களைப் பார்த்து பின் முடிவுகளை எடுப்பார்கள்.

நல்ல நாள், கிழமை, மாதம், நேரம் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பார்த்த பிறகே திருமணம் செய்வார்கள். இதில், எந்த நாள், கிழமை, மாதம் திருமணம் செய்வதற்கு உகந்தவை என்பதைக் காணலாம்.

திருமணம் செய்வதற்கு முதலில் இருவரது பொருத்தத்தையும் பார்க்க வேண்டும். பிறகு, அவர்களுக்கான ராசியான மாதத்தை வைத்து, திருமணத் திகதியைக் கணிப்பர். பொதுவாக, ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஆனால், எல்லா மாதங்களும் திருமணம் செய்ய உகந்த மாதங்கள் என்று கூற முடியாது.

### திருமணம் செய்வதற்குரிய மாதங்கள்

அந்தவகையில், திருமணம் செய்ய உகந்த மாதங்களான சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, கார்த்திகை, தை, மாசி மற்றும் பங்குனி போன்ற மாதங்களில் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம்.

இதனைத் தவிர்த்து, திருமணம் செய்வதற்கு உகந்த திதி, நாள் மற்றும் நட்சத்திரம் உள்ளிட்டவற்றையும் பார்த்து வைப்பர்.



### திருமணம் செய்வதற்கு உகந்த நாள்

முதலில் மாதங்களைத் தேர்ந்தெடுத்து, பிறகு எந்த நாளில் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்வர். அதன்படி, சுபமுகூர்த்த தினங்களையே திருமணம் செய்வதற்குத் தேர்ந்தெடுப்பர். இருப்பினும், செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் சுப முகூர்த்த தினமாகவே இருந்தாலும், அந்தத் தினங்களில் முகூர்த்தம் வைக்க மாட்டார்கள். இந்த இரு நாட்களைத் தவிர்த்து மற்ற அனைத்து நாட்களும் திருமணம் செய்ய உகந்த நாட்களாகும்.

### திருமணம் செய்வதற்கு உகந்த திதி

திருமணத்துக்கான நாளை தேர்ந்தெடுத்த பின், திதி பார்ப்பது அவசியமாகும். பொதுவாகவே, அட்டமி, நவமி காலகட்டங்களில் சுபகாரியங்களைச் செய்யமாட்டார்கள். ஆனால், வளர்பிறை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, தேய்பிறை, திரயோதசி, துவிதியை போன்ற திதிகள் திருமணம் நடத்த உகந்ததாக அமைகின்றன.

### திருமணம் செய்வதற்கு உகந்த நட்சத்திரம்

திருமண நாள் குறித்த பிறகு, அந்தத் தினத்தில் வரக்கூடிய நட்சத்திரத்தையும், திருமணம் செய்யும் மணமகன் மற்றும் மணமகளுக்கான நட்சத்திரத்தையும் சரிபார்த்து பொருத்தம் உள்ளதா என்பதைக் கணிப்பர்.

### ஆனி மாதத்தில் திருமணம் செய்யலாமா?

ஆனி மாதமானது திருமணம் செய்வதற்கு உகந்த மாதமாகவே கருதப்படுகிறது. இருப்பினும், ஆனி மாதத்தில் பிறந்த பெண்ணுக்கும் ஆனி மாதத்தில் பிறந்த ஆணுக்கும் திருமணம் செய்தல் கூடாது.


திருமண தேடல் விளம்பரங்களை **இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள அரிய வாய்ப்பு!



“உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்.”

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

thamilaneditor@gmail.com



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 100 - 02.07.2023









'தமிழன்' 3 ஆவது ஆண்டு விழாவில்...



தமிழ் முரசு
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீனிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

# தமிழ் முரசு - இதழ் 100

'தமிழன்' பத்திரிகை தனது 3ஆவது ஆண்டு விழாவை கடந்த வாரம் மிகச் சிறப்பாகக் கொண்டாடியிருந்தது. 'தமிழன்' பத்திரிகையின் இணைப்பு இதழாக வெளிவரும் 'தமிழ்முரசு' கலை, இலக்கிய இணைப்பு இதழும் அந்த மகிழ்ச்சியான நிகழ்வில் பங்குகொண்டதுடன் இந்த வாரம் தனது 100ஆவது இதழை வெளியிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறது.

கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என நாட்டில் பொது முடக்கங்களும் -போராட்டங்களும் இடம்பெற்ற இந்த இடர் காலகட்டத்தில்தான் தமிழ்முரசு உருவானது. இவ்வாரம் 100ஆவது வாரத்தை எட்டியுள்ளது. எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளத் தக்கதே என்ற மன நிலையை இது எமக்கு உணர்த்திச் செல்கிறது. அதுமட்டு மன்றி, தொடர்ந்து இயங்குவதற்கான புதுத் தெம்பையும் தருகிறது.

ஆரம்பத்தில் 'இலக்கிய சங்கமம்' ஆக 'ஞாயிறு தமிழன்' வார இதழுடன் இணைந்ததாகவே வெளிவந்தது. பின்னர் பிரதம பொறுப்பாசிரியரின் ஆலோசனைக்கமைவாக ஞாயிறு பத்திரிகையுடன் இணைந்ததாக 'தமிழ்முரசு' எனும் தனி இதழ் உருவானது.

இந்த இதழ் 100 களினதும் வெளியீடு என்பது ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடு. இதழ் நூற்றுக்காகவும் பங் களிப்பு செய்த பலரை இங்கே நினைவு கூர்ந்து நன்றி பகர் வது கட்டாயமாகிறது. ஒவ்வொருவரையும் பெயர் கூறி விளித்து நன்றி கூற வேண்டும் என்றபோதும், ஓர் ஆசிரிய தலையங்கத்துக்குள் அது சாத்தியம் இல்லாத போது பங்களிப்பு செய்த அனைவருக்கும் ஆத்மார்த்தமான நன்றிகளை இங்கே பொறுப்பாசிரியர் என்ற பொறுப்பில் இருந்து எழுத வேண்டிய கடப்பாடு இருக்கிறது.

ஒவ்வொரு வகையான பத்திகள் குறிப்பாக, ஒலி/ ஒளிபரப்புத்துறையில் பிரகாசிக்கும் இளைய தலைமுறை யினரின் அனுபவப் பகிர்வுகளை உள்ளடக்கியதான 25 வாரங்கள் தொடர்ச்சியாக வெளியான 'தமிழ் அலை', இலங்கையில் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியில் குறிப்பாக, புலம்பெயர்ந்து வாழும் கலை, இலக்கிய மூத்த ஆளுமைகள் (வாழ்ந்து மறைந்தவர்கள் - வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்) என பலரது நேர்காணல்கள் கட்டுரைத்தொகுப்புகள் உட்பட அனைத்து தரப்பினரின் கலை, இலக்கிய படைப்புகளையும் முழுமையாக வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாக 'தமிழ்முரசு' பயணித்துச் செல்கின்றது.

அத்துடன், பற்பல ஆளுமைகள் பற்றிய தொடர் கட்டுரை கள், 'ஆளுமைகளின் அடையாளம்' எனும் தொடர் பத்தி ஆகியனவற்றையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறு தொடர்ச்சியாக இவ்விதழைத் தடையின்றி கொண்டுவருவதற்கு வாய்ப்பைத் தந்துகொண்டிருக்கும் ஆசிரியர் பீடத்துக்கும் எமது இதழுடன் தொடர்ச்சி யாகப் பயணித்துக்கொண்டிருக்கும் அத்தனை ஆளுமை களுக்கும் 'தமிழ்முரசு' நன்றி பகிர்வதுடன், 'தமிழன்' பத்திரிகையின் மூன்றாவது வருடத்தின் சிறப்பிதழாகவும் இந்த '100ஆவது வாரத்தை' கொண்டாடுவதில் மகிழ்கின்றது.



# 'வேரினிடை' தமிழ் ஆங்கில கவிதை நூல் வெளியீட்டில்...

(கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்)

கவிஞர் மருதமுனை டீன் கபூர் எழுதிய 'வேரினிடை' கவிதை நூல் (தமிழ் ஆங்கில) வெளியீடு மருதமுனை ஹாஜியார் வீதியிலுள்ள நூலாசிரியரின் இல்லத்தில் மர்ஹூம் இஸ்லாமிய இலக்கியக் காவலர் கலாபூஷணம் தாஜுல் அதீப் எஸ்.ஏ.ஆர்.எம்.ஹஸன் மௌலானா நினைவரங்கில் நடைபெற்றது.




கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதி யாக ஓய்வுநிலை அதிபர் ஏ.எல். எம்.மீராமுனைதீன் கலந்து சிறப்பித்தார்.

இலக்கிய அதிதிகளாக எழுத்தாளர் டாக்டர் எம்.எம்.நௌஷாத், எழுத் தாளர் ஏ.ஆர்.ஏ.ஹமீத், கவிஞர் மருத முனை ஹஸன், ஆகியோருடன் கௌரவ அதிதிகளாக எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர்.

எழுத்தாளர்களான சிராஜ் மஸ்ஹூர், அம்றிதா ஏயெம், கவிஞர்களான அலறி, குர்ஷாத் ஆகியோர் 'வேரினிடை' நூல் பற்றி உரையாற்றினார்கள்.



அதிபர் ஏ.ஸீ.அப்துல் ஜப்பார், நூலை வெளியிட்டு வைத்தார். பதுறுஸ்மான் பஹத்ஸமான், எம்.எஸ்.ஹாரிஸ் (நவாஸ்) எம்.எஸ்.முகமட் நைஸர், எம்.எம்.நுஸ்பான் ஆகியோர் நூலின் முதன்மைப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். கவிஞர் எம்.எம்.விஜிலி வரவேற்புரையை நிகழ்த்தியதுடன், நிகழ்வைத் தொகுத்தும் வழங்கினார்.

தலைமையுரை கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ்.

''கவிஞர் டீன் கபூர் 1980களில் இலக்கியப் பணியைத் தொடங்கியவர். 42 வருட இலக்கியப் பணி. இதுவரை நான்கு கவிதை நூல்களை வெளியிட் டுள்ளார். பாடசாலைக் காலத்திலிருந்தே இலக்கியம். சித்திரம் ஆகிவற்றில் ஆர்வம் கொண்டு செயற்பட்டவர். புன்னகை பூத்த முகத்துடன் அன்பைப் பரிமாறிக்கொள்ளும் பண்பைக் கொண்டவர். இவரது கவிதைகள் மண்வாசனையை வெளிப்படுத்திக் காட்டுபவை யாக அமைந் திருக்கின்றன. சித்திரம் வரைவதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். சித்திரத்தின் பக்கம் பல மாணவர்களை இணைத்துக்கொண்ட நல்லாசான் இவர் என்பது குறிப்பிடத் தக்கது. இஸ்லாமிய இலக்கியக் காவலர். கலாபூஷணம் தாஜுல் அதீப் மர்ஹூம் எஸ்.ஏ.ஆர்.எம்.ஹஸன் மௌலானா நினைவரங்கில் இந்த நூல் வெளியீடு நடைபெறுவது மிகவும் சிறப்பாகும்.''

'வேரினிடை' நூல்பற்றி கவிஞர் அலறி.

''மண்ணின் மகத்துவத்தைக் கொண்ட சிறப்பான கருப்பொருளாக இருக்கும் பின் நவீனத்துவம் சார்ந்ததாக கவிதைகள் இருக்கின்றன. இந்த கவிதைகளை இந்தியக் கவிஞர் ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். தனிப்பட்ட வாழ் வியலின் ஏக்கம் போன்றவற்றை மிக வும் சிறப்பாக கவி புனைந்துள்ளார்.''

நூல் பற்றி கவிஞர் குர்சித்,

''கவிதைகள் என்ற சொல்லையும் அதன் இறுக்கிய வரைவிலக்கணங்களையும், அதன் கட்டமைப்புகளையும், கட்டளை களையும், கட்டுப்பாடு களையும் மீறும் ஒருவரால்தான் இத்தகைய கவிதைத் தொகுதி சாத்தியமாகும். அது டீன் கபூருக்கு வாலாயப்பட்டிருக்கிறது. டீன் கபூர் தனக்குக் கிடைத்த கவிதைகளில் தனது இஷ் டத்துக்கு சுதந்திரம் எடுத் துள்ளார். வரண்முறை வேலியை தகர்த்துக்கொண்டு அவரது கவிதை மனம் ஒரு சுயாதீன அசைவியக்கம் நடத்தியுள்ளது.

இக்கவிதை வெளியில் நான்கு விடய உள்ளடக்கங்கள் புலப்படுகின்றன.

ஒன்று கற்பனை என்னும் புள்ளியை ஆழ விரித்து கற்பனை பிரபஞ்சத்துள் தத்தளித்தல், இரண்டு இயல்பினையும் மாயை வழி கற்பனையையும் ஒரு திருப்பத்தில் கோர்த்துவிடல்.

மூன்று சம்பவங்களின் வீரியங்களை இயற்கையோடு இணைத்து கவிதைப் பூரணம் செய்தல். நான்கு கடந்த காலங்களை இரை மீட்டலும் கிரங்கிக் கிடத்தலும் அமைந்திருக்கின்றது.''

நூல் பற்றி எழுத்தாளர் சிராஜ் மஸ்ஹூர்,

''கவிதை வாசிப்பதென்பது மிகவும் சந் தோஷமான விடயம். அதுவும் நல்ல கவி தையை வாசிப்பது. இந்த கவிதைத் தொகுதி யின் சிறப்பம்சம் இதன் அட்டைப்படம். இந்த நூலின் தலைப்பு 'வேரினிடை' வேரை நோக்கிச் செல்வதைப் பார்க்க முடிகின்றது.

டீன் கபூர் கவிஞன் என்பதற்கப்பால் அவர் அடிப்படையில் ஓர் ஓவியன். ஓவியனுக்குரிய அடிப்படை அம்சங்கள் இவரது இந்த நூலின் அட்டைப்படத்தில் தெரிகின்றது. ஓர் ஓவி யன் எப்போதும் புதிது புதிதாக ஒன்றை உரு வாக்கிக் கொண்டிருப்பான். டீன் கபூருக் குள்ளே அந்தப் பார்வை அழகாக இருக் கிறது.''

நூல் பற்றி எழுத்தாளர் அம்றிதா ஏயெம்,

'உவழமையாக நூலை வாசிப்பதும், நூலின் அட்டையைப் பார்ப்பதும் ஒருவித அனுபவத்தை உண்டாக்கும். இந்த அனுபவங்களுடன் நூலை விமர்சனத் துக்குள்ளாக்குவதும், நூலை உரையாடலுக்கு விடுவதும் வித்தியாசமான அனுபவங்களைக் கொடுக்கும். கிழக்கிலங்கையின் மருத முனை கிராமத்தைச் சேர்ந்த டீன் கபூர் கவிஞ ரும், எழுத்தாளரும், ஓவியருமாவார். இது வரையில் குரோட்டன் அழகி (1994), திண் ணைக் கவிதைகள் (2007), சொற்களில் சுழலும் பிரபஞ்சம் (2020) ஆகிய படைப் புகள் இவர்மூலம் எமது எழுத்துப் பரப்புக்கு கிடைத்துள்ளன. 'வேரினிடை' (2023) கவிஞரின் நான்காவது நூலாகும்'' - என்றார்.

# இடர்கால இலக்கியங்கள்

## க.பாலேந்திராவின் நூல்கள் அறிமுகத்தில்...

பாலேந்திரா – ஆனந்தராணி, இவர்களை நல்ல கலைச் சோடிகள் என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். நாடக வரலாற்றில் அவர்கள் பெரும் புரட்சியாளர்கள் என்று சொல்வது பொருத்தமானது எனவும் எண்ணுகிறேன். அவர்கள் கைக்கொண்ட நவீனமயமான அரங்க ஆற்றுகையால் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கட்டிப் போட்டவர்கள்.

புலம்பெயர்ந்து கடந்த 30 ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்துவரும் பாலேந்திரா 1973இல் தனது அரங்க இயக்கத்தைத் தொடங்கினார். அவர் புலத்திலிருந்தபோது 10 ஆண்டுகளாக நவீன நாடகங்களைத் தயாரித்து இலங்கையில் பல்வேறு இடங்களில் மேடையேற்றினார். தொடர்ந்து அவரதுபடைப்புகள் சர்வதேசம்வரை சென்று பல அரங்குகளைக் கண்டன. இன்றும் அச்சாதனை தொடர்கிறது.

1970களில் அவர்களைக் கலை ஞர்களாகச் சந்தித்த நான், 2023 இல் அரங்கத் துறையில் சாதனை படைத்தவர்களாகவும் அதுவும் இணைபிரியா ஜோடிகளாகவும் சந்தித்தேன் என்பது பெருமைக் குரிய விடயம்.



ஏறத்தாழ 38 ஆண்டுகள். 30க்கும் அதிகமான நாடகங்கள் சுமார் 400 காட்சிகள் என விரிகின்றன அவைக்காற்றுக் கழகத்தின் வரலாறு. யுத்தத்தின் நடுவே பத்து ஆண்டுகள் புலத்திலும் பின்னர் புலம்பெயர் தேசத்தில் முப்பது ஆண்டுகள் இயங்கியபோதெல்லாம் பல சவால்களை எதிர் கொண்டவர்கள். அவர்களைச் சாதாரண நாடகக் கலைஞர்கள் எனச் சொல்லிவிட்டுப் போக முடியாதவாறு அவர்கள் பின்னணி ஒரு நீண்டகால வரலாற்றைக்கொண்டது. அவர்கள் படைப்புகள் அத்தனையும் நவீனமய மானவை. அவர்கள் தம் ஆற்றுகைக்கு ஏற்றவாறு அரங்கத்தை மாற்றுகின்ற இலகு தொழில்நுட்பத்தைப் பார்த்துப் பலமுறை வியந்திருக்கிறேன்.

**பாலேந்திரா பற்றி அறிய.**

“ஆதிகாலந்தொட்டே மக்களைக் கௌவிப் பிடித்துவந்த நாட்டார் தொல்கலைகளுக்கு அடுத் தபடியாக அல்லது அதன் இடத்தைப் போய்ஸ் கம்பனி நாடகங்கள் எடுத்துக்கொண்டன. ஆனால், தமிழ்நாட்டின் போதாத காலம் இந் நாடகங்களால் நவீன கலை வடிவத்தைக் காண இயலவில்லை. அந்த இடைவெளியை நிரப்பும் சோதனை முயற்சி நாடகங்கள் 1970களின் பிற்பகுதி யில்தான் தமிழ்நாட்டில் தொடங்கின. இவை நிஜ நாடகங்கள் என்றும் நவீன நாடகங்கள் என்றும் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இத்தகைய முயற்சிகள் ஈழத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டன” – என அப்பணசாமி (குமுதம், தீராநதி) “பாலேந்திரா நேர்காணல்கள்” என்ற நூலின் பின் அட்டையில் ஒரு குறிப்பொன்றை எழுதியிருக்கிறார்.

அண்மையில் பாலேந்திரா எழுதிய ‘பாலேந்திரா நேர்காணல்கள்’, ‘பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்’ ஆகிய இரண்டு நூல்களும் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அவ் அறிமுக விழாவானது கடந்த 17.06.2023 சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் சட்டத்தரணி சோ.தேவ ராஜா தலைமையில் நடைபெற்றது.

உரையாளர்களாக பா.இரகுவரன், நா.நவராஜ், ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். அதில் பாலேந்திரா – ஆனந்தராணி ஆகியோர் கலந்துகொண்ட “அரங்க நினைவலைகள்” என்னும் நிகழ்வும் இடம்பெற்றது. அந்நிகழ்வை அவர்கள் நாடகர் அமரர் நா.சாந்திநாதனுக்கு சமர்ப்பணமாக்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**‘பாலேந்திரா நேர்காணல்கள்’ என்ற நூலின் முன்னுரையில்.**

இந்த நூலில் இடம்பெறும் நேர்காணல்கள், நாடுகள் ரீதியாக வகைப்படுத்தித் தொகுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு பிரசுரமாகாதவை. எழுத்து ஊடகங்களுக்காக எடுக்கப்பட்ட நேர் காணல்கள் மட்டும் இந்நூலில் சேர்க்கப்படுகின்றன. சில நேர்காணல்கள் வழமையான கேள்வி பதில் வடிவத்தில் இல்லாமல் கட்டுரை வடிவத்திலும்




வெளிவந்திருக்கின்றன. அவை இந்நூலில் பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்தூடகங் களுக்காகச் செய்யப்பட்ட பல நேர்காணல்கள் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு, பின்னர் கேட்டு எழுதப்பட்டவை. பேச்சு மொழியில் சொல்லப்பட்ட ஒரு விடயத்தை நேர்காணல் காண்பவர் தனது மொழியில் எழுதும்போது சில இடைவெளிகள் தோன்றுவதுண்டு. சில சமயங்களில் புரிதல் கூட வேறுவிதமாக அமை வதுண்டு. சிலவேளைகளில் தகவல் பிழைகள், கருத்துப் பிழைகள்கூட இடம்பெற்றுள்ளன – என பாலேந்திரா குறிப்பிட்டிருக்கிறார்.

‘பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்’ என்ற நூலின் அணிந்துரையில் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி . “நாடகமொழி பற்றி அருமையாகச் சொல்லியிருக்கிறார் பாலேந்திரா. நாடகம் என்பது காண்போர்க்கும் அதனை மேடையில் நிகழ்த்துனருக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கால, இட அளவில் நிகழும் மௌன உரையாடல். நாடகத்தைப் பார்ப்பவர்கள், நாடக அரங்கக் காட்சிகள், பேசப்படும் வசனங்கள், நடிப்போர்களின் முகபாவங்கள், அவர்கள் மேடையில் நிற்கும் இடங்கள் ஆகிய அனைத்தையும் உட்கொண்டுதான் நாடகத்தோடு ஐக்கியமாகிறார்கள். இது நாடக ஆசிரியரும், இயக்குநரும் அறியவேண்டிய செய்தி. இதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார் பாலேந்திரா. தமிழ் நாட்டில் துணுக்குத் தோரணங்கள்தாம் பிரபல நாடகங்களாக மேடையேறுகின்றன. இந்தியத் தமிழர்கள் வெளிநாடுகளில் குடியேறினாலும் தங்களுடைய கலாசாரச் சுமையை எடுத்துக் கொண்டு போவார்கள். அதனால் இத் துணுக்குத் தோரணங்களுக்கு வெளிநாட்டுத் தமிழர்களிடையே நல்ல வரவேற்பு. ஆனால், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாலேந்திராவின் நவீனத் தமிழ் நாடகங்களுக்குக் கொடுக்கும் வரவேற்பு எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அதனை 1994இல் சுவிஸுக்குச் சென்றபோது பார்க்க முடிந்தது. அவரும் அவரது குழுவுடன் அங்கு வந்து நாடகத்தை மேடையேற்றியிருந்தார்.

ஒரு நல்ல வாசிப்புடைய இயக்குநரால்தான் இக்கட்டுரைகளை எழுதியிருக்க முடியும். மேடை நாடகங்களின் பல்வேறு அம்சங்களையும் மிக நுணுக்கமாகப் புலப்படுத்தியிருக்கிறார் இக் கட்டுரை ஆசிரியர். இலக்கியச் சொல் எப்படி ஒரு நாடகச் சொல்லாக மேடையேறி அதுவும் ஒரு நாடகத்தில் பாத்திரமாகப் பங்குபற்றி காண்பவர்களைச் சென்றடைகிறது என்பதைச் சிறப்பாக விளக்கியிருக்கிறார். ஒரு நவீன நாடகம் பற்றிய கட்டுரைத் தொகுதியை படிக்க வாய்ப்பளித்த பாலேந்திராவுக்கு என் வாழ்த்துகள்” – என முடித்திருக்கிறார் அவர்.

**கணபதி சர்வானந்தா**

## பாரம்பரியம் நிகழ்ச்சியில்...

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் எதிர்வரும் ஜுலை மாதம் 04 ஆம் திகதி (04.07.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் ‘பாரம்பரியம்’ நிகழ்ச்சியில் மணிமொழி மௌலானா அல்ஹாஜ் மௌலவி அல்ஹாபிஸ் எம்.ஜே.கலீலுர்ரஹ்மான் பாகவியின் நினைவுகள் பரிமாறப்படுகின்றன.

இவரோடு நெருக்கமாகப் பழகும் வாய்ப்புப்பெற்ற கொழும்பு, செட்டியார் தெரு மீலாத் இயக்க பொதுச்செயலாளரும் இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவருமான பீ. நிலாமுத்தீன் கலீலுர்ரஹ்மான் ஹஸ்ரத் தின் நெருக்கத்துக்குரிய தோழர், மர்ஹூம் "இறையருட்கவிமணி" பேராசிரியர் அப்துல் கபூர் சாஹிப்பின் மகன் அல்ஹாஜ் ஜமால் முஹம்மத் தமிழகத்திலிருந்து கலந்துகொண்டு அன்னாரின் நினைவுகளை நினைவுகூருகிறார்கள்.





அத்தோடு, சென்னை மாநகரம் அடையாரில் தற்போது வசித்து வரும் கலீலுர்ரஹ்மானின் இளைய புதல்வர் எம்.ஜே.கே.கலீக்குஸ் ஸமான் மூலமாக பெறப்பட்ட தகவல்களும் நிகழ்ச்சியில் பேசப்பட இருக்கின்றன.

இன்றைய கருவூர் மாவட்டம் பள்ளப்பட்டியில் 1905 ஆம் ஆண்டு பிறந்த கலீலுர் ரஹ்மான் ஹஸ்ரத் இந்திய சுதந்திரத்துக்காக பல்வேறு பங்களிப்பு செய்தவர். 1941-1945 வரையான காலப்பகுதியில் நேத்தாஜிபடையின் ஒரு பிரிவின் ஜெனரலாக ஹஸ்ரத் பணியாற்றியமை சிறப்பித்து சொல்லத்தக்கது.

1949 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார். 1950 தொட்டு 1960 வரையான காலப்பகுதியில், கொழும்பு, 3ஆம் குறுக்குத்தெரு மேமன் ஹனபி பள்ளியில் பிரதான பேஷ் இமாமாக கதீபாகப் பணியாற்றி உருது, தமிழ் மொழிகளில் குத்பா பிரசங்கம் நடத்தி மக்கள் மனங்களில் தனியானதொரு இடத்தைத் தக்கவைத்துக் கொண்டார்.

இக்காலப்பகுதியில் அப்போது இலங்கை வானொலியில் ஒலிபரப்பான இஸ்லாமிய நிகழ்ச்சிகளுக்கும் பின்னாட்களில் முஸ்லிம் சேவையாகப் பரிணமித்தபோது இருந்த சேவைக்கும் இவர் வழங்கிய பெரும் பங்களிப்புகளும் இலங்கையில் மட்டுமல்லாது, கடல் கடந்தும் பெரும் புகழை இவருக்குத் தேடிக் கொடுத்தன.

நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.







# ‘தமிழன்’ பத்திரிகையின் ஆண்டு விழா பதிவுகள்

தமிழன் பத்திரிகை மூன்று ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அதன் ஆண்டு விழா கடந்த வாரம் 23.06.2023 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கு நிறைந்த சபையினர் மத்தியில் மிகவும் பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது.

மங்கள விளக்கேற்றல், செல்வி வைஷாலினி யோகராஜனின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், கலாசூரி திவ்யா சுஜேனின் அபிநயக்ஷேத்ரா மாணவர்களான அபிலாஷினி மகேந்திரகுமார், வன்ஷீகா பரிமலேந்திரன், அக்ஷயா சிவரூபன், பவித்ரா முத்துராஜா, அய்ஷேனி சயந்தன், ரம்யா டய்தா ராம்தேவ் சஹானி, உதிஷா பிரதீபன் லலித் குமாரர் ஆகியோரின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

காத்திரமான வரவேற்பு நடனத்தையடுத்து நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி ‘தமிழன்’ பத்திரிகையின் பிரதி ஆசிரியர் நிர்ஷன் இராமானுஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதனையடுத்து, நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட புலவர் காரைக்கவி பத்மானந்தனின் உரை இடம்பெற்றது. இதனையடுத்து கல்வி, கலை, இலக்கியத் துறை சார்ந்த ஆளுமைகள் ‘தமிழன்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவர் திலித் ஜயவீர, பணிப்பாளர் மாதவ மடவல, பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்திரசேன ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பிரணவனை இயக்குநராகக் கொண்ட தேஜஸ்வராலயா கலைக்கூட மாணவிகளான தேஜஸ்வினி பிரணவன், கௌஷிகா குலேந்திரா, நிரூஷினி பரிசித்து, கார்த்திகா கார்த்தீஸ்வரன், வேதவிலாசினி தர்மேஸ்வரன் ஆகியோரும் அணியிசைக் கலைஞர் மிருதங்கம் நாராயண சர்மா சுவாமிநாத சர்மா ஆகியோர் வழங்கினார்கள். அத்துடன் தேஜஸ்வனி பிரணவனின் மோகினி நடனமும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நிறுவனத் தலைவரின் சிறப்புரை மற்றும் அரசியல் தலைவர்களின் வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்களுக்கு ‘ஜூனியர் தமிழன்’ சார்பில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட வினா – விடைத் தொகுப்பு இதன்போது அறிமுகம் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து ஸ்ரீ கைலேஷ்வரன் நாட்டியாலயா நுண்கலை கூட இயக்குனர் நாட்டிய சூரத்தா ஜெகநாதன் சஞ்ஜீவனின் அழகிய நடனம் இடம்பெற்றது. இந்நடனம் சபையோரின் கவனத்தை பெரிதும் ஈர்த்த நடனமாகவும் மெய்சிலிர்க்க வைத்ததொரு நடனமாகவும் இருந்தது.

அத்துடன், நிகழ்வில் பிரதம ஆசிரியர் சிவா இராமசாமி சபையினர் சிலரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அதிதிகள் சிலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக பிரதம ஆசிரியரின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

**படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன, மொஹமட் நஸார்**


























# என்றென்றும் நாம் துணைநிற்போம்...

ஆண்டது மூன்று அருமையாம்
தமிழன் இதழின்,
பூண்டது நிறைவு நாளை
பெருமிதம் விழாவாய்க் கண்டார்
சிறப்பினும் சிறப்பாய் அரங்கம்
செம்மையாய் ஒழுங்கமைத்து
தமிழர்கள் சால்பை சான்றோரின்
பண்பை தனித்துவம் தகைமை செய்தார்.

அருமையாய் கலைகள் நிகழ்வு
அழகான நடன வகைகள் கனதியான
காரை பத்மானந்தன் ஐயா,
பிரதம அதிதிப் பெருவருகை நீள
அவருரைத்த காத்திரமான உரை என
எடுத்தியம்பிப் பாராட்டத்தக்க
சிறப்பு விழா கண்டோம்
சரஸ்வதி மண்டபந்தனிலே.

நிறைவான அரங்கு நிறைந்த
அவையோர் சிறப்பான கோலமாக
கோலாகலமாகவென நிகழ்த்தி முடித்தார்
தமிழன் இதழின் தகையான ஆண்டோர்
மூன்றின் அடையாள விழா எனலாம்

நீளட்டும் பணிகள்
நின்றோங்கட்டும் காலத் தேவை
தமிழர் மாண்புகள் உரக்கப்பேசி
உரிமையாய் உணர்வாய்
உண்மை உரத்தொன்றிக் குரல்
மேவி எழுத்துகள் மொழியால்
அழகு தனித்துவம் பேணட்டும்
தமிழன்  தன்னிகரில்லா
மகத்துவம் கொண்ட நல்லதாம்
இதழாய்  என்றும் ஈழமண்ணெலாம்
வரட்டும் வலமாய் நன்று.

தமிழது இயல்பு தமிழர்
தனித்துவக்குணங்கள் போல
ஆண்டுவிழா மூன்றின் அரங்கதும்
சிறப்பே என்ற ஓங்குநல் உயர்ந்த அன்பால்
வாழ்த்துவோம் வளர்க 'தமிழன்.'

பாவலர் படித்தோர் பண்புடைய
குணத்தோர் கூடியே நின்றார்,
ஆண்டது விழா மூன்றின் அரங்கிலே
சிறந்தோர் சிறப்பித்தோர்
அனைவரும் வாழ்க வாழ்க.

செம்மையாய் பணிகள் சென்றிட்டே
நீண்ட தூரம் ஈழத்தின் புலத்தில்
'தமிழன்' நாளிதழ் வலம் வரட்டும்.
நல்ல பணி சிறக்க
என்றென்றும் நாம் துணைநிற்போம்.......

ஸ்ரீமதி சுபாஷினி பிரணவன்,
இயக்குநர் தேஜஸ்வராலய
கலைக்கூடம்,
ஆசிரியர் கொழும்பு இராமநாதன்
இந்து மகளிர் கல்லூரி.





# மூன்றாவது ஆண்டு விழாவில்

# 'தமிழன்' விருது பெற்ற முப்பெரும் ஆளுமைகள்






பல இதழ்கள் மூடு விழா கண்டு கொண்டிருக்கும் 2020ஆம் ஆண்டு இடர்காலத்தில் கொரோனா காலத்தில் வார, தினசரி இதழாக உருவான 'தமிழன்' பத்திரிகை மூன்றாண்டுகள் எட்டியுள்ள நிலையில், அதன் ஆண்டு விழா கடந்த வாரம் 23.06.2023 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மண்டபம் நிறைந்த சபையினர் மத்தியில் மிகவும் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்பட்டது.

பல்வேறு கலை அம்சங்கள், உரைகள் என்பன இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆண்டுவிழாவின் முக்கிய அம்சமாக கல்வி, கலை, இலக்கியத் துறைகளுக்கு தமது பங்களிப்பை வழங்கிய மூத்த ஆளுமைகள் மூவர் தமிழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய தமிழ்ப் பத்திரிகைத்துறை (அச்சு இதழ்) வரலாற்றில் இலங்கையில் இவ்வாறு ஒரு பத்திரிகைசார் விருது வழங்கப்படுவது முதற்தடவையாகும் என குறிப்பிட்டுக்கொண்டு விருது பெற்றவர்களின் விபரங்களையும் இங்கு பதிவிடுகின்றோம்....

## பேராசிரியர் சங்கரன் விஜேசந்திரன்

பேராசிரியர் சங்கரன் விஜேசந்திரன் பதுளை மாவட்டத்தில் சார்ணியா என்ற இடத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சார்ணியா தமிழ் வித்தியாலயத்திலும், இரண்டாம் நிலை கல்வியை கந்தேகெதர சிங்கள மகா வித்தியாலயத்தின் தமிழ்ப் பிரிவிலும், உயர்தர கல்வியை பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

அப்பாடசாலையிலிருந்து 1983ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். 1990ஆம் ஆண்டு பொருளியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றதோடு, பேராதனை பல்கலைக்கழத்தில் பொருளியல் மற்றும் புள்ளிவிவரத்துறையில் தற்காலிக விரிவுரையாளராக இணைந்துக்கொண்டார்.

1991ஆம் ஆண்டு மே மாதம் அதேதுறையில் நிரந்தர விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1995ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்று பட்டப்படிப்புக்காக நோர்வேயிலுள்ள விவசாயப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். 1997ஆம் ஆண்டு மேற்படிப்பை முடித்து நாடு திரும்பிய அவர், சிரேஷ்ட விரிவுரையாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 20 வருடங்கள் அப்பணியை சிறப்பாக மேற்கொண்ட அவர், 2017ஆம் ஆண்டு பொருளியல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதோடு. இன்றுவரை பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளியல் பேராசிரியராக கடமையாற்றுகின்றார்.



## நாட்டியபூரன கலாநிதி நிர்மலா ஜோன்

நாட்டியபூரன கலாநிதி நிர்மலா ஜோன் தசாப்தங்களைக் கடந்து நடனத்துறையில் பல சாதனைகளை நிலைநிறுத்திவரும் ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியுள்ள முக்கியமான நடனத்துறை ஆசிரியர். இலங்கை, கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கற்கைளை பூர்த்திசெய்துகொண்டவர். முதுகலைமாணி, நுண்கலைமாணி, உயர் டிப்ளோமா கற்கை என இத்துறையில் தன்னை தனித்துவப்படுத்திக்கொண்டவர்.

37 வருடங்களைக் கடந்து நிர்மலாஞ்சலி எனும் நடனப் பள்ளியை நடத்தி வருகின்றார். இதனூடாக ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர். தனது நாட்டியப் பள்ளியின் ஊடாக உள்நாடு, வெளிநாடு என பல முக்கிய நிகழ்வுகளுக்கு தனது மாணவர்களின் கலைப் படைப்புகளை வழங்கியவர். அத்துடன், பல நாட்டி நடனங்களைத் தயாரித்து வழங்கியது மாத்திரமல்லாமல் தானும் கதாபாத்திரமாக இருந்து செயற்பட்ட பெருமைக்குரியவர்.

கலைச்செல்வி, கலைச்சுடர், நடன இளவரசி, நடன கலாஜோதி, நாட்டிய கலாமணி, நவரச நர்த்தகி, நாட்டி சூடாமணி, ஜப்பானின் புங்கா விருது என பல விருதுகளுக்கும் கௌரவங்களுக்கும் சொந்தக்காரர்.

இலங்கை கலைக்கழக அரசாங்க நாடக நடன ஆலோசனைக்குழுவின் அங்கத்தவராகவும் கலாயா சங்கீத நடனக்கல்லூரியின் ஆட்சிப்பீட அங்கத்தவராகவும் கொழும்பு புனித பிறிஜட் கல்லூரி நடன ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

## பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலக்கியப் பொன்விழா கண்ட கவிஞர், கவிதை, இலக்கியத்துக்காக யாழ். மண்ணில் வென்மேரி அறக்கட்டளையின் வாழ்நாள் சாதனையாளர் விருது வென்றவர்,

கலாபூஷணம், கிழக்கு மாகாண வித்தகர் விருது, சுவத விருதுகள் உட்பட பல இலக்கிய விருதுகளைப் பெற்றவர்.

அரச சாஹித்ய / கொடகே சாஹித்ய விருதுகளை தனது காவிய நூல்களுக்காக பெற்றவர்.

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் நினைவாக இடம்பெற்ற சர்வதேச கவிதைப் போட்டி, வலம்புரி (ஸ்தாபக) கவிதா வட்டம் நடத்திய சர்வதேச கவிதைப் போட்டி, கவிஞர் அப்துல் காதர் நினைவாக காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் நடத்திய கவிதைப் போட்டி என்பவற்றில் பரிசுகளைப் பெற்றவர்,

உள்நாட்டு, வெளிநாட்டு இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் பங்குகொள்பவர்.

வானொலி மேடைக் கவியரங்குகளுக்கு தலைமை வகித்துச் சிறப்பிப்பவர். பல நூல்களைத் தந்திருப்பவர்.



# ஈழத்துக் கலை இலக்கியத்துறையில்

# பேராசிரியர் மௌனகுரு





பேராசிரியர்- எம்.ஏ.நுஃமான்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

தன் வாழ்வின் பெரும்பகுதியை அரங்கக் கலைக்காக அர்ப்பணித்தவர் மௌனகுரு. அதில் அவருடைய பிரதானமான பங்களிப்பு மரபுவழிக் கூத்து அரங்கை நவீனப்படுத்தியது எனலாம். நான் ஏற்கனவே சொன்னதுபோன்று அதுவே அவருடைய அடையாளம் என்று எனக்குத் தோன்றுகின்றது. அதில் அவர் இன்னும் எவ்வளவோ சாதித்திருக்கலாம். கூத்துக்கான நிறுவனம் ஒன்றை உருவாக்கி யிருக்கலாம். தொழில்சார் திறனு டைய நவீன கூத்துக் கலைஞர்கள் பலரை உருவாக்கியிருக்கலாம். ஐம்பது ஆண்டுகள் தாண்டியும் 'சரத்சந்திராவின் மனமே', 'சிங்க பாகு' ஆகிய நாடகங்கள் இன்னும் தொடர்ச்சியாக மேடை யேற்றப்படுவதுபோல் தனது கூத்துகளையும் மேடையேற்று வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியிருக்கலாம். ஆனால், அது நடக்கவில்லை. அதற்குச் சாதகமான சமூக, அரசியல் சூழல் இருக்கவில்லை என்பது உண்மையே. எனினும், மௌனகுரு கூத்துக்குள் மட்டும் தன்னை வரையறுத்துக்கொள்ளாது, நவீன அரங்கின் பல்வேறு துறைகளுக்குள்ளும் நுழைந்து தன் அடையாளத்தைக் கரைத்துக் கொண்டது அல்லது அகட்டிக் கொண்டதும் அதற்கு ஒரு காரணம் என்று எனக்குத் தோன்றுகின்றது.

எனினும், பணி ஓய்வு பெற்றதன் பின்னர் அவர் உருவாக்கியுள்ள அரங்கியல் ஆய்வுகூடம் (Theater Lab) எதிர்காலத்தில் நவீன கூத்துக் கலைஞர்களை உருவாக்கும் நிறுவனமாக - மௌனகுருவின் கனவுகளை நனவாக்கும் ஒரு நிறுவனமாக வளர்ச்சியடையுமாயின் அது மகிழ்ச்சிக்குரியதே.

கூத்துக் கலையை நவீனப் படுத்தியதில் மட்டுமன்றி, கூத்துக் கலை பற்றிய, நவீன அரங்க வரலாறு பற்றிய ஆய்விலும் மௌனகுருவின் பங்களிப்பு கணிசமானது. கலாநிதி பட்டத்துக்காக 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' பற்றி அவர் மேற்கொண்ட ஆய்வு (1982) இவ்வகையில் முன்னோடி யானதும் மிக முக்கியமானதுமாகும். இதுவரை யாரும் இத்துறையில் இவ்வாய்வைத் தாண்டிச் செல்ல வில்லை. அரங்கியல், அரங்கியல் வரலாறு பற்றி மௌனகுரு ஏராளமாக எழுதியுள்ளார்.

இத்துறையில் அவர் எழுதிய கட்டுரைகள் பல தொகுப்பு நூல்களாகவும் வந்துள்ளன. 'சடங்கிலிருந்து நாடகம்வரை', 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு', 'நாடகம் அரங்கியல் - பழையதும் புதியதும்', 'எதிரிவீர சரத்சந்திராவும் தமிழ் நாடக மரபும்', 'அரங்கு ஓர் அறிமுகம்' (இணையாசிரியர்) ஆகியவை இவ்வகையில் முக்கியமானவை.

பழந்தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, பண்பாடு பற்றிய மௌன குருவின் ஆய்வுகளும் குறிப்பிடத் தகுந்தவை. இவ்வகையில் அவர் எழுதிய கட்டுரைகள் சில நூலுருப் பெற்றுள்ளன. 'சங்ககாலச் சமூகமும் இலக்கியமும் - ஒரு மீள்பார்வை' என்ற நூலும், 'பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும்' என்ற தொகுப்பு நூலில் உள்ள சில கட்டுரைகளும் இவ்வகையில் முக்கியமானவை. இலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு பற்றிய மௌனகுருவின் முற்போக்குக் கண்ணோட்டம் இவற்றில் நன்கு வெளிப்படுகின்றது. 'சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும்', 'கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்: நீலாவணனின் வாழ்வும் இலக்கியப் பணியும்' ஆகிய நூல்களிலும் மௌனகுருவின் கூர்மையான விமர்சன நோக்கு வெளிப்படக் காணலாம்.

மௌனகுருவின் ஆய்வு களையும் மதிப்பீடுகளையும் தொகுத்து நோக்கும்போது அவை பெரும்பாலும் ஈழத்துக் கலை இலக்கியம் சார்ந்தவையாக இருப்பதைக் காணலாம். ஈழத்தவரின் தமிழியல் ஆய்வு முயற்சிகளில் 1950களுக்குப் பின்னர் தோன்றிய ஈழத்தை மையப்படுத்தும் போக்கின் ஒரு தொடர்ச்சியாக மௌனகுருவும் அமைவதை அவரது ஆய்வுகள் காட்டுகின்றன. மறைந்து கிடக்கும் ஈழத்தின் கலை, இலக்கிய வளத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும். இதில் மௌனகுருவின் பங்களிப்பும் முக் கியமானது என்பதில் ஐயமில்லை.

மௌனகுருவின் பிறிதொரு முக்கியமான அம்சம் அவர் ஒரு படைப்பிலக்கியவாதி என்பது. படைப்பிலக்கியத்தைப் பொறுத்தவரை அவர் ஒரு கவிஞர், அதிலும் குறிப்பாக ஒரு நாடகக் கவிஞர். அவர் எழுதிய இசை நாடக, கூத்துப் பிரதிகளை மனங்கொண்டே அவரை ஒரு நாடகக் கவிஞர் என்று சொல்கிறேன். ராவணேசன், கர்ணன் போர், வாலி வதம் முதலிய கூத்துப் பிரதிகள் கூட்டு முயற்சி என்று அறிகிறேன். அதில் மௌனகுருவின் பங்கு கணிசமானது. அவர் பிற்காலத் தில் எழுதிய சங்காரம், சக்தி பிறக் குது, சரிபாதி, பரபாஸ் முதலியவை யும் பாட்டும் ஆட்டமும் கொண்டு அமைந்த வேடனை ஒச்சிய வெள்ளைப் புறாக்கள். தப்பிவந்த தாடி ஆடு முதலிய சிறுவர் நாடகங்களும் அவரது முக்கியமான படைப்புகள் எனலாம். எளிமையான, அதேவேளை, சந்த லயம் கொண்ட பாடல்களை எழுதும் மௌனகுருவின் திறமை இவற்றில் பளிச்சிடக் காணலாம். மௌனகுருவின் சில சிறுவர் பாடல்களும் பிரசித்தமானவை. அக்காலத்தில் வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பான அவரது 'சின்னச் சின்னக் குருவிகள்' மிகவும் பிரசித்தமானது.

1960, 70களில் மௌனகுரு பல கவிதைகளும் எழுதியிருக்கிறார். அன்றைக்குப் பிரதான போக்காக இருந்த முற்போக்குப் பாணியில் அமைந்த கவிதைகள் அவை. அவரது கவியரங்கக் கவிதைகளும் பல உள்ளன. ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் அவர் ஒரு முத்திரை பதித்த கவிஞர் என்று சொல்ல முடியாவிட்டாலும் அன்றைய முற்போக்குக் கவிதைச் செல்நெறியை அவையும் இனங்காட்டுகின்றன. மௌன குரு சில சிறுகதைகளும் எழுதி யிருக்கிறார். பாரதக் கதையை அடிப் படையாகக்கொண்டு அவர் எழுதிய 'சார்வாகன்' என்ற குறுநாவல் ஒரு வித்தியாசமான படைப்பு. அவரது கவிதைகள், சிறுகதைகள், குறுநாவல் எல்லாம் ஒரு தொகுப்பாக வரவேண்டியது அவசியம். அது மௌனகுருவின் பிறிதொரு பக்கத்தையும் இனங்காட்ட உதவும் என்று நினைக்கின்றேன்.

(முற்றும்)

## 6 நூல்களின் வெளியீட்டு விழாவில்....





'மகுடம்' கலை இலக்கிய வட்டம் நடத்திய புலம்பெயர் எழுத்தாளர் மு.தயாளனின் இதிகா - (நாவல்) பாகம் - I மற்றும் பாகம் - II, எதிரொலி (சிறு கதை), வின்னிமண்டேலாவின் வாக்கு மூலம் - (வரலாறு), இது புதிய ஆரம் பம் - (நாவல்), Hurdles - (short story) ஆகிய ஆறு நூல்களின் வெளியீட்டு விழா கடந்தவாரம் மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் பாலசுகுமார் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் றமீஸ் அப்துல்லா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், வரவேற்புரையையும், நூலாசிரியர் அறிமுகவுரையையும் மகுடம் வி.மைக்கல் கொலின் நிகழ்த்தினார். நூல்களுக்கான அறிமுகவுரைகளை எழுத்தாளர் ச.மணிசேகரனும், கவிஞர் கதிரவன் த.இன்பராசாவும், பேராசிரியர் செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரை யாளர் க.மோகனதாஸ், எழுத்தாளர் அ.ச.பாய்வா ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையுடன் ஏற்புரையையும் இணைந்ததாக நூலாசிரியர் மு.தயாளன் ஆற்றினார். நிகழ்வுகளை கவிஞர் அழகு தனு திறம்படத் தொகுத்து வழங்கினார்.

க.கிருபாகரன், கல்லடி.

# மின்னும் தாரகையாக மிளிரும் மூத்த பெண் எழுத்தாளுமை

## நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்



**ஆளுமைகளின் அடையாளம்**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

இலங்கையில் எழுத்து, பத்திரிகை இலக்கியம், ஒலிபரப்பு என்று பல துறைகளில் மின்னும் தாரகையாக விளங்கும் மூத்த பெண் ஆளுமை நுருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

ஊடகத்துறையில் பெண்களின் - குறிப்பாக, முஸ்லிம் பெண்களின் பிரவேசம் மிகக் குறைவாக இருந்த 1975இல் பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி மூலம் வானொலியில் பிரவேசம் பெற்றவர் அவர். ஒலிபரப்புத் துறையில் மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் குரல் கொடுப்பவராகவும் திகழ்பவர். வானொலியில் தமிழ்ச் சேவையிலும், முஸ்லிம் சேவையிலும் பூவும் பொட்டும், வீட்டுக்கு வீடு, இலக்கிய மஞ்சரி, கவியரங்கு சிறுகதை போன்ற நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்பவர். தொலைக்காட்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி பிரகாசிப்பவர்.

எழுத்துத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் அவரின் பங்களிப்பைப் பலரும் பாராட்டுவர். அன்றைய இறுக்கமான கிராமச் சூழலில் எழுத்து, பத்திரிகைத் துறையில் முனைப்புக் காட்டியவர் அவர். அவரின் முதலாவது கவிதை 'பாவிநான் என்ன செய்வேன்?' என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளர் பன்னூலாசிரிரியர் மானா மக்கீன் பிரதம ஆசிரியராக இருந்த உதயம் பத்திரிகையில் வெளியானது.

பத்திரிகைத் துறையில் நிருபராக, உதவியாசிரிய ராகத் தன்னை வளர்த்துக்கொண்டவராக அவர் பார்க்கப்பட்டார். சுயாதீனப் பத்திரிகை சமாஜத்தின் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளில் 1980 முதல் 1990 வரை ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய திருமதி நுருல் அயின் நஜ்முல் ஹுசைன் பத்திரிகைத் துறை ஜாம்பவான் எஸ்.டீ.சிவநாயகத்தால் புடம்போடப்பட்டவர்.

"சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அழகான கட்டுரைகளாக எழுதிவிடுவார் நுருல் அயின். எழுத்துநடையும் மிக மிக இலகுவானது. தெளிவான அமைப்பு, தினபதி - சிந்தாமணியின் எளிமையான வசனநடை, இவரது எழுத்துகளில் ஒளிவீசும். அதனால் இவர் எழுதுவதை படிப்பதும் மனதில் இருத்திக்கொள்வதும் வாசகருக்கு பஞ்சுமிட்டாய் சாப்பிடுவது போன்ற ஒரு சுவையையும் திருப்தியையும் ஏற்படுத்தும்.

பிரமுகர்களைப் பேட்டி காண்பதிலும் அவற்றை சுவைபட எழுதுவதிலும் நுருல் அயினுக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. குடும்பப்பாங்கான பேட்டிகளை அவர் சுவாரஸ்யம் குன்றாமல் எழுதுவார். இந்த வகையில் அவருக்கு சிங்கள மொழி அறிவும் தமிழ் ஞானமும் நன்கு பயன்படுகின்றன" என்று அவர்பற்றி விதந்து கூறுவார் பத்திரிகை உலகம் மதிக்கும் மேதை எஸ்.டீ.சிவநாயகம்.

நுருல் அயின், ஜனனி என்ற பத்திரிகையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். அப்பத்திரிகையின் 'அரிவையர் அரங்கம்' என்ற மாதர் பகுதியை பல வருடங்கள் தொடர்ந்து நெறிப்படுத்திப் புகழ் பெற்றவர்.

'இதழ்கள்' சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் அவர் திறம்பட இயங்கியவர். அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார உதவியாளராக நியமனம் பெற்றிருந்த அவர், அத்திணைக்களத்தின் 'திங்கள்' என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் 'புத்தொளி' என்ற மாதாந்த பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டார்.

திணைக்களத்தின் 'தெசத்திய' என்ற சிங்கள சஞ்சிகையின் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராகவும் அவரின் எழுத்துப் பணி விரிந்தது. அச்சஞ்சிகையில் அவர் அரசியல் தலைவர்களை நேர்கண்டு எழுதிய நேர்காணல் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, அரசகரும மொழித் திணைக்களத்தின் இன ஐக்கியத்துக்கான ஊடகப் பங்களிப்புக்குரிய விருதையும் பொற்கிழியையும் பெற்றுக்கொடுத்தது. 'ஒளி அரசி' என்ற மாதாந்த மாதர் சஞ்சிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் அதன் சிரேஷ்ட எழுத்தாளராகவும் அவர் மிளிர்ந்தார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

'கொழும்பு புவத்' சிங்கள மொழிமூல காலாண்டுப் பத்திரிகை (கொழும்புச் செய்திகள்) அவர் அரசாங்க தகவல் திணைக்களத்தில் மாவட்ட தகவல் அதிகாரியாக இருந்தபோது வெளியிட்ட பத்திரிகை.

கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளை உள்ளடக்கி யதாக வெளிவந்த அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியையாக இருந்து தொடர்ச்சியாக பல இதழ்களை வெளியிட்ட திருமதி நுருல் அயினின் பத்திரிகைப் பணி உயர் அதிகாரிகளால் மட்டுமன்றி அன்றைய பொதுநிர்வாக அமைச்சராலும் பாராட்டப்பட்டமை அவரின் பத்திரிகைத் துறை ஆற்றலுக்குக் கிடைத்த உயர் கௌரவமாகும்.

தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத்தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (Information Officer) கடமையாற்றிய அனுபவத்தோடு பத்திரிகை, எழுத்து, இலக்கியத் துறையில் ஐந்து தசாப்தங்களாக இயங்கி வருபவர் நுருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

இலக்கியத்துறையில் ஈடுபாட்டோடு இயங்கு பவராகவும், பெண்கள் முன்னேற்றம், விழிப்பு உயர்ச்சி என்பவற்றுக்காக இலக்கியம் படைப்பவராகவும் பெண் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துவதில் முன்னிற்பவராகவும் எழுத்துலகில் மதிக்கப்படும் அவர்,

பண்பாடும் பெண் - கட்டுரை (1995), மின்னும் தாரகைகள் - (2018 ), இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் (140) பற்றிய ஆய்வு. நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள் (2017) தொகுப்பாசிரியர்.

பூஞ்செண்டு கவிதைத் தொகுப்பு (2018), திதுலன தாரக்கா (மின்னும் தாரகைகளை சிங்களத்திலும் வெளிச்சமிட்ட நூல்) என்னும் நூல்களைத் தந்திருக்கின்றார்.

'எய்ட்ஸ் நோயும் பெண்களும்', 'இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப் பங்களிப்பு' என்பவை விரைவில் வெளிவரவிருக்கும் அவரின் ஆய்வு நூல்கள்.

அவருடைய 'மின்னும் தாரகைகள்', 'பூஞ்செண்டு' ஆகிய நூல்கள் இலக்கிய உலகில் மதிக்கப்படுபவை. 140 பெண்ஆளுமைகளை அவர் காய்தல் உவத்தலின்றி அடையளப்படுத்தி ஆற்றிய பணியும், மூத்த இலக்கிய ஆளுமைகளை மதித்து பூஞ்செண்டில் வாழ்த்துகள் கூறுகின்ற அவரின் இலக்கியச் செயற்பாடும் , கலை இலக்கியவாதிகளின் அவதானிப்பையும் அபிமானத்தையும் பெற்றிருக்கின்றன.

உடுதெனிச் செல்வி, பின்த் ரஷீத், பின்த் ஸல்மா, கண்ணொளி என்ற புனைபெயர்களிலும் எழுதிய ரஷீத் நுருல் அயின் (திருமணத்தின் பின் நுருல் அயின் நஜ்முல் ஹுசைன்) தனது ஊடக, எழுத்துப் பணிகளுக்காக விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருக்கின்றார்.

வெளிநாடுகளுக்கும் கலைப்பயணம் செய்துள்ளார் கலாபூஷணம் நுருல் அயின். மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும் தாய்லாந்தின தலைநகரான பேங்கொக்கிலும் இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு சிறப்புச் சேர்த்தவர்.

மலையகத்தைச் சேர்ந்த ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியிலுள்ள உடுதெனியவில் பிறந்தவர் நுருல் அயின், காலஞ்சென்ற அல்ஹாஜ் எம்.எம்.ரஷீத் - அல்ஹாஜா உம்மு ஸல்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி. கவிமணி நஜ்முல் ஹுசைனின் மனைவி. சட்டத்தரணி நுருஸ் ஷப்னா சிராஜுதீனின் தாய். உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவளை மதீனா தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி. கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொதுசனத் தொடர்புத் துறை சான்றிதழும், தொலைக் கல்வி நிறுவனத்தின் பொதுசனத் துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறை டிப்ளோமா பட்டமும் பெற்றவர். கணினித் துறையிலும் பயிற்சிகள், சான்றிதழ்கள் பெற்றவர்.

இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் - உப தலைவி, அகில இலங்கை சமாதான நீதவான். கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினர். நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழிபெயர்ப்பாளர் என்று பல கௌரவமான பதவிகளை வகித்துக் கொண்டு பணி புரிந்துவரும் கலாபூஷணம் நுருல் அயினின் தேக நலத்துக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கொழும்பை வசிப்பிடமாகக்கொண்டு இலக்கியம், பத்திரிகை, சமூகநலப் பணிகளை ஆற்றிவரும் அவர் பொன்விழா,பவள விழா, அமுத விழா என்பவை கண்டு தொடரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

கிக்
கிக்
வாசிக்க
வாசிக்க...
மலர் : 02, இதழ் : 31 - 02.07.2023



வாய்ப்புகளை சிறப்பாக
பயன்படுத்திக்கொள்வேன்
– திலானி

பேசித்
தீர்க்கலாம்
வாங்க!

கடலோரம்
நடமாடும்
பெண் புயல்



# வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்திக்கொள்வேன்

## – திலானி



இலக்கை நோக்கி நகரும்போது எட்டி நின்று புறம்பேசுபவர்களையும் எள்ளிநகையாடுபவர்களையும் புறந்தள்ளிவிடுங்கள். அப்போதே எம் இலக்கை அடையமுடியுமென்கிறார் திலானி மகேஷா.

திரைத்துறை வாய்ப்புக்காக 'மொடலிங்'க்குள் களமிறங்கிய திலானி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு சவால்களை எதிர்கொண்டு ஒரு மொடலிங் கலைஞராகவும் அதேவேளை, பல தொலைக்காட்சி நாடகத் தொடர்களில் நடிப்பதற்கான வாய்ப்பையும் தன்வசப்படுத்திக் கொண்டுள்ளார்.

இலங்கை சினிமாவுக்குள் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள எத்தனையோ கலைஞர்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருக்கின்ற நிலையில், அந்தவொரு வாய்ப்புக்காகத் தன்னை 'மொடலிங்' துறைக்குள் ஈடுபடுத்திக்கொண்டு இன்று எம் 'கிக்' அட்டைப்படத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார் திலானி.

திலானி தான் கடந்து வந்த பாதை குறித்து எம்முடன் பகிர்ந்து கொள்கையில்,

''நான் இரண்டு வருடங்களுக்கும் மேலாக மொடலிங் துறையில் இருக்கின்றேன். எல்லோருக்குமே தாம் அழகாக இருக்க வேண்டும், விதம் விதமான ஆடைகளை அணிய வேண்டும் என்ற பொதுவான ஆசை இருக்கும். அந்த ஆசையின் விளைவே என்னை இன்று ஒரு மொடலிங் கலைஞராக நிலைநிறுத்த ஏதுவாக இருக்கின்றது.

நானொரு மொடலிங் கலைஞர் என்பதற்கு முதல் நான் ஒரு தாய். எனது மகளுக்கு தற்போது 11 வயதாகிறது. இந்நிலையில், ஒரு பெண்ணாக மொடலிங் துறைக்குள் என்னை ஈடுபத்திக்கொள்வது சவால்மிக்கதே. அத்தனை சவால்களுக்கும்தான் என்னை ஒரு மொடலாக நிலைநிறுத்திக்கொள்ள எனக்குத் துணைநிற்பவர் என் கணவர் அசோக்க இந்திக.

பதுளை, கந்தகெட்டியவே என்னுடைய பிறப்பிடம். மிகவும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் நான். பாடசாலைக்குச் செல்வதற்கு பாதணிகள் கூட கிடையாது. அவ்வாறு கிடைத்தாலும் யாரோ ஒருவர் பாவித்தது. அதையும் தைத்து அணிந்த நாட்கள் அதிகம். நான், என் தங்கை, அக்கா, அம்மா மற்றும் அப்பா என ஐவர் கொண்ட சிறிய குடும்பம் என்னுடைய குடும்பம். என் தந்தை விவசாயம் செய்து எங்களைக் காப்பாற்றினார். நாட்கள் நகர நகர எங்களின் தேவைகள் அதிகரித்துக்கொண்டே சென்றன.

எனினும், விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் எங்களின் குடும்பம் என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்றது. நான் தரம் பத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த சமயம். என் குடும்பத்தினருக்கு உதவுவதற்கு எண்ணினேன். தெரிந்த ஒருவரின் உதவியுடன் தொழில் தேடி தலைநகருக்கு வந்தேன். அப்போது எனக்கு வயது பதினைந்தே. ஓர் ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்ந்தேன். எனக்கு 18 வயது பூர்த்தியடையாததால் எனக்கு தொழில் மறுக்கப்பட்டது. எனினும், தெரிந்தவரின் உதவியால் அது எனக்கு கிடைத்தது. எனது தொழில் ஸ்தானத்துடனேயே எனக்கு தங்குமிட வசதியும் கிடைத்தது.

எனக்கு 18 வயது பூத்தியடையும்வரை என் தொழிலிடமும் 'போர்டிங் ஹவுஸு'மாக தலைமறைவு வாழ்வு வாழ்ந்தேன். அந்தத் தருணத்திலேயே அசோக்க இந்திகவைச் சந்தித்தேன். அவருடனான நட்பு பின்னர் காதலாக மாறியது. அவரே பின்னாளில் என் கணவரானார். தற்போது எங்களுக்கு 11 வயதில் மகள் இருக்கிறாள்.

என் கணவரே எனக்கு அனைத்து வழிகளிலும் சிறந்த வழிகாட்டியாக இருக்கிறார். நான் 11 வயதுடைய குந்தையின் தாய் என்பதையும் தாண்டி என்னை மொடலிங் துறைக்குள் ஈடுபடுத்திக்கொள்ள எனக்கு உற்ற துணையாக அவர் இருக்கிறார். நானொரு மொடலாக இருப்பதற்கு முதல் எதிர்ப்பு என் குடும்பத்திலிருந்தே கிளம்பியது. பின்னர் என் சுற்றத்தினர். ஒரு கட்டத்தில் அத்துறையை விட்டு விலகிவிடவேண்டும் என முடிவெடுத்தேன். எனினும், என் கணவரே அச்சந்தர்ப்பத்தில் எனக்கு அறிவுரைகளைக் கூறி என் கனவு – இலக்கை அடைய வழிகாட்டினார். அதுவே இன்றும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக என்னை ஒரு மொடலிங் கலைஞராக நிலைநிறுத்திக்கொள்ள உந்துதலாக இருந்தது; இருக்கின்றது. பல தொலைக்காட்சி நாடகங்களில் நடிப்பதற்கான வாய்ப்புகள் தற்போது என் கைவசமுள்ளன. அவற்றை சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள தயாராக இருக்கிறேன்.

இலக்கை நோக்கி நகரும்போது எட்டி நின்று புறம்பேசுபவர்களையும் எள்ளிநகையாடுபவர்களையும் புறந்தள்ளிவிடுங்கள்'' — என்கிறார் திலானி.

–சுஜா



Cover Picture: Dhilani Mahesha
Dress by –Aruni Bulathsinhala
Salon Roosoba & Academy Piliyandala
Pic By– Saman Abeysriwardana


**கிக் – 'வார இதழ்'**
இல. 91, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442

g l lk mk
Kick – கிக்
g l lk m h l lk nl
h g l lk m

தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி

# 'டைட்டானிக்' மூழ்கிய கடல் பகுதியில் ஏதோ இருக்கிறது

**- இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன்**

ஆழ் கடலுக்குள் உடைந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலின் சிதிலங்களைப் பார்க்க டைட்டன் என்ற மினி நீர்மூழ்கிக் கப்பலில் சென்ற கோடீஸ்வரர்கள் 5 பேர் கப்பல் வெடித்து பலியான சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்து குறித்து டைட்டானிக் படம் எடுத்து புகழ்பெற்ற ஹொலிவுட் டைரக்டர் ஜேம்ஸ் கேமரூன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில், "டைட்டானிக் கப்பல் மூழ்கிய இடத்திலேயே இந்த விபத்து நடந்திருப்பது என்னை ஆச்சரியப்படுத்தியுள்ளது. ஏற்கனவே நான் அந்தப் பகுதியில் 33 தடவைகள் சென்றுவந்திருக்கிறேன். அங்கு எனக்கு கூட சில பயங்கரமான அனுபவங்கள் ஏற்பட்டன. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 500 மீற்றர் ஆழம் இருக்கும். அதனால் நீர்மூழ்கிக் கப்பல்மீது அதிகமான அழுத்தம் இருக்கும். அங்கு ஒவ்வொரு கணமும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சிறிய தவறு நடந்தாலும் கடலுக்குள் நம்மைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது''- என்றார்.







# கடலோரம் நடமாடும் பெண் புயல்



விக்கி பெட்டிசன் என்று அழைக்கப்படும் விக்டோரியா பெட்டிசன் அமெரிக்காவின் புகழ்பூத்த தொலைக்காட்சி அறிவிப்பாளர். அவர் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு ரசிகர்களின் பெரும் வரவேற்பு உண்டு.

இப்போது அவர் ஜமைக்காவில் தனது விடுமுறைக் காலத்தைக் கழித்து வருகிறார். அங்கு கடலோரப் பகுதிகளில் அவர் குதூகலித்திருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களைக் கவர்ந்துள்ளார்.

தனது காதலருடன் அங்கு சென்றுள்ள அவர் கவர்ச்சியான படங்களை வெளியிட்டு வருகிறார். "சூரிய அஸ்தமனத்தை காதலனுடன் காண்கிறேன். இந்த அதிசயம் பிடித்திருக்கிறது" - எனத் தெரிவித்துள்ளார் விக்கி.



# எமெண்டாவுக்கு 52 வயதா?

எமெண்டா ஹோல்டன் பிரிட்டன் வீதிகளில் நடந்துசென்றபோது அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. முப்பது வயதுக்குட்பட்ட இளம் நடிகையைப் போல அவர் காட்சியளித்ததாக அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியாவின் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் நடிகையாகவும் இருந்துவருபவர் எமெண்டா. அவருக்கு 52 வயதாகிறது. எனினும், மிக இளமையாகக் காட்சியளிக்கிறார் என ரசிகர்கள் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டுள்ளனர்.



# காதலை சிலர் தவறாக பயன்படுத்துகின்றனர் – ரகுல் பிரீத் சிங்

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழி படங்களில் நடித்து வருபவர் நடிகை ரகுல் பிரீத் சிங்.

தற்போது தமிழில் அவர் நடித்த 'அயலான்' படம் விரைவில் வெளியாகவுள்ளது. கமலின் இந்தியன் 2 படங்களிலும் நடித்து வருகிறார்.

ரகுல் பிரீத் சிங் சமீபத்தில் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டார். அதில் உண்மையான காதல் எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில், "காதலுக்கு எந்தவித எல்லை – நிபந்தனை இருக்காது.

நீங்கள் ஒருவருடன் உண்மையான காதலில் இருந்தால் அப்போது நீங்கள் நீங்களாகவே இருக்க வேண்டும்.ஒருவர் மீது ஒருவர் மதிப்புடன் இருக்க வேண்டும். ஆனால், இந்தக் காலத்தில் ஒருசிலர் காதலைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். எதையோ காதலென்று நினைத்துக்கொள்கின்றனர்.

காதலித்தவரை வளரவிடாமல் தனக்கு பிடித்ததைச் செய்யக் கட்டாயப்படுத்துகின்றனர்.அதனால்தான் இந்தக் காலகட்டத்தில் காதல் உறவுகள் நீண்ட காலம் நிலைக்காமல் முறிந்துவிடுகின்றன. காதலுக்குள் பொய்க்கு இடமில்லை. நல்ல நண்பர்களுக்கிடையில் எப்படி ஒளிவு மறைவில்லாமல் இருக்கிறோமோ அதேபோல் காதலிலும் இருக்க வேண்டும். பொய் சொல்வது – அதனை மறைக்க முயற்சி செய்வது போன்றவை ஏமாற்றுவதற்குச் சமம்" – இவ்வாறு வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.



# மலையாளத்தில் அறிமுகமாகிறார் அனிருத்

நடிகர் பிருத்விராஜ் இயக்கும் 'டைசன்' படம் மூலம் அனிருத் மலையாளத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் பிருத்விராஜ் நடிப்பில் மட்டுமல்லாமல், இயக்கத்திலும் கவனஞ்செலுத்தி வருகிறார். அவர் நடிப்பில் 'ஆடுஜீவிதம்' படம் விரைவில் வெளியாகவுள்ளது. தொடர்ந்து அவர் ஹோம்பலே பிலிம்ஸ் தயாரிக்கும் 'டைசன்' படத்தை இயக்கவுள்ளார். ஆக்ஷன் – த்ரில்லராக உருவாகும் இப்படத்துக்கு முரளிகோபி திரைக்கதை எழுதியுள்ளார்.

இந்நிலையில், இப்படத்தில் இசையமைக்க அனிருத்திடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. மேலும், அனிருத் இசையமைப்பது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளதாகவும் இந்தப் படத்தின் மூலம் மலையாளத்தில் அவர் அறிமுகமாகவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் கொச்சியில் நடைபெற்ற அனிருத்தின் இசை நிகழ்ச்சியில் பிருத்விராஜின் மனைவி சுப்ரியா கலந்துகொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

அனிருத்தைப் பொறுத்தவரை அவர் மலையாளத்தில் வெளியான 'ப்ரேமம்' படத்தில் 'பாட்டொன்னு பாடப்போறேன்டா' என்ற பாடலை பாடியிருந்தார். ஆனால், இதுவரை மலையாள படத்துக்கு அவர் இசையமைக்கவில்லை. தமிழில், விஜய்யின் 'லியோ', அஜித்தின் 'விடாமுயற்சி', ரஜினியின் 'ஜெயிலர்', தெலுங்கில் ஜூனியர் என்டிஆரின் 'தேவரா', இந்தியில் ஷாருக்கானின் 'ஜவான்' ஆகிய முன்னணி படங்களில் இசையமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியன் – 2 காட்சிகளைப் பார்த்து வியந்த கமல்: ஷங்கருக்கு கொடுத்த அன்பளிப்பு!

இந்தியன் 2 திரைப்படத்தின் முக்கிய காட்சிகளைக் கண்ட கமல்ஹாசன் இயக்குநர் ஷங்கரை வியந்து பாராட்டியுள்ளார்.

இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துவந்த இந்தியன் 2 படத்தின் முக்கிய காட்சிகளைக் கண்ட கமல் தன் டுவிட்டர் பக்கத்தில், ''இந்தியன் 2' படத்தின் பிரதான காட்சிகளை இன்று பார்த்தேன். என் உளமார்ந்த வாழ்த்துகள் ஷங்கர். இதுவே உங்கள் உச்சமாக இருக்கக்கூடாது என்பதும் என் அவா. காரணம், இதுதான் உங்கள் கலை வாழ்வின் மிக உயரமான நிலை. இதையே உச்சமாகக் கொள்ளாமல் திமிறி எழுங்கள் பல புதிய உயரங்களைத் தேடி. அன்பன் கமல்ஹாசன்" - எனப் பதிவிட்டுள்ளார்.

மேலும், ஷங்கருக்கு விலையுயர்ந்த கைக்கடிகாரத்தைப் பரிசளித்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் கமல்.





# சினிமாவில் 30 வருடங்கள் இசை நிகழ்ச்சி நடத்துகிறார் ஏ.ஆர்.ரஹ்மான்

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், மணிரத்னம் இயக்கிய 'ரோஜா' படம் மூலம் சினிமாவில் அறிமுகமானார். இந்தப் படம் கடந்த 1992 ஆம் ஆண்டு ஆக.15ஆம் திகதி ரிலீஸ் ஆனது. முதல் படத்திலேயே தன்னைத் திரும்பிப் பார்க்க வைத்த இவரது இசைப் பயணம், அடுத்து ஜென்டில்மேன், கிழக்குச் சீமையிலே, காதலன், பம்பாய் என ஆரம்பித்து 'மாமன்னன்' வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மட்டுமின்றி, இந்தி, மலையாளம் தெலுங்கு, ஆங்கில படங்களுக்கும் இசையமைத்துள்ள ரஹ்மான், 'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்துக்காக 2 ஆஸ்கர் விருதுகளையும் பெற்று இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தவர்.

கோல்டன் குளோப், பாஃப்டா , தேசியத் திரைப்பட விருதுகளையும் பெற்றுள்ள அவர், சினிமாவுக்கு வந்து 30 வருடங்கள் ஆகின்றன.

இதைக் கொண்டாடும் விதமாக கிழக்கு கடற்கரை வீதியில் உள்ள ஸ்டூடியோ ஒன்றில் ஏ.ஆர்.ரஹ்மான் இசை நிகழ்ச்சி நடத்தவிருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் இப்போது நடந்து வருகின்றன. இதில் முன்னணி திரை பிரபலங்கள் கலந்துகொள்வார்கள் என்று கூறப்படுகிறது -எதிர்பார்க்கப்படுகிறது.



# ராஷி கண்ணாவின் கிளாமர் ஷூட்

நடிகை ராஷி கண்ணாவின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

ராஷி கண்ணா கடந்த 2013 ஆம் ஆண்டு ஹிந்தியில் வெளியான 'மெட்ராஸ் கபே' என்ற படத்தின் மூலம் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார். இதனைத் தொடர்ந்து தெலுங்கில் நடிக்கத் துவங்கினார். இவர் நடித்த படங்கள், முதலுக்கு மோசம் இல்லாமல் வெற்றியடைந்ததாலும், எக்கச்சக்க கவர்ச்சியை வாரி இறைத்ததாலும் அடுத்தடுத்து முன்னணி நடிகர்களின் படங்களில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

தமிழில் இவரது அறிமுகம் லேடி சூப்பர் ஸ்டார் படத்தின் மூலம் தான் ஆரம்பித்தது. நடிகை நயன்தாரா இயக்குனர் ஆண்டு அஜய் ஞானமுத்து இயக்கத்தில் நடித்து, கடந்த 2018 ஆம் ஆண்டு வெளியான 'இமைக்கா நொடிகள்' படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடித்தார்.

முதல் படத்திலேயே இவரின் பளிச் நிறமும், பரவசப்படுத்தும் அழகும் தமிழ் ரசிகர்களைத் திரும்பிப்பார்க்க வைத்தது. இதைத் தொடர்ந்து தமிழில் நடிகர் விஷாலுக்கு ஜோடியாக அயோக்யா, ஜெயம் ரவிக்கு ஜோடியாக அடங்கமறு, விஜய் சேதுபதிக்கு ஜோடியாக சங்கத்தமிழன், ஆர்யாவுக்கு ஜோடியாக அரண்மனை 3 போன்ற படங்களில் நடித்தார்.

அவ்வப்போது ரசிகர்களைக் கவரும் விதமாக விதம்விதமான கவர்ச்சி உடைகளில் போட்டோ ஷூட் செய்து அதன் புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் வெளியிடுவதை வழக்கமாக வைத்துள்ள ராஷி கண்ணா தற்போது கறுப்பு நிற உடையில் கிளாமர் கொந்தளிக்கும் சில புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.



# சோபிதா குறித்த கிசு கிசு



தமிழில் பொன்னியின் செல்வன் படத்தில் வானதி கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமான சோபிதா துலிபாலா தெலுங்கில் அதிக படங்களில் நடித்து பிரபல நடிகையாக வலம் வருகிறார்.

இவருக்கும் சமந்தாவின் முன்னாள் கணவரும் தெலுங்கு நடிகருமான நாகசைதன்யாவுக்கும் காதல் என்று பலவிதமான கிசுகிசுக்கள் வருகின்றன.

இருவரும் ஜோடியாக சுற்றும் புகைப்படங்களும் வெளியாகி வருகின்றன. இந்நிலையில், சோபிதா துலிபாலா தான் நடித்துள்ள வெப் தொடரை விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்றபோது நாகசைதன்யா பற்றி உங்கள் கருத்து என்ன?- என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்து சோபிதா துலிபாலா கூறும்போது, "நாகசைதன்யா மிகவும் மரியாதைக்குரியவர். கௌரவமாக நடந்து கொள்வார். எப்போதும் அமைதியாக - சகஜமாகப் பழகும் சுபாவம் கொண்டவராக இருப்பார். நாகசைதன்யாவிடம் இருக்கும் இந்தக் குணங்கள் தான் எனக்கு மிகவும் பிடிக்கும்'' - என்றார். இதன்மூலம் நாகசைதன்யாவை சோபிதா துலிபாலா காதலிப்பதாக மீண்டும் பேச்சுகள் கிளம்பியுள்ளன.




# டிமான்ட்டி காலனி – 2 படப்பிடிப்பு நிறைவு

அஜய் ஞானமுத்து இயக்கத்தில் அருள்நிதி நடித்துள்ள டிமான்ட்டி காலனி-2 படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது.

இதில் அருள்நிதி, பிரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், முத்துக்குமார், மீனாட்சி கோவிந்தராஜன், அர்ச்சனா ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர். ஹரீஷ் கண்ணன் ஒளிப்பதிவு செய்திருக்க சாம் இசையமைத்திருக்கிறார்.

விரைவில் படத்தின் அப்டேட்டுகளும் வெளியீட்டு திகதி குறித்த அறிவிப்பும் வெளியாகுமெனத் தெரியவந்துள்ளது.

# மிஷ்கின் இசையில் முதல் பாடல்



ஆதித்யா இயக்கத்தில் உருவாகிவரும் டெவில் படத்தில் மிஷ்கின் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இப்படத்தின் முதல் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. சவரக்கத்தி இயக்குநர் ஆதித்யா இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'டெவில்'. இப்படத்தில் விதார்த், பூர்ணா மற்றும் ஆதித் அருண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். மிக முக்கியமான திருப்புமுனை கதாபாத்திரத்தில் இயக்குநர் மிஷ்கின் நடிக்கிறார்.

மாருதி பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு கார்த்திக் முத்துக்குமார் ஒளிப்பதிவு செய்கிறார். எஸ். இளையராஜா படத்தொகுப்பையும் மரியா கலை இயக்கத்தையும் மேற்கொள்கிறார்கள்.

இயக்குனர் மிஷ்கின் முதன்முறையாக 'டெவில்' திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார்.

# ஸ்வீட் சிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

## பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

புகழ் பெற்ற மனோதத்துவ மருத்துவராகவும், பகுத்தறிவுவாதியாகவும் திகழ்ந்தவர் ஆபிரகாம் கோவூர். இந்தியாவின் கேரளாவை பூர்வீகமாகக் கொண்ட இவர், இலங்கைக்கு குடிபுகுந்து கொழும்பு பாமன்கடை பகுதியில் வாழ்ந்து வந்தார். மனோரீதியில் பாதிக்கப்பட்ட பலர் இவரிடம் சிகிச்சைக்கு வந்து நலம் பெற்றுள்ளனர். இவ்வாறான தனது அனுபவங்களை அவர் இலங்கையில் தமிழில் இரண்டு நூல்களாக தொகுத்து வெளியிட்டிருந்தார். அவை நல்ல வரவேற்பையும் பெற்றன.

மலையாள சினிமாவில் பிரபல இயக்குநராகத் திகழ்ந்தவர் கே.எஸ்.சேதுமாதவன். வித்தியாசமான கதைகளை படமாக்குவதில் ஆர்வமுள்ள இவர், கோவூரின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர் சிகிச்சையளித்த சம்பவத்தை மலையாளத்தில் 'புனர் ஜென்மம்' என்ற பெயரில் படமாக்கினார். பிரேம் நசீர், ஜெயபாரதி நடித்த இந்தப் படம் வெற்றிபெற்றது. இந்தப் படத்தின் வெற்றி, கண்ணை உறுத்தவே இயக்குனர் டி.ஆர்.ராமண்ணா இந்தப் படத்தை 'மறுபிறவி' என்ற பெயரில் தமிழில் இயக்கினார்.

கல்லூரி ஆசிரியரான இளங்கோ, தன்னிடம் கல்வி பயிலும் சாரதாவை காதலிக்கிறார். சாரதாவும் அவரை காதலிக்கவே, ஆரம்பத்தில் அவர்கள் காதலை மறுக்கும் சாரதாவின் தந்தை பின்னர் அவர்கள் காதலுக்கு சம்மதம் வழங்குகிறார். திருமணம் நடந்து தம்பதிகள் தனிக் குடித்தனம் போகிறார்கள். மகிழ்ச்சியுடன் தொடங்கும் அவர்கள் புதுவாழ்வு விரைவில் கசக்கிறது. தாம்பத்ய உறவில் இளங்கோ ஆர்வம் காட்டாததைக் கண்டு சாரதா துடிக்கிறாள். இளங்கோவுக்கு காம உணர்வை ஏற்படுத்த பூஜை, புனஸ்காரம், மலையாள மாந்திரீகம் என்று பல வழிகளை சாரதாவின்





தந்தை நாடுகிறார். ஆனால், ஒன்றும் பலனளிக்காமல் போகவே இறுதியில் மனோதத்துவ டாக்டரான கோவூரை நாடுகிறார்கள். அவரால் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு தர முடிந்ததா என்பதே படத்தின் மீதிக் கதை.

படத்தில் இளங்கோவாக முத்துராமனும், சாரதாவாக மஞ்சுளாவும் நடித்தனர். தன் பாத்திரம் அறிந்து இயல்பாக நடித்திருந்தார் முத்துராமன். மஞ்சுளாவுக்கு சற்று கடினமான வேடம். ஆனாலும் அதனை முறையாகக் கையாண்டிருந்தார் அவர். ஆரம்பத்தில் இளமைத் ததும்ப, விதவிதமாக ஆடைகள் அணிந்துவரும் அவர் பின்னர் உணர்ச்சிகரமாக நடித்திருந்தார்.

படத்தில் பரபரப்பாக இடம்பெற்றது படுக்கை அறை பாடல் காட்சிதான். இந்தக் காட்சியில் மஞ்சுளாவும், முத்துராமனும் படுக்கையில் நடத்தும் ரொமான்ஸ் இதுவரைகாலமும் தமிழ்த் திரை காணாத காட்சி எனலாம். அந்தக் காட்சி தணிக்கைக்குத் தப்பியது



ரசிகர்களின் அதிர்ஷ்டம்தான்.

படத்தில் மஞ்சுளாவின் தந்தையாக வரும் அசோகனின் நடிப்பு நன்று. நாகேஷ் சில காட்சிகளில் தோன்றுகிறார். இவர்களுடன் சுகுமாரி, தேங்காய் சீனிவாசன், எம்.ஆர்.ஆர்.வாசு, மனோரமா, உசிலைமணி ஆகியோரும் நடித்தனர்.

படத்துக்கு வசனம் எழுதியவர் டி.என்.பாலு. செக்ஸ் சம்பந்தப்பட்ட காட்சிகளில் பாலுவின் வசனங்கள் வரம்பு மீறாமல் அமைந்தன. பாடல்களை கண்ணதாசன் எழுத, டி.ஆர்.பாப்பா இசையமைத்தார். எஸ்.பி.பியின் மிருதுவான குரலில் ஒலித்த 'சொந்தம் இனி உன் மடியில்' பாடல் இனிமையாக அமைந்தது. அதேபோல் எம்.ஆர்.விஜயா பாடிய ''ஏடி பூங்கொடி ஏன் இந்தப் பார்வை'' பாடல் மனதை வருடியது. படத்தை அமிர்தம் ஒளிப்பதிவு செய்தார்.

மலையாளத்தில் சேதுமாதவன் இயக்கியதை அப்படியே தமிழில் மறுபிறவியாக்கினார் ராமண்ணா. சில காட்சிகளில் டாக்டர் கோவூர் இடம்பெற்று சிகிச்சை அளிப்பதாக காட்டியது தமிழ் சினிமாவுக்கு புதுமை. பாலியல் சம்பந்தப்பட்ட கதையை விரசம் இல்லாத விதத்தில் படமாக்கியது பாராட்டுக்குரியது.

rrtmsd c r nsl h nl

## ஜூனியர் என்.டி.ஆர். படத்தில் இணைகிறார் கியாரா அத்வானி



ஹிருத்திக் ரோஷன், டைகர் ஷெராஃப் நடித்து 2019ஆம் ஆண்டு வெளியான படம், 'வார்'. யாஷ் ராஜ் பிலிம்ஸ் நிறுவனத்தின் ஸ்பை யுனிவர்ஸ் படமான இதில் வாணி கபூர் நாயகியாக நடித்திருந்தார். ரூ.170 கோடி பட்ஜெட்டில் உருவான இந்தப் படம் ரூ.475 கோடிக்கு மேல் வசூலித்தது. சித்தார்த் ஆனந்த் இயக்கிய இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் இப்போது உருவாகிறது.

பான் இந்தியா முறையில் உருவாகும் இந்தப் படத்தில் ஹிருத்திக் ரோஷனுடன் ஜூனியர் என்.டி.ஆர். நடிக்கிறார். இதை அயன் முகர்ஜி இயக்குகிறார். இவர், 'பிரம்மாஸ்த்ரா' படத்தை இயக்கியவர். இந்தப் படத்துக்கு சில கதாநாயகிகளிடம் பேசி வந்தனர். இந்நிலையில், கியாரா அத்வானி நாயகியாக நடிக்கிறார். இதுகுறித்த அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

இவர் ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிக்கும் 'கேம் சேஞ்சர்' படத்தில் இப்போது நடித்து வருகிறார்.




## ஜூலை 21இல் வெளியாகிறது 'கொலை'

இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி தற்போது கிரைம் திரில்லர் வகை படமொன்றில் நடித்துள்ளார்.

இந்தப் படத்துக்கு 'கொலை' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை 'விடியும் முன்' படத்தை இயக்கிய பாலாஜி குமார் இயக்கியுள்ளார். 'கொலை' படத்தை இன்பினிட்டி ரூ லோட்டஸ் புரொடக்‌ஷன்ஸ் தயாரித்துள்ளது.

இந்தப் படத்தில் விஜய் ஆண்டனிக்கு ஜோடியாக நடிகை ரித்திகா சிங் நடித்துள்ளார். மேலும் மீனாட்சி சவுத்ரி, ராதிகா சரத்குமார், முரளி சர்மா, அர்ஜுன் சிதம்பரம் உள்ளிட்ட பலர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர்.

இந்தப் படத்துக்கு சிவகுமார் விஜயன் ஒளிப்பதிவு செய்துள்ளார். கிரீஷ் கோபாலகிருஷ்ணன் இசையமைத்துள்ளார். இந்நிலையில், 'கொலை' படத்தின் ரிலீஸ் திகதியை விஜய் ஆண்டனி அறிவித்துள்ளார். அதன்படி இப்படம் எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி வெளியாகவுள்ளதாக போஸ்டர் வெளியிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.



# பேசித்தீர்க்கலாம் வாங்க!

கணவன் - மனைவிக்கிடையில் தோன்றும் சிறுசிறு விவாதங்களும் பல சமயங்களில் சண்டையில் முடிகிறது. இருவருக்குமிடையேயான ஈகோ பிரச்சினை விவாகரத்து வரையிலும் செல்கிறது. இத்தகைய சண்டையைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

★ கணவன் - மனைவி இருவருக்கும் ஒவ்வொரு விதமான விருப்பு, வெறுப்பு, பழக்கவழக்கங்கள் இருக்கும் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நிறைகுறைகளோடு ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்வோம் என்ற மனநிலைக்கு வரவேண்டும்.

★ கடுமையான வார்த்தைகளால் ஒருவரையொருவர் திட்டிக்கொள்வது, துணைவரின் குடும்பத்தினரைக் குறை சொல்வது... கணவன் - மனைவி உறவில் பெரியளவில் விரிசலை ஏற்படுத்தும். இவற்றை அடியோடு தவிர்க்க வேண்டும்.

★ கணவன் - மனைவி சண்டையில் மூன்றாவது நபர் நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். அப்படி நுழைந்தால் பிரச்சினை வேறு வடிவமெடுத்து பெரிதாகும்; பூதாகரமாகும். அந்த மூன்றாவது நபர் கணவர் அல்லது மனைவின் தாய், தந்தை, அண்ணன், அக்கா, நண்பர் என யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும், கணவன் - மனைவி தங்களுக்குள் பேசித் தீர்வு காண முயல வேண்டும்.

★ ஒருவர் கோபமாக சத்தம் போடும் நேரத்தில் மற்றவர் அமைதியாக இருந்துவிட்டாலே பாதிப் பிரச்சினை குறைந்துவிடும். பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த விஷயங்களைப் பற்றி; பேசிக்கொண்டே இருக்கக் கூடாது.

★ ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தும் போதுதான் அது பல்கிப் பெருகும். அது சிறு சீண்டல்களாகவோ, பாராட்டாகவோ இருக்கலாம். இந்த டிரெஸ் உனக்கு நல்லா இருக்கு, இப்ப கொடுத்த காப்பி சூப்பர்! - என பாசிட்டிவ் கமென்ட் பகிர்ந்து கொள்வது நல்லது.

★ தினமும் குறைந்தது 10 நிமிடங்களாவது நேரில் மனம் திறந்து பேசிக் கொள்ள வேண்டும். அச்சமயத்தில் ஒருவர் சொல்வதை மற்றவர் நன்கு கவனித்துக் கேட்க வேண்டும்.

★ பணம் சம்பந்தமான விஷயங்களில் இருவரும் பேசிவைத்துக் கொண்டு வரவு - செலவை பராமரிக்க வேண்டும். இந்த விஷயத்தில் ஒளிவு மறைவு தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும்.

★ தவறு நேரும்போது மன்னிப்புக் கேட்கத் தயங்கக்கூடாது. அதேநேரம், சுயமரியாதையை முழுமையாக இழக்கக்கூடாது. விட்டுக் கொடுத்தல் என்பது இருவருக்கிடையேயும் சமமாக இருக்க வேண்டும்.

★ இருவரும் தங்களுக்கென ஹொபி, நட்பு வட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டும். திருமணத்துக்குப் பிறகு அவற்றைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

★ தம்பதியர் அவ்வப்போது ஒன்றாக ட்ரெக்கிங், ஜாக்கிங், சைக்கிளிங் போகும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

**சிறந்த வாழ்க்கையை வாழ வேண்டும். ஐடியா சொல்லுங்களேன்......**

**மதுமிதா - வத்தளை**

1. இன்றே செய்து முடிக்கக்கூடியதை 'நாளை' என்று ஒத்திப்போடாதீர்கள்.
2. நீங்களே செய்துகொள்ளக்கூடிய விடயத்துக்காக இன்னொருவரைத் தொந்தரவு செய்யாதீர்கள்.
3. பணம் கைக்கு வரும் முன்னே அதற்கான செலவுகளைச் செய்யாதீர்கள்.
4. விலை மலிவாய்க் கிடைக்கிறது என்பதற்காக வேண்டாத ஒன்றை வாங்காதீர்கள்.
5. பசி, தாகத்தை விட சுயமரியாதை பெரிது என்பதை மறவாதீர்கள்.
6. எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாகச் சாப்பிடுங்கள்.
7. விரும்பிச் செய்த எதற்காகவும் பின்னால் வருத்தப்படாதீர்கள்.
8. கற்பனையில் உருவாகும் கவலைகளை எண்ணி நிஜத்தில் வருந்தாதீர்கள்.
9. மென்மையாக அணுகுங்கள்; மேன்மையாக முடிவெடுங்கள்.
10. கோபமாயிருக்கும்போது பேசுவதற்கு முன்னால் பத்து வரை எண்ணுங்கள்.

இன்னும் கோபமாயிருந்தால் நூறுவரை எண்ணுங்கள்.

**மன அழுத்தத்தைக் குறைக்க என்ன வழி ஜிகினா?.....**

**பேரின்பநாதன் - கல்குடா**

தன் மேல் நம்பிக்கை இல்லாமல் இருக்கும் போது மனம் பேதலிக்கின்றது. தற்சமயம் நிலவும் கஷ்டங்கள் முடிவே இல்லாமல் தொடரும் என்ற பயம் இருக்கும்போது மனம் சோர்ந்து போவீர்கள்.

நம்பிக்கையோடு உங்கள் வேலைகளைப் பாருங்கள். அடுத்தவர்கள் வாழ்க்கையோடு உங்கள் வாழ்க்கையை ஒப்பீடு செய்யாதீர்கள்.



தைரியத்தை என்னாளும் கைவிடாதீர்கள்.

தனிமையில் இருக்காதீர்கள். உங்களையே நீங்கள் உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கை, உங்கள் வசம்தான் இருக்கின்றது. மனதைச் சோர்வடையச் செய்வதும் நீங்கள் தான். அதிலிருந்து மீண்டு வருவதும் உங்கள் கையில் தான் இருக்கின்றது.

**யாருக்கெல்லாம் வாழ்க்கையில் நிம்மதி இருக்காது?**

**சித்ரா - வத்தளை**

1.சிக்கனமாக வாழத் தெரியாதவர்கள் (வித்தியாசம் தெரியாமல் கஞ்சம் என சொல்பவர்கள்)

2.தகுதிக்கு மீறி ஆசைப்படுபவர்கள் (முன்னெச்சரிக்கையின்றி பின்னால் பார்த்துக்கலாம் என்றிருப்பவர்கள்)

3. அதிக பொறாமை கொள்பவர்கள்.

4.நாற்பது வயது வரை கண்ணில் பட்டதையெல்லாம் சாப்பிட்டுவிட்டு மருத்துவமனைக்குச் செல்பவர்கள்.

5.வருமானமின்றி கடன் வாங்குபவர்கள்.

6.குறுக்கு வழியில் சம்பாதிப்பவர்கள்

7.கடவுள் அல்லது இயற்கையின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள்.

8. அறியாமையில் இருப்பவர்கள்..

**நல்லவர்களுக்கு மட்டுமே நடக்கும் மோசமான விஷயங்கள் என்னென்ன?**

**சோமபாலன் - அவிசாவளை**

நம்பிக்கைத் துரோகம் கண்டிப்பாக கிடைக்கும்!

எல்லோரிடமும் ஏமாற்றம் தான் மிஞ்சும்.

தேவைக்கேற்ப எல்லோரும் நிறைய பயன்படுத்திக் கொள்வார்கள்.

பொருள் விரயம், பண விரயம், நேர விரயம் என பல விரயங்கள் உள்ளன

சில நேரங்களில் உயிர்த் தியாகமும் உண்டு.

தவறே செய்யாமல் தண்டனை பெறுவதும், உதவி செய்துவிட்டு நஷ்டம் அடைவதும் வாடிக்கை.

அதிகமான கெட்ட பெயரும், மன அழுத்தத்தையும் எதிரிகளையும் சம்பாதிப்பதும் அதிகம்.

மனதைப் புண்படுத்தி, காயப்படுத்தி மேலும் மேலும் கஷ்டப்படுத்துவது..

மிக முக்கியமாக நல்லவர்கள் உயிரோடு வாழும்போது அவர்களின் மதிப்பும் அருமையும் தெரியாது. நல்லவர்கள் இல்லாத நேரத்தில் அவர்களைக் கொண்டாடினாலும் பயனில்லை என்ன சோமபாலன்...

உங்கள் கேள்விகளை 65087 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805




# விமர்சனம்

தனது நண்பருடன் இணைந்து ஸ்டார்அப் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார் அரவிந்த் (விக்ரம் பிரபு). சிறு வயதில் நிகழ்ந்த விபத்தின் காரணமாக அவரால் குறைந்த ஒளியில் பார்க்க முடியாது. இப்படியான பிரச்சினையை எதிர்கொண்டு வரும் அவர், ஒருநாள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படும் பெண் ஒருவரை ரவுடிகளிடமிருந்து மீட்கிறார். அதன் எதிரொலியாக அவரை பழிவாங்க ஒரு கூட்டம் திட்டம் தீட்ட, மறுபுறம் அவரது சித்தப்பா கொலை செய்யப்படுகிறார். தன்னைச் சுற்றி நடப்பது புரியாமல் தவிக்கும் அரவிந்த் ஒரு கட்டத்துக்குப் பின் குற்றவாளிகளை நெருங்கி தனது இழப்புக்கு எப்படி பழிதீர்க்கிறார் என்பது திரைக்கதை.

குறைந்த ஒளியில் பார்க்க முடியாமல் தவிக்கும் நாயகனின் பலவீனத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் எதிரிகள், அவர்களை பழிதீர்க்க போராடும் நாயகன் என்ற சுவாரஸ்யமான ஒன்லைனை வைத்து ஆக்‌ஷன் த்ரில்லர் கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர் கார்த்திக் அத்வைத். ஒன்லைனாக ஈர்க்கும் படம், திரைக்கதையில் தடம் மாறியிருக்கிறது.

படத்தின் ஆகப்பெரும் பிரச்சினை அதன் ‘கன்வீனியன்ட் ரைட்டிங்’. உதாரணமாக விரைவில் கொல்லப்படும் ஒரு கதாபாத்திரம் மற்றொரு முதன்மைக் கதாபாத்திரத்தின் மீது திடீரென அன்பை பொழிவது, பகலில் காட்டப்படும் ஒரு காட்சி நாயகனின் விழித்திறன் பிரச்சினையை பார்வையாளர்களுக்கு கடத்துவதற்காகவே உடனே அடுத்த ப்ரேமில் இரவுக் காட்சியாக மாற்றப்படுவது, வில்லன் டூ ஹீரோ மோதலைக் காட்ட குடும்பத்தை அலேக்காக பேக் செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவது என படம் கதையின் போக்கில் நகராமல் காட்சிகளுக்கு தகுந்தவாறு வளைக் கப்பட்டிருப்பது ஒருவித செயற்கைத் தன்மையை கூட்டிவிடுகிறது. கதைக்கு எந்த வகையிலும் பயன்கொடுக்காத காதலும், அதற்கான பாடலும் அயற்சி.

குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் இரண்டாம் பாதியின் விசாரணைக் காட்சிகள் கிஞ்சித்தும் சுவாரஸ்யம் கூட்ட வில்லை. அதற்கு காரணம் பலவீனமான வில்லன் கதாபாத்திரம். வசனங்களால் மட்டுமே பில்டப் கொடுக்கப்படுகிறதே தவிர்த்து காட்சிகளால் அதற்கு நியா யம் சேர்க்கவில்லை. இதற்கு நடு வில் திடீரென மழைக்காளான் போல முளைக்கும் அழுத்தமில்லாத ஃப்ளாஷ் பேக் மற்றொரு புறம் இறுதிக் காட்சியில் வில்லனுக்கு பொறி வைப்பதெல்லாம் ஓலைச்சுவடி காலத்து ஐடியா.

தன்னுடைய நேர்த்தியான நடிப்பால் மொத்தப் படத்தையும் ஒரே ஆளாக இழுத்து செல்கிறார் விக்ரம் பிரபு. ஒளி பிரச்சினை யால் அவதிப்படும் அவர் ‘ஒலி’ யால் எதிரிகளை கண்டு பிடித்து நெருங்குவது, ஆக்‌ஷன் காட்சிகளில் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்துகிறார். காத லுக்காக வாணி போஜன் (நட்புக்காக என சிறப்பு தோற் றத்தில் நடிக்கும் நடிகர்களைபோல) திடீர் திடீரென தோன்றி மறைகிறார். வேல ராமமூர்த்தி இளமைத் தோற்றத்தில் கத்தியுடன் எதிரிகளை துவம்சம் செய்யும் காட்சிகளில் ‘எளந்தாரி பிள்ளை’யாக ஈர்க்கிறார். வில்லனாக தனஞ்சயா நடிப்பில் ஸ்கோர் செய்கிறார். விவேக் பிரசன்னா கதாபாத்திரத்தின் எல்லைக்குள் நடித்திருக்கிறார்.

இசையமைப்பாளர் மணிசர்மாவின் மகன் மஹதி ஸ்வர சாகரின் பின்னணி இசை காட்சிகளில் கூட் டாத விறுவிறுப்பை இசையில் கூட்ட உதவியிருக்கிறது. ஸ்ரீதர் ஒளிப்பதிவு இருளையும் ஒளியையும் பிரித்து காட்டும் இடங்களில் கவனம் பெறுகிறது.



மொத்தமாக, சுவாரஸ்யமான ஒன்லைனை எடுத் துக்கொண்ட இயக்குநர் அதனை கதையின் போக்கில் கொண்டு செல்லாமல் ஒவ்வொரு காட்சிக்கு சாதகமாக வளைத்து நெளித்து எழுதி யிருப்பது சுவாரஸ்யத்தை மட்டுபடுத்துவதுடன் செயற்கைத் தன்மையை கூட்டிவிடுவதால் ‘பாயும் ஒளி’ தேவையான பாய்ச்சலில்லாமல் பின்தங்கியிருக்கிறது.




**திரைப்படம்: லியோ**
**பாடலாசிரியர்: விஷ்ணு இடவன்**
**இசை: அனிருத் ரவிசந்தர்**
**பாடகர்கள்: விஜய் அனிருத் ரவிசந்தர்**

குழு: தேள் கொடுக்கு சிங்கத்த சீண்டாதப்பா
எவன் தடுத்தும் என் ரூட்டு மாறாதப்பா
ஆண் : நா ரெடிதான் வரவா
அண்ணன் நான் தனியா வரவா

குழு : திறன் நடுங்குற பறை அடிக்கிற
நான் ஆடத்தான்
விரல் இடுக்குல தீப் பந்தம்
நான் ஏத்தத்தான்
குழு : பத்தாது பாட்டில் நான் குடிக்க
அண்டால கொண்டா சியர்ஸ் அடிக்க
சியர்ஸ்
கெடா வெட்டி கொண்டாங்கடா
என் பசி நான் தணிக்க
ஆண் : பொகயில அறுவடைக்கு தயாரான
ஆப்பனட்ட களையெடுத்து
தலைவலிய போக்கிடுது
எங்க தலையெழுத்து
ஆடாத ஆட்டம் போட்டா
கட்டி வச்சி கோணிலே கட்டி
லாரிலே ஏத்தி
அறுத்துப்போட அனுப்பிடுவோம்
ஃபேக்டரிக்கு
ஆண்: டேய்... எல்லா புளூபிரிண்ட் உம்
தெரியும் மிஸன் சக்சஸ்ஃபுல் ஆ முடியும்
அடேய் வந்தா உன்னையும் படையல் வப்பேன்
கொலசாமிக்கி அதோட ஆடு சாராயம் பீடி சுருட்டு
கேங்ல இல்ல பொய் புரட்டு
விளையாட்டு போல வேல நடத்தும்
வேல்டு வைடு லிங்

ஆண்: ஏ... எல்லா ஊரும் நம்ம ரூல்ஸ்
உருவாதுடா நம்ம டூல்ஸ்
அத்தன பேரு அசைவம்
ஒரே மாரி சிங்க்

ஆண்: சிங்கிள்ஸ் இல்ல கும்பல் சண்டா
கெலிச்சி கெலிச்சி களச்சி போயிட்டேன்
பத்தவச்சு போகய உட்டா
பவர் கிக் இன்

ஆண்: போகயில போகயில
பவர் கிக் இன்

குழு: மிளக தட்டி முட்டி
குழம்புல கொத்திக்குது பார்
ஆண்: அந்த கால் அழகு
குழு: அடி தடி வெட்டு குத்து
எங்க வீட்டு சமையல் வர

ஆண்: அட கலந்திருக்கு
ஆண்: அதுதான் கணக்கு

குழு: இந்த கத்தி வேற ரகம்
வேனா ஸ்கெட்ச்சி எனக்கு

ஆண்: ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கு
கேட்டாலே அதிரும் பார் உனக்கு
போஸ்டர் அடி அண்ணன் ரெடி
கொண்டாடி கொழுத்தனும் டி

ஆண்: நாநா
ஏ... அண்ணன் வரார் வழிவுடு

ஆண்: நா ரெடிதான் வரவா
அண்ணன் நான் இறங்கி வரவா

குழு : தேள் கொடுக்கு...
குழு: திறன் நடுங்குற...
குழு: பத்தாது பாட்டில்...

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07